# தமயந்தி படைப்புக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்

முனைவர் பட்டத்திற்காக
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் ஆய்வேடு

**தா.ஷமிலா ஜோஸ்டர்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
**பதிவு எண்: 4282**

**தமிழ் உயராய்வு மையம்,**
**தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,**
**பாளையங்கோட்டை – 627 002.**
தமிழ்நாடு.

## அக்டோபர் – 2013

**முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.**
இணைப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
தூயசவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – 627 002.

பாளையங்கோட்டை,
நாள்: .10.2013

# நெறியாளர் சான்றிதழ்

**‘தமயந்தி படைப்புக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்’** என்னும் தலைப்பில் **தா.ஷமிலா ஜோஸ்டர்** செய்துள்ள இவ்வாய்வு, தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, தமிழ் உயராய்வு மையத்தில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திற்காக என் நெறியாள்கையின் கீழ் ஆய்வு செய்யப்பட்டது என்றும், இவ்வாய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு இதுவரை அளிக்கப்படவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

**(இரா.பிரான்சிஸ் சேவியர்)**
நெறியாளர்

**தா.ஷமிலா ஜோஸ்டர்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
பதிவு எண் **4282,**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ் உயராய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை **– 627 002.**

பாளையங்கோட்டை,
நாள்: .10.2013

# ஆய்வாளர் உறுதிமொழி

**'தமயந்தி படைப்புக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்'** என்னும் தலைப்பில், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி, தமிழ் உயராய்வு மையத்தில், முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளேன். அதன் பேரில் உருவான இந்த ஆய்வு, என்னால் தன்னியலாக நிகழ்த்தப்பட்டது என்றும், இவ்வாய்வின் பொருட்டு வேறு எந்தப் பட்டமும் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

**(தா.ஷமிலா ஜோஸ்டர்)**
ஆய்வாளர்

**உறுதிக் கையொப்பம்**

**முனைவர் இரா. பிரான்சிஸ் சேவியர், எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.**
இணைப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
தூயசவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை – 627 002.

# நன்றியுரை


**‘தமயந்தி படைப்புக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்’** என்ற தலைப்பைத் தேர்ந்து தரவுகளைத் திரட்டி, ஆய்வு மேற்கொண்டு, ஆய்வேடாக வடிவம் பெறுவதற்குத் துணை நின்றோர் பலர்.

இவ்வாய்விற்கு அனுமதியளித்த முன்னாள் கல்லூரி முதல்வர்கள் **அருட்திரு. முனைவர் அல்போன்ஸ் மாணிக்கம், சே.ச., அருட்திரு. முனைவர் அ.ஜோசப், சே.ச.,** அவர்களுக்கும், எனக்கு ஊக்கமளித்து உருவாக்கி வரும் இந்நாள் கல்லூரி முதல்வர் **அருட்திரு. முனைவர் கில்பர்ட் கமிலஸ், சே.ச.,** அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

இவ்வாய்விற்கு நெறியாளராக அமைந்து, ஆய்வு நெறிமுறைகளை விளக்கி, பல முரண்பாட்டுச் சிந்தனைகளைக்கூட மனமுவந்து ஏற்று, இவ்வாய்வேடு முழுமை பெறத் துணைபுரிந்த தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியரான **முனைவர் இரா.பிரான்சிஸ் சேவியர்** அவர்களுக்கு என்றென்றும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

நான் சோர்வுறும் போதெல்லாம் என்னைச் சுறுசுறுப்பாக்கி, ஆய்விற்குப் பல்வேறு வகையில் உறுதுணை புரிந்த தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் **பேரா.ஆ.மணி** அவர்களுக்கு நன்றி.

ஆய்வேடு செம்மையுற அமைவதற்குப் பல வழிகளில் அறிவுரை நல்கி, செப்பம் செய்து வழிகாட்டிய ராணி அண்ணா கல்லூரி, தமிழ்த்துறைப் பேராசிரியை **முனைவர் நா.வேலம்மாள்** அவர்களுக்கும், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி **பேரா. முனைவர் அந்தோணிராஜ்** அவர்களுக்கும், **பேரா.அந்தோணி சகாய சோபியா** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

ஆய்வு நெறிமுறைகளைக் கற்றுத் தந்த எம் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் **பேரா.ஆ.மணி, முனைவர் ஆ.இருதயராஜ், முனைவர் அ.கு.இக்னேஷியஸ் சேவியர், முனைவர் சூ.சா.இதயராஜா, முனைவர் தா.சே. கலாவதி, முனைவர் வ.ரில்பர்ட் ஜெனார்த்தனன், முனைவர் சு.ரவிசேசுராஜ், முனைவர் மி.கவிதா, முனைவர் இரா. அந்தோணிராஜ்** ஆகியோருக்கும், என்னுடன் பணியாற்றும் **பேரா.ஆ.ஜாண்பால், பேரா.ஆ.முருகன், பேரா.மா.பால செல்வி, பேரா. முருகன், பேரா. ஆல்பர்ட், பேரா. இளங்கோமணி** ஆகியோருக்கும் நன்றி.

என் வெற்றிகளுக்கெல்லாம் விதையாய் இருந்து விருட்சமாக்கும் என் அன்புக் கணவர் **திரு.பெ.ஜெரோமியாஸ் சாந்தசீலன்,** தொல்லை கொடுத்தே என் ஆய்வை வேகப்படுத்திய என் அருமை பிள்ளைகள் **ஜெ.ஜாஸ்லின் ஃபியோனா, ஜெ.இமாக்குலின் ஃபேபியானா** ஆகியோருக்கும், என் ஆய்வை ஊக்கப்படுத்தி உற்சாகம் கொடுத்த என் மாமா **திரு.மேஜர் ச. பெனடிக்ட்** அத்தை **திருமதி பெ.ரேச்சல்** மற்றும் என் உறவினர் ஆகியோருக்கும் என் நன்றி.

என் வளர்ச்சிக்குப் பல தியாகங்களைச் செய்து, என்னை இந்நிலைக்கு உருவாக்கிய என் பெற்றோர் **திரு.ஜோ.தாமஸ்** மற்றும் **திருமதி ச.நேசம் தாமஸ்** அவர்களுக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

ஆய்வு தொடர்பான கருத்துக்களைப் பெறுவதற்கு நூல்களைக் கொடுத்து உதவிய தூய சவேரியார் கல்லூரி நூலகர் **திரு.சி.மார்டின்** அவர்களுக்கும், நூலக உதவியாளர் **திரு.வி.ஜோசப்** அவர்களுக்கும் நன்றி.

ஆய்வேட்டினை நேர்த்தியாகக் கணிப்பொறியில் தட்டச்சு செய்து தந்த பாளையங்கோட்டை **நான்சி** கணினி நிலையத்தாருக்கு என் அன்பு கனிந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக.

**தா.ஷமிலா ஜோஸ்டர்**

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அ.கு. | - | அக்கக்கா குருவிகள் |
| க.ஆ. | - | கட்டுரை ஆசிரியர் |
| கு.எ. | - | குறள் எண் |
| சா.கி. | - | சாம்பல் கிண்ணம் |
| த.சி. | - | தமயந்தி சிறுகதைகள் |
| தொ.ஆ. | - | தொகுப்பு ஆசிரியர் |
| நூ.எ. | - | நூற்பா எண் |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| மு.நூ. | - | முற்கூறிய நூல் |
| மு.இ. | - | முற்பகல் இராஜ்ஜியம் |
| மேலது. | - | மேற்கூறிய நூல் |
| மொ.பெ. | - | மொழிபெயர்ப்பு ஆசிரியர் |
| வா.மூ. | - | வாக்குமூலம் |
| Ed. | - | Editor |
| P. | - | Page |
| Vol. | - | Volume |

# பொருளடக்கம்


| இயல்கள் | | பக்கங்கள் |
|---|---|---|
| 0. | ஆய்வு முன்னுரை | 01 – 05 |
| 1. | பெண் எழுத்துக்களில் சமூகமொழிக் கருத்தாக்கம் | 06 – 45 |
| 2. | குடும்பமும் சமூக மொழியும் | 46 – 102 |
| 3. | பொருளாதாரமும் சமூக மொழியும் | 103 – 148 |
| 4. | சாதி சமயமும் சமூக மொழியும் | 149 – 193 |
| 5. | படைப்பாளியும் பெண்ணியப் பார்வையும் | 194 – 234 |
| 0. | ஆய்வு முடிவுரை | 235 – 243 |
| | துணைநூற்பட்டியல் | 244 – 256 |
| | பின்னிணைப்புகள் | |
| | 1) புதினங்களின் கதைச்சுருக்கம் | i - xii |
| | 2) சிறுகதைகளின் பட்டியல் | xiii - xvi |

# 0. ஆய்வு முன்னுரை

0.0 முன்னுரை

0.1 ஆய்வு வகை

0.2 ஆய்வு நோக்கம்

0.3 கருதுகோள்

0.4 ஆய்வு அணுகுமுறை

0.5 ஆய்வு எல்லை

0.6 முதன்மைச் சான்றுகள்

0.7 துணைமைச் சான்றுகள்

0.8 ஆய்வேட்டின் அமைப்பு

0.8.1 இயல் – 1

0.8.2 இயல் – 2

0.8.3 இயல் – 3

0.8.4 இயல் – 4

0.8.5 இயல் – 5

0.9 முடிவுரை

0.10 துணைநூற்பட்டியல்

0.11 பின்னிணைப்பு

# 1. பெண் எழுத்துக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்

1.1 முன்னுரை

1.1 மொழி விளக்கம்

1.1.1 மொழியும் புரிதலும்

1.1.2 மொழியும் சமூகமும்

1.1.3 மொழியும் இலக்கியமும்

1.2 கருத்தாக்கம் விளக்கம்

1.2.1 சமூக மொழியும் கருத்தாக்கமும்

1.3 காலந்தோறும் பெண் நிலைப்பாடும் கருத்தாக்கமும்

1.3.1 வேதகாலப் பெண்கள்

1.3.2 சங்ககாலத்தில் பெண்கள்

1.3.3 பதினெட்டாம் நூற்றாண்டுப் பெண்கள் நிலை

1.3.4 மகளிர் பதிவுகளும் பெண்களும்

1.3.5 ஆண்டாள்

1.3.5.1 காரைக்காலம்மையார்

1.3.6 நவீனத் தொடக்ககாலக் கருத்தாக்கம்

1.3.7 நவீனப் பெண் படைப்பாளர்களின் கருத்தாக்கம்

1.3.8 விடுதலைக்கு முன் நவீனத்தில் பெண் படைப்பாளர் கருத்தாக்கம்

1.3.9 விடுதலைக்குப்பின் நவீனப் பெண் படைப்பாளர்கள் கருத்தாக்கம்

1.3.10 இன்றைய பெண் எழுத்து குறித்தக் கருத்தாக்கம்

1.4 ஆண் மொழி கருத்தாக்கம், பெண் மொழி கருத்தாக்கம்

1.41 பெண் மொழிக் கருத்தாக்கம்

1.5 பெண் படைப்பாளர்களும் சமூக மொழியும்

1.6 தமயந்தியின் படைப்புச் சூழல்

1.6.1 சாம்பல் கிண்ணம்

1.6.2 அக்கக்கா குருவிகள்

1.6.3 முற்பகல் ராஜ்ஜியம்

1.6.4 நிழலிரவு

1.6.5 வாக்குமூலம்

1.7 தமயந்தியின் சமூக மொழி

1.8 முடிவுரை

# 2. குடும்பமும் சமூக மொழியும்

2.0 முன்னுரை

2.1 குடும்பம் – விளக்கம்

2.2 குடும்பத்தின் தோற்றமும் கருத்தாக்கமும்

2.3 குடும்பத்தின் சிறப்பியல்புகளும் கருத்தாக்கமும்

2.4 குடும்பத்தின் வகைகளும் கருத்தாக்கமும்

2.4.1 கூட்டுக் குடும்பக் கருத்தாக்கம்

2.4.2 தனிக்குடும்பக் கருத்தாக்கம்

2.4.3 விரிவாக்கப்பட்ட குடும்பமும் கருத்தாக்கமும்

2.5 குடும்பமும் சமூகக் கட்டுப்பாடும்

2.6 குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்களும் கருத்தாக்கமும்

2.6.1 ஆண் பெண் நட்பு

2.6.2 தீய நட்பு

2.6.3 ஆண் பெண் நட்பில் பதட்டம்

2.6.4 ஆண் பெண் நட்பை ஏற்றுக் கொள்ளாமை

2.6.5 தீய பழக்கவழக்கங்கள் தீய தொடர்பு

2.6.6 பிற பெண் தொடர்பு

2.6.5 குழந்தையின்மை பிற பெண் தொடர்பு

2.6.6 காதலன் பிற பெண்ணோடு தொடர்பு

2.6.7 சந்தேகம்

2.6.8 திரித்துப் பேசுதல்

2.6.9 சித்தி கொடுமை

2.6.10 கைம்பெண்கள் பிரச்சனை

2.7 திருமணமும் கருத்தாக்கமும்

2.8 திருமணம்

2.9 திருமண வகைகளும் கருத்தாக்கமும்

2.10 திருமணத்தால் ஏற்படும் மாறுதல்களும், சிக்கல்களும், கருத்தாக்கமும்

2.10.1 காதல் திருமணம்

2.10.2 ஏமாற்றுதல்

2.10.3 விதவை மறுமணத் தடை

2.10.4 மணவிலக்கு அல்லது மணமுறிவு

2.11 உறவுநிலைச் சிக்கல்கள்

2.11.1 கணவன் – மனைவி உறவுச் சிக்கல்கள்

2.11.2 பெற்றோர் – குழந்தைகள் உறவுச் சிக்கல்கள்

2.11.3 அண்ணன் – தம்பி உறவு

2.11.4 சகோதர – சகோதரி உறவு

2.12 பிற உறவுச் சிக்கல்கள்

2.12.1 மாமியார் – மருமகள் உறவுச் சிக்கல்கள்

2.13 தொகுப்புரை

# 3. பொருளாதாரமும் சமூகமொழியும்

3.0 முன்னுரை

3.1 பொருளாதாரமும் கருத்தாக்கமும்

3.2 பொருளாதாரவியல் – வரையறை

3.3 பொருளாதார அடிப்படையும் கருத்தாக்கமும்

3.4 இன்றைய இந்தியப் பொருளாதார நிலையும் கருத்தாக்கமும்

3.5 சமூக வகுப்புக்களும் கருத்தாக்கமும்

3.6 பொருளாதாரச் சிக்கல்களும் கருத்தாக்கமும்

3.7 தமயந்தி படைப்புக்களில் பொருளதாரச் சிக்கல்களும் கருத்தாக்கமும்

3.7.1 பொருந்தாமணம்

3.7.2 வயது முதிர்ந்த நிலையில் நடைபெறும் பொருந்தாமணம்

3.7.1.2 மனம் விரும்பா திருமணம்

3.7.2 திருமணத் தடை

3.7.2.1 வரதட்சணை

3.7.2.2 முதிர்கன்னி

3.7.2.3 வரதட்சணைப் பொருளியல்

3.7.3 வறுமை நிலை

3.7.4 திருடுதல்

3.7.5 ஏமாற்றுதல்

3.7.5.1 சொத்தை ஏமாற்றுதல்

3.7.6 கையூட்டு

3.7.7 பரத்தமை

3.7.7.1 சேரிப் பரத்தமை

3.7.7.2 தேர்ந்து கொண்ட பரத்தமை

3.7.7.3 பரம்பரைப் பரத்தமை

3.7.8 குடும்பச்சுமை

3.7.9 குடும்பம் + பணிச்சுமை

3.7.10 வேலையில்லாப் பிரச்சினை

3.7.11 கடன்களுக்கு ஆளாதல்

3.7.12 கடன் பிரச்சனை – தர நிலையில் இறக்கம்

3.7.13 கந்துவட்டி

3.7.14 தரநிலையில் இறக்கம் – இறப்பு

3.8 தொகுப்புரை

# 4. சாதி சமயமும் சமூக மொழியும்

4.0 முன்னுரை

4.1 சாதி – விளக்கம்

4.2 சாதி தோற்றமும் வளர்ச்சியும்

4.2.1 சாதியும் வருணமும்

4.3 சாதி சமூக மாற்றம்

4.4 தமயந்தி படைப்புகளில் சாதியச் சிக்கல்கள்

4.4.1 உயர் சாதியினர் ஆதிக்கம்

4.4.2 திருவிழாக்களில் தீண்டாமை

4.4.3 ஆலயத்தில் தீண்டாமை

4.4.4 சாதி வைத்துப் பெயரிடல்

4.4.5 நிராகரிக்கப்பட்டக் காதல்

4.5 மதம்

4.5.1 மதத்தின் பணிகள்

4.5.2 கிறித்துவம்

4.5.3 கிறித்தவமும் சீர்திருத்தத் திருச்சபையும்

4.5.3.1 கிறித்தவம்

4.5.4 ரோமன் கத்தோலிக்க இயக்கம் **(Roman Catholic Institution)**

4.5.5 புரொட்டெஸ்டண்டு இயக்கம் **(C.S.I.)**

4.5.6 பெந்தேகோஸ்தே **(Pentecost)**

4.5.7 யோகோவா சாட்சிகள் **(Jehovah witness)**

4.5.8 சீர்திருத்தத் திருச்சபை

4.5.8.1 சீர்திருத்த திருச்சபை உருவாதலும் கருத்தாக்கமும்

4.5.8.2 இந்தியாவில் சீர்திருத்த சபைப் பணியின் தொடக்கம் குறித்த கருத்தாக்கம்

4.5.9 திருச்சபை – அமைப்பு – ஆளுகையும் கருத்தாக்கமும் திருச்சபை

4.5.9.1 ஆரம்பகாலத் திருச்சபை

4.5.10 திருச்சபைத் தேர்தல் முறைகளும், கருத்தாக்கமும்

4.6 இன்றைய நிலைமை

4.6.1 இன்றைய ஆளுகை முறையும் கருத்தாக்கமும்

4.6.2 திருச்சபையின் அமைப்பாளுகை குறித்த அறிக்கை

4.7 நாவலில் திருச்சபை அமைப்பும், செயல்பாடுகளும்

4.7.1 தமயந்தி காட்டும் மதம்

4.7.2 குறிப்பிடப்படும் சபை

4.7.2.1 திருச்சபைப் பணியாளர்கள்

4.7.3 திருச்சபையின் செயல்பாடுகள்

4.7.4 இரத்த சாட்சிகள்

4.7.5 மரபு மீறின நிகழ்வு

4.7.6 பொய் தீர்க்கர்கள்

4.8 சமூகப்பணி

4.8.1 வேலைக்கு லஞ்சம் வாங்குதல்

4.8.2 கல்விச் சீரழிவு

4.8.3 தேர்தலில் நடக்கும் சீரழிவுகள்

4.8.4 பணிமாற்றம்

4.9 மதம் மாறுதல்

4.10 மதம் செயல்பாடற்ற ஜெபம்

4.11 தொகுப்புரை

# 5. படைப்பாளியும் பெண்ணியப் பார்வையும்

5.0 முன்னுரை

5.1 பெண்ணியச் சொல் விளக்கம்

5.2 பெண்ணியம் கருத்து விளக்கம்

5.3 பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

5.3.1 அமெரிக்காவில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

5.3.2 இங்கிலாந்தில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

5.3.3 பிறநாடுகளில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

5.4 பெண்ணிய வகைகள்

5.4.1 மிதவாதப் பெண்ணியம்

5.4.2 சமதர்மப் பெண்ணியம்

5.4.3 தீவிரவாதப் பெண்ணியம்

5.4.4 பிற பெண்ணிய வகைகள்

5.5 இந்தியாவில் பெண்ணுரிமை சிந்தனைகள்

5.5.1 தந்தைவழிச் சமூகத்தின் தோற்றம்

5.5.2 வேதகாலத்தில் பெண்ணடிமை

5.5.3 முகமதியர் காலத்தில் பெண்ணடிமை

5.5.4 விழிப்புணர்ச்சி

5.5.4.1 பெண்ணுரிமைக்காகப் போராடியவர்கள்

5.6 தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கருத்தாக்கம்

5.7 தமயந்தி படைப்புக்களில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகள்

5.7.1 மிதவாதப் பெண்ணியம்

5.7.2 படைப்பில் சமதர்மப் பெண்ணியம்

5.7.3 படைப்பில் தீவிரவாதப் பெண்ணியம்

5.7.4 கிறிஸ்தவப் பெண்ணியம்

5.7.5 மனைப் பெண்ணியம்

5.8 தொகுப்புரை

## இயல் – 0

# ஆய்வு முன்னுரை



# இயல் – 1

# பெண் எழுத்துக்களில் சமூகமொழிக் கருத்தாக்கம்



# இயல் – 2

# குடும்பமும் சமூக மொழியும்




# இயல் – 3

# பொருளாதாரமும் சமூக மொழியும்




# இயல் – 4
# சாதி சமயமும் சமூக மொழியும்



# இயல் – 5

# படைப்பாளியும் பெண்ணியப் பார்வையும்




## இயல் – 0

# ஆய்வு முடிவுரை



# துணைநூற்பட்டியல்




# பின்னிணைப்புகள்



# 1. புதினங்களின் கதைச்சுருக்கம்



# 2. சிறுகதைகளின் பட்டியல்



# இயல் – 0

# ஆய்வு முன்னுரை

## 0.0 முன்னுரை

இலக்கிய வளர்ச்சியில் படைப்பிலக்கியங்களின் பங்கு பெரிது. புதிது புதிதாய் வெளிவரும் படைப்பிலக்கியங்களை மக்கள் பார்வைக்கு வழங்கும் பணியைச் சிறுகதைகள், நாவல்கள் செய்கின்றன. நலம் விளைவிக்கும் இலக்கியங்கள் பல தற்காலத்தில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் தமயந்தி படைப்புக்கள் தனித்தவை; பெண்ணியச் சிந்தனையுடையவை; அன்றாட வாழ்க்கையில் நிகழும் பிரச்சனைகளையும், சமூகம் குறித்த உணர்வுகளையும், மனிதர்கள் எதிர்கொள்ளும் நோக்கினையும், சமூகத்தில் தங்களுக்குரிய நிலையையும், அவர்களின் மொழிக் கருத்தாக்கத்தையும் தனது படைப்புக்களின் மூலம் தமயந்தி வெளிக்காட்டுகிறார். தமயந்தியின் தனித்த படைப்புக்களைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாகவும் இவ்ஆய்வு அமைகிறது.

## 0.1 ஆய்வு வகை

களஆய்வு, இருக்கை ஆய்வு என்ற இரு வகை ஆய்வுகளில் இந்த ஆய்வானது இருக்கை நிலையில் மேற்கொள்ளப்படுகிறது.

## 0.2 ஆய்வு நோக்கம்

தமயந்தி, கருத்தாக்க அடிப்படையில் பல்வேறு சிக்கல்களை மையமாகக் கொண்டு நாவல்கள், சிறுகதைகள் படைத்திருந்தாலும் அவரது படைப்புக்களில் பெரும்பான்மைச் சமுதாயத்தின் ஆணி வேரான குடும்பத்தையும், குடும்பத்துக்குத் தேவையான பொருளாதாரத்தையும்,

பொருளாதார ஏற்றத் தாழ்வில் ஏற்படும் சாதி பிரச்சனைகளையும் பின்னணியாகக் கொண்டுள்ளன. எனவே அவருடைய படைப்பில் சமூகமொழிக் கருத்துக்கள் எவ்வாறு ஆழப்பட்டுள்ளன என்பதையும் வெளிக்கொணருவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**0.3 கருதுகோள்**

பெண்கள் சமூகத்தளத்தில் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்கின்றனர். இச்சமூகம் ஆணாதிக்கம் மிகுந்த சமூகமாகவே காணப்படுகிறது. குடும்பம், சாதி, மதம், கல்வி எனப் பலத்தளங்களில் பெண்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதை ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நாவல்கள், சிறுகதைகள், தீவிரத் தன்மையோடு சித்திரிக்கின்றன என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**0.4 ஆய்வு அணுகுமுறை**

ஆய்வுக்கு உட்படுத்திய படைப்புக்களில் திரட்டிய தரவுகள் பொதுவாக விளக்கவியல் மற்றும் பகுப்பாய்வு நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இவ்விளக்கங்கள் சமூகவியல் அணுகுமுறையின் கீழ் எடுத்துரைக்கப்படுவதாகவும் அமைகிறது.

**0.5 ஆய்வு எல்லை**

இந்த ஆய்வின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் தமயந்தியின் படைப்புக்களில் சமூகமொழி எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது என்பது ஆராயப்படுகின்றது. ஆய்வுப் பரப்பின் சுருக்கம் கருதி 1999-2010

ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலநிலையில் வெளிவந்த தமயந்தி எழுதிய புதினங்கள், சிறுகதைகள் ஆய்வு எல்லையாக அமைகின்றன.

**0.6 முதன்மைச் சான்றுகள்**

சமூகமொழி பிரதிபலிப்பதை மையமாகக் கொண்டு 1999 - 2010 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால நிலையில் வெளிவந்த தமயந்தியின் சிறுகதைகளான தமயந்தி சிறுகதைகள் சாம்பல் கிண்ணம் - 2002, அக்கக்கா குருவிகள் - 1999, வாக்குமூலம் - 2010 என்பனவும், நாவல்களாக முற்பகல் ராஜ்ஜியம் - 2000, நிழலிரவு - 2003 ஆகியனவற்றை முதன்மைச் சான்றுகளாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**0.7 துணைமைச் சான்றுகள்**

சமூகமொழிக் குறித்து வெளிவந்த திறனாய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், வாழ்வியல் களஞ்சியம் போன்றவையும் துணைமைச் சான்றுகளாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**0.8 ஆய்வேட்டின் அமைப்பு**

இந்த ஆய்வு, முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆய்வு முடிவுரையைத் தொடர்ந்து துணைநூற்பட்டியல் தரப்பட்டுள்ளது. பின்னிணைப்புகளாக, புதினங்களின் கதைச்சுருக்கம், சிறுகதைகளின் பட்டியல் முதலானவையும் கொண்டு அமைகின்றன.

**0.8.1 இயல் – 1**

முதலாம் இயல் ‘பெண் எழுத்துக்களில் சமூகமொழிக் கருத்தாக்கம்’ என்ற தலைப்பில் அமைகிறது. இவ்வியலில் பெண் எழுத்தாளர்கள்

கையாண்டுள்ள சமூக மொழிக் குறித்தும், சமூகத்தில் பெண் எழுத்துக்கள் எந்த நிலையில் உள்ளன என்பது குறித்தும், ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்கள் எந்த நிலையில் இருந்துள்ளனர் என்பது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

### 0.8.2 இயல் – 2

இரண்டாம் இயல் ‘குடும்பமும் சமூக மொழியும்’ என்ற தலைப்பில் அமைகிறது. இவ்வியல் குடும்பத்தின் தோற்றம், குடும்பத்தின் சிறப்பியல்புகள், குடும்பத்தின் வகைகள், குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், திருமணத்தால் ஏற்படும் மாற்றங்கள், திருமணச் சிக்கல்கள், உறவுநிலைச் சிக்கல்கள் போன்றவற்றை ஆராய்கிறது.

### 0.8.3 இயல் – 3

மூன்றாம் இயல் ‘பொருளாதாரமும் சமூக மொழியும்’ என்ற தலைப்பில் அமைகிறது. இவ்வியலில் பொருளாதாரச் சமன்பாடற்ற சமுதாயமே இன்றைய ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணம் என்பதாக அமைகிறது. கல்வி, வேலைவாய்ப்பு பெண்ணுக்கு மறுக்கப்படுவது மட்டுமல்ல; வியாபாரமாகிவிட்ட நிலைகளும் அதன் காரணங்களும் மாறுபடும் சூழல்களும் ஆராயப்படுகிறது. பொருளாதார பிரச்சனையால் ஏற்படும் சிக்கல்களைத் தனது படைப்புக்களில் தமயந்தி விளக்கியுள்ளார்; சமூகவியல் ரீதியான மொழிக் கருத்துக்களையும் தமயந்தி வெளிப்படுத்தியுள்ளார் என்பன போன்றவற்றை விளக்குகிறது.

### 0.8.4 இயல் – 4

நான்காம் இயல் ‘சாதி சமயமும் சமூக மொழியும்’ என்ற தலைப்பில் அமைகிறது. இவ்வியலில் சாதியின் தோற்றமும், வளர்ச்சியும், சாதி சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றம், கிறிஸ்தவ மதப்பிரிவுகளில் ஒன்றான கிறித்தவ சீர்திருத்தத் திருச்சபையின் செயல்பாடுகளும், பணிகளும் இவை குறித்து, தமயந்தியின் பார்வைகளும் ஆராயப்படுகிறது.

### 0.8.5 இயல் – 5

ஐந்தாம் இயல் ‘படைப்பாளியும் பெண்ணியப் பார்வையும்’ என்னும் இவ்வியலில் பெண்ணியம், பெண்ணியம் விளக்கம், பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும், பெண்ணிய வகைகள், தமயந்தி படைப்புகளில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகள் ஆகியன ஆராயப்படுகிறது.

### 0.9 முடிவுரை

இந்த ஆய்வின் வழி வெளிக் கொணரப்பெறும் இன்றியமையாத கருத்துக்கள் முடிவுரையாக அமைகின்றன.

### 0.10 துணைநூற்பட்டியல்

ஆய்வு முடிவுரையைத் தொடர்ந்து இவ்வாய்வுக்குத் துணைபுரிந்த நூல்களின் பட்டியல் அமைந்துள்ளது.

### 0.11 பின்னிணைப்பு

பின்னிணைப்புகளாக புதினங்களின் கதைச்சுருக்கமும், சிறுகதைகளின் பட்டியலும் அமைந்துள்ளது.

# இயல் – 1

# பெண் எழுத்துக்களில் சமூக மொழிக் கருத்தாக்கம்

### 1.1 முன்னுரை

இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். குறிப்பிட்ட காலகட்டத்தில் முகிழ்ந்த இலக்கியங்கள் அக்காலத்து நிகழ்வுகளைத் தாங்கி வருகின்றன; ஆயினும் படைப்பாளிகள் அவரவர் அனுபவம், விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நிகழ்வுகள் பற்றிய தங்களது கணிப்புகளைக் கூட்டியும், குறைத்தும், மெருகேற்றியும் வெளியிடக்கூடும். அதிலும் தமக்கெனத் தனிப்பட்ட நோக்கும், உணர்வும் கொண்டுள்ள படைப்பாளிகள் தமது சமகாலத்துச் சமுதாய நிகழ்வுகளைச் சமூகமொழியாகப் பன்முகப் பார்வை கொண்டு ஒத்தும், உறழ்ந்தும், விமர்சித்தும் வெளிப்படுத்தக்கூடும். குறிப்பாக, பெண் எழுத்தாளர்களின் பார்வையும், பாணியும் தனிப்பட்ட தன்மைகள் கொண்டுள்ளன. சங்கம் முதல் தற்காலம் வரை பல பெண் படைப்புகள் பதிவாகியுள்ளன. அவற்றில் ஒவ்வொரு படைப்பாளரும் சமூகப் பிரச்சனைகளை முன்வைத்து, பல வகையான சமூகக் கருத்துக்களைத் தங்களுடைய சமூக மொழியாக முன் வைக்கின்றனர். இவர்களுடைய சமூக மொழியோடு தமயந்தியின் சமூக மொழியும் எவ்விதத்தில் பதிவாகியுள்ளது என்பதை இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

### 1.1 மொழி விளக்கம்

மொழி என்பது கருத்தைத் தெரிவிக்கும் ஒரு கருவியாகும். அந்த மொழியே மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலையுமாகும். பலர் சேர்ந்து ஒரு சமுதாயமாய், ஓர் இனமாய்ப் பழகி வாழ்வதற்குத் துணையாக உள்ள சிறந்த கருவி மொழியேயாகும். சமுதாய வாழ்வுக்கு அறிகுறியாக

உள்ள மொழியே, அந்தச் சமுதாய வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது. இத்தகைய மொழியானது சமூக வளர்ச்சிக்கு ஏற்றாற்போல, வளர்ச்சி பெற்று வருகிறது. இவ்வாறு மக்களால் படைக்கப்பட்ட மொழியானது மக்கள் சமூகமாகக் கூடி வாழ்வதற்கு வழிகாட்டுகிறது. ஆகவே மொழியில்லாமல் மனிதனில்லை; மனிதனில்லாமல் சமூகம் இல்லை என்பதே உண்மையாகும்.

### 1.1.1 மொழியும் புரிதலும்

மொழி குறித்தப் புரிதல்கள் அறிஞர்களிடையே பல்வேறுவிதமாக அமைந்துள்ளன.

> ‘‘சமுதாயத்தால் வளர்ந்து சமுதாயத்தை வளர்த்து வருவது மொழி எனலாம்’’[1]

> ‘‘மனிதனது மனத்தை விடுத்து ஆராய்ந்தால், மொழியைப் பற்றி அறியத்தக்கதாக ஒன்றும் இல்லை’’[2]

> ‘‘மொழியை வளர்த்தது மனமே; மனத்தின் இயற்கையைக் காட்ட வல்லதாக மனத்தின் எதிரொலியாக உள்ளது மொழியே’’[3]

> ‘‘மனிதனின் தொடர்பு இல்லாமல் தனியே வளர்ந்து வாழ வல்லது என மொழியைப் பற்றிக் கருதுதல் பொருந்தாது. பேசும் மக்களை விட்டு தனியே மொழி என்பது இல்லை. மனிதர் ஒவ்வொருவரின் அறிவின் ஆழத்திலும் மொழி வேர்கொண்டுள்ளது. அங்கிருந்தே மொழி வளர்ச்சி பெற்று விளங்குகிறது’’[4]

> ‘‘மக்களின் வாழ்வில் பிறந்த கலை, மொழி, மக்களால் வளர்க்கப்படும் கலை, மொழி, மக்களின் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் அரிய கலையும் மொழியே’’[5]

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து மொழி மனம் மையப்பட்ட ஒன்று என்பதும் மக்கள் வாழ்வியலாகி வெளிப்படுவது என்பதும் தெளிவாகிறது.

### 1.1.2 மொழியும் சமூகமும்

> ''மொழியானது சமுதாயத்தின் கருத்துப் பரிமாற்றச் சாதனமாக மட்டுமின்றி சமயத்தின் அடையாளமாகவும் விளங்குகிறது''[6]

மொழியின் ஒவ்வொரு பண்பும் சமூகத்தால் வரையறுக்கப்படுகிறது. சமூகத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு சமூகத்தின் தேவையை ஒட்டியே மொழியில் சொற்கள் உருவாக்கப்படுகின்றன. அறிவியல், தத்துவம், கலைகள் போன்ற துறைகளில் செல்வாக்குடைய மொழிகளின் அத்துறைகள் சார்ந்த சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இது குறித்தே,

> ''சமூக அமைப்பினையும் பண்பாட்டு உணர்வுகளையும் மொழி பெரிதும் சார்ந்துள்ளது''[7]

என்கிறார் அறிஞர்.

மனித இனத்தின் பல்வேறு சமூகச் செயல்பாடுகளில் மொழியின் பங்கு மிகுதி; மனிதனின் அன்றாடப் பணிகளிலும், கல்வி, ஆட்சி, அரசியல், பொருளாதாரம், கருத்துப் பரிமாற்றம் முதலிய பல்வேறு துறைகளிலும் மொழி பல்வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, பொருளாதார அடிப்படையில் ஏற்பட்டுள்ள பிரிவுகள், சாதி அடிப்படையில் ஏற்படும் பிரிவுகள், குடும்ப அமைப்பில் ஏற்படும் பிரிவுகள் போன்றவற்றைச் சொல்லலாம். மொழிக்கும் சமூகத்திற்கும் உள்ள உறவு முறைகளைச் சில மொழியியற் கூறுகளைக் கொண்டும் அறியலாம். இவ்வாறு மொழி

சமூகத்தோடு கொண்டுள்ள தொடர்பு குறித்து இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

### 1.1.3 மொழியும் இலக்கியமும்

மனிதனிடம் இயல்பாகவே பயம், பசி, காமம், பொறாமை, ஆவல், விவேகம், வேகம் ஆகிய உணர்வுகள் நிறைந்துள்ளன. சிந்தனை ஒருமுகப்பட்ட, பண்பட்ட வளர்ச்சியினால்தான் கூடி வாழவும், வாழ்க்கையில் சில நெறி முறைகளை உருவாக்கவும் முனைகிறான். உண்மையில் மனிதனின் அடிமனம் நுட்பமானது; மென்மையானது; ஆகவே இயல்பாகவே நற்சிந்தனைகளும், மகிழ்ச்சிக்குரியனவற்றையும் செய்ய வேண்டுமென்ற உந்துதல்தான் மொழி தோன்றுவதற்கும், மொழியில் இலக்கியங்கள் பெருகவும் காரணமாக விளங்கின. இயல்பான இச்சிந்தனையில்தான் மொழியில் பல்வேறு இலக்கிய வகைமைகள் தோன்றின. சிந்தனைக்கு முடிவில்லை; அஃது ஒரு அறிவார்ந்த செயலாகவே தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### 1.2 கருத்தாக்கம் விளக்கம்

கருத்தாக்கம் குறித்து, பல்வேறு விளக்கங்கள் உள்ளன.

> ‘‘கருத்துக்கள் தாமாக சுயமாக மிதந்து செல்லும் தத்துவார்ந்தச் சொல்லாடலின் பகுதிகளல்ல. அவை சமூக அடிப்படையிலும், வரலாற்று அடிப்படையிலும், இடத்தின் அடிப்படையிலும், வேர் கொண்டவை. மேலும் கருத்தாக்கங்களை இந்த யதார்த்தங்களின் அடிப்படையில் தான் விளக்க வேண்டும்; இதன்படி நாம் மானுடச் சமூக நடத்தைகளைப் பற்றிப் படிக்கும் போது, எந்தவொரு கருத்தாக்கத்தையும், நாம் படிக்கும் நடத்தையின் அர்த்தத்தில் ஒரு வெளிப்படையான கூறாகவுள்ளது என்பதைக் காண வேண்டும். அதாவது நடத்தைகளைக் கடைப்பிடிப்போர் அதற்கு அளிக்கும்

அர்த்தம் யாது? அவற்றை ஆய்வோர் கொள்ளும் அர்த்தம் யாது? என்று பார்க்க வேண்டும். அதற்கு அவர்கள் என்ன குறிப்பிட்ட அளவு கோலைக் கொண்டுள்ளனர் என்று ஆய்வு செய்ய வேண்டும். வேறொருவராகச் சொன்னால் கருத்தாக்கங்களை விளக்குதற்குச் சமூகச் செயல்கள் பயன்படுத்தப்பட்டு அர்த்தம் பெறுகிற, குறிப்பிட்ட வரலாற்று அடிப்படை சார்ந்த திட்டவட்டமான சொல்லாடல்களில் வைத்துப் பார்க்க வேண்டும்''[8]

''மனித பிரக்ஞை என்பது ஒரு கருத்து நிலையினைக் கொண்டது. (பிரக்ஞை எனும் பொழுதே ஒரு நோக்கு முறைமை அதனுள் உள்ளது) மனிதர்கள், தங்களைச் சூழ்ந்துள்ளனவற்றைப் புலப்பதிவு செய்து கொள்வதற்குத் தங்கள் நம்பிக்கைகள், சிந்தனை முறைகள், உணர்வுகள் ஆகியனவற்றைத் துணைக் கொள்கின்றனர். அதாவது தாம் நிஜம் என நம்புபவையின் அடியாகவே தமது கருத்தை உருவாக்குகின்றனர். இந்த உணர்வு அவர்கள் வாழுகின்ற சமூகத்தில் அவர்கள் வசிக்கின்ற இடத்தில் அடியாக வரும். அந்த இடம் அவர்கள் அந்தப் பொருளாதார உற்பத்தி முறைமையினுள் எத்தகைய இடத்தைப் பிடித்துள்ளனர் என்பதைப் பொறுத்து, அவருக்கும் சமூகத்துக்குமுள்ள உறவு இந்தப் பிரக்ஞையைத் தீர்மானிக்கும். எனவே கருத்தாக்கம் என்பது ஒருவர், தமது சமூக நிலை காரணமாக உருவாக்கிக் கொள்ளும் கருத்து நிலைப்பாடு ஆகும். இந்த நிலைப்பாடே அவர் உலகத்தைப் பார்க்க, அதனை விளக்கிக் கொள்ள உதவும். இலக்கியமே கருத்து நிலையாக்கத்துக்கான பொருள்தான்''[9]

கருத்தாக்கம் குறித்த விளக்கங்கள் கருத்துமையம் என்பதைக் கொண்டே அமைகிறது.

### 1.2.1 சமூக மொழியும் கருத்தாக்கமும்

மொழியானது சமுதாயத்தில் வாழும் மனித இனத்தின் நிலை, முன்னேற்றம், வரலாறு, பண்பாடு, வாழ்வியல், சமுதாயநிலை, பொருளாதார நிலை போன்ற பல பெரும் பிரிவுகளை வெளிப்படுத்துவதன் வாயிலாகச் சில மொழிக் கூறுகளுக்கும் மற்றும் சமூகக் கூறுகளுக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு ஏற்படும் சமூக மொழியியல் தொடர்புகளையும், இவற்றோடு இணைத்துப் பார்க்கக்கூடிய செயல்படக் கூடிய வேறு சில உடன்கூறுகளையும் மையமாகக் கொண்டு மொழியமைப்பையும், மொழியின் பொதுத்தன்மைகளையும், மொழி ஆற்றலையும், மொழியின் தனித்தன்மைகளையும், மொழித் திட்டமிடுதல், மொழியில் புதுமையாக்கம், மொழியியல் நிலைபேறு ஆகியவற்றையும் ஆய்ந்தும், பாகுபாடு செய்தும், எடுத்துரைத்தும் வரும் இத்தகைய சமூக மொழி அவ்வப்போது ஆங்காங்கே ஏற்படும் சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு அதனுடைய அமைப்பு, இயக்கம் ஆகியவற்றிலிருந்து மாறுபட்டு வழங்கப்படுகிறது. இம்மாற்றங்களுக்குச் சூழ்நிலை மட்டுமல்லாது அம்மொழி பேசும் சமூகத்தின் பின்னணி, மொழிப் பின்னணி சமூகக் கட்டுக்கோப்பு, சமூகப் பழக்க வழக்கங்கள், நாகரிகம் போன்ற பல சமூக மொழியியல் காரணமாக அமைகின்றன.

> **‘‘இலக்கியம் என்பது வெறும் கருத்துக் கோவையன்று. அது அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கருத்தாழமற்ற, ஆனால் கலையழகுள்ள ஓர் ஆக்கம் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் கலையழகற்ற கருத்தாழமுள்ள ஆக்கம் இலக்கியமாகாது’’**[10]

இலக்கியத்தில் கருத்தாக்கம் முக்கிய இடம்பெறுவதாகும். உண்மையில் ஆசிரியரின் கருத்துருவாக்கம் அதில் தோய்ந்து கிடக்கின்றது.

புனைகதை எனில், கதையின் அமைப்பு, அந்தக் கதையை நடத்திச் செல்லும் பாத்திரங்களின் இயல்புகள் ஆகியன முக்கிய இடம்பெறுகிறது. கவிதை எனில், கவிஞரின் கருத்து நிலையே அதன் எடுத்துரைப்பை அக்கவிதையினுள் அர்த்த முகிழ்ப்புக்களை உண்டாக்கும். உருவாக்கங்களை, குறியீடுகளை நிர்ணயிக்கும்.

சமூகக் கருத்தாக்கம் எது என்பதைப் பின்வரும் குறிப்பு வெளிப்படுத்துகிறது.

> **“மதம் முதல் அரசுவரை, கல்வி முதல் மரியாதை நியமங்கள் வரை இந்தக் கருத்தாக்கங்கள் ஏற்படுத்துகின்றன.”**[11]

கருத்தேற்றத்தின் சமூகப் பயன் மிகவும் வலிமை மிக்கதாகும். பொதுமக்கள் கருத்தினை உருவாக்கிக் கருத்துப் பரப்பின் மூலம் அதனைப் பரப்பி, மக்களின் மனப்போக்கையும் நடத்தையையும் மாற்றம் விழையும் சமூக, வரலாற்று, சமய. அரசியல் சீர்திருத்தவாதிகள் கருத்தேற்றத்தின் மூலமாகவே தங்களின் முயற்சிகளில் வெற்றி காணுகின்றனர். மனிதன் ஒரு சமூகத்தில் ஏன் ஒன்றி வாழுகின்றான் என்ற கேள்விக்கு ஏற்ற விடையைச் சமூக உளவியலாளர்கள் தருவதன் மூலம் சமூகமொழியின் ஒரு கூறுதான் கருத்தாக்கம் என்று அறிய முடிகிறது.

### 1.3 காலந்தோறும் பெண் நிலைப்பாடும் கருத்தாக்கமும்

ஆதிச் சமூகம் வேட்டைச் சமூகம்; அச்சமூகத்தில் தலைமைப் பொறுப்பு தாயிடம் இருந்தது. இது வரலாறு காட்டும் உண்மை. மக்களின் வாழ்வியல், புவியியல் அமைப்புகளுக்கு ஏற்ப வாழ்வியல் முறைகள் அமைந்திருந்தன. அதன் காரணத்தால் பாலினப் பாகுபாடு இல்லாமல் சமூகம் குழுக்களாக அமைந்திருந்தது. குழுவிற்குப் பெண் தலைமை தாங்கினாள்.

தொடர்ந்த காலங்களில் பெண்ணின் மறு உயிர்ப்பு முறையும், தனிச் சொத்துடைமை, குழந்தைப்பேறு, மாதவிடாய் போன்றவையும் தந்தைவழிச் சமூகம் என்ற அமைப்பு போன்றவையும் தாய்வழிச் சமூகம் என்ற அமைப்பு அழியக் காரணமாயிற்று. பிள்ளைப்பேறுக்கான காரணம் யார் என்று தெரியாதவரை பெண்ணுக்கு இருந்த முதன்மை, குழந்தையின் பிறப்பிற்குத் தந்தையும் காரணம் என்று உணர்ந்தவுடன் மாறிப்போனது; பல இடங்களில் தந்தை வழிச் சமூகம் அமைய இதுவே காரணமாகவும் இருந்தது.

> **“புதிய கற்காலச் சமுதாயத்தில் முழுக்க, முழுக்கத் தாயுரிமைக் கணங்கள் அமையவில்லை. அல்லது ஆணின் மேலாண்மையும் காணப்படவில்லை. ஒவ்வொரு பாலாரும் தங்களுக்கே உரிய இன்றியமையாத பணிகளை இயல்பாகத் தொடர்ந்து மேற்கொண்டனர். ஒருவரையொருவர் அடக்கும் நிலைமை இல்லை. இச்சமூகத்தில் ஆண்களும், பெண்களும் சமமாகவே வாழ்ந்து வந்தனர்”**[12]

என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தனக்கென ஒரு வாழிடம் என்ற கொள்கையை மனதில் விதித்த வேளாண் சமூகமே பெண்ணை இரண்டாம் நிலைக்குத் தள்ளியது. ஒரு தாய், பல குழந்தைகளைப் பேணத் துவங்குகிறாள். கலப்பை என்ற கருவி கண்டுபிடிக்கப்பட்டு, மானிட வாழ்வில் அது பல மாற்றங்களை ஏற்படுத்தியது. அம்மாற்றங்களின் உடனிகழ்வாகப் பெண் வீட்டிற்குள் அடைபட ஆரம்பித்தாள்.

### 1.3.1 வேதகாலப் பெண்கள்

வேதகாலப் பெண்கள் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சமூகத்தில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தனர் என்று வரலாறு காட்டுகின்றது.

வேத காலத்தில் பெண்களின் நிலை குறித்தும் அக்காலப் பெண்களின் வாழ்வியல் முறை குறித்தும் திரு. வி. கல்யாண சுந்தரனார் தன்னுடைய நூலான ‘பெண்ணின் பெருமை’யில் குறிப்பிடும் கருத்துக்கள் இங்கு நோக்கத்தக்கன.

> **“வேதகாலப் பெண்மக்கள் நிலைகுறித்துப் பலப்பட பேச வேண்டுவதில்லை. அக்கால வழக்கமொன்றை ஈண்டு குறிப்பிடுவது சாலும். அந்நாளில் தலைவன் வேள்வி செய்யும் போது தலைவியும் உடனிருப்பாள். மந்திரத்தினால் சுரத்திலாதல் தலைவன் பிழை நிகழ்துவானேல் உடனே திருத்தமாகத் தலைவி அதைச் சொல்லி ஒழுங்கு செய்து வழக்கம். இதனால் ஆண்மக்களைப் போலவே பெண் மக்களும் கல்வியிலும், வேதப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினார்கள் என்பது தெற்றெனத் தெரிகிறது”**[13]

என்று குறிப்பிடும் திரு.வி.க.வின் வரிகள் மூலம் பெண்களுக்கு அந்தக் காலத்தில் கொடுக்கப்பட்ட மதிப்பை அறிய இயலுகிறது. ஆனால் பெண்களின் கல்வியானது அவர்களின் திருமண வாழ்வை ஒட்டியதாக அதனுடன் இணைந்ததாகத்தான் அதர்வண வேதம் பேசுகிறது என்ற குறிப்பு காணக்கிடைக்கிறது.

ரிக் வேத காலத்தில் பெண்கள் ஆண்களுக்குச் சமமான நிலையைப் பெற்றுப் பல உரிமைகளோடு வாழ்ந்திருந்தனர்; ஆனால் அக்காலகட்டத்திலும் ஆண் மகனே குடும்பத்திலும், அரசியலிலும் தலைமைப் பொறுப்பு ஏற்றிருந்தான்.

### 1.3.2 சங்ககாலத்தில் பெண்கள்

சங்க இலக்கியங்கள் அக்காலச் சமூகத்தாரின் பழக்க, வழக்கங்களையும் வாழ்க்கை முறைகளையும் தெள்ளிதின் எடுத்துரைக்கின்றன. சங்க காலத்தில் மக்கள் கல்வியறிவு படைத்தவராக விளங்கினர். பெண்களும் கல்வி அறிவு பெற்றுக் கவிபாடும் திறம் பெற்றிருந்தனர். சங்க இலக்கியம் முழுக்கப் பார்க்க நேரிடின் 45 பெண்கள் கவி பாடியுள்ளமை புலப்படுகிறது. பெண்கள் சில குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்தவர்களாக இல்லாமல், பல்வேறு இனத்தவர்களைச் சார்ந்தவர்களாக இருப்பதைப் பார்க்கும் பொழுது பெண்களுக்குக் கல்வி பொதுவான ஒன்றாக இருந்ததை உணர முடிகிறது.

சங்க இலக்கியங்களில் அதிக அளவில் பாடல்கள் பாடியுள்ள ஒரே பெண்மணி என்ற பெருமை ஔவையாருக்கு உண்டு. ஔவையார் பாடியவை சங்க இலக்கியங்களுள் 59 பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அகப்பாடல்கள் 26, புறப்பாடல்கள் 33.

ஔவையாரின் பாடல்களைப் பார்ப்போமானால் அவர் அன்று தொடாத துறை எதுவும் இல்லை எனலாம். உலகியல் வாழ்வு நிலையானதல்ல என்று கூறும் அதே நேரத்தில் எங்கு ஆடவர்கள் நல்லவர்களாக உள்ளனரோ அங்கு உலகம் நல்லதாக இருக்கும் என்று ஆணாதிக்கம் கொண்ட உலகைப் பார்த்து அன்றே குறை கூறியுள்ளார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்,

**‘‘நாடா கொன்றோ காடா கொன்றோ**

**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே’’**[14]

இயற்கையால் நன்மைதான் விளையும், பெண்களாலும் உலகிற்கு நன்மையே விளையும் நன்மையையும் கெடுத்துக் கொண்டு பிறரையும் கெடுப்பவர்கள் ஆடவர்களே. அதனால் ஆடவர் நல்லவராயிருந்தால் உலகமும் நல்லதாக இருக்கும் என்று சொல்லிச் சென்றுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கது.

**“ஈன்று புறந்தருதல் எந்தலைக் கடனே**

**சான்றோர் ஆக்கல் தந்தைக்குக் கடனே**

**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே”**[15]

என்ற புறநானூற்றுப் பாடல், பெண்பாற் புலவரால் எழுதப்பட்டது. இங்குச் சுட்டப் பெறும் ஆடவர், தந்தை, கொல்லர் முதலானோர் ஆண்தலைமைச் சமுதாயத்தின் குறியீடுகள் ஆவர். ஆடவரைச் சார்ந்தே பெண் வாழவேண்டும்; பிறப்பித்தல் மட்டுமே அவளது கடன்; அக்குழந்தைக்குக் கல்வி தந்து வளர்ப்பவன் தந்தை. அவனுக்கு வேல் வழங்குபவன் கொல்லன் என ஆண் இயல்புகளை உரைப்பனவாக உள்ளன.

வெள்ளிவீதியார் பாடியுள்ள சில பாடல்களில் பெண்ணியக் கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன. பெண்களுக்குச் சிலவகை உரிமைகள் இருந்தன; எனினும் சமூக வாழ்வில் இரண்டாம் நிலையில் தான் இருந்திருக்கின்றனர் என்பதும் புலனாகிறது. கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவர்களுக்கு இருந்திருக்கிறது; எனினும் தெரிவு செய்யப்பட்ட கணவன் தவறு செய்யின் செய்தத் தவற்றைத் தட்டிக் கேட்கும் உரிமை அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

சங்க இலக்கியங்களுக்குப் பின்னர் தோன்றிய தமிழிலக்கியங்கள், ஆணிய மேலாதிக்கம் போற்றுகின்றவையாய் விளங்கின. சமண, பௌத்த சமயங்கள் இரண்டாம் பாலினமாகவே, பெண்களைக் கருதியமையை வேங்கடசாமி நாட்டார், தானெழுதிய நூல்களில் பதிவு செய்துள்ளார். அறமும், ஆன்ற ஒழுக்கம் போன்றவை, 'பெண்ணேவல் செய்வார் கண்இல்' என்பது குறள் கூறும் செய்தி. காப்பியங்கள், பெண்களை, ஆண்கொம்பைப் பற்றிப் படர வேண்டிய கொடிகளாகவே காட்சிப்படுத்துகின்றன. நாயன்மார்கள், ஆழ்வார்களென்கின்ற மரங்களின், மறைந்துறையும் ஆணிவேர்களாகத் தான் பெண்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

ஆண்கள் வெளியில் உலா வருகிறபோது, காணத் துடிக்கின்ற, காமம் சூழப்பட்ட உடலங்களாகவே பெண்கள் காட்டப்படுகின்றனர். சிற்றிலக்கியங்களில் பெண்களின் அவயங்கள், ஆண்கள் நுகர்பொருட்களாக வருணிக்கப்பட்டுள்ளனர்.

கலிங்கத்துப் பரணி 'கடை திறப்பு'ப் பகுதி, இதற்கோர் சிறந்த உதாரணமாகும்.

### 1.3.3 பதினெட்டாம் நூற்றாண்டுப் பெண்கள் நிலை

பக்தியிலக்கியக் காலத்தில் பெண் படைப்பாளிகளாக ஆண்டாள், காரைக்காலம்மையார் இருந்துள்ளனர். பக்தி இலக்கியக் காலத்திற்குப் பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டில் தான் மீண்டும் பெண்கள் இலக்கியம் படைக்க ஆரம்பித்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பெண்கள் மரபின் பெயராலும், மதத்தின் பெயராலும் அடக்கு முறையினைத் தொடர்ந்து அனுபவித்து வந்தனர் என்றே சொல்ல வேண்டும். பெண்களின் வாழ்க்கை முழு நிறைவுடன் அமையவில்லை; சமூகக் கட்டுப்பாடுகளும், பல

நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்டிருந்த உளவியற் கட்டுகளும், பெண்களின் வலிமையினைச் சுருக்கியிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் தான் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட தேசிய எழுச்சியில் பெண்களும் பங்கேற்றனர். பெண் சமூகத்தில் மறுமலர்ச்சிக்குரிய சூழ்நிலையைக் காந்தியம் ஏற்படுத்தியது எனலாம்.

> **“பெண்ணுரிமைக் கேட்டு எவ்வுலகில் விளைந்திருக்கிறது அஃறிணையுலகிலா? அறிவுடைமை மக்கள் உலகிலா? வெட்கம் வெட்கம்? புல், செடி, கொடிகளில் தன்தன் பெண்ணினத்தின் உரிமையை உடைத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்ததில்லை. அறிவுடைய உயர்திணை உலகிலேயே பெண்ணுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது”**[17]

என்று திரு. வி.க. போன்றவர்கள் குரல் கொடுக்கவும், பெண்மை தலை நிமிர்ந்து எழ வேண்டும் என்று பாரதி போன்றவர்கள் கவிதையால் அறைகூவல் விடுக்கவும் காந்தியச் சிந்தனையே அடிப்படையாக அமைந்தது. பெண்கள் பற்றிய சமூகப் பார்வை மாறத் தொடங்கியதும் இதற்குக் காரணமாக அமைந்தது.

> **“பெண்மையின் வலிமையைச் சக்தியை அடிப்படையாகக் கொண்டே இந்திய நாகரிகம் என்னும் மாளிகை எழுப்பபட்டிருக்கிறது”**[17]

என்று சரோஜினி தேவி போன்றவர்கள் குரல் கொடுக்க ஆரம்பித்ததன் காரணமாகப் பெண்களும் சமூக வாழ்வில் சிறிது சிறிதாகப் பங்கேற்கத் தொடங்கினர்.

"தமிழகத்தில் பெரியார் பெண் விடுதலைக்கான முதல் அடிக்கல்லை நாட்டினார். ஒவ்வொரு பெண்ணும் தானும் ஏதாவது சம்பாதிக்கும் தகுதி பெறத்தக்கப்படி ஒரு தொழில் கற்றிருக்க வேண்டும். குறைந்தது தன் வயிற்றுக்குப் போதுமான அளவாவது சம்பாதிக்கத் திறமை இருந்தால் எந்தக் கணவனும் அடிமையாய் நடத்த மாட்டாள்"[18]

இந்தக் காலக்கட்டங்களில் பெண்கள் பலரும் படைத்ததாகத் தெரியவில்லை.

### 1.3.4 மகளிர் பதிவுகளும் பெண்களும்

மகளிர் குறித்தப் பதிவுகள், மகளிரால் பதிவு செய்யப்பட்டப் பதிவுகள் என இரு வேறு நிலைகளில் மகளிர் பதிவுகளை நோக்க முடியும்.

காரைக்கால் அம்மையார், நாயன்மார்களின் சிறப்பிடம் பெறும் ஒரே பெண்ணடியார். சைவத்திருமுறைகள் 12; அவற்றுள், பதினோராவதில் இவர் பாடல்களில் சில தம் நெஞ்சிற்குக் கூறுவன போலவும், சில புறச்சமயத்தவர்க்குச் சொல்வது போலவும், சில இறைவனுக்கு உரைப்பன போலவும் அமைந்துள்ளன. அவர் உயர்ந்த காலத்துப் பெண் எழுத்துப் பதிவுகளில் இது மாறுபட்டது.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க"[19]

என்பன போன்ற பாடல்களின் மூலம் அவர் தன் வாழ்க்கையில் அனுபவித்தத் துன்பங்களால் இனிப் பிறப்பு வேண்டாம்; பக்தி மட்டுமே

போதும் என்று வேண்டிச் சொல்வது போலப் பாடல்கள் அமைந்துள்ளன எனலாம்.

### 1.3.5 ஆண்டாள்

ஆழ்வார்கள் பன்னிருவரில் இடம்பெறும் ஒரே பெண், ஆண்டாள் மட்டுமே. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான இவர் மணந்தால் திருமாலையே மணப்பது என்ற சிந்தையோடு வாழ்ந்து வந்தார்.

> **“கி.பி.716 –ஆம் ஆண்டு திருவாடிப் பூரத்தில் ஆண்டாள் தோன்றினாள். கி.பி.731 இல் திருப்பாவையை இயற்றினார்”**[20]

ஆண்டாள் எய்திய அருளியர் அனுபவத்தைத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனும் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். தமது திருப்பாவைப் பாடல்களைக் குறிப்பிடும் போது,

> **“பட்டர் பிரான் கோதை சொன்ன**
> **சங்கத் தமிழ்மாலை முப்பதும்”**[21]

என்று குறிப்பிடுகிறார். நாச்சியார் திருமொழியை ஆண்டாள் ‘தன் வரலாறு’ நூல் எனக்கொள்ளலாம். இதில் ஆண்டாளின் இன்ப ஆசைகள், மன்மதனை வேண்டல், காதல் துயரங்கள், கல்லையும் கனிவிக்கும் காதல் தூது, கண்ணனைக் கனவில் மணந்த கோதையின் உள்ளக் கிளர்ச்சி போன்ற உணர்வுகள் மேலோங்கி நிற்பதைப் பார்க்கலாம். பெண்மொழி, பெண்ணியப் புனைவுகள் என்று இன்று பேசப்படும் கருத்துரு முதன் முதல் ஆண்டாளின் பாடல்களின் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். தன் உள்ள உணர்வுகளை வெளிப்படையாக மறைப்பின்றி வெளிப்படுத்தியவர் ஆண்டாள் எனலாம். 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு 19-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வரை உள்ள

காலங்களில் மகளிர் படைப்பில் பெருந்தொய்வு ஏற்பட்டுள்ளது. பெண்களில் சிலர் மட்டுமே விரல்விட்டு எண்ணத்தக்க நூல்களைப் படைத்துள்ளனர்.

#### 1.3.5.1 காரைக்காலம்மையார்

காரைக்காலம்மையார் நாயன்மாருள் ஒருவர். பெண்ணடியார் இறையார்களையும், பாலினமும், சாதியும் விட்டு வைக்கவில்லை. பூசை பண்ணும் பெருமையை, சில மதங்கள் பெண்ணுக்குக் கொடுக்கவில்லை. பெண்ணினம், இரண்டாம் இடத்தில் இருக்க வேண்டுமென்பது ஆண்களின் விருப்பமாயிருந்தது. ஆண் அடியவர்கள் எவருக்கும் குறைந்து போகாதபடி, காரைக்காலம்மையாரின் ஈடுபாடும் இருந்தது. ஆனால், இயல்பான பெண்ணுடலுடன், இறைவனை அடைய முடியவில்லை காரைக்காலம்மையாரால். தோலையும், சதையையும் உதறி, எலும்பு நிலையில்தான் இறைவனை நாடுகிறார் காரைக்காலம்மையார். இங்கும், பெண்ணை இறையடியவர்கள் மத்தியில் வேறுபாட்டுடன்தான் ஆண்கள் படைத்துள்ளமையை உணர முடிகிறது.

### 1.3.6 நவீனத் தொடக்ககாலக் கருத்தாக்கம்

> **“இலக்கிய வரலாற்று அடிப்படையில் 1879–1940 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினைப் புதினத் தொடக்ககாலம் எனலாம்”**[22]

தனிமனித ஒழுக்கமே இப்புதினங்களில் பெரும்பாலும் பேசப்பெற்றது. தன்னளவில் ஒரு தனிமனிதன் தூய நெஞ்சுடையவனாக இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

**“தொடக்ககாலப் புதினங்களில் நல்லவன் முடிவில் வெற்றியடைந்து இன்பம்பெற, தீயவன் தோல்வியடைந்து துன்புறுவதாகவே பெரும்பாலும் காட்டப்பட்டது”**[23]

படிப்பவரின் மனத்திற்கு நிறைவான முடிவு ஒன்றைத் தருவதுதான் ஆசிரியர்களின் நோக்கமாக இருந்ததே தவிர, படித்து முடித்த பின்னர் ஒரு புதிய திக்கு நோக்கிப் படிப்பவர்களின் சிந்தனையை முடுக்கிவிட வேண்டும் என்னும் நோக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் காந்தியின் அரசியல் வருகையால் 1920 களில் ஏற்பட்ட தேசிய எழுச்சியும், பெரியாரின் முயற்சியால் 1930-களில் ஏற்பட்ட திராவிட இயக்க எழுச்சியும் புதினம் நாவலும் பொருளில் மாற்றத்திற்கு மக்களைப் பக்குவப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமும் இக்காலப் புதினங்கள் சிலவற்றுள் காணலாம். இத்தகைய போக்குகளுக்கிடையே தான் புதினங்களைப் பெண் எழுத்தாளர்களும் படைக்கத் தொடங்கினர்.

### 1.3.7 நவீனப் பெண் படைப்பாளர்களின் கருத்தாக்கம்

தமிழ்ப் பாரம்பரியத்திலுள்ள பெண்பாற் புலவர்களின் சங்க இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் பாணர் மரபில் வந்தவர்களே அதில் முதன்மை பெறுகின்றனர். அலைந்து திரிந்த நாடோடி வாழ்க்கையினர் அவர்கள் உயர்சாதிக் குடும்பப் பெண்கள் அல்லர். பல நூற்றாண்டுகள் கழித்து மீண்டும் பக்தி இயக்கத்தில் இரு பெண்டிரைச் சந்திக்கிறோம். காரைக்கால் அம்மையும், ஆண்டாளும் ஒருவர் குடும்ப வாழ்வைத் துறந்தவர்; மற்றவர் குடும்ப வாழ்வில் சிக்குன்றவர். மீண்டும் பல நூற்றாண்டுகளில் பெண் குரல் ஒலிக்கவில்லை. அல்லது பதிவு செய்து பாதுகாக்கப்படவில்லை. உத்தரநல்லூர் நங்கை, என்னும் தலித் பெண்ணின் சில பாடல்கள் காத்து முத்து என்னும்

தேவதாசி குலத்து சித்ரநங்கை ஒருவரின் மடல் இலக்கியம் என்பது தவிர வேறொன்றும் தட்டுப்படவில்லை.

> **“இருபதாம் நூற்றாண்டில்தான் இங்கே குடும்பப் பெண்கள், உயர்சாதிப் பெண்கள் எழுதத் தொடங்குகின்றனர்”**[24]

இவ்வாறு எழுதுகின்ற படைப்பாளர்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. விடுதலைக்கு முன் நவீனத்தில் பெண் படைப்பாளர்கள் கருத்தாக்கம்
2. விடுதலைக்குப் பின் நவீனத்தில் பெண் படைப்பாளர்கள் கருத்தாக்கம்

### 1.3.8 விடுதலைக்கு முன் நவீனத்தில் பெண் படைப்பாளர் கருத்தாக்கம்

1897-ஆம் ஆண்டு முதற்கொண்டே பெண்களும் புதினங்களை எழுதத் தொடங்கினர். அந்த ஆண்டில் ராஜாத்தி அம்மாள் என்பவர் ஞானப்ரகாசம் என்னும் நாவலை எழுதினார். இவரைத் தொடர்ந்து பண்டிதை விசாலாட்சி அம்மாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், தாமரைப் பெண், மீனாட்சி அம்மாள், வை.மு. கோதைநாயகி, டி.ப. ராஜலட்சுமி, சகோதரி கிரிஜா தேவி, குகப்பிரியை சரஸ்வதி அம்மாள் முதலிய எழுத்தாளர்கள் புதினங்களை எழுதியுள்ளனர்.

இவர்களுள் வை.மு. கோதைநாயகி அம்மாள், ருக்மணி பார்த்தசாரதி, குமுதினி ஆகியோர் கதைகள் குடும்ப எல்லையைத் தாண்டாதவையாகவே உள்ளன. குடும்பத்திற்குள் உருவாகும் சிக்கல்கள், குழந்தை வளர்ப்பில் பிரச்சனை, கணவனின் சந்தேகம் இப்படியான விஷயங்களே அதிகம்;

போனால் பெண் பார்த்து ஒதுக்கும் கொடுமை, வரதட்சணை மற்றும் சீர் செய்வது தொடர்பான பிரச்சனை ஆகியவற்றைவிட்டு, இவை தாண்டுவதில்லை. மூவலூர் ராமாமிருதத்தின் கதையே (தமயந்தி) இந்த எல்லையைத் தாண்டி விரிவான கேள்விகளை எதிர்கொள்கிறது., தேவதாசிப் பிரச்சனை, புரோகிதர் ஆதிக்கம், மூடநம்பிக்கை எனப் பல விஷயங்களை பேசுகிறது. கிரிஜா தேவியும், மூவலூர் இராமிர்த்ததம்மாளும் பெண்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் இவர்கள் தங்கள் எழுத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

தாசிகுலத்தில் பிறந்து, குலத்தொழிலைச் செய்ய வற்புறுத்தப்பட்ட பொழுது தன் வாழ்க்கையை உறவை உதறித் தள்ளி, பொது வாழ்வை வரித்துக் கொண்டவர். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். தன்னுடைய அரசியல் செயல்பாடுகளுக்கான மன தைரியத்தை எழுத்தின் மூலம் பெற்றுக் கொண்டவர். இவருடைய 'தாசிகளின் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்' என்ற நாவல் பெண்கள் மீது சமூகம் சுமத்திய இழிநிலையைப் படம் பிடித்துக் காட்டும் யதார்த்தப் படைப்பாகும்.

குமுதினி உளவியல் சார்ந்து தன் படைப்புக்களை அணுகியுள்ளார். குறுகிய காலமே வாழ்ந்து பெண்களுக்கான புரட்சிக்கரக் கருத்துக்களை எழுதிச் சென்ற கமலா பத்மனாபன் நடுத்தர வர்க்க பெண்களின் பிரச்சனைகளைக் கையாண்ட சரோஜா ராமமூர்த்தியைக் கூறலாம். ஆனால் இவர்களின் படைப்புக்கள் புழுங்கிய மனத்தில் தோன்றிய உணர்ச்சியின் பயனாக எழுந்தது என்று கூறுவர்.

### 1.3.9 விடுதலைக்குப்பின் நவீனப் பெண் படைப்பாளர்கள் கருத்தாக்கம்

1940 முதல் 1980 வரை இக்கால கட்டத்தில் பெண் எழுத்தாளர்கள் சிலர் எழுதுகின்றனர். அவர்களுள் கௌரி அம்மாள், க.சரஸ்வதி அம்மாள், ராஜம் கிரு ணன், கிருத்திகா, சியாமளா, சரோஜா ராமமூர்த்தி, ஹெப்சிபா ஜேசுதாசன், கு.ப.சேது அம்மாள், அநுத்தமா, ல மி, சூடாமணி, சிவசங்கரி, இந்துமதி போன்றவர்களைக் கூறலாம்.

இதில் 60–களுக்கு பின் எழுத வந்த பெண்களிடம் புதியபார்வை சுயவிமர்சனம், தன்னைத் தேடல் அடங்கிய கதைகளைக் கண்டெடுக்க முடிந்தது. தனித்துவமாய் ஈர்த்தவர் உஷா சுப்ரமணியன்; இவருடைய கதைகளை இளைய தலைமுறை நிச்சயம் மறுவாசிப்பு செய்ய வேண்டும்; அம்பை, வாஸந்தி, இருவரும் தங்கள் எழுத்துக்களுக்கான சரியான கவனிப்பையும் மதிப்பீட்டையும் பெற்றுள்ளவர்கள். ராஜம்கிரு ணன், இவருடைய இலக்கிய தீவிரத்திற்காக இளைய தலைமுறை வழிகாட்டியாகக் கைக்கொள்ள வேண்டியவர்.

பெண் எழுத்தின் தனித்த குரலைப் பதிவு செய்பவர்களாக காஞ்சனா தாமோதரன், தமயந்தி, உமாமகேஸ்வரி, வாசிப்பை எளிதாக்கிப் பெண்களின் பிரச்சனையைப் பதிவு செய்துள்ளனர்.

> **‘‘இக்காலப் புதினங்களில் வரும் பெண்களின் பண்பு வேறுபட்டதாக விளங்குகிறது. பெண்ணின் சிக்கல், அவளைச் சார்ந்துள்ள நிகழ்ச்சிகள், அவள் எதிர்கொள்ளும் சமுதாயக்களன், தனிப்பட்ட அவளது பண்பு ஆகிய இவற்றின் வரையறைகள் பல்வகைப்பட்டதாகவும், பன்மடங்குள்ளதாகவும் எடுத்துரைக்கப்படுகின்றன’’**[25]

என்று ட்ரு என்பார் கூறும் கூற்று நிகழ்காலப் புதினங்களை நோக்க உண்மையே என்று தெரியலாம்.

பெண் கல்வியும் அறிவியல் வளர்ச்சியும் பொருளாதாரத் தேவைகளும் பெண்களைப் பழைய நிலையினின்றும் வெளிக் கொணர்ந்து, புதிய உலகத்தைப் பார்க்க வைக்கின்றன. எனினும் பெண் எழுத்தாளர்களின் சமூகப் பார்வையும், சிக்கல்களை வெளிப்படுத்தும் பாங்கும், தீர்வளிக்கும் தெளிவும் ஆண் எழுத்தாளர் அளவிற்கு இல்லை என்று கருதத் தோன்றுகிறது.

### 1.3.10 இன்றைய பெண் எழுத்து குறித்தக் கருத்தாக்கம்

பெண் எழுத்தில் அவர்கள் மன இறுக்கம் தளர்ந்துள்ளது; பூட்டிய வீடாய் இருந்த அவர்கள் உள்ளங்கள் இன்று விரிய, திறந்த வீடாகக் காட்சியளிக்கின்றன. சுயம் பேசும் மனுசிகளாய் இன்று பெண் படைப்பாளிகள் உலா வருகின்றனர். பெண்களின் அறிவு வெளிப்பாடும் உணர்வு வெளிப்பாடும் இன்று ஒரு தளத்தில் சந்திக்கின்றன. மனைவியைத் தாயாக மட்டுமே எழுத்துலகில் தங்களுக்கான பிம்பங்களைப் பதிவு செய்திருந்த பெண்கள், இன்று சுதந்திர சிந்தனைவாதிகளாய், பூச்சற்ற உண்மையான விசுவாசிகளாய் படைப்புகளைத் தரத் தொடங்கியுள்ளனர். ஆணாதிக்கத் தடுப்புச் சுவர்கள் இன்று பெண்களின் படைப்புகளில் அடித்து நொறுக்கப்பட்டு இருந்த இடம் தெரியாமல் தகர்க்கப்பட்டுள்ளன.

பெண்கள் தாங்கள் உடலால் மட்டுமே உணரப்பட்ட நிலையை மாற்ற நினைக்கின்றனர். தங்கள் உடலைக் கவர்ச்சியாக மட்டுமே பார்த்து வர்ணித்த ஆண் படைப்பாளிகள் மத்தியில், பெண்கள் தங்கள் உடலின் ரணத்தை, வலியை உணர்த்தத் தொடங்கியுள்ளனர். பெண் உடலைச் சந்தைப்படுத்தியது ஆண் எழுத்து; எனவே, அந்த பாணி எழுத்தை விடுத்து, தாங்கள் உடலால்

அனுபவித்த அனுபவங்களை வெளிப்படுத்தத் தொடங்கினர். அதன் மூலம் பெண்கள் பாலியல் பேசக் கூடாது என்று தொல்காப்பியம் காலம் தொடங்கி சமூகத்தில் இருந்து வரும் சட்டத்திட்டங்களை உடைத்து, அக்கருத்துத் தளத்திலும் தங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அடிமையாய் வாழ்ந்தது போதும் இனியும் அப்படி வாழுதல் இயலாது என்று ஓங்கி ஒலிக்கும் குரலாகப் பெண் எழுத்துக்கள் அடையாளம் காணப்படுகின்றன. இக்கருத்தோட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பெண் எழுத்து என்பதை ஆண் எழுத்துக்கு எதிரான மாற்று அரசியலாக முன்னிறுத்திப் பார்ப்பதே இன்றைய விமர்சன சூழலுக்குப் பொருத்தப்பாடுடையதாகும்.

### 1.4 ஆண் மொழி கருத்தாக்கம், பெண் மொழி கருத்தாக்கம்

ஆணாதிக்கம் மிக்க மொழியினால் பெண் அமுக்கி வைக்கப்படுகிறாள்.

> “ஆணின் எழுத்து சுருங்கச் சொல்லலாகவும், காரணகாரியத்திற்கு உட்பட்டதாகவும், கட்டுப்பாட்டிற்கு அடங்கியதாகவும் சமநிலை கொண்டதாகவும் உறுதியானதாகவும் இருக்கிறது என்றும், அதே நேரத்தில் பெண்ணின் எழுத்து எழுச்சி அற்றதாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும், நரம்புத் தளர்ச்சிக்குரிய அடையாளம் கொண்டதாகவும் மிகை உணர்ச்சி கொண்டதாகவும், மெல்லிய கீச்சொலி உடையதாகவும் விளங்குகிறது எனவும் மதிப்பிடுகின்றனர்”[26]

> “மேலும் பெண்ணின் எழுத்து போதிய கல்வித்திறம் அற்றதாகவும், தனித்தன்மை இல்லாததாகவும், நுண்ணிய கருத்துலகச் சிந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தெரியாததாகவும், நகைச்சுவை உணர்வு அற்றதாகவும்

**ஆண் கதைமாந்தர்களை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் படியாகப் படைக்க முடியாததாகவும் விளங்குகிறது''**[27]

என்கிறார் கே.கே. ருதுவேள்; இக்கருத்தை மறுத்து பிரெஞ்சு பெண்ணியத் திறனாய்வாளர் ஹெலன் சிச்சு.

**''பெண்ணின் எழுத்துக்களை இப்படியெல்லாம் வரையறைப்படுத்த முடியாது, ஒரு போதும் கோட்பாட்டிற்குள் அடைக்க முடியாது''**[28]

என்கிறார்; எனவே பெண் பற்றிய பழமையான கருத்தாடல்களைப் புரிதல்களை மாற்ற வேண்டுமானால்,

**''பெண் தன் உடம்பை எழுத வேண்டும்''**[29]

என்பதையும் ஹெலன் சிச்சு வலியுறுத்துகிறார்.

படைப்புகளில் ஆணுக்கு நிகராகப் பெண் சாதிக்க வேண்டுமானால், அல்லது தங்கள் நிலைப்பாட்டை உறுதி செய்யப்பட வேண்டுமென்றால் முதலில் ஆண்களின் மொழியைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும் எனப் பரிந்துரைத்தார் என்கிறார் ராமன் ஷெல்டன். இத்திறனாய்வாளர்களின் சிந்தனை இன்று நவீன பெண் கவிஞர்களின் மத்தியில், பெண் உடல் மொழி என்ற புதிய சிந்தனைக்கு வித்திட்டுள்ளது.

மேரிபி, ஹரிறாத் என்பவர்கள் ஆண் பெண் படைப்புக்களைக் கணினி மூலம் ஆராய்ந்த ஆய்வின்படி,

**''பெண்ணின் மொழிநடை ஆணின் மொழி நடையிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது என்கின்றனர். பெண்களின் எழுத்துக்களின் மெய்யாகவே என்ற சொல் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காட்டியுள்ளனர்.**

இச்சொல்லைப் பெண்கள் அதிகம் பயன்படுத்தியிருப்பதன் காரணம் பெண்கள் தங்கள் மேல் நம்பிக்கை கொள்ள முடியாமல், ஐயத்தால் துன்புறுவதைத்தான் காட்டுகிறார் என்றும், சலிப்பில்லாமலும், ஆண்களைவிடக் குறைவான சொற்களையே பெண் பயன்படுத்தியுள்ளதாகவும், தம் ஆய்வில் காட்டியுள்ளனர்''[30]

என்கிறார் கா. பஞ்சாங்கம்.

## 1.41 பெண் மொழிக் கருத்தாக்கம்

அதிகாரம் எப்பொழுதுமே தான் அதிகாரம் செலுத்துகின்ற பொருளின் மொழியைப் பிடுங்கிக் கொள்கிறது.

பெண்ணுக்கு அழகு எதிர் பேசாதிருத்தல்; ஊமையான மனைவி அடிபடுவதே இல்லை. பெண்ணிடம் கடைசியாகச் சாவது நாக்குதான்; ஆட்டுக்கு வாலைப் படைத்தான், பெண்ணிற்கு நாக்கைப் படைத்தான் பொம்பளை சிரிச்சா போச்சு; புகையிலை விரிச்சா போச்சு ஆகியன எல்லாம் அதிகாரத்திற்கும் மொழிக்குமுள்ள நெருங்கிய பிணைப்பை வெளிப்படுத்துவனவாகும்.

காதல் உலகின் தொடக்கமான காட்சி, ஐயம், தெளிவு, துணிவு ஆகியவற்றைக் கூறும்போதே ஆணின் அதிகார அணுகுமுறை தென்படுகிறது.

''ஐயக் கிளவி ஆடுஉவிற் குரித்தே''[31]

என்று சொல்லாடுவதற்கு ஆணுக்குத்தான் உரிமை இருக்கிறது என்கிறார் தொல்காப்பியர், இதுபோலவே கைக்கிளையிலும் சொல் எதிர் பெறாமல் சொல்லிச் சொல்லி இன்புறுவதற்கும் ஆணுக்கே இடம் இருக்கிறது;

இவ்வாறு ஆணொடு கொள்ள நேர்கிற ஆரம்ப உறவிலேயே பெண்ணுக்கான சொல்லாடல் தடை செய்யப்படுகிறது.

இவ்வாறு காதல் மொழி பேசக் காதலன் வாய்க்கு மட்டும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு பெண்ணின் வாழ்வில் மிக நெருக்கடியான ஒரு சூழலில் வந்து குவிகிற உணர்ச்சிப் பெருக்கைக் கூட மொழிப்படுத்திப் பெண் பேசக்கூடாது எனத் தடை போடப்படுகிறது.

**‘‘தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**

**எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை’’**[32]

என்பது தொல்காப்பியம். உணர்வு வெள்ளம் கரைபுரண்டோடும் போது ஒரு பெண் சொல்லக் கூடாது என்று அன்று வரையறை செய்தது இன்றுவரை தொடர்கிறது.

அவளது அழகை நயந்து பாராட்ட மொழியில் புனைய ஆணுக்கு உரிமை உண்டு. பெண் தான் உணரும் அழகுணர்வைக் கூட மொழிப்படுத்தக் கூடாது.

**‘‘அச்சமும் நாணமும் பெண்மைக்கு உரியவை.’’**[33]

இவ்வாறு தொல்காப்பியரால் பெண்களின் மொழி ஒடுக்கப்பட்டு ஆண்களின் மொழி உருவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது என்பது இப்போது தெளிவாகத் தெரிகிறது. தந்தை வழிச் சமூகம் தன்மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமென்றால், பெண் தனக்கான மொழியை உருவாக்க முயல வேண்டும். பெண்ணுக்கான மொழியை எப்படி உருவாக்குவது? என்ற நோக்கில் ஹெலன் சீக்ஸீஸ் பெண்ணியத்தின்

கொள்கைச் சாசனம் என்று புகழப்படும் தங்களுடைய மேசோவின் புனை என்ற கட்டுரையில்,

> **“உன்னையே நீ எழுது; உன் உடம்பின் குரல்களுக்குச் செவிசாய்; அப்பொழுது தான் வகுத்துரைக்க முடியாத உனது நனவிலி மனத்திலுள்ள மூல வளங்கள் எல்லாம் பொங்கிப் புறப்பட்டு வெளிவரும்”**[34]

> **“மேலும் ஒரு பெண்ணின் உடம்பு தன்னுடைய ஆயிரக்கணக்கான உணர்ச்சி வெப்பத்தை மூல நெருப்பாகக் கொண்டு, பலப்பல மொழிகளை ஒலி அதிர்வுகளாய் உருவாக்கிடக்கூடிய தனிச்சிறப்புமிக்க மூல மொழியை உருவாக்கும்”**[35]

இக்கூற்றுக்கு ஏற்ப, தன் குரலைப் பதிவு செய்யும் பெண் கவிஞர்களின் கவிதைகளைச் சங்க இலக்கியத்தில் காணமுடியும். ஔவையாரின் தலைவி ஒருத்தித் தன்னைப்படுத்தும் காம நோயின் தன்மையைத் தடையில்லாமல் பேசுகிறாள்.

> **“சுழன்றபடி அசைந்து வருகின்றது காற்று. என்னை அலைக்கழிக்கின்றது. அதனை அறியாமல் ஊரும் உறங்குகிறது. நான் என்ன செய்யக்கூடும்! புரியவில்லை ஏதாவது ஒன்றைச் சாக்காக வைத்துக்கொண்டு முட்டலாமா தாக்கலாமா? அல்லது ஆஓ என்ற குரலெடுத்து அலறலாமா?”**[36]

உடம்பின் அற்புத விளைச்சலான இந்தக்கால உணர்வு எனும் வெள்ளத்தைப் பதிவு செய்யும் போது ஊரார் எனப்படும் ஆணின் அடக்குமுறை நிறுவனத்திற்கு எதிரான கலகக்குரலைக் கேட்க முடிகிறது. எப்பொழுதுமே சமூக ஒழுங்கிற்காகப் பாலியலை ஒடுக்க முயலும் போது அது திரிபு நிலை கொள்வதும் வன்முறை வடிவம் எடுப்பதும், தன்னைச் சுற்றியுள்ள

அனைத்தையும் பாலியல் கொண்டதாகப் புனைவதும் நிகழ்கின்றன. பெண் கவிஞர்களின் கவிதைகளில் இவை வெளிப்படுகின்றன. பக்தி இலக்கியக் காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் என்ற இரு பெண் கவிஞர்கள் மட்டுமே உள்ளனர்; பெண்ணுடலைத் துறந்தால் இறைவனை அடைய முடியும் என்ற வைதீக சமயத்தின் கோட்பாடு காரணமாகக் காரைக்கால் அம்மையார் தன் பெண்ணுடலைத் துறந்து பேய் வடிவமாக மாறினார். இது பக்தி இலக்கியக் காலத்தில் பெண்ணடிமைத்தனத்தின் உச்ச வெளிப்பாடேயாகும். காரைக்கால் அம்மையாருக்குப் பின் இரு நூறு ஆண்டுகள் கழித்து வந்தவர் ஆண்டாள். இவரது பாடல்கள் இறையனுபவத்தை முன்னிறுத்திச் சமயச் சொல்லாடலுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்காமல் பெண்ணுடல் சார்ந்த பெண் மொழி இவரது படைப்புக்களில் வெளிப்படுகிறது. இதற்கு அடுத்தக் காலகட்டத்தில் பெண் இலக்கியப் படைப்பில் மீண்டும் இடைவெளி; மேனாட்டாரின் வருகை பெண் கல்வியால் மீண்டும் இலக்கியத்தளத்தில் பெண்ணிற்கான இடம்பெறப்பட்டது. ஆரம்ப காலப் படைப்புகள் அனைத்தும் ஆணாதிக்கத்தின் போக்கில் பெண்ணின் அடிமை வாழ்வில் பொதுநிலைப்பாட்டைப் பற்றியே பேசுகிறது. எண்பதுகளுக்குப் பிறகு தமிழ் இலக்கிய உலகில் புகுந்த புதிய இலக்கியக் கோட்பாடுகளும், பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகளுமே பெண் படைப்பாளர் மத்தியில் புதிய சிந்தனைக்கான தளத்தை வகுத்துக் கொடுத்தது. பெண்ணுடலை, பெண்ணிற்கான மொழியில் பெண்ணுடல் சார் பதிவுகள் இலக்கியமாக இதனால் உண்மையான பெண்நிலை திறனாய்வு படைப்புக்களில் புகுந்தன. இதுவரை படைப்புக்களில் பெண்களை விளிம்பில் வைத்துப் பார்க்கப்பட்ட நிலையில் மாற்றங்கள் வந்தன.

பெண்கள் தங்களுக்கான அனுபவங்களை அகத்தை, தன் படைப்பில் இலக்காகக் கொண்டனர். இலக்கின் விளைவாகத் தங்களின் அந்தரங்க வலிகளைப் பதிவு செய்யும் போக்கை இலக்கியமாக்கி வருகின்றனர்.

பெண் உடல் உறுப்பு உணர்ச்சி ஆகியவற்றைப் பற்றிய படிமக் கருத்தாடல்கள் பெண் மொழி வாயிலாகப் பெண் கவிஞர்களின் எழுத்துக்களில் தொண்ணூறுகளில் ஆரம்பமானது; தற்போது மிகத் தீவிரமாகப் பதிவுச் செய்யப்பட்டு வருகின்றன. மன உணர்வுகளை வெளிப்படுத்த மொழி தடையாக இருப்பதில்லை; ஆனால் பெண்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழப் பழக்கப்பட்டவர்கள். இந்தக் கோட்பாட்டைப் பெண் கவிஞர்கள் உடைக்க முனைந்தனர். இதனால் மாதவிலக்கு, உடல் உறவு, புனிதங்கள் என்று பெண்களால் பேசப்படாதவை எல்லாம் இப்பொழுது கவிதையாகி வருகின்றன.

> **‘‘பெண் கவிஞர்களின் உடல் பற்றிய புரிதலும், வெளிப்பாடும் தம் உடல் ரீதியான மனவலிமையைத் தெரிவிக்கும் ஒரு கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றது. பெண்ணுடல் சார்ந்த உணர்வுகளின் வெளிப்பாடு பெண்களால் வெளிப்படுத்தப்படுவது தமிழுக்குப் புதியது அல்ல. ‘‘பெண் தன்னை விடுவித்துக் கொண்டு தன்னுடைய மதிப்பீட்டைத் தானே உருவாக்கிக் கொள்ள வேண்டும்’’**[37]

என்கிறார் எம்.ஜி.சுரே . இவற்றையெல்லாம் தாண்டி ஒரு பெண், எழுத்துக்களை முன் வைக்கும்போது ஆணாதிக்கச் சமூகத்தில் அவளின் நிலைப்பாடு என்ன என்பதைப் பெண் கவிஞர் வெண்ணிலா கூறுகிறார்.

"ஆணினுடைய எழுத்துக்கள் அவனுடைய படைப்பானுபவமாக, படைப்புத்திறமாகப் பார்க்கப்படும் சமூகத்தில், பெண் எழுத்துக்கள் மட்டும் சுய அனுபவமாக அவள் முகம் சார்ந்து பார்க்கப்படுதல், பாலியல் ரீதியான தன் சுய சார்பை, சுய விருப்பை வெளியிட்டு விட்டால், எழுத்துக்கள் அழிக்கப்பட்டு அவளின் நடத்தை விமர்சிக்கப்படும்"[38]

என்கிறார்.

### 1.5 பெண் படைப்பாளர்களும் சமூக மொழியும்

தற்காலப் பெண்கள், பெண் விடுதலை என்பதை உடல் சார்ந்த ஒன்றாகவே பார்க்கின்றனர். பெண்ணிற்கு இயற்கை விதித்த தண்டனையே ஆணுக்குப் பாலமாக அமைந்துவிடுகிறது என்பதை முன்னிருத்தி, சமுதாயப் பார்வையில் ஆண்கள் செய்யும் தவறுகளுக்குப் பெண்ணுக்கே தண்டனை அளிக்கப்படுகிறது. தருமர் சூதாட்டத்தில் தோற்றதால் பாஞ்சாலியை நிர்வாணப்படுத்த முயற்சிக்கிறான். இராவணன் சீதையைத் தூக்கிச் சென்றதால் சீதைக்குச் சிதை மூட்டப்பட்டது. அகலிகையை இந்திரன் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதால் அகலிகை கல்லாகச் சபிக்கப்பட்டாள். ஔவை முதியவள் தோற்றம் பெற்றதும், காரைக்கால் அம்மையார் பேயுருக் கொண்டதும், சமுதாய வன்முறைகளின் கட்டாயத் தேவைகளே என்பதை மையப்படுத்தியே இலக்கியத்தில் பெண்களை இவ்வாறு சித்திரிக்கின்றனர். எனவே சமுதாயப் பார்வையில் பெண் அடங்கி, ஒடுங்கி, கட்டுப்படுத்தி வைக்கப்பட்டுள்ளாள். இக்கட்டுக்களை எல்லாம் உடைத்தெறிந்து விட்டு பெண்ணே சமூகத்தைப் பற்றியும், தன்னைப்பற்றியும், தன் வலிமையைப் பற்றியும், தன் இருப்புப் பற்றியும் இலக்கியங்கள் பல படைத்துள்ளாள். அதில் பாமா, சிவசங்கரி, அம்பை வாஸந்தி, ராஜம் கிரு ணன், ஹெப்சிபா ஜேசுதாசன், ல மி, இந்துமதி,

தற்காலப் பெண் கவிஞர்கள் தமயந்தி இவர்களின் சமூக மொழி ஈண்டு ஆராயப்படுகின்றன.

பாமா ஒரு தலித் படைப்பாளி தலித் மக்களின் வாழ்க்கைப் முன்னேற்றத்திற்குக் குடிப்பழக்கமும், சில மூட நம்பிக்கைகளும் பெரும் தடையாக இருக்கிறது என்றும், தலித் பெண்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தோடு எதிர்த்துப் போராட முடியாமல் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள் என்பதையும், தலித் பெண்களால் மட்டுமே தலித் பெண்ணியத்தை உருவாக்க முடியும் அவர்களின் அனுபவங்களும், வாழ்க்கை நிகழ்வுகளும் மற்றவர்களால் எளிதில் உணர இயலாது என்பதை இவருடைய படைப்பின் மூலம் சமூக மொழியாக முன்வைக்கிறார்.

அம்பை எழுத்துலகில் பல இலக்கியப் படைப்பாளர்களிடம் நட்பு முறையில் பழகுபவர். இவர் பணத்திற்காகவும், புகழுக்காகவும் எழுதுபவர் அல்ல. எதார்த்த நிகழ்வுகளை வெளிக்கொணர்பவர். கூட்டுக் குடும்பச் சிக்கல்களை எதார்த்தமாக எழுதுபவர். சமுதாய நடப்புக்களைக் கூறுபவர் என்பதை இவருடைய படைப்பின் மூலம் சமூக மொழியாக முன்வைக்கிறார்.

ல மியின் படைப்புக்கள் எல்லாம் சீர்திருத்தக் கொள்கையை வலியுறுத்துவன. இவர் பெண்ணியச் சிந்தனையாளர் எனலாம். பெண்களின் உயர்விற்குக் குடும்பம் என்ற அமைப்பு சமூகத்தில் இன்றியமையாததாகவும், பெண்களே அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருத்தல் கூடாது என்பதையும், பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் வகையில் இவரது சமூகமொழி இடம்பெறுகிறது.

இந்துமதி மத்தியதர வர்க்கத்தைப் படம் பிடிப்பவர். சமூகத்தோடு சமரசம் செய்து கொள்பவர். ஆணாதிக்கப் பார்வையோடு ஒத்துப் போகின்றவர் எனலாம்.

சிவசங்கரி குடும்ப உறவுதான் சிவங்கரியின் கவனத்தைப் பெறுகின்றது. சிவசங்கரியின் பெண்கள் குடும்பம் என்ற நிறுவனத்திற்கு வெளியே செல்வதில்லை. அதாவது அவர்களுடைய அனுபவங்கள், செயற்பாடுகள் எல்லாம் பெரும்பாலும் குடும்பம் எனும் அலகுக்குள் சுழன்று வருவதாகக் காட்டுகிறார், குடும்ப அமைப்புச் சிதைந்து விடாமல் இருப்பதற்குப் பொறுப்பான உறுப்பினர் பெண்தான். குடும்ப அமைப்பிற்குள் ஒரு பெண்ணின் நிலை என்ன என்ற தேடலுடனும் குடும்ப அமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் இவருடைய படைப்பின் மூலம் சமூக மொழியாக முன்வைக்கிறார்.

வாஸந்தி மேல்தட்டு மக்களை மையமாகக் கொண்டு சமூகம், சமயம், அரசியல் போன்றவற்றைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் புரட்சிகரமான கருத்துக்களையும், பெண்மையைப் பல கோணங்களிலும் காட்டி அங்கு எழும் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்கிறார். மறுமணம், மணவிலக்கு, விதவை, கற்பு, வேலைக்குச் செல்லல் முதலான பல கோணங்களில் பெண்கள் பற்றிய கருத்தினை அவருடைய படைப்பில் காணலாம்.

ராஜம் கிரு ணன் அடித்தட்டு மக்கள் பணிபுரியும் இடங்களையும், அவர்களது வாழ்க்கைச் சூழலையும் வைத்துக் கதைகள் படைத்துள்ளார். ராஜம் கிரு ணன் ஆழமான சமுதாயப் பார்வையும், பொறுப்புணர்ச்சியும் கொண்டவர். மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மனிதாபிமான உணர்வுடன் அணுகித் தம் பாத்திரங்களைப் படைப்பதில் வல்லவர். மறுமணம், விதவை

மறுமணம் ஆகியன பற்றிப் புதுமைக் கருத்துக்களைத் தம் படைப்பு வழியில் சமூக மொழியாக முன்வைக்கிறார்.

ஹெப்சிபா ஜேசுதாசன். இவருடைய படைப்பும் குடும்பம், சாதி , மதம் இவற்றை மையப்படுத்தியே வெளிவந்துள்ளது.

19-ஆம் நூற்றாண்டில் இலக்கியம் படைத்த பெண் படைப்பாளர்களில் பலர் குடும்பம் என்ற அமைப்பையே மையப்படுத்தி இலக்கியம் படைத்துள்ளனர். பெண் ஆணுக்கு அடங்கி, கட்டுப்பட்டு வாழ்தல் வேண்டும் என்றும், கூட்டுக்குடும்பம் சிதறாமல் இருத்தல், குடும்பச் சிக்கல் இவற்றை மையப்படுத்தித்தான் படைக்கின்றனர். பெண் இலக்கியம் படைத்தாலும் தன் மரபை மீறாமல், கட்டுடைக்காமல் இலக்கியம் படைக்கின்றாள்.

இன்று சுகிர்த ராணி, வெண்ணிலா, லீனா மணிமேகலை, சல்மா, கனிமொழி, மாலதி மைத்ரி போன்ற கவிஞர்கள் பெண்களுக்கு ஏற்படுகிற மாதவிடாய்ப் பிரச்சனைகள் உடலுறவு எண்ணங்கள் பேறுகால அவஸ்தை இவற்றை எழுதுகின்றனர். பெண்கள் தங்களின் உடைமையான உடல் குறித்துத் தாங்களே எழுத வந்திருப்பது தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறது எனலாம்.

இவ்வாறு ஆண்களால் மட்டுமே பாடப்பட்டு வந்த பெண்ணின் அந்தரங்கங்களைக் கட்டுடைத்துப் பெண்கள் பாட முன்வந்துள்ளது பாராட்டிற்குரியது. இத்தகைய பெண் மொழியானது தமயந்தியின் படைப்பிலும் காணலாம்.

தமயந்தியின் நிழலிரவு நாவலில் எலிசி 18 வயதில் மாதவிடாயின் போது ஆலயத்தில் நற்கருணை எடுக்க முடியாது என்று தெரிந்தும் பதினெட்டு வயதில் நற்கருணை எடுக்கிறாள்.

**''இன்னிக்குப் பீரியடோட நற்கருணை எடுக்கா''**[39]

என அவள் அம்மா சொல்லும்போது மதக் கட்டுப்பாட்டை உடைத்து தனித்து நிற்கிறது.

'முட்கள்' என்ற கதையில் சரஸ்வதி சமையல் செய்து கொண்டிருக்கும் போது அடிவயிற்றில் வலி ஏற்படுகிறது. தேதி இருபத்தொன்று என்றதும் பீரோவைத் திறந்தாள்; அவளது கணவன் அவளிடம்,

**''என்ன இருட்டுக்குள்ள பீரோவைத் தொறந்துக்கிட்டுக் கிடக்கறே? என்ன விஷயம்? என்கிறாள்.**

**குளிக்கப்போறேன் என்கிறாள்.**

**காலங்காத்தாலயா? ஓ... அதுவா? என்றான்.''**[40]

'அறுந்த நூற்கண்டின் நுனி, ஓடையாய்' என்ற கதையில் சரஸ்வதியின் மகள் பு டியாக இருக்கிறதால் வெகு சீக்கிரமே ருதுவாகி விடக்கூடும் என்று நினைக்கிறாள்.

அப்படி நினைக்கும்போதே சரஸ்வதிக்கு சந்தோஷம் வந்தது. அப்படியாகும் சமயம், கௌரியை நிறைய போஷிக்க வேண்டும், உளுந்தங்களி, பச்சை நல்லெண்ணெய் கிண்ணியப் பாலுடன் பச்சை முட்டை அடித்துக் கொடுக்க வேண்டும் என எண்ணுகிறாள்.

'முற்பகல் ராஜ்ஜியம்' என்ற நாவலில் இந்துவின் முறைப் பையன் சண்முகம் இந்துவிடம் தவறாக நடந்துக் கொள்கிறான். அதை, தமயந்தி பின்வருமாறு பதிவு செய்கிறார்.

> **"நான் அதிர்ந்து திரும்பும்போது என்னை மல்லாக்கச் சரித்தான். இறைச்சியின் கொழுப்பும், அளவில்லாத சாப்பாட்டின் இயல்பான பு டியின் செழித்த அவனுடல் என்மேல் இருந்தது. என் கால்களை அசையாத வண்ணம் அவனது கால்களால் இறுக்கியிருந்தான். விடு என்றேன். அவன் என்னை உடலளவில் ஆக்கிரமிப்பதில் கவனமாயிருந்தான்"**[41]

என ஆணின் வக்கிர உடல் ஆக்கிரமிப்பு குறித்த பதிவை, தமயந்தி கதையாக்குகிறார்.

சங்ககாலத்திலிருந்து 20-ஆம் நூற்றாண்டுவரை, ஆணாதிக்க மனோபாவப் பாடல்களே அதிகம். பெண்ணை நுகர்வுப் பொருளாகப் பார்த்த தன்மையும் இருந்தது. பெண் கல்வி, ஆண் பெண் சமத்துவம் கற்பு பொது எனப் பாரதியிடம் காணமுடியும். இன்று பெண்களே தங்கள் குமுறல்களை, மனவேதனைகளை இலக்கியத்தில் படைக்கின்றனர்.

### 1.6 தமயந்தியின் படைப்புச் சூழல்

தமயந்தியின் படைப்பு உருவாவதற்கான படைப்புச் சூழலையும், அப்படைப்பு மூலமாய் மக்களிடமிருந்து வந்த விமர்சனங்களும், படைப்புப் பாங்கையும், சமூகத்தின் மீதுள்ள தாக்கத்தையும் தமயந்தி தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

### 1.6.1 சாம்பல் கிண்ணம்

‘‘என் கைகள் ஸ்நேகமுடன் பற்றிக் கொள்ளப்பட்டால் போதும், உலகில் சகலரோடும் ஸ்நேகமாயிருக்கும். பொருட்டே, இந்தக் கதைகள் அப்படி ஸ்நேகமாயிருப்பதற்கான கருவி. இந்தக் கதைகள் தான் என் மனிதர்களை என் சந்தோஷங்களை, துக்கங்களை, என் கனவுகளை அது சார்ந்த நம்பிக்கைகளை வெளிப்படுத்தியுள்ளேன். இக்கதைகளில் சில வெளியான சமயம், பெரும் விவாதத்திற்குள்ளானவை. ஒரு பெண்ணாயிருந்து கொண்டு நான் எழுதியிருக்கக் கூடாதென்றும், ஒரு பெண் எழுதுவதற்குச் சில விதிமுறைகள் வரம்புகள் உள்ளன என்றுமொரு ஆணாதிக்க நாவு புரண்டு பேசிற்று. சமகால அரசியல் சூழலைக் குறித்த திருப்தியின்மையைப் பதிவு செய்ததாலும் விமர்சனம் எழுந்தது. மிகப் பெரிய அரசியல் பாரம்பரியங்களையும், சித்தாந்தங்களையும் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களையும், சிதைவுகளையும் கண்டு படைத்துள்ளார்’’[42]

### 1.6.2 அக்கக்கா குருவிகள்

‘‘எழுத்தின் மூலம் நான், என் நம்பிக்கைகளைச் சொல்லியிருக்கிறேன். என்றே தோன்றுகிறது. எழுத்து, நல்ல நண்பர்களைத் தேடித் தந்திருக்கிறது. என்னிடம் ஒரு நல்ல கதை சொல்லியின் லாவகம் அதிகமிருப்பதாக நான் சொல்லிக் கொள்ள முடியாது. என் பாஷையில் நான் பருகும் தாமிரபரணி போல என் கனவுகளை, என் வேதனைகளை, என் நம்பிக்கைகளை, என் சந்தோஷங்களை, என் மனிதர்களை நான் சொல்கிறேன். இத்தொகுப்பில் பெண்களைப் பற்றின கதைகள் சற்று அதிகமானதாக இருப்பதாகவே, தொகுத்த பிறகு எனக்கொரு எண்ணம்

ஏற்பட்டது; என்றாலும் அது தவிர்க்க முடியாததாகவும் ஆகிப்போனது. ஒரு வேலை பார்க்கும் நடுத்தர வர்க்கத்துப் பெண்ணின் காலை நேர பஸ் பயணம் ஒரு நிமிஷம் என் நினைவுக்கு வந்தது. அதற்குப் பிறகு தொகுத்த கதைகளை மாற்றும் எண்ணத்தையும் நான் மாற்றிக் கொண்டேன்''43

### 1.6.3 முற்பகல் ராஜ்ஜியம்

''பெண்களின் திருமண வாழ்க்கை அவலமானது. தொண்ணூறு சதவீதப் பெண்கள் தங்களுக்குக் கிடைத்த ஆண்களைச் சகித்துக் கொள்கிறார்கள். ஐந்து சதவிகிதம் விவாகரத்து செய்கிறார்கள் மூன்று சதவிகிதம் சந்தோஷமாய் நண்பர்களாய் வாழ்கிறார்கள். மீதி இரண்டு சதவிகிதத்தினர் கணவனால் கொல்லப்பட்டோ அல்லது தற்கொலைக்கு உந்தப்பட்டோ இறக்கிறார்கள்.

''இந்தக்கதை ஒரு பிரபல தமிழ்ச் சினிமாவிற்காகத் தான். 1980 ஆம் ஆண்டின் இறுதியில் வந்த அப்படம் மிகப்பெரிய அங்கீகாரம் பெற்றது. என்னில் கவலையைத் தந்தது. கலாச்சார சீரழிவு, பண்பாட்டுச் சிதைவு எல்லாமே பெண்களைச் சார்ந்த விஷயங்களாகவே கருதப்படுவது வருந்தத்தக்கது. ஆண்களோ பெண்களோ மனிதர்களாய்க் கருதப்படுவதில்லை. இங்கு அத்தகைய பார்வை மனித சமுதாயத்தின் வரமாகும்''44

### 1.6.4 நிழலிரவு

''போலித்தனம் மிகுந்த கட்டமைப்பின் நீட்சியாகவே கிறிஸ்தவ மதம் மாறிவிட்டது. எங்காவது ஒருசில நல்ல போதகர்களும் ஐயர்மார்களும் இருக்கக் கூடும். கிறிஸ்தவ மதம் சார்ந்த ஆசிரிய குடும்பத்திலேயே முப்பது வருடங்களாய்ப் புழங்கின வாடை, வாழ்க்கை முழுவதும் என்

மேலிருக்கும் ட்ரான்ஸ்பரால் எனது குடும்பம் மிக மோசமாக சீரழிக்கப்பட்டது. கோர்ட் படிகள் ஏறி காலம் கடந்து அக்கால கட்டத்தில் தான் சபைகளில் நிலவும் உள் அரசியல் எனக்குப் புலப்பட்டது. சங்கம் சார்ந்த குடும்பத்தில் பிறந்ததினால் தான் அநீதிகளுக்கு எதிராகக் கேள்விக் கேட்கும் மனோபாவம் எனக்கிருக்கிறது என்பதை எக்காலத்திலும் மறுக்க இயலாது. எனினும் சில நேரம் அவர்கள் மீதும் சுட்டுவிரல் நீட்ட உள்ளது துரதிர் டவசமானது.''[45]

### 1.6.5 வாக்குமூலம்

''இந்தத் தொகுப்பில் என்னால் கண்ணீர்த் துளியின்றி கடந்து போக முடியாத கதை, வாக்குமூலம், அந்தக் கதை எனதன்பின் சாட்சியாய், என் மகளிடம் நாளை பேசும். அந்த 'கனம்' நீங்கள் அந்தக் கதைக்குள் புகும் சமயம் ஏற்படலாம். அடுத்தப் பக்கத்தைத் திருப்பி உங்களுக்கு ஒரு கண் இடைவெளியும் மனதில் ஒர துளி ஈரமும் ஏற்படில் என் அன்பு ஜெயிக்கும் என்று வாக்களித்ததாய் நினைப்பேன். இந்தத் தொகுப்பிலுள்ள கதைகள் புனைவுகள் என்று பொய்சொல்ல முடியாது. கதைகள் நெடுகப் பரவிக் கிடக்கும் ஏக்கங்கள் உங்களுக்கு அந்நியப்பட்டு இராது. ஒன்றை உலகத்தை கடவுள் வானத்தை வைத்து மூடினது போல் இன்னும் நாம் மறைக்கப்பட்டவற்றையே நிஜமென நம்புகிறோம். நிர்வாணத்தை மறுக்கும் மனநிலை இருக்கும்வரை இது போல் போலிகளே உண்மையாகக் கருதப்படுவார்கள்.

உடலை நாம் கவர்ச்சியின் அம்சமாக நினைக்கும்வரை காமத்தை காதலின் வெளிப்பாடாகக் கொள்ளாதவரை அம்மணங்கள் நம்மை மறைவாக கவரக்கூடும். இதையெல்லாம் நான் சொல்வதைக் காட்டிலும் என்

**கதைகள் சொன்னால் சந்தோஷப்படுவேன். இந்தத் தொகுப்பின் கதைகளுக்குப் பின்னால் ஒவ்வொரு மனிதர்கள் இருப்பதுபோல் தொகுப்பிற்குப் பின்னும் மனிதர்கள் இருக்கிறார்கள்.**''46

இவ்வாறு தனது படைப்பு எழுந்தச் சூழலை ஆசிரியர் கூற்றாகத் தனது படைப்பின் முன்னுரைப் பகுதியில் பதிவு செய்துள்ளார்.

### 1.7 தமயந்தியின் சமூக மொழி

தமிழ்ச் சிறுகதைகள் எல்லாமே ஆரம்பக் காலக் கட்டங்களில் அழகியல் என்ற இலக்கிய இரசனையோடும், தனித்தமிழ் மொழி நடையிலும் காணப்பட்டன. ஆனால் தமயந்தியின் படைப்புக்கள் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்திப் பெண்களின் மன உணர்வுகளைச் சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. இவர் அழகியலைப் பற்றிக் கவலைப்படாமல் சமுதாயத்தில் நிகழக்கூடிய பிரச்சினைகளை எதார்த்தமாக அப்படியே இலக்கியத்தின் வாயிலாகப் பதிவு செய்துள்ளார்.

ஆண்களின் தவறான நடத்தை காரணமாக, பெண்கள் ஏமாற்றப்படுகின்றனர். ஆண்கள் பெண்களை வெறும் காமநுகர்ச்சிப் பொருளாகவே கருதுகின்றனர். ஆணாதிக்கச் சமுதாயத்தில், சூழ்நிலை காரணமாகப் பெண்களைப் பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் ஆண் பெண் நட்புக்கு ஒரு பெண்ணின் பின்புலம் தெரியாமல் தவறாகப் பேசுதல், நன்றியுணர்வு அற்ற செயல்பாடுகள், இளைஞர்களின் பொறுப்பற்ற தன்மையினால் அவர்கள் வாழ்வை அழித்துக் கொள்கின்றனர். வறுமையின் காரணமாகப் பெண்ணை பொருந்தாத் திருமணம் செய்யக் கட்டாயப்படுத்துதல், சுயநலம் மிக்க ஆண்கள் வழிதவறியப் பெண்களுக்கு

வாழ்க்கை தருவதாகக் கூறி அவர்களை மீண்டும் அவலநிலைக்கு ஆளாக்குதல் போன்றவை ஏற்படுகின்றன.

கல்வித் துறையில் லஞ்சம் புகுந்து விட்டதால், ஒரு ஏழைப்பெண் பட்டம் பெறப் பாடுபடுதல், வேலைக்காக லஞ்சம் வாங்கும் கிறிஸ்தவ மதப்போதகர்களின் நிலையையும் சாதி, மதக்கட்டுகளால் கிறிஸ்தவ மதத்தில் ஏற்படும் பிரச்சனைகளையும், வறுமையினால் திருமணம் தடைபடுதல், காதல் தோல்வியடைதல், வரதட்சணைக் கொடுமை, வரதட்சணை கொடுக்க முடியாமல் முதிர்கன்னியாக இருக்கும் பெண்ணின் நிலையையும் பெண்ணின் தவிப்பு, பெண்ணின் குமுறல்கள், பெண்ணின் தனிமை இவற்றைச் சமூக மொழியாக முன் வைக்கிறார்.

**1.8 முடிவுரை**

பெண் எழுத்துக்களில் சமூகமொழிக் கருத்தாக்கம் என்ற இவ்வியலில் மொழி என்றால் என்ன என்பதுடன் மொழி சமூகத்தோடு கொண்டுள்ள தொடர்பையும், மொழி இலக்கியத்தோடு கொண்டுள்ள தொடர்பையும் விளக்கி, கருத்தாக்கம் என்றால் என்ன என்பதுடன் சமூக மொழிக் கருத்தாக்கம் குறித்த கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. மேலும் காலந்தோறும் பெண்ணின் நிலைப்பாட்டை விளக்கி, அக்காலங்களில் வெளிவந்த பெண் எழுத்தாளர்களின் சமூகமொழியைக் கூறுவதுடன், தமயந்தியின் எழுத்தில் இடம்பெற்றுள்ள சமூக மொழியாகப் பெண்களின் பிரச்சினைகளை மையப்படுத்திப் பெண்களின் மன உணர்வுகளைச் சமுதாயத்திற்கு வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. இவர் ஆணாதிக்கச் சமுதாயத்தில் நிகழக்கூடிய சமூகப் பிரச்சினைகளை எதார்த்தமாகத் தன்னுடைய எழுத்து வாயிலாகச் சமூகமொழியாக இவ்வியலில் பதிவு செய்துள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. மு. வரதராசன், மொழி வரலாறு,ப.1.
2. மேலது., ப.2.
3. மேலது., ப.4.
4. மேலது., ப.4.
5. மேலது., ப.4.
6. மேலது., ப.5.
7. பெ. சுயம்பு, செம்மொழித் தமிழ், ப.9.
8. தே. லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.1.
9. கார்த்திகேசு சிவத்தம்பி, இலக்கியமும் கருத்து நிலையும், ப.12.
10. மேலது., ப.12.
11. மேலது., ப.144.
12. இராஜம் கிரு ணன், காலந்தோறும் பெண், ப.
13. திரு.வி.கல்யாண சுந்தரம், பெண்ணின் பெருமை, பக். 31, 32.
14. பரிமளம், அ.மா. புறநானூறு, ப. 187.
15. பரிமளம், புறநானூறு, 683.
16. திரு.வி. கல்யாண சுந்தரம், மு.கூ.நூ., ப.26.
17. சரோஜினி தேவி (க.ஆ) இந்தியப் பெண் குமரி மலர். மே-1974 ப.7.
18. ஈ.வே.இராமசாமி, பெண் ஏன் அடிமையானாள், ப.27.
19. சேக்கிழார், பெரியபுராணம், காரைக்கால் அம்மையார் பாடல் எண்.1776.
20. மு. இராகவையங்கார். ஆழ்வார்கள் காலநிலை, ப.93.
21. ஆண்டாள், திருப்பாவை, பக். 4, 5.
22. து.மூர்த்தி, புலமை திசம்பர் 1982. இதழ், ஆங்கிலக் கட்டுரை. ப.45.
23. முனைவர் சா. வளவன், பெண் படைப்பாளர் தம் படைப்புகள், ப .2.
24. அ. வெண்ணிலா, மீதமிருக்கும் சொற்கள், பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்,
25. முனைவர் சா.வளவன், பெண் படைப்பாளர் தம் படைப்புகள், ப. 6.
26. பேரா. க. பஞ்சாங்கம், கட்டுரைகள், நவீன இலக்கியக் கோட்பாடுகள். ப.68.
27. மேலது., ப.68.
28. மேலது., ப.68.
29. மேலது., ப.69.
30. மேலது., ப.70.
31. புலவர் மு.தாசன், தொல்காப்பியக் களஞ்சியம், பொருளதிகாரம், ப.எ.282.
32. மேலது., களவியல், ப.192.
33. மேலது., களவியல், நூ.எ., 162.
34. பேரா. க. பஞ்சாங்கம், மு.கூ.நூ.ப.62.
35. மேலது., ப.62.
36. அ.மா. பரிமளம், குறுந்தொகை, ப. 83.

37. பேரா.க. பஞ்சாங்கம், மு.கூ.நூ., ப. 68.
38. மேலது., ப. 64.
39. தமயந்தி, நிழலிரவு, ப. 13.
40. தமயந்தி, அக்கக்கா குருவிகள், பக். 31 - 32.
41. தமயந்தி, முற்பகல் இராஜ்ஜியம், ப. 29.
42. தமயந்தி, சாம்பல் கிண்ணம், பக்.4-5.
43. தமயந்தி, அக்கக்கா குருவிகள், பக்.7,8.
44. தமயந்தி, முற்பகல் ராஜ்ஜியம், பக்.3,4.
45. தமயந்தி, நிழலிரவு, ப. viii.
46. தமயந்தி, வாக்குமூலம், பக்.12.13

# இயல் – 2
# குடும்பமும் சமூக மொழியும்

## 2.0 முன்னுரை

சமுதாயத்தில் மேல்நிலையிலிருந்த பெண்களைத் தாய்மை, கற்பு எனும் கருத்தாக்கங்களைப் புகுத்திக் கீழ்மட்டத்திற்குக் கொண்டு வந்தனர். குடும்பம், சமூகம், மதம், அரசியல் என அனைத்து நிறுவனங்களும் பெண்களை இரண்டாம் நிலையில்தான் இன்றுங்கூட வைத்துள்ளன. பெண்ணை ஆணுக்கு இணையான சமஉயிரியாகக் கருத மறுத்ததுடன் அவளைச் சார்பு வாழ்க்கைக்குத் தள்ளியது இச்சமூக அமைப்புதான்.

> **“இனப்பெருக்கத்திற்கும் இல்லறக் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கும் உரியவர்கள் பெண்கள் என்பதற்கு அப்பாற்பட்டு அவர்களின் உண்மை வாழ்வு எண்ணப்படுவதில்லை”**[1]

பெண்களைக் குறித்த ஆண் ஆதிக்கச் சமூகச் சொல்லாடல்களும் கருத்தாக்கங்களும், பெண்களின் பங்கு நிலையும், பணிப்பகிர்வும் பெண்களின் சமூகத் தகுதியைத் தீர்மானிக்கின்றன.

பெண்களின் உரிமையின்மையும், பாதுகாப்பற்ற வாழ்க்கையும் ஆணாதிக்கச் செயல்பாடுகளும் அடக்கு முறைகளும் அவர்களைச் சார்பு வாழ்க்கைக்கு இட்டுச் செல்கின்றன. குடும்ப அமைப்பில் பெண்மீது அதிகமான பொறுப்புகளைச் சுமத்தி மறைமுகமாகக் கீழ்ப்படுத்துகின்றனர். சமூக நிலையில் பெண் குடும்பம் என்ற அமைப்பில் மிகுந்த துன்பத்திற்குள்ளாகின்றாள் என்பதே உண்மை. இவ்வியலில் குடும்பத்தின் தோற்றம், குடும்பத்தின் சிறப்புயல்புகள், குடும்பத்தின் வகைகள், குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், திருமணத்தால் ஏற்படும் மாற்றங்கள்,

திருமணச் சிக்கல்கள், உறவுநிலைச் சிக்கல்கள் ஆகியவை சமூகமொழிக் கருத்தாக்கங்களாக, தமயந்தியின் படைப்புகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பன ஆராயப்படுகிறது.

**2.1 குடும்பம் – விளக்கம்**

குடும்பம் என்ற அமைப்பிற்குக் கீழ்க்காணும் விளக்கங்கள் சிறப்பானவையாக அமைகின்றன.

> ‘‘குடும்பம் என்னும் அமைப்பானது ஓர் ஆணும் பெண்ணும் அவர்களுடைய சமுதாய மரபுப்படி மணவாழ்வில் ஈடுபடும் நிலையில் மட்டுமே தோன்ற முடியும். அவ்வாறு இணைத்தால் தான் அச்சமுதாயத்தில் அவர்கள் குடும்பமாக ஏற்றுக் கொள்ளப்படுவர். அவ்வாறன்றி ஒரே வீட்டில் ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ, வேறு வகையிலோ உறவு பெற்று உண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணவன்– மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தவியலாது’’[2]

> ‘‘இரத்த உறவினாலோ மண உறவினாலோ அல்லது சுவீகாரத்தினாலோ பிணைப்புண்ட இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மனிதர்கள் சேர்ந்து வாழும் அமைப்பு, குடும்பம் என்று வரையறை செய்யப்படுகிறது’’[3]

> ‘‘குடும்பம் என்பது குறைந்தபட்சம் ஆண் ஒருவனும் பெண் ஒருத்தியும் குழந்தைகளோடு சமுதாயத்திலோ அல்லது திருமணத்தாலோ அங்கீகரிக்கப் பெற்ற நிலையான உறவில் அமைவதாகும்’’[4]

மேற்கண்ட விளக்கங்களின் மூலம் குடும்பம் என்ற அமைப்பிற்கு மணத்தின் மூலம் அமையக்கூடியது கணவன் - மனைவி உறவே

அடிப்படைக் காரணமானது என்றும், கணவன் மனைவியால் உருவாக்கப்படும் இரத்த உறவுகளும் கூடிவாழும் அமைப்புமே குடும்பம் என்பதை மேற்கண்ட வரையறைகளின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

## 2.2 குடும்பத்தின் தோற்றமும் கருத்தாக்கமும்

தொல் பழங்காலங்களிலிருந்து குழுமணமே குடும்பத்தின் முதல் வடிவமாக இருந்துள்ளது. இந்தக் குழுமணத்தின் காலந்தோறும் ஏற்பட்டு வந்த மாற்றங்களே குடும்பம் என்ற அமைப்பு வரலாற்றில் பல தன்மைகளைப் பெறக் காரணமாக அமைந்துள்ளது. இதனை எங்கெல்ஸ் பின்வருமாறு விளக்குகிறார்.

> **“ஏடறியாத வரலாற்றுக் காலத்தில் குடும்பம் அடைந்துள்ள பரிணாம வளர்ச்சி இருபாலருக்கிடையே பொதுமணம் நிலவிய வட்டம் இடையறாது குறுகிக்கொண்டே வந்ததில்தான் அடங்கியிருக்கின்றது. ஆரம்பத்தில் குலம் முழுவதிலுமே இவ்வட்டத்துக்குள் இருந்தது. முதலில் நெருங்கிய உறவினர்களையும் ஒருவர் பின் ஒருவராக விலக்கி வைத்தாலும், கடைசியிலே திருமணம் என்றாலே உறவினர்களனைவரையும் விலக்கி வைத்தலும் குழுமணத்தினை ஒவ்வொரு வடிவமும் நடைமுறையில் சாத்தியமற்றுப் போகும்படி செய்யப்பட்டது முடிவில் எஞ்சிய ஒரே ஒரு தாம்பத்திய ஜோடி தான்”**[5]

இதனால் குடும்பம் சமுதாய வளர்ச்சியில் இடையறாது இயங்கிக் கொண்டு வந்ததின் மூலம் தன் வடிவத்தைக் குறுக்கிக் கொண்டு வந்து இன்றைய நிலையை எட்டியுள்ளது என்பதை அறிய முடியும்.

## 2.3 குடும்பத்தின் சிறப்பியல்புகளும் கருத்தாக்கமும்

சமுதாய உறவில் முதல் வடிவமாக அமையும் குடும்பம் பல சிறப்பியல்புகளைக் கொண்டதாக அமைகின்றது.

1. பாலினத் தேவையை உரிமையுடன் வசதி செய்து கொடுக்கின்றது.

2. முறையான உறவுடன் இனப்பெருக்கம் செய்வதன் மூலம் சமுதாயம் நீடிக்கக் காரணமாகின்றது.

3. குழந்தைகள் சமுதாயத்தில் இயக்கப் பயிற்சியளிக்கும் நிறுவனமாகின்றது. இதனால் சமூகமயமாதல் நடந்தேறுகின்றது.

4. உறுப்பினர்களைப் பாதுகாக்கும் மையமாகத் திகழ்கின்றது.

5. ஒருவனது தகுதி நிலையைத் தீர்மானிக்கக் காரணமாகின்றது.

6. சுயதேவையைப் பூர்த்தி செய்து கொண்டு இயங்குகிறது”[6]

மேற்கண்டனவற்றில் பாலினத் தேவையைப் பூர்த்தி செய்வதும், தகுதிநிலையைத் தீர்மானிப்பதும் குடும்பத்தின் தலையான பணிகளாகின்றன என்பது தெளிவாகின்றது. இக்குடும்பம் பல வகைகளாகவும் பிளவுபட்டுள்ளது.

## 2.4 குடும்பத்தின் வகைகளும் கருத்தாக்கமும்

“இந்தியச் சமூக அமைப்பைப் பொறுத்த வரையில் ‘குடும்பம்’ என்பது சமூகத்தின் வளர்ப்புப் பண்ணையாக விளங்குகின்றது எனலாம். இன்னும் ஆழ்ந்து குறிப்பிடுவதாயின் சமூகத்தின் நாற்றங்கால் குடும்பமே என்பது இந்தியச் சமூக வரலாறு சுட்டும் செய்தியாகும். திருமணம் என்ற ஒழுங்கமைதியின் மூலமாகக் குடும்பக் கட்டமைப்பு இந்தியாவில் காலங்காலமாக வலுப்பெற்று வந்திருக்கிறது. இக்காலத்தில் கூடத் திருமணம் தொடர்வதைப் பற்றி அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது”[7]

மேற்கண்ட வரையறையிலிருந்து சமூகத்தில் குடும்பத்தின் முக்கியத்துவத்தை அறிய முடிகிறது.

பொதுவாகக் குடும்பத்தைத் தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பம் என்று இரு வகைப்படுத்துவர் சிலர். கூட்டுக் குடும்பத்தில் சிறு வேறுபாடுகளைக் காட்டி, விரிவாக்கப்பட்ட குடும்பம் என்று மூன்று வகைப்படுத்துவர்.

### 2.4.1 கூட்டுக் குடும்பக் கருத்தாக்கம்

> **‘‘ஒரே மரபு வழிச் சார்ந்த இரத்த உறவுடைய இருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ ஒரே வீட்டில் ஒரே தலைமையின் கீழ் தங்கள் மனைவியர்களுடனும் குழந்தைகளுடனும் கூடி வாழ்தலையே கூட்டுக் குடும்பம் என்கிறோம்’’**[8]

சான்றாக ஒருவன் தன் மனைவியுடனும், மணமான மகன்கள் அவர்தம் மனைவியர், அவர் தம் குழந்தைகள் ஆகியோருடனும் ஒரே வீட்டில் வசித்தலைக் கொள்ளலாம். இந்திய நாட்டில் வாழும் இந்துக் குடும்பங்களிடையே தொன்றுதொட்டு நிலவி வரும் ஓர் அமைப்பு முறையே கூட்டுக் குடும்ப முறை ஆகும்.

### 2.4.2 தனிக்குடும்பக் கருத்தாக்கம்

> **‘‘குடும்பத்தின் மூலக்கூறுகளான கணவன் மனைவி ஆகிய இருவரோடு அவர்தம் பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தைத் தனிக்குடும்பம் என அழைக்கலாம்’’**[9]

குடும்பத்தின் முழுவடிவம் இதில் கிடைப்பதால் இதை அடிப்படைக் குடும்பம் என்றும் கூறுவர்.

### 2.4.3 விரிவாக்கப்பட்ட குடும்பமும் கருத்தாக்கமும்

''கூட்டுக் குடும்பத்திற்கும் விரிவாக்கப்பட்ட குடும்பத்திற்கும் இடையே துல்லியமான வேறுபாடு இல்லை. விரிவாக்கப்பட்ட குடும்பம் என்பது கூட்டுக் குடும்பத்தையும் உள்ளடக்கியதே. கூட்டுக் குடும்பத்தைவிட விரிவாக்கப்பட்ட குடும்பம் பெரிதாக இருக்கும். பொதுச் சொத்து இல்லாமலிருப்பினும் விரிவாக்கப்பட்ட குடும்ப அமைப்பில் ஒருவருக்கொருவர் உதவுவர். விரிவாக்கப்பட்ட குடும்பம் என்பது ஒரே இடத்தில் வாழாதவர்களையும் குறிக்கும். 1950 இல் வீட்டு வேலைகளைப் பங்கிட்டுக் கொண்ட வண்டல் கூலித் தொழிலாளர்களை இதற்குச் சான்றாகக் கூறலாம். விரிவாக்கப்பட்ட குடும்பத்தின் முக்கியப் பணி ஒரே வீட்டில் வசிப்பது என்பதன்று. ஆனால் அந்த உறவினர் தமக்குள் பொருளுதவி செய்து கொள்வர். பொருளாதாரப் பொறுப்பைப் பங்கிட்டும் கொள்வர்''[10]

மேற்குறிப்பிட்ட மூவகைக் குடும்ப வகைகளுள் தற்காலத்தில் தனிக்குடும்பக் கருத்தாக்கமே பெரிதளவில் நிலைத்திருக்கிறது.

## 2.5 குடும்பமும் சமூகக் கட்டுப்பாடும்

''சமூகக் கட்டுப்பாடு என்பது, சமூகத்தின் உறுப்பினர்களையும், உறவுகளையும் அதன் அமைப்புகளையும் நிறுவனங்களையும் சீர்படுத்தி ஒரு நிலையான சமூக வாழ்க்கைக்கு உறுதி அளிக்கும் சிறந்த வழியாகும்''[11]

''பெரும்பான்மை மதிப்புகள் ஒரு சமூகத்தின் அங்கத்தினர்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுவர். சமூகத்தின் அங்கத்தினர்கள் தங்களுக்குள் அவற்றைப் பரப்புகின்றனர். அவை அழிந்துவிடாமல்

பேணுகின்றனர். இதனாலேயே சமூகம் தொடர்ந்து இயங்கவும் நிலைபேறு கொள்ளவும் முடிகிறது. அங்கத்தினர் அனைவரும் கூடிப் பொதுவான மதிப்புகளின் அடிப்படையில் செயற்படாவிட்டால் குழப்பமே மிஞ்சும். சமூகம் நிலைபெற இயலாது"[12]

என்று ஜே. பி. சிதம்பரம் கூறுவதாக சேதுமணி மணியன் குறிப்பிட்டுள்ளார்.

"சமூக கட்டுக்கோப்பிற்கும் குடும்பம் என்னும் அலகு மிகவும் செம்மையாக அமைதல் வேண்டும். குடும்பத்தில் ஒருவர் பெறும் பயிற்சியும், பட்டறிவும் அவருடைய சமூகப் பார்வையை வடிவமைக்கக்கூடிய அடிப்படைகள் என்று கூறலாம். குடும்ப உறவுகளில் செழுமை, கண்டவர் சமூக வாழ்வில் வெற்றியடையும் வாய்ப்பினை மிகுதியாகப் பெறுவர். குடும்ப வாழ்வுக் குலைவு ஒருவரை வழிதவறச் செய்துவிடும் என்பது உண்மை"[13]

"ஒருவருடைய நடத்தை எவ்வாறு அமைய வேண்டும் என்றால் பல ஒழுங்குமுறைகள் சமூகத்தில் உள்ளன. இந்த ஒழுங்கு முறைகளே சமூக நெறிகள் எனப்படுகின்றன. இவை பொதுவாக, தரங்கள் அல்லது குழு நடத்தையின் தரங்கள் என்று குறிப்பிடப்படுவதுண்டு. சமூகத்தால் ஒத்துக் கொள்ளப்பட்ட அல்லது பகிர்ந்து கொள்கின்ற எதிர்பார்ப்பின் தரமே சமூக நெறியாகும். பல குறிப்பிடத் தகுந்த நெறிகளைத் தனிமனிதர்கள், குடும்பங்கள் கொண்டிருந்தாலும் சமூகத்தில் பெரும்பாலோர் ஏற்றுக் கொண்ட நெறியே முக்கிய நெறியாகும். ஒரு நெறி சார்ந்த ஒழுங்கு அல்லது கட்டுப்பாட்டைத் தனது உறுப்பினர்களின் மேல் சமூகம் விதிக்காவிட்டால் அவர்களிடையே ஓர் உள்ளார்ந்த உறவு, ஒத்துழைப்பு

போன்றவை ஏற்பட்டால் வாழ்வே கடினமாகிவிடும். சமூக நெறிகள் மனிதனுடைய நடத்தையை இரண்டு வழிகளில் நிர்ணயிக்கின்றன. ஒன்று அவன் இன்னவற்றைச் செய்யலாம். செய்ய வேண்டும் என்று ஆணையிடுகின்றது. மற்றொன்று அவன் இன்னவற்றைச் செய்யலாகாது என்று தடைப்படுத்துகின்றது"[14]

என வாழ்வியல் களஞ்சியம் கூறுகிறது.

மேற்கண்ட வரையறையிலிருந்து சமுதாயம் கட்டுப்பாடுகளைக் கொண்டு விளங்குகிறது. அக்கட்டுப்பாடுகளை ஒவ்வொரு மனிதனும் பேணிப் பாதுகாக்க வேண்டும். இன்னவற்றைச் செய்தல் கூடாது என்ற சமூக மதிப்பீடுகளும், மாறாகச் செய்யப்படுபவை சமூக விரோதச் செயல்களாகவும் கொள்ளப்படுகின்றன. சமுதாயத்திற்குச் சீர்கேடுகளை விளைவிக்கக்கூடியவர்கள் சமூக விரோதிகள் என இனங்காட்டப்படுகின்றார்கள். சமுதாய மதிப்பீடாகக் கணிக்கப்படுவனவற்றைத் தமது படைப்புகளில் குறிப்பிட்டு சமூக விரோதச் செயல்களைச் சுட்டிக்காட்டுகின்றன என்பதும் தெரிய வருகிறது.

**2.6 குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்களும் கருத்தாக்கமும்**

"ஒரு சமூக அமைப்பே மாறுகின்ற போதுதான் சமூக மாற்றம் அங்கு நிகழ்கின்றது"[!5]

என்று குறிப்பிட்டுள்ளார் சமூகவியலறிஞர் பி. குப்புசாமி.

"சமூக அமைப்பு (Social Structure) சமூக நிறுவனங்கள் (Social Institutions) சமூக நடத்தை (Social Behaviour) சமூக எதிரெதிர் செய்வினைகள் (Social Interaction) முதலிய அனைத்தும் சமூக

மதிப்புகளாகிய (Social Values) அடித்தளத்தில் வேர்கொண்டிருக்கும் அதிகாரத்தைச் சார்ந்தது சமூக மதிப்புகள் மாறும் போது இவையும் மாற்றம் பெறுகின்றன''[16]

இந்தியச் சமூக அமைப்பில் 19-ஆம் நூற்றாண்டில் தொழில்நுட்ப விஞ்ஞானம் மற்றும் அமைப்பு ரீதியான புதிய மாறுதல்களோடு, மக்களின் எதிர்பார்ப்பு விழைவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. இப்புதிய சூழலுக்கு ஏற்றவாறு பண்பாட்டு மதிப்புகளும், சமூக விதிகளும் (Social Norms) மாறுகையில் சமூக மாற்றம் இயல்பான விழைவாகிறது. சமூக மாற்றத்தின் விளைவாக மக்களின் வாழ்வியற் சூழலில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டன. குடும்ப அமைப்பில் நிலைக்களனாக விளங்கிய கூட்டுக்குடும்பம், புதிய வாழ்க்கைச் சூழலில் தனது பழைய மதிப்புகளை இழந்து சிதையத் தொடங்கியது. தனிமனிதர்களை விடவும், குடும்பப் பாரம்பரியமே சமூக மதிப்பாகக் கருதப்பட்டது. குடும்ப உறவுகளில் ஆண் சமூக மதிப்பிற்குரியவனானான்.

கூட்டுக்குடும்ப அமைப்பில் வயதுப் படிநிலைகளே பின்பற்றப்பட்டன. தலைமைப் பொறுப்பு வயதில் மூத்த ஆண்மகனிடமே இருந்தது. வயதில் பெரியவர்கள் இருக்கையில், குடும்பத் தலைமைப் பொறுப்பை இளையவர்கள் பெற முடியாது. அத்துடன் பெரியவர்களுடன் மாறுபட்டக் கருத்துக்களை நியாயமானவையாக இருந்தாலும்கூட வெளிப்படையாக அவற்றைச் சொல்லிவிட முடியாது. குடும்பத்திலுள்ள ஆண் பெண் ஆகிய அனைவரின் உழைப்பினாலும் திரட்டப்பட்டக் குடும்ப வருவாய் பொதுக்கணக்கிலேயே வைக்கப்பட்டது. குடும்ப வரவு செலவுகள் பொதுவானவை. சாதி வழக்கங்கள் மிகக் கண்டிப்பாகக்

கடைப்பிடிக்கப்பட்டன. பெற்றோர் பார்த்து முடித்து வைக்கும் திருமணங்கள் சமூக மதிப்பிற்குரியன. பெண்களின் இடம் இரண்டாம் நிலையில் தான் இருந்து வந்தது. பெண்களுக்குக் கல்வி தரப்படவில்லை.

ஆங்கிலக் கல்வியும், அரசுப்பணி வாய்ப்புகளும் இளைஞர்களைக் கவர்ந்தன. விரைவாக வளரத் தொடங்கிய நகர்ப்புறங்களில் படித்துப் பட்டம் பெற்ற கிராம இளைஞர்கள் குடியேறினர். ஒரே தொழிலைக் குடும்பத்தினர் அனைவரும் செய்துவந்த கூட்டுக்குடும்ப அமைப்புக்கு மாறாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல இடங்களுக்குச் சென்று வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டனர். கூட்டுக் குடும்ப அமைப்பு சிதையலாயிற்று. குறைந்தது மூன்று தலைமுறையினராவது ஒரே குடும்பமாக ஒரே வீட்டில் சேர்ந்து வாழும் கூட்டுக் குடும்ப அமைப்பு மாறி, கணவனும், மனைவியும் தங்கள் குழந்தைகளுடன் ஒரே வீட்டில் வாழும் தனிக் குடும்ப அமைப்பின் தோற்றம், பல புதிய சிக்கல்களை உருவாக்கியது.

கிராமங்களில் மிக அழுத்தமான ஆதிக்கம் செலுத்தும் சாதிக் கட்டுப்பாடுகள் நகர்ப்புற வாழ்க்கைச் சூழலில் மதிப்பிழந்து போயின. வெவ்வேறு சாதியினர் கலந்து வாழும் நகரங்களில் காதல் திருமணங்களுக்கான சாத்தியக் கூறுகளும் அதிகம். மரபுகளில் ஊறிய முதிய தலைமுறையினருக்குக் காதல் மணம் ஒரு புதிய சிக்கலாகத் தோன்றியது.

கல்விபெறும் வாய்ப்பினை இழந்திருந்த பெண்களின் நிலையில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. ஆண்களைப் போன்று நவீனக் கல்வி கற்று வேலைக்குச் செல்லத் தொடங்கிய பெண்களுக்குக் குடும்பமே சிக்கலாக மாறியது. வீட்டு நிர்வாகம், குழந்தைகள் பராமரிப்பு, உறவினர்கள் தொடர்புகளைப் பேணுதல் ஆகிய மரபு வழிப்பட்ட குடும்பம்

பால்நிலைகளுடன் (Family Roles) புதிய புதிய சமூகப் பங்கு நிலைகளையும் (Social Roles) பெண்கள் ஏற்றபோது பொறுப்புகளின் சுமைகள் கூடுதலாயின. அதனால் குடும்ப அமைப்பில் பெண்களின் இரண்டாம் நிலை மதிப்பில் மாற்றம் ஏற்பட்டது. வேலைக்குச் செல்லும் பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெறும் சூழலில் தங்களுக்கென்று ஒரு தனித்துவம் இருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். குடும்பமோ, பொறுமையும் பணிவும் தியாகப் பண்புகளும் கொண்ட குடும்பப்பெண் என்ற படிமத்தையே பெண்களிடம் எதிர்ப்பார்த்துக் கட்டாயப்படுத்தியது. தனித்துவத்திற்கும் தியாகத்திற்கும் இடையேயான முரண்பாடுகளைப் பெண்களால் எளிதாக ஒதுக்கிவிட முடியவில்லை. இதனால் மணவிலக்கு குடும்பத்தில் ஏற்படுவதாயிற்று.

குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவும் சமூக அமைப்பு மாறுதலின் பின்னணியில் உருவானவையே என்பதை தமயந்தி தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார். அவை ஆண் பெண் நட்பு, பிறபெண் தொடர்பு, குடிப்பழக்கம், சந்தேகம், தவறாகப் பேசுதல், சித்தி கொடுமை, விதவை நிலை போன்ற நிலைகளில் சிக்கல்கள் வெளிப்படுவதாக அவர் கதைகளின் வழி அறிய முடியும்.

### 2.6.1 ஆண் பெண் நட்பு

சமுதாயத்தில் ஒரு பெண் ஆணுடன் பேசினாலோ, பழகினாலோ அவர்களது உறவுமுறை என்னவாக இருக்கும் என்று கூடச் சிந்திக்காது அவர்களது உறவினைக் கொச்சைப் படுத்துகிறார்கள். சமுதாயத்தில் உடன் பிறவா அண்ணன், தங்கையென்று அழைத்துக் கொள்பவர்களில் சிலர் தவறான உறவு வைத்துக் கொள்வதும் உண்டு. தன்மானத்தை இழக்காமல், நேர்மையுடன் எவ்வித எதிர்பார்ப்புமின்றி நட்புடன் ஆணும் பெண்ணும்

பழகுவோரும் உள்ளனர். ஆண் பெண் நட்பு பற்றி தமயந்தி இலைகள் பேசும், அக்கக்கா குருவிகள், மாமிசம், இலுப்பைப் பூ ரகசியங்கள், தேனும் ஒரு கொயர் கோலநோட்டும், அலர், நிலை, முகங்கள், அவரும் அவர்களும் என்ற கதைகளில் வெளிப்படுத்துகின்றார்.

ஆண் பெண் நட்பு ஆரோக்கியமானது என்பதே தமயந்தியின் கருத்து. இதை 'இலைகள் பேசும்' என்ற கதையில் வரும் ஜானு – ராஜீ என்பவர்களின் உரையாடல் மூலம் அறியலாம்.

> **"'இலைகள் பேசும்' என்ற கதையில் ஜானு ஊமை. அவளுக்கு இரண்டு அண்ணன். இரண்டு அக்கா இருந்தும் அனாதையாகவே வளர்கிறாள். ராஜீ என்ற அத்தைப் பையனோடு மட்டும் உண்மையான நட்பு வைத்திருக்கிறாள். ஜானுவின் மொழிகள் ராஜீவுக்கும் அவளது அம்மாவுக்கும் மட்டும் தான் புரியும். ராஜீ வேலை கிடைத்து வெளியூர் செல்கிறான். அப்பொழுது ஜானுவிடம் 'நீ கல்யாணம் பண்ணிக்கணும் ஜானு' புரியுதா அம்மாவுக்கு அப்புறம் உன்னைப் பார்த்துக் கொள்ள உங்கூட இருக்க யாராச்சும் வேணாமா"**[17]

என்று தன் தோழியின் எதிர்கால வாழ்க்கையின் மீது பரிவுக் காட்டும் தோழனாக ஜானு – ராஜீ என்ற பாத்திரத்தைப் படைத்துள்ளார் தமயந்தி.

உற்ற நேரத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் என்ற கருத்தை நோக்கும் விதத்தில் தமயந்தியின் படைப்பான 'இலுப்பைப்பூ ரகசியங்கள்' என்ற கதையில் அமுதா – ரிப்போர்ட்டர் நண்பர் இவர்களின் மூலமாகவும், 'அவரும் அவர்களும்' என்ற கதையில் சுகன்யா – சுந்தர் இவர்களின் மூலமாகவும் பதிவு செய்துள்ளார்.

‘இலுப்பைப் பூ ரகசியங்கள்’ என்ற கதையில் அமுதா தங்கியிருக்கும் விடுதியில் திருடன் வந்து பொருட்களை எடுத்துள்ளான். இதைத் தன் அலுவலக நண்பரிடம் கூற அவர் காவல் துறையினருக்கு அறிவிக்க, காவல்துறையினர் விடுதிக்குச் சென்று பரிசோதனை செய்கின்றனர்.

> **“விடுதியில் திருட்டுப் போன பொருட்களைப் பற்றி நான் அலுவலகத்தில் தற்செயலாகச் சொன்னேன். அப்போது நான் ஒரு தினசரியில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தேன். ரிப்போட்டராக இருந்த நண்பர் அதை ஏரியா போலீஸில் சொல்ல நான் அலுவலகத்தை விட்டு விடுதிக்குள் செல்லும் முன்பே போலீஸ்காரர்கள் விடுதிக்குச் சென்றிருக்கிறார்கள்**”[18]

என அந்த நிகழ்வை வெளிப்படுத்துகிறார்.

‘அவரும் அவர்களும்’ என்ற கதையில் சுகன்யா என்ற பெண் ஒரு நாள் சுந்தர் என்ற ஆணை, புத்தகக் கடையில் சந்திக்கிறாள். அதன்பின், அவர்களது நட்பு தொடர்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவளது சைக்கிள் ரிப்பேராகிவிட்டது. அவன்தான் அதைச் சரிபார்த்து அவளது அலுவலகத்தில் கொண்டு கொடுக்கிறான். ஈஸ்வரி வாடகை நூல் நிலையத்தில் புத்தகம் மாற்றும் போது இதை வாசிங்க. நல்ல புத்தகம் என்று தானாகவே அறிமுகம் செய்துகொண்ட சுந்தர், இரண்டு வருஷங்களாயிற்று. நல்ல ஸ்நேகிதனாய், மனசில் ஊன்றுகோலாய் பல நேரங்களில் சந்தோஷம், துக்கம் சகலத்தையும் பகிர்ந்து கொள்கிறாள்.

இவ்வாறு ஆண் பெண் என்ற பாகுபாடற்று உதவுவதுதான் உண்மையான நட்பு என்பதைத் தன் படைப்பு வழி சமூகமொழியாகப் பதிவு செய்துள்ளார்.

நட்பு இயல்பானது, கட்டுப்பாடற்றது. தனித்தன்மையுடையது விளக்க முடியாதது. இடுக்கண் களைவது என்பவனவற்றை எல்லாம் தமயந்தி வழியில் மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளோடு வைத்து எண்ணிப் பார்க்குமாறு அந்த நிகழ்வுகளை தமயந்தி தந்துள்ளார்.

**தீய நட்பு**

மேலை நாட்டுக் கலாச்சாரத் தாக்கம், இரு பாலர் கல்வி முறை, வேலைத் தளங்களில் ஆண் பெண் சேர்ந்து பணியாற்றுதல் இவற்றின் காரணமாக ஆண் பெண்ணோடு பேசுவதும், நட்பு வைத்துக் கொள்வதும் இன்று வாடிக்கையாகிவிட்டது. அதனால் சிலர் இந்நட்பைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். இதனை தமயந்தி தன் படைப்பான அக்கக்கா குருவிகள், மாமிசம் என்ற கதை மூலம் பதிவு செய்துள்ளார்.

'அக்கக்கா குருவிகள்' என்ற கதையில் யசோதா அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள். அவளோடு வேலை பார்க்கும் ஸ்ரீநீவாஸ் நான் உன்னுடைய நண்பன் என்று பேசத் தொடங்கியவன் திடீரென்று நான் உன்னை விரும்புகிறேன் என்று கூறுகிறான்.

> **"நீங்க ஒரு நல்ல சிநேகிதி எனக்கு இல்லைனு சொல்லலை. ஆனா, சமீப காலமாக என் மனசு அந்த எல்லையைத் தாண்டி உங்களை நாடுது புரியுதுனு நம்பறேன்"**[19]

இங்கு நட்பு வேறு. காதல் வேறு என்பதையும் உண்மையான நட்பாக இருந்தால் அது காதலாக மாறாது என்பதே தமயந்தி சமூகமொழியாகப் பதிவு செய்துள்ளார்.

'மாமிசம்' என்ற கதையில் சரஸ்வதி வேலை பார்க்கும் அலுவலகத்தில் வேலைப் பார்ப்பவர் சரவணன். விவாகாரத்து ஆனவன்.

சரஸ்வதியோடு நட்பு வைத்துள்ளான். அன்று சரவணன் சரஸ்வதி தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்தபோது அவள் பின்பக்கத்தை லேசாகத் தட்டிப் போனான். இதனால் அவள் தான் அந்த வேலையை விடுவதாக அம்மாவிடம் கூறுகிறாள் அதற்கு அம்மா,

> **"நாலு பேர் நாலு இடத்துல முன்ன பின்ன இருப்பான். நீ வேலய விட்டுட்டுப் புது வேலைல சேர்ந்தால் அங்க இப்படியொருத்தன் இருக்கமாட்டான்னு நிச்சயமா? ட்ரான்ஸ்பர் வாங்கினேனா அந்த அந்த ஊர்ல அப்படியொருத்தன் இருக்க மாட்டானா?"**[20]
>
> என்று அம்மா கூறுகிறாள்.

எதார்த்தத்தில் நட்பு இப்படித்தான் அலைக்கழிக்கப்படுகிறது. புரிந்து கொண்ட நட்பு உணர்வு மேலிட்டால் மாறுபடுகிறது என்பதைத் தம் படைப்பு வழி வெளிப்படுத்துகிறார்.

### 2.6.3 ஆண் பெண் நட்பில் பதட்டம்

ஒருபுறம் பெண் விடுதலை, பெண் சுதந்திரம், பெண் சமத்துவம் என்று பேசிக் கொண்டிருந்தாலும், மறுபுறம் பாலியல் பலாத்காரம், சந்தேகம், வன்கொடுமை என்று அல்லலுறும் பெண்கள், சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் பெற்றோர்களுக்குப் பெண் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை உள்ளது. ஆண் பெண் நட்புக் குறித்து வரவேற்பு இருந்தாலும் சில பெற்றோர் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. பெண் பிள்ளைகளுக்குப் பலவிதமான தடைகளை விதிக்கின்றனர் என்ற கருத்தாக்க அடிப்படையில் தமயந்தியின் படைப்பான நிலை என்ற கதை அமைகின்றது.

‘நிலை’ என்ற கதையில் வேணு வேலைக் கிடைத்துத் தன் உறவினர்களை விட்டுவிட்டு வெளியூரில் தங்கி இருக்கிறான். தான் இருக்கும் வீட்டுப் பக்கத்திலிருக்கும் வசந்தியிடம் பேசுவான். ஒருநாள் அவள் வேணு வீட்டிற்குப் போனாள். போன வேகத்தில் புத்தகத்தை வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

> **“அவசரமாய் வெளியே போன மாதிரி தோன்றியது. ஒரு ஆணுடன் தனியாய் இருப்பதற்கு பயம். தன்னைக் குறித்த மற்றவர்களின் பேச்சு பற்றின பயம் பயத்திலேயே ஆண் பெண் உறவு நிலவுகிறது பயத்திலேயே கரைகிறது”**[21]

இவ்வாறு ஆண் பெண் நட்பானது பயத்திலே தான் நிலவுகிறது என்பதே ஆசிரியரின் கருத்து. இதைத் தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

### 2.6.4 ஆண் பெண் நட்பை ஏற்றுக் கொள்ளாமை

ஆண் பெண் நட்பு தற்காலத்தில் இருந்தாலும், அந்த நட்பு திருமணத்திற்குப் பின் தொடர்வதில்லை. திருமணத்திற்குப்பின் அந்த நட்பு தொடர்ந்தால் கணவன் மனைவியிடையே பிரச்சனையை ஏற்படுத்தும் என்பதை, தமயந்தி தன் படைப்பான முகங்கள், துரு என்ற கதைகளில் பதிவு செய்துள்ளார்.

‘முகங்கள்’ என்ற கதையில் சூர்யபாலனின் மனைவி ஜானுவுக்கு சூர்யபாலன் தன் தோழி சுமதியோடு பேசுவது பிடிக்காது. இதனால் அவள் அவனைச் சந்தேகப்படுகிறாள். ஒருநாள் அவன் சுமதியை வீட்டிற்கு அழைத்து வருகிறான். இதைப் பார்த்து, பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் தவறாகப் பேசுகின்றனர்.

> **“நேத்து நம்ம வீட்டுக்கு அவளைக் கூட்டிட்டு வந்தீங்களே. அதைப் பக்கத்து வீட்டு கோமதி பார்த்திருக்கிறாள். இன்னிக்குத் தண்ணி பிடிக்கிற இடத்துல கசமுசனு பேசறா... நான் வீட்டுல இருக்கும்போது நீங்க இன்னொருத்தியைக் கூட்டிட்டு வர்றீங்களாக்கும்.”[22]**

‘முகங்கள்’ என்ற கதையில் நந்தகோபாலனோடு வேலைச் செய்யும் டைப்பீஸ்ட் ‘ருக்மணியை’ ‘ஸ்கூட்டரில்’ கொண்டுபோய் பஸ் நிலையத்தில் கொண்டு விட்டான். அதை அவனது மனைவி சூரியாவுக்கு ஒருவர் சொல்ல இருவருக்கும் சண்டை ஏற்படுகிறது.

> **“முந்தா நாள், மழை பெய்யுதேனு நம்ம டைப்பீஸ்ட் ருக்மணியை ஸ்கூட்டர்ல கொண்டு போய் பஸ் ஸ்டாப்புல டிராப் பண்ணினேன். அதை வீட்ல வந்து சொல்லியிருக்கிறார்கள். ஆளுக்காள் கூச்சல் கத்தல் . . .”[23]**

இவ்வாறு திருமணத்திற்குப் பின் ஆண் - பெண், பெண் - ஆண் நட்பு இருந்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் தான் ஏற்படும் என்பதைத் தன் படைப்பு வழி வெளிப்படுத்தியுள்ளார் தமயந்தி.

‘துரு’ என்ற கதையில் சரஸ்வதியின் பத்திரிகைத் துறை நண்பர் ஸ்ரீராம். சரஸ்வதி ஸ்ரீராமுக்குக் கட்டுரை எழுதிக் கொடுப்பது வழக்கம். ஒருநாள் அவசரமாகக் கட்டுரை எழுதிக் கேட்டார். அந்நாளே தன்னுடைய கணவர் கைலா வேலை பார்க்கும் அலுவலக நண்பர்கள் தங்கள் வீட்டிற்கு வருவதாகக் கூறினார்கள். இதனால் இருவரிடையே சண்டை ஏற்படுகிறது. உடனே கைலா ஸ்ரீராமைத் தவறாகப் பேசுகிறான்.

**“அந்த ஸ்ரீராமை உதைக்கணும். நம்ம பேமிலிலப் பிரச்சனை உண்டு பண்றான்.. பொல்லாத நண்பன் பொறுக்கி தினம் ஒரு பெண்ணுடன் சல்லாபிக்க வேணும் அவனுக்கு.”**[24]

இவ்வாறு நட்பு என்பது சங்க இலக்கியம் தொட்டு, தனித்த பார்வையாய்ப் பார்க்கப்படுகிறது. நிலத்திலும் பெரிதே எனக் காதலை வெளிப்படுத்தும் தேவகுலத்தாரும், நாடனொடு நட்பே என்று பயன்படுத்துகிறார். இறையனாரும், ‘பயிலிய கெழிய நட்பு’ என நட்பைப் பயன்படுத்துகிறார். மாற்றுச் சிந்தனைகளை மையப்படுத்திய நவீன காலத்தில் பாரதி ‘கண்ணன் என் தோழன்’ எனத் தனித்துப் பார்த்துள்ளார். இந்த வழிகளில் தமயந்தியை வேறுபட்டுப் பார்க்க வேண்டும். கணிப்பொறியும், பெண் நிலை, பெண்ணியம், பின்னை நவீனத்துவம் வாழ்வியல் சூழல் என்ற வட்டத்தில் நட்பு, மரபு ரீதியான பொருளில் இருந்து மாறுபடுகிறது. மாறுபட வேண்டும்; புரிதலில் தனித்துவம் பெறவேண்டும் என்பதைத் தமயந்தி தன் படைப்புகளிளெல்லாம் வெளிப்படுத்துகிறார்.

### 2.6.5 தீய பழக்கவழக்கங்கள் தீய தொடர்பு

கணவனின் குடிப்பழக்கத்தாலும், அது கொண்டு வரும் பொருளாதாரம் பிரச்சனையையும் பிற பெண்டிர் தொடர்பு போன்ற இழிகுணங்களினாலும் மனைவிக்கு ஏற்படும் சிக்கல்தான் சமூகத்தில் தனியாகப் பார்க்கப்பட வேண்டியவை. தமயந்தி தன் படைப்பான நிலை, சமையலறையில் ஒரு கனவு, ஒரு ஜன்னல், எதார்த்தம், ரிப்வேணு வங்கிகளும் தூங்கிக் கழித்த காலமும் போன்ற கதைகளில் பதிவு செய்துள்ளார்.

குடிகாரக் கணவனை எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமயந்தியின் படைப்பான நிலை என்ற கதை விளங்குகிறது.

'நிலை' என்ற கதையில் நாகலிங்கம் என்பவர் குடித்துவிட்டு, கத்திக் கொண்டிருக்கிறான். அதைப் பார்த்த அவனது மனைவி பயந்து போய் நிற்கிறாள். மாடியில் குடியிருக்கும் வேணு என்பவர் அவளுக்கு ஆதரவு கொடுக்கிறார்.

> **"நடு முற்றத்தில் கீழ்வீட்டு நாகலிங்கம் குடித்துவிட்டு கத்திக் கொண்டிருந்தான். ஞாயிற்றுக்கிழமை ஆனாலே இவனோட இதே பொழப்பு. ஒரு பொம்பளை வெளியே வரமுடியலை. மூன்று நான்கு பேர் சேர்ந்து நாகலிங்கத்தை அவன் வீட்டுக்குள் இழுத்துப் போகிறார்கள். புதுசாய் கல்யாணமான அவள் மனைவி அரண்டு போய் நின்றாள்"**[25]

குடிகாரன் எவ்வளவு சம்பாதித்தாலும் பணம் அவனிடம் தங்காது. குடிப்பதற்காகப் பணம் கேட்டு மனைவியை, பிள்ளைகளை அடிப்பான். தகாத வார்த்தைகளைப் பேசுவான் என்பதை, தமயந்தி ஒரு ஜன்னல் என்ற கதையில் பதிவு செய்துள்ளார்.

'ஒரு ஜன்னல்' என்ற கதையில் கௌரியின் கணவன் குடித்துவிட்டு, சண்டையிடுவது வழக்கம். அன்று குடித்துவிட்டுப் பணம் கேட்டுச் சண்டை போடுகிறான். பணம் இல்லை; அதனால் பணம் கேட்டு விபச்சாரியின் வீட்டிற்குத் தன் மகளை அனுப்பி வைக்கிறாள்.

> **"அப்பா குடிச்சிட்டு வந்து ரகளை பண்ணிருச்சு. இருந்த காசெல்லாம் பிடுங்கிட்டுப் போயிறுச்சு. காசு வாங்கியாறச் சொல்லிச்சு அம்மா."**[26]

என்று விபச்சாரியிடம் கடன் வாங்கும் பெண்ணின் நிலையைப் புதிய சிந்தனைகளோடு பதிவு செய்துள்ளார்.

குடிகாரக் கணவனால் க டப்படும் பெண்ணின் மனநிலையை, தமயந்தி எதார்த்தம் என்ற கதையில் காயத்ரி முரளி என்ற பாத்திரம் மூலம் பதிவு செய்துள்ளார்.

'எதார்த்தம்' என்ற கதையில் காயத்ரி தன்னுடைய காதலன் முரளியை ஒருநாள் சந்திக்கிறாள். அப்பொழுது அவளிடம் தன் கணவன் குடித்துவிட்டுத் தன்னை க டப்படுத்துவதையும், தான் சந்தோஷமாக இல்லை என்பதையும் தெரிவிக்கிறாள்.

> **"நான் சந்தோஷமா இல்லை முரளி, யாரும் என்னைப் புரிஞ்சுக்கல்லை என் புருஷன் என்னைப் புரிஞ்சுக்கலை. நான் க டப்படுகிறேங்கதை என்னைப் பெத்த அம்மா, அப்பா புரிஞ்சுக்கலை குடிச்சிட்டு உதைக்கிறார். அசிங்கமான வார்த்தையால் கொல்றாரு"**[27]

என்று தன் காதலனிடம் கூறுகிறாள்.

தன் கணவன் தன்னை சந்தோஷமாக வைக்காத காரணத்தால் அப்பெண் வேறு உறவைத் தேடும் நிலையை ஆசிரியர் தன் படைப்பு வழி, பதிவு செய்துள்ளார்.

சமூகச் சீரழிவுகளுள் ஒன்றான 'குடி' குறித்த தன் கருத்துக்களைப் பல கதைகளில் பதிவு செய்துள்ளார் தமயந்தி.

'ரிப்வேணு வங்கிகளும் தூங்கிக் கழித்த காலமும்' என்ற கதையில் மாதங்கியின் கணவர் வேணு ஒரு குடிகாரன். அவன் அளவுக்கு அதிகமாகக்

குடித்ததால் 20 வருடமாய், சுயநினைவில்லாமல் தூங்கிக் கொண்டிருக்கிறார். 20 வருடம் கழிந்து நினைவு வந்ததும் தன் மனைவி குழந்தையையும் தேடி வருகிறான். அவன் வரும்போது அவனது மனைவி அவனை நினைத்து இறந்து போய் விட்டாள். பிள்ளைகள் பெரிய பிள்ளைகளாய் வளர்ந்திருந்தது என்ற செய்தியை அறிகிறார்.

இதன் மூலம் குடிப்பழக்கத்தின் நிலையைக் குடும்ப, சமூக அழிவுகளுக்கான காரணங்களைப் பதிவு செய்துள்ளார்.

### 2.6.6 பிற பெண் தொடர்பு

திருமணமாகி மனைவி இருந்தாலும் மனைவி மூலம் குழந்தை பெற முடியவில்லை என்பதற்காகவும், நட்பாகப் பழகி அவளுக்கு உதவி செய்து அவளிடமே அன்பு வைத்துக் கொள்வதாலும், காதலித்து வேறொரு பெண்ணோடு பாலியல் உறவு வைத்துக் கொள்வதன் மூலம் பிற பெண் தொடர்பு வலுப்பெறுகிறது என்பதை தமயந்தியின் உறைந்த நொடியின் கத்தி முனைகள், ஒரு ஜன்னல், திசை, முற்பகல் ராஜ்ஜியம் என்ற படைப்புகள் வெளிப்படுத்துகின்றன.

உதவி செய்யும் நோக்கோடு தொடங்கிய நட்பானது தவறான உறவில் முடிகிறது. இக்கருத்தைக் கூறும் விதத்தில் தமயந்தியின் உறைந்த நொடியின் கத்திமுனை என்ற கதை இடம்பெறுகிறது.

'உறைந்த நொடியின் கத்திமுனை' என்ற கதையில் மகாதேவன் திருமணமானவனாக இருந்தும் அலுவலகத்தில் தன்னோடு வேலைபார்க்கும் பிருந்தா என்பவளோடு நெருங்கிப் பழகுகிறான். பின்பு இவனிடமிருந்து பணம் அடிக்கடி கேட்டு வாங்குகிறாள். இதனால் அவனுக்கும் மனைவிக்குமிடையே உறவில் விரிசல் ஏற்படுகிறது.

> "வீட்டுக்கு வாயேன் மகா உன்பெண்டாட்டி எப்படி? மகா. இருபதாயிரம் வேணுமே.. ரொம்ப தாங்க்ஸ் மகா, வீட்டுக்கு வாயேன் மகா. செல்போன் உனக்குனு வாங்கினேன் என் கூட மட்டும் நீ பேசணும்"[28]

என்ற உரையாடல்களில் மாற்றுக் கலாச்சாரம் வெளிப்படுகின்றது.

### குழந்தையின்மை பிற பெண் தொடர்பு

குழந்தை பாக்கியம் இல்லை என்ற காரணத்திற்காக விபச்சாரியை நாடும் ஆண்களின் நிலையை 'ஒரு ஜன்னல்' என்ற கதையில் பதிவு செய்துள்ளார்.

'ஒரு ஜன்னல்' என்ற கதையில் தனக்குத் திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை என்ற காரணத்தால் விபச்சாரியோடு தொடர்பு வைத்துக் கொள்கிறான் என்பதை,

> "குழந்தைகள் மீதான அவனது அனுசரணை அதிகமானதெனினும் அந்த பாக்கியம் அவனுக்கு அவன் மனைவி மூலமாகவோ அல்ல எனில் இவள் மூலமாகவோ கிட்டாது போயிற்று. குழந்தையின் பொருட்டே, இவளை அவன் நாடினான் என்று இவளிருக்கும் தெருவில் பேச்சுகள் உலவுவதுண்டு"[29]

இவ்வாறு ஒரு ஆண் பிற பெண்ணோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணம் என்பதை இக்கதை மூலம் பதிவு செய்துள்ளார்.

### காதலன் பிற பெண்ணோடு தொடர்பு

நம்பகமற்ற காதலால் ஒரு பெண்ணின் வாழ்க்கை திசை மாறுகிறது என்பது தமயந்தியின் படைப்பில் ஒன்றான என்ற கதையில் இடம்பெறுகிறது.

இவ்வாறு காதலன் பிற பெண்ணோடு தொடர்பு வைத்ததால் காதலியின் வாழ்க்கை திசை மாறுகிறது.

திருமணமாகி மனைவி, பிள்ளைகள் இருந்தும் பிற பெண்ணோடு தொடர்பு வைத்திருக்கும் ஆண்களின் நிலையை முற்பகல் ராஜ்ஜியம் என்ற நாவலில் சிவராமன் பாத்திரம் மூலமாகப் படைத்துள்ளார்.

'திசை' என்ற கதையில் விஜி என்ற பெண் அரசாங்க ஊழியராக வேலை பார்க்கிறாள். அவருடன் வேலை பார்க்கும் கணபதி என்பவன் மீது ஆசைப்படுகிறாள். இருவரும் விரும்புகின்றனர். சந்தோஷமற்ற ஒரு குடும்பச் சூழலிலிருந்து அவன் மட்டுமே தன்னை மீட்க முடியுமென்று நம்பியிருந்தாள். ஒருநாள் அலுவலகத்தில் யாருமற்ற சூழ்நிலையில் இவளுடன் வேலை பார்க்கும் நீலவேணி என்ற பெண்ணோடு கணபதி உறவு வைத்திருப்பதை விஜி பார்க்கிறாள். அவள் நம்பிக்கை, கனவுகள் திசைமாறுகின்றன. தமயந்தி அந்நிகழ்வைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

> **"கணபதி இவளை எப்படியும் கல்யாணம் செய்து கொள்வான் என்று இவள் பெரிதும் நம்பினாள். சந்தோஷமற்ற ஒரு குடும்பச் சூழலிலிருந்து அவன் மட்டுமே தன்னை மீட்க முடியுமென்று தீர்மானித்திருந்தாள்"**[30]

### 2.6.7 சந்தேகம்

குறள் காலம் முதல் சந்தேகம் குறித்தச் செய்திகள் இலக்கியங்களில் பதிவாகியுள்ளன.

சந்தேகக்காரக் கணவனால் குடும்பத்தில் மனைவி படும் அவல நிலையை நீச்சல் என்ற கதையில் சௌபா என்ற பாத்திரம் மூலமும் அலர்

என்ற கதையில் கலை என்ற பாத்திரம் மூலமும் கதவு என்ற கதையில் சாருலதா என்ற பாத்திரம் மூலமும் பதிவு செய்துள்ளார்.

'நீச்சல்' சிறுகதையில் வெங்கடேசன் சௌபா இருவரும் கணவன் மனைவி; வெங்கடேசன் சௌபாவை எதற்கெடுத்தாலும் திட்டுகிறான், சந்தேகப்படுகிறான். ஒருநாள் சட்னி காரமாகிவிட்ட காரணத்தால் அவளை சந்தேகப் பார்வையோடு பேசுகிறான்.

> **"எவனையாவது யோசிச்சிட்டே மிளகாயை அதிகமா வெச்சிருப்ப போடி. நீ கனவு கண்டவனுக்கு படச்சிடு"**
>
> **"கனவு காணு. அர்விந்தசுவாமி, ஷாருக்கான், விஜய், அடுத்த தெரு கணே பக்கத்து வீட்டு சாபரி"**[38]

என இன்றைய ஆடவனின் ஆணாதிக்க இயல்பைச் சந்தேகத்தைப் படைப்பாக்கியுள்ளன.

'அலர்' என்ற கதையில் கலையின் கணவர் சந்தேகப் புத்திக்காரன். எதற்கெடுத்தாலும் அவளை அடித்துக் கொடுமைப்படுத்துகிறான். என்று கூறுவதைக் காணலாம்.

'ஜோதி! மனசே சரியில்லடி.... அவர் எதுக்கெல்லாமோ கோபப்படுகிறார். சப்பாத்தி வட்டமா சுடலனாலும் அடிக்கார். பதில் பேசினால் சந்தேகப்படுகிறான்டி' என சந்தேகக்காரக் கணவனால் பாடுபடும் பெண்ணின் மனநிலையை தமயந்தி பதிவு செய்துள்ளார்.

> **"பதிலுக்கு சப்புனு வைக்கறதுதானே? ஆனா சந்தேகப்படுறார்டி"**[32]

'கதவு' என்ற சிறுகதையில் சாருலதாவுக்கு வயது 25 அவரது கணவருக்கு 56 வயது. பொருந்தா மணம் என்பதால் சாருலதாவின் கணவர் சாருலதாவை அடிக்கடி சந்தேகப்படுகிறார்.

> **"திருநெல்வேலில இவங்கப்பா வீடு சிவன்கோயில் தெருலயாம். எதிர்த்தாப்பல ஒரு பழைய புக் கடையில கல்யாணமாகி அவங்க ரெண்டு பேரும் ஒருவாரம் இருக்கறச்சே இவ வீட்டுக்கு போனெல்லாம் அந்தக் கடைக்குத்தான் வருமாம். அந்தப் பழக்கத்துல சாதாரணமாக போனானாம். ஒரு மாசத்துக்கு ஒரே குறுக்கு விசாரணையாம். நீ அவனைக் காதலிச்சியா என்னனு ஒரு நாள் கடைத்தெருல இவ பழைய ப்ரண்ட்டப் பார்த்துட்டானாம். இவ பார்க்காத மாதிரி போனா அவன் விடலையாம். மேலெல்லாம் சிகரேட்டால சூடு போட்டாராம். போப்போய் உங்கம்மாப்பாட்ட சொல்லு"**[33]

சந்தேகம் என்பது ஆணாதிக்கத்தின் ஒரு பகுதி என்றால், பெண் உளவியல் நிகழ்வின் ஒரு பகுதி என்றும் பெற முடியும். ஆனால் தமயந்தி அதிகம் ஆணாதிக்க சந்தேக நிகழ்வுகளைப் பதிவாக்கியுள்ளார்.

### 2.6.8 திரித்துப் பேசுதல்

ஒருவருக்கொருவர் பிடிக்கவில்லையென்றால் அவர்களை எதிரியாகவே நினைத்துத் தூற்றுகின்றார்கள். ஒருவர் மீது தெரிந்தோ, தெரியாமலோ சோடித்து வீண்பழிச் சுமத்தும் போது உண்மை தெரியவரும் போது கேவலமும் சிக்கலும் தூற்றியவர்களையே வந்துசேரும்; இடைவெளி என்ற கதையில் 'பூமா' என்ற பெண் ஓர் அரசு அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள். அவளுக்கு ஒரு கடிதம் வருகிறது. அக்கடிதத்தை அவளது காதலன் போட்டதாகத் தவறாகப் பேசுகின்றனர். பின்புதான் தெரிகிறது

அவளது அம்மாவின் கடிதம் என்பது இதனை, தமயந்தி பின்வருமாறு பதிவாக்கியுள்ளார்.

> "பூமா இளம் பருவத்தில் யாரோ ஒருவனோடு குடும்பம் நடத்தியதாக ஒரு செய்தி அலுவலகத்தில் இருந்தது. அவன் திடீரென்று ஒரு விபத்தில் இறந்து போனதாகவும், திருமணத்திற்காக தேதி குறிக்கப்பட்ட மூன்று நாட்களுக்கு முன்னால்தான் அந்த விபத்து நிகழ்ந்ததாகவும் கிளைக் கதைகள் இருந்தன. பாண்டியன் அவனது பின்புலம் பற்றித் தெரிந்து கொள்கிற ஆர்வத்தின் காரணமாக கடிதத்தைக் கொண்டு செல்கிறான். அவள் கடிதத்தை வாங்கிக் கொண்டு அம்மா கடிதம்தான். பணம் கேட்டு எழுதியிருக்கிறார்கள். வேற ஒன்றுமில்லை. எனக்காகக் கொண்டு வந்ததுக்கு ரொம்ப நன்றி என்று கூறுகிறாள்"[34]

சமூகச் சிக்கல்களில் இதுவும் ஒன்று. புரிதலின்பால் ஏற்படும் சிக்கல் ஆண் பெண் புரிதல்களில் ஏற்படும் இடைவெளி, பெண்ணை ஆண்களும், ஆணைப் பெண்களும் தவறாகப் பார்க்க, யோசிக்க வைக்கிறது. தன் முற்போக்கு எண்ணங்களின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட நிகழ்வினை தமயந்தி வெளிப்படுத்தியுள்ளார்.

**2.6.9 சித்தி கொடுமை**

முதல் மனைவியின் இறப்புக்குப் பின் அமையும் தந்தையின் இரண்டாம் மனைவி மாற்றாந்தாய் என்று அழைக்கப்படுகிறாள். மாற்றாந்தாய், மூத்தவள் மகன் இவர்கள் உறவுநிலையில் போட்டி ஏற்படுவதற்குக் காரணங்களாக இருப்பவை சொத்துப் பிரிவினையும், அத்துடன் அன்பு செலுத்துவதில் நிகழும் பேதமும் என்பதை, வயோதிகப் பாம்பின் இற்றபடம்

என்ற கதையில் ‘சச்சி’ என்பவரின் வாழ்க்கை மூலம் பதிவு செய்துள்ளார் தமயந்தி.

‘வயோதிகப் பாம்பின் இற்றபடம்’ என்ற கதையில் சச்சிதானந்தன் என்ற சச்சிக்கு ஒரு சித்தி இருந்தாள். அவள் அப்பாவின் இரண்டாவது மனைவி; அவளுக்குச் சச்சியின்பால் எந்தவொரு கணத்திலும் அன்பு தோன்றியதில்லை. மூத்தாளின் குழந்தைகள் சித்திக்காரியின் விரோதிகள் என்கிற உலகியல் விதிக்கு, சச்சியின் சித்தி உடன்படாதவளில்லை. அவள் படிப்பதைக் காட்டிலும் அவன் ஏதாவது கடைக்கு வேலைக்குச் சென்றால் பொருளாதார நிலை உயரும் என்று அவனை ஸ்கூலுக்கு விடவில்லை. அவன் தன் வகுப்பு வாத்தியாரிடம் போய் தன் நிலையைக் கூற அவர் அவன் அப்பாவைக் கூப்பிட்டார்.

> **“அவ தீர்மானிச்சிட்டா என்று திரும்பத் திரும்ப அவன் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். என்ன தீர்மானம்? சொள்ளத் தீர்மானம் நான் படிக்க வக்கிறேன்”**[42]

என்று சச்சியின் ஆசிரியர் கூறி அவன் படிப்புச் செலவை ஏற்று, படிக்க வைத்தார்.

சித்தியால் தன் வாழ்வு நரகமாகிவிடக் கூடாதென்று வீட்டைவிட்டு வெளியேறுகிறான் சச்சு. சமூகத்தில் இருக்கும் அவலங்களில் ஒன்று சித்திக் கொடுமை என்பதையும், சமூகத்தில் இருக்கும் சித்திக் கொடுமையால் அக்குழந்தை பாதிக்கக் கூடாது என்ற கருத்தைச் சமூகமொழியாகக் கூறும் விதத்தில் தமயந்தி இக்கதையைப் பதிவு செய்துள்ளார்.

### 2.6.10 கைம்பெண்கள் பிரச்சனை

சமுதாயத்தில் விதவையர் நிலை வருந்தக் கூடியதாகவே உள்ளது. அவர்கள் எதிரில் வருவது அபசகுனம் என்று சொல்வது ஒரு பக்கம் இருக்க அவள் சிறிது மேம்பட்டு நின்றால் அவளுக்குப் பணம் எப்படி வந்தது என்று கூறி, கேவலமாகப் பேசுவர். அவள் தன் முயற்சியோடு மேம்பட்டு நின்றாலும், அதனைக் கண்கொண்டு பார்த்தோருமே தவறாகத் தூற்றுவர். இங்கு விதவைப் பெண்ணின் மன உணர்வையும், விதவைப் பெண்ணைத் தன் குடும்பத்தில் ஏமாற்றும் உறவினர்களைப் பற்றியும் தமயந்தி தன் படைப்பான 'அக்கக்கா குருவிகள்', 'யாருமற்றவர்களின் உலகம்' என்ற கதைகள் மூலம் பதிவு செய்துள்ளார்.

நோயினால் பாதிக்கப்பட்ட கணவனைத் திருமணம் செய்து இளம் வயதிலே விதவையான பெண்ணின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் விதத்தில் தமயந்தியின் படைப்பான அக்கக்கா குருவிகள் என்ற கதை இடம்பெறுகிறது.

'அக்கக்கா குருவிகள்' என்ற கதையில் வரும் யசோதாவின் அக்கா கணவர் உயிர்க்கொல்லி நோய்வந்து இறந்து விடுகிறார். இளம் விதவையான அக்காவின் நகைகளையும் பணங்களையும் பறித்துவிட்டு அவளையும் அவள் இரண்டு குழந்தைகளையும் அவளது அப்பா வீட்டிற்கே அனுப்பிவிடுகிறார்கள் கணவனின் உறவினர்கள்.

> "அத்தான் இறந்ததும் பணமெல்லாம் வரும்வரை மாமியார் வீட்டில் அவளுக்கு ராஜயோகம் தான். அதற்குப் பிறகு அங்கிருக்க முடியாமல் குழந்தைகளோடு தான் பிறந்த வீட்டிற்கே வந்து விட்டாள் அக்கா"[36]

இதுபோல விதவைப் பெண் சமூகத்தில் தனித்து வாழ முடியாது; தன் உறவினர்களின் உதவியால்தான் வாழ முடியும் என்ற கருத்தாக்க அடிப்படையில் தோன்றியதுதான் ‘யாருமற்றவர்களின் உலகம்’ என்ற கதை.

கலையின் கணவன் சரணவன். அவனோடு ஆறு மாதம்தான் சேர்ந்து வாழ்ந்திருக்கிறாள். பிறகு சரவணன் இறந்து போய் விடுகிறான். கலை அவளது அண்ணன் வீட்டில் இருக்கிறாள்.

> **“எத்தனை வருடமாயிற்று? என்று சரவணன் செத்தானோ அன்றே கவிந்து கொண்டது தனிமை. சரவணன் போட்டாவில் கூட மங்கிப்போனான் இருந்த போதும் பெரிதாய் எதுவும் இருவரும் இழைவிடவில்லை. சரியாய் 6 மாதங்கள் கடவுள் ஏன் மனிதர்களை உருவாக்குகிறார். ஏன் சிலரை மட்டும் சந்தோஷங்களுக்குத் தத்துக் கொடுக்கிறார் என்று சில சமயங்களில் புரியவில்லை. யாரையாச்சும் அண்டி இரு என்று எழுதப்படாத விதியை யார் இயற்றியது என்று தெரியவில்லை. இறந்த பிறகு அவரைத் தேடிப்போய் பேச வேண்டும்”**[37]

சமூக மரபுபடி ஒரு பெண் திருமணத்திற்கு முன் தன் தந்தையையும், திருமணத்திற்குப்பின் தன் கணவனையும் அதற்குப்பின் தன் மகனையும் சார்ந்து வாழக்கூடிய சார்பு வாழ்க்கையாகத்தான் பெண்ணைப் படைத்துள்ளான். அத்தகையச் சூழலில் கணவன் இறந்த பின் தேவையின் பொழுது பிறரை நாடும் சூழல் ஏற்படுகிறது. அப்பொழுது உறவினரே அவளைத் தவறாகப் பேசும் நிலையும் தன் உறவினரே அவளை ஏமாற்றும் நிலையும்; இதனால் தன் வாழ்வை நினைத்து நொந்துபோய் தன் கடந்த காலவாழ்வை நினைத்துத் தனிமையில் வருந்தி வாழ்கிறார்கள் விதவையர் என்பதை ஆசிரியர் தன் படைப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

## 2.7 திருமணமும் கருத்தாக்கமும்

''ஆண் பெண் இருவரையும் கணவன் மனைவியாக குடும்பமாக இணைக்கும் விதிமுறை அமைப்பே திருமணமாகும்''[38]

மணம் என்பற்குப் பல வகையான விளக்கங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் கீழ்க்காணுபவை சிறப்பாகவும், பொருத்தமாகவும் அமைகின்றன.

## 2.8 திருமணம்

திருமணத்தை தமயந்தி பின்வருமாறு புரிய வைக்கிறார்.

''மனித இனம் தன் பாலியல் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருணமாகும். உயர் பாலுட்டிகளிடமும், பிற கீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியல் செயலாக மட்டுமே நிகழ்கின்றது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாயப் பண்பாட்டு, விலங்காதலால், அவ்வுயிரியல் செயலை, திருமணம் என்னும் நிறுவனச் செயலாக்கி அவர்கள் தம் உள உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்து கொள்கின்றனர்''[39]

''மணம் மனிதனின் மனம், உயிரியல் பால் உயர்வை நிறைவு செய்வதற்கு மட்டும் அமையாமல் சமுதாயத்தில் ஒருவனைப் பண்பாட்டு உறுப்பினராக ஏற்றுக் கொள்ள வகைச் செய்கிறது''[40]

''மணம் என்பது மனிதனின் பாலியல் விருப்பங்களை நிறைவு செய்யும் பொருட்டு ஏற்படுத்திக் கொள்வதாகும்''[41]

''விவாகம் என்பது இவ்வுலகிலுள்ள ஆடவர் மகளிர் இருவரும் ஒருவரோடு ஒருவர் அன்னியோன்யமாய் இல்லறம் நடத்தும் பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளும் ஒருவித உடன்படிக்கையாகும்''[42]

மேற்கண்ட வரையறைகளிலிருந்து திருமணம் என்பது பாலியல் உந்துதலை நிறைவு செய்வது; பண்பாட்டு நடத்தை பெற்றது; இல்லறம் நடத்துவதற்காக ஏற்பட்டது ஆகிய தன்மைகளைக் கொண்டதாகக் கூறப்படுகின்றன எனலாம். இதனால் மணம் என்பது மனிதரின் பாலியல் உந்துதலைச் சமுதாய ஒப்புதலுடன் நிறைவு செய்து கொள்ளும் பண்பாட்டு நிறுவனம் என்பதையும் அது சடங்குகளின்படி முன்பின் தொடர்பில்லாதவர்களை இணைக்கும் போது உடன்படிக்கையாக அமைகின்றது என்பதையும் அறிய முடிகிறது.

## 2.9 திருமண வகைகளும் கருத்தாக்கமும்

> **“திருமணத்தில் காதல் திருமணம், பெற்றோரால் அமைக்கப்படும் திருமணம் என இருவகையுண்டு. ஆணும், பெண்ணும் சந்தித்துப் பழகிப் பேசி, மனம் விரும்பித் திருமணம் செய்து கொள்வது காதல் திருமணமாகும். தங்கள் பெண்ணுக்கு அல்லது பிள்ளைக்கு ஏற்ற வரன் என்று பெற்றோர்கள் தேர்ந்தெடுத்து முடித்து வைக்கும் திருமணம் இரண்டாவது வகையாகும்”**[43]

காதல் திருமணத்தில் இருவேறுபட்ட சாதியைச் சார்ந்த ஆண் பெண் இணைந்து திருமணம் செய்து கொள்வதுண்டு. இதனைக் கலப்புத் திருமணம் என்பர். இத்தகைய திருமணத்தைச் சட்டம் ஊக்குவிக்கிறது. இதற்கு மேலும் முதல் மனைவி இருக்கும்போதே ஏதோ ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண்கள் மறுமணம் புரிந்து கொள்வதுண்டு. இதனை மறுதார மறுமணம் என்பர்.

> **“பெற்றோர்கள் விருப்பமின்றிச் செய்துகொள்ளும் திருமணத்தைப் பெற்றோர் மட்டுமின்றி, இனத்தவர், மாற்று சமூகத்தினர் முழுமையாக**

அங்கிகரிப்பதில்லை. தங்கள் பிள்ளையின் மீதுள்ள பிடிப்பின் காரணமாக மனத்தளவில் இத்திருமணத்தை ஏற்றுக் கொள்கின்றனர் இருந்தாலும், தங்கள் உறவினர் சமூகத்தினர்களும் சாதி மீதுள்ள பற்றின் காரணமாக இம்மணத்தை மறுத்து விடுகின்றனர். சிலர் தம்பதியரைப் பிரித்து விடுவது உண்டு. தற்போது இவ்வகைத் திருமணம் இளைஞர்களிடையே வரவேற்புப் பெற்று அதிகரித்து வருகிறது''[44]

## 2.10 திருமணத்தால் ஏற்படும் மாறுதல்களும், சிக்கல்களும், கருத்தாக்கமும்

பண்டைய இந்தியச் சமுதாயத்தில் திருமணம் இரு இளவயதினருக்கிடையே ஏற்படும் உறவு என்பதை விட, இரு குடும்பங்களுக்கிடையே ஏற்படும் உறவு நிகழ்ச்சியாகவே கருதப்பட்டது. மரபு வழிகளைப் பின்பற்றிவரும் இந்தியக் குடும்பங்களில் திருமணம் செய்து கொள்ளப் போகின்றவர்களின் விருப்பத்தைக் கேட்டோ, கேட்காமலோ பெற்றோர் அவர்களின் திருமணத்தை நிச்சயித்தனர். தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கு மதிப்பு இன்மையால் பிள்ளைகளும் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்கு இசைந்தனர். தம் வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்ள இருவருக்கிடையே காதல் ஏற்பட வேண்டிய தேவை அன்று இல்லை. திருமணத்திற்கு முன் காதல் தோன்றுவதைவிடத் திருமணத்திற்குப் பின், கணவன் மனைவிக்கு இடையே தோன்றும் காதலே வரவேற்கப்பட்டது.

''காலமாறுதலில் இப்போக்கு மாறியது. படித்தவர்களிடையே திருமண முறையிலும், வாழ்க்கைத் துணையைத் தேர்தெடுக்கும் முறையிலும், மாற்றம் ஏற்படத் தொடங்கியது. காதல் திருமணங்களும், வாழ்க்கைத் துணையைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் பெருகத் தொடங்கின. திருமணத்திற்கு முன்னரே

**திருமணத்திற்குரிய ஆணையும், பெண்ணையும் கலந்து கொண்டு திருமணம் முடிவு செய்யப்படுவது மிகத் தேவையானது என்ற கருத்து கல்வித் தகுதி மிகுதியாக உடையவர்களிடம் காணப்படுகின்றது''**[45]

என்கிறார் கோர்.

இத்திருமணங்கள் யாவும் சமூகப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டவை. காதல் திருமணம், விதவை மறுமணம், மணவிலக்கு, காதலில் ஏமாற்றம், உடன்போக்கு மணம் போன்றவற்றைத் திருமணச் சிக்கல்களாக தமயந்தி தன் படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

### 2.10.1 காதல் திருமணம்

ஆணும் பெண்ணும் மனம் ஒத்து, பெற்றோரின் ஒப்புதலுடன் மணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள். அதற்காகப் பெற்றோரிடம் வாதிடுகிறார்கள். பெற்றோர் தமது வீட்டு நிலையை உணர்ந்து காதல் திருமணத்திற்கு ஒப்புதல் வழங்குகிறார்கள். சில நேரம் வழங்குவதில்லை. அவ்வாறு வழங்காதபோது பெற்றோரை அவமானத்துக்கு உள்ளாக்குகிறார்கள். இத்தகைய திருமணத்தில் சில தம்பதியர் பிரிந்து விடுதலும் உண்டு. சிலர் உறுதியான அன்பில் இணைந்து வாழ்வதும் உண்டு.

காதல் திருமணம் இரு வகைப்படும். 1) நிறைவேறும் காதல், 2) நிறைவேறாக் காதல். காதல் திருமணம் குறித்து தமயந்தி தாமிரபரணியின் தாகங்கள், விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும், நிழல் வலை போன்ற கதைகளில் பதிவு செய்துள்ளார்.

காதல் திருமணத்திற்குக் காதலனின் பெற்றோர் ஆதரவு கொடுக்காத காரணத்தால் காதலி தற்கொலை செய்துவிடுகிறாள் என்பதைத்

தாமிரபரணியின் தாகங்கள் என்ற கதையின் மூலம் பதிவு செய்துள்ளார். நிறைவேறாக் காதலைத் 'தாமிரபரணியின் தாகங்கள்' என்ற கதை கூறுகிறது. சசி – பரணி இருவரும் காதலிக்கின்றனர். பெற்றோரின் சம்மதத்தைப் பரணி கேட்க, அவனது பெற்றோர் இரண்டு தங்கையையும் காரணம் காட்டுகின்றனர். உடனே அவன் அவளிடம் நீ சில காலம் பொறுக்க வேண்டும் என்று கூற சசியின் வீட்டில் அவளுக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கின்றனர். இந்தச் செய்தி அறிந்ததும் பரணியிடம், என்னால் உங்களை மறக்க முடியாது பரணி. நான் உங்களோட கனவுல வாழ்ந்துட்டேன். குடும்பம் நடத்திட்டேன் என்கிறாள்.

> **''கனவு ஒரு பொய்யான ஆயுதம் சசி என்கிறான். ஆனால் . . . அதனால் ஏற்படுகிற தழும்பு நிஜம். நிரந்தரம்''**[46]

என்கிறார். மறுநாள். சசி தற்கொலை பண்ணிக் கொள்கிறாள். அதை தமயந்தி பின்வருமாறு பதிவு செய்கிறார்.

இன்றைய சமுதாயத்தில் காதல் என்பது பெண் எவ்வித நோக்கமுமன்றி எவ்விதத் தயக்கமுமில்லாது தன் உடலையும் மனதையும் ஆணுக்குப் பரிசாக வழங்கக் கூடியதாக உள்ளது. இதனால் சமுதாயத்தின் பார்வையில் குற்றவாளியாகிப் பழிச் சொல்லுக்கு அஞ்சி, தற்கொலை செய்து கொள்கின்றனர் என்ற கருத்தைத் தன் படைப்பு வழி முன்வைக்கிறார் தமயந்தி.

காதலியைத் தன் காதலன் வீட்டிற்கு அழைத்துக் கொண்டுபோய் திருமணத்திற்குச் சம்மதம் வாங்குவதென்பது நடைமுறையில் நடக்கும் நிகழ்வு அல்ல; இருப்பினும் ஆசிரியரின் மரபு மீறின சிந்தனையை நோக்கும் விதத்தில் 'விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்' என்ற கதை இடம்பெறுகிறது.

'விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்' என்ற கதையில் சந்திர சேகர், சித்ராவைக் காதலிக்கிறான். அவர்களது காதலுக்குச் சம்மதம் வாங்க அவளை அவனது வீட்டிற்கு அழைத்து வந்துள்ளாள். அவள் வீட்டிலுள்ள பெண் அடிமை, ஆணாதிக்கம் போன்ற அடக்குமுறையான கருத்துக்கள் அவளுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவனிடம் என்னால் நடிக்க முடியாது. இனி உன் திருமணத்திற்குத் தான் இங்கு வருவேன் என்று கூறிவிட்டுப் போய்விடுகிறாள், என்பதைப் பின்வரும் கூற்று மூலம் அறியலாம்.

> **"நல்லா சமைப்பேன்னு சொல்லணும். உங்கப்பா முன்னால வந்து நிக்கக்கூட கூடாது. இல்லே? என் சுய கௌரவத்தை விட்டுக் கொடுத்துவிட்டு இந்தக் கல்யாணத்துக்கு சம்மதம் வாங்கணும்னா இந்த கல்யாணம் தேவையில்லைன்னு தோணுது சந்துரு"**[47]

ஆனாலும் இவளால் நடிக்க முடியாதென்றே திண்ணமாய்த் தோன்றிற்று.

> **"காதல் காதல் காதல்**
> **காதற் போயின்**
> **சாதல் சாதல் சாதல்"**[48]

என்றார் பாரதி. ஆனால் உடல் சார் உணராமல் வெளிப்படுவதே இன்றைய காதல் என்பதை தமயந்தி பதிவு செய்துள்ளார்.

நிறைவேறாக் காதலால் அல்லலுறும் பெண்ணின் மனநிலையை 'நிழல் வலை' என்ற கதையில் பதிவு செய்துள்ளார்.

'நிழல் வலை' என்ற கதையில் இருவர் காதலிக்கின்றனர். பின்பு இருவரும் இரு துருவங்களாக வாழ்கின்றனர். காதலிக்கு வேறொரு வாத்தியாரோடு திருமணம் நடைபெற்று மூன்று குழந்தைகள் உள்ளன. இருப்பினும் தனது காதலனை நினைத்துப் பார்க்கிறாள்.

> "எந்தப் புள்ளியில் நீ என்னை விட்டுப் போனாய் என்று இந்த ஒன்பது வருடங்களாகப் புரிபடவுமில்லை. மத்தியதர காதல்களின் விதி நம் மீதும் கையை விரித்திருக்கிறது.
>
> என் முதல் குழந்தையின் தொட்டில் உன்னை ஞாபகப்படுத்தியது. எனக்கும், உனக்கும் குழந்தை பிறந்தால் எனது கண்கள் குழந்தைக்கு இருக்கும் என்று நீ உச்சரித்தபோது அழுத்திய சொல் கூட வலி மாறாமல் மனசிலிருக்கிறது.
>
> கும்பகோணத்தில் ஒரு ஸ்கூல் வாத்தியாரைக் கட்டிக்கொண்டு மூன்று குழந்தைகள் இருக்கிறதெனக்கு"[49]

நினைவுகளை அழிக்கும் ரப்பர் இல்லாதவரை ஒவ்வொருவருக்கும் கடந்த காலக் காதல் வலி நிரந்தரம் என்பதை நிழல்வலை கதை மூலமாக, தற்கால பெண்களுக்கு விழிப்புணர்வு கொடுக்கும் நோக்கில் தமயந்தி பதிவு செய்துள்ளார்.

### 2.10.2 ஏமாற்றுதல்

ஒருவரை நம்பச் செய்து மோசம் செய்தல், நல்லவன் போல் உண்மை போல் நடிப்பது ஏமாற்றுதலாகும்.

தமயந்தியின் படைப்பான ஒரு பேனாவின் அல்லது ‘பெண்ணின் கதை’, ‘அக்கக்கா குருவிகள்’ போன்ற கதைகளில் ஏமாற்றத்தால் கற்பை இழந்து நிற்கும் பெண்ணின் நிலையைக் காணலாம்.

காதல் என்ற நோயால் சமூகத்தில் கற்பை இழக்கும் பெண்கள் ஆயிரம் என்ற கருத்தை தமயந்தியின் படைப்பான ஒரு பேனா அல்லது பெண்ணின் கதை வெளிப்படுத்துகிறது.

‘ஒரு பேனாவின் அல்லது பெண்ணின் கதை’ என்ற கதையில் ஜோஸ்பின் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறி ஒரு ஆடவன் அவனது காம இச்சையைத் தீர்த்துக் கொள்கிறான். பின்பு அப்பெண்ணை ஏமாற்றி விடுகிறான். இதனால் அப்பெண்ணின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. வீட்டில் போய் சம்மதம் வாங்கி வாரேன் என்று கூறியவனைக் காணவில்லை.

> **“இவள் அவன் ஆபீஸ் அருகே போனதும் அவன் நகர்வது வாடிக்கையாகி விட்டது. பெறகு பேசலாமே, இப்ப கொஞ்சம் வேல பிஸி, நாலு நாளா ஜுரம் என்று விலகினான். இவள் கொஞ்சம் கோபப்பட்டாள். எரிச்சல்பட்டான். இறுதியாக ஒரு நாள் பெரிய பதி விரத, தே . . . வேதாள”**[50]

என்றான். இவள் செத்துப்போய் வீட்டுக்குள் வந்தாள். புனைந்துரைகளில் பல பெண்களை ஏமாற்றும் இன்றைய ஆணின் நிலை இங்குச் சுட்டப்படுகிறது.

அக்கக்கா குருவிகள் என்ற கதையில் யசோதா திருமண வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு எம்.டி. படிக்கும் டாக்டர் இளைஞரோடு பேசிக் கொண்டிருந்தாள். திட்டமிடுதல் ஏதும் இல்லாமல் தவறு நடைபெறுகிறது.

"அந்தத் திருமணத்தில் அவனைப் பார்த்தேன். யாரோ அறிமுகப்படுத்தி வைத்தார்கள். எம்.டி. படித்துக் கொண்டிருக்கும் எம்.பி.பி.எஸ். சிரிக்க சிரிக்கப் பேசினான். என் இளமை விழித்துக் கொண்டது. அன்று மாலை ஏழு மணி தாண்டி மண்டபத்தில் ஆளில்லா அறையில் தனியாகச் சந்திக்க நேர்ந்தது. திட்டமிடுதல் ஒன்றுமில்லை. நேர்ந்து விட்டது. பேச்சில்தான் ஆரம்பித்தது. பிறகு கைகள் இணைந்து கொண்டன. தப்பு என்றுதான் தோன்றிற்று. ஆனாலும், இருபத்தொன்பது வயது உடம்பு ஜெயித்துவிட்டது."[51]

ஆண்கள் பெண்களை வெறும் காம நுகர்ச்சிப் பொருளாகக் கருதுவதால் ஏற்படும் பிரச்சினை இதில் சொல்லப்படுகிறது. பெண்கள் ஆண்களின் போலியான வேடத்தைப் புரிந்து கொள்ளாமல் அவர்களுடன் பழகித் தங்கள் வாழ்க்கையைப் பறி கொடுத்துவிடுகின்றனர். ஆண்களின் தவறான நடத்தை காரணமாக இது மாதிரியான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்களை இச்சமுதாயம் கேவலமான நிலைக்குத் தள்ளுகின்றது. அவர்களுக்கு மறுவாழ்வு என்பது ஒரு கேள்விக்குறியாக அமைந்துவிடுகிறது என்ற கருத்தைச் சமூக மொழியாகப் பதிவு செய்துள்ளார்.

### 2.10.3 விதவை மறுமணத் தடை

கணவனோ அல்லது மனைவியோ இறந்த பின்பு அல்லது விவாகரத்துச் செய்த பின்பு செய்யப்படும் மணம் மறுமணமாகும். விதவை மறுமணம் என்பது சமூகத்தில் கேள்விக்குறியாகவே உள்ளது என்ற கருத்தைக் கூறும் விதத்தில் தமயந்தியின் படைப்பான 'சிம்மாசனப் பட்டாபிஷேகம்' என்ற கதை இடம்பெறுகிறது. இதில் ஜானு என்ற இளம் விதவையை மறுமணம் செய்ய, பரசு என்ற இளைஞன் முன் வருகிறான். ஆனால் அது ஆழமான

தியாக உணர்வு அல்ல. விளம்பரம் தேடுவது போன்ற ஒரு செய்கை. பரசுவின் வெளி உணர்வு ஒரு விதவையைத் திருமணம் செய்வது என்பது சமூகப் பார்வைக்காகவே என அமையும்போது உள்ளுணர்வு மாறுபாடாக அமைகிறது. அதை அம்மாவின் தடை என்பதன் மூலம் வெளிப்படுத்துகிறான் பரசு.

> **''மனைவிங்கிற பட்டம் உனக்கு கொடுக்கப் போகிறேன் ஜானு.**
>
> **அம்மாகிட்ட உன்னைப் பத்தி சொன்னேன். அவளைக் கட்டிக்கோடா, சம்மதம்னு சொன்னா. ஆனா . . . உன் சுகத்துக்காக உன் தங்கச்சி வாழ்க்கையை கெடுக்கப் போறியான்னு கேட்டா.**
>
> **நான் ஒரு விதவையை . . . அதுவும் அனாதையா கல்யாணம் பண்ணிக்கிட்டா . . . விமலாவோட வாழ்வு பாதிக்கப்படும்னு நினைக்கிறா.**
>
> **அதனால் என் அத்தை பெண்ணையே கல்யாணம் பண்ணிக்க அம்மா கட்டாயப்படுத்துறா.''**[52]

### 2.10.4 மணவிலக்கு அல்லது மணமுறிவு

திருமண ஒப்பந்தத்தைச் சம்பந்தப்பட்ட ஆணோ, பெண்ணோ முறித்துக் கொண்டு போவது 'மணமுறிவு' ஆகும். தமயந்தி தன் படைப்பான அலர், மாமிசம், நிழலிரவு போன்ற படைப்புக்களில் மணவிலக்காகப் பதிவு செய்துள்ளார். சந்தேகப் புத்திக்காரனோடு வாழ முடியாமல் பரிதவிக்கும் பெண்ணின் நிலையை அலர் என்ற கதை விளக்குகிறது.

'அலர்' என்ற கதையில் கலையின் கணவர் சந்தேகப் புத்திக்காரன். எதற்கெடுத்தாலும் அவளை அடித்துக் கொடுமைப்படுத்துகிறான். அதனால் திருமணமான அடுத்த மாதமே திரும்பி வந்து விடுகிறாள்.

> **“அடுத்த மாதமே சுவரில் அடித்த பந்தாய் திரும்பி வந்தேன். அப்புறம் பேச்சு வார்த்தை விவாகரத்து”**[53]

திருமண வாழ்க்கையில் சந்தோஷத்தை அனுபவிக்காமல் விவாகரத்தானவன்; பிறரின் சந்தோஷத்தைக் கெடுக்கும் கெட்ட எண்ணத்தை உடைய ஆணின் நிலையை மாமிசம் என்ற கதை விளக்குகிறது.

‘மாமிசம்’ என்ற கதையில் வரும் சரவணன் என்பவர் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏற்கனவே திருமணமாகி விவகாரத்தானவர். ஆனால் அலுவலகத்தில் வேலை பார்க்கும் திருமணமாகாத பெண்களைப் பற்றி அவர்களது கணவன்மார்களுக்குத் தவறாகக் கடிதம் எழுதுவார்.

> **“விவாகரத்து ஆனவன் என்பதாலோ என்னவோ, மற்றவர்கள் சந்தோஷமாக வாழ்வது அவனுக்குப் பிடிக்காத விஷயங்களில் ஒன்று என்பது காந்தி அக்கா அவனைப் பற்றித் தந்திருக்கிற பிம்பங்களில் ஒன்று”**[54]

‘நிழலிரவு’ என்ற நாவலில் வரும் செல்லம்மாவின் கணவன் சந்தேகப்புத்திக்காரன், பிற ஆண்களோடு அவளைத் தொடர்புபடுத்திப் பேசுகிறான். இதனால் காவல் துறையினரிடம் புகார் கொடுக்கின்றனர். விசாரணையின்போது அவளை எஸ்.ஐ.வுடன் தொடர்புபடுத்தியும் பேசுகிறான். இதனால் ஆத்திரத்தில் அவள் விடுதலைப் பத்திரம் வாங்கி எழுதிக் கொடுத்துவிட்டாள்.

கணவன் மனைவி உறவில் புரிதல் மற்றும் சரியான மனப் பொருத்தம் இல்லாத பொழுது மணவிலக்கு ஏற்படுகிறது. இதில் பெரிதும்

பாதிக்கப்படுபவள் பெண். கணவனே கண்கண்ட தெய்வம் என்ற மரபுப்படி வாழ்ந்த பெண் வாழாவெட்டி என்ற பட்டத்தை ஏற்று வாழும் நிலையும், ஆண் விவகாரத்து ஆனாலும் கவலைப்படாமல் பிற பெண்ணின் வாழ்க்கையைக் கெடுக்கும் நிலையையும் தமயந்தி தன் படைப்பில் பதிவு செய்துள்ளார்.

**2.11 உறவுநிலைச் சிக்கல்கள்**

> ‘‘இரத்தக் கலப்பாலும் பெற்றோர்கள் வழியாலும், மண உறவினாலும், ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறை அமைகிறது.’’[55]

> ‘‘குடும்ப உறவுகளை இரத்த உறவு (Consavurity), மணஉறவு (Affinity), புனைவியல் உறவு (Fictionus) எனப் பிரிப்பர். ஒரு குடும்பத்திலுள்ள பெற்றோர். அவர் தம் மக்கள் வழி அமையும் உறவுகள் இரத்த உறவுகளையும், ஓர் ஆடவனும் பெண்ணும் மணம் செய்து கொள்ளும் போது கணவனுக்கு மனைவி வழி உறவுகளும், மனைவிக்குக் கணவன் வழி உறவுகளும், உறவினர்களாக அமையும் போது உறவு மண உறவுகளையும், குழந்தையைத் தந்து எடுத்து வளர்ப்பதின் மூலம் தோன்றும் உறவுகள் புனைவியல் உறவுகளாகவும் அமைகின்றன.’’[56]

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சமுதாயத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களுக்கேற்ப உறவுமுறை அமைப்பிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இன்றைய உறவுமுறைகளுக்கிடையே காணப்படும் நடைமுறைகளும் கடமைகளும் ஓரளவு வரையறை செய்யப்பட்டுள்ளன. இவ்வரையறைக்குட்பட்டுப் பல்வேறு குடும்ப வகைகள் தங்கள் செயல்பாட்டில் ஈடுபடும்போது அச்செயல்பாட்டின் விளைவாக மூன்று நிலைப்பட்டக் குடும்ப உறவுகள் உருவாகின்றன. அவை,

‘‘1) அன்புறவுகள்

2) போராட்ட உறவுகள்

3) போராட்ட உறவாக மாறிக் கொண்டிருக்கும் அன்புறவுகள்’’[57]

‘‘ஒரே குடும்பத்தில் வசிக்கும் இரத்த உறவுடைய குடும்ப உறுப்பினர்களிடையே பெரும்பாலும் அன்புறவு காணப்படுகிறது. இதைத் தவிர்த்து ஆண் பெண் என்ற மாறுபட்ட பாலைச் சேர்ந்த (Opposit Sex) உறவினர்களிடையே பெரும்பாலும் அன்புறவு காணப்படுகிறது. கணவன் – மனைவி, தந்தை – மகன், தாய் – மகள், தாய் – மகள், அண்ணன் – தம்பி, அக்காள் – தம்பி, அக்காள் – தங்கை முதலியோரிடையே காணப்படும் உறவுகளை அன்புறவு எனலாம்’’[58]

‘‘ஒரு குடும்பத்தில் முன்பே வசிக்கும் உறுப்பினர்களிடையே புதிதாக வந்து சேரும் பெண்களின் உறவு போராட்ட உறவாக அமைகிறது. போராட்ட உறவு பெரும்பாலும் பெண்களிடையேதான் ஆழமாகக் காணப்படுகிறது. சக்களத்திகள் – மாற்றாந்தாய், மாமியார் – மருமகள், அண்ணி – நாத்தனார் ஆகியோரிடையே காணப்படும் உறவுகளைப் போராட்ட உறவுகள் எனலாம்.’’[59]

‘‘சமுதாய மாற்றங்களுக்கேற்பப் பொருளாதாரம், பாலியல் காரணங்களால் அன்புறவுகளே நாளடைவில் போராட்ட உறவுகளாக மாற்றமடைகிறது. அண்ணன் – தம்பி, அண்ணன் – கொழுந்தன், மாமனார் – மருமகள் உறவுகளையே இதற்குச் சான்றாகக் கூறலாம்.’’[60]

இவ்வுறவுகளில் சில முரண்பாடுகள் தோன்றும்போது சிக்கல்கள் ஏற்படுகின்றன. இச்சிக்கல்களைப் பின்வரும் நான்கு நிலைகளில் தமயந்தி பதிவு செய்துள்ளார்.

1) கணவன் - மனைவி உறவுச் சிக்கல்கள்

2) பெற்றோர் - குழந்தைகள் உறவுச் சிக்கல்கள்

3) சகோதர உறவுச் சிக்கல்கள்

4) பிற உறவுச் சிக்கல்கள்

'நீச்சல்', 'அக்கக்கா குருவிகள்', 'ஜன்னல்', 'நமக்கான இடைவெளிகளில் கூடு கட்டும் தூக்கணாங்குருவி', 'மறுபிரதி', 'வாக்குமூலம்', 'நிலை', 'அப்பாவுக்கு எழுத நினைத்தது', 'ரிப்வேணு வங்கிகளும் தூங்கிக் கழித்த கணமும்', ''திரும்ப வருகிற நாட்கள்', 'யாருமற்றவர்களின் உலகம்', 'இலைகள் பேசும்', 'அனல்மின் மனங்கள்', 'மரங்கொத்திப் பறவைகள்', 'முள்வீடு', 'பிணைக் கைதிகள்' ஆகிய கதைகளில் இவற்றைக் காணலாம்.

### 2.11.1 கணவன் – மனைவி உறவுச் சிக்கல்கள்

திருமணமான பின் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே ஏற்படும் உறவு முறையே கணவன் மனைவி உறவு ஆகும். ஒரு குடும்பத்திலுள்ள அன்புறவுகளில் கணவன் - மனைவி உறவே தலையாயது.

தமிழ்ச் சமுதாயம் பெண் மக்களுக்கெனச் சில சமுதாயக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவர்களுடைய கடமைகள் (Duties), உரிமைகள் (Rights), எதிர்பார்ப்புகள் (Expectations) ஆகியவற்றை வரையறை செய்துள்ளது. திருமணமான பெண்கள் தம் வீட்டையே உலகமாக்கிக் கொண்டு

தன் கணவன், தன் குழந்தை, தன் உறவினர் முதலிய அனைவருடைய நலன்களைப் பேணுவதைக் கடமையாகக் கொள்ள, ஆடவன் குடும்பத்தில் தேவைகளுக்கும் பாதுகாப்பிற்கும் பொறுப்பானவனாக இருப்பது இந்திய மரபுவழிச் சமுதாய அமைப்பாகும்.

குடும்ப அமைப்பில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் சமமாகவும், ஒருவருக்கொருவர் மதிப்புக் கொடுப்பவராகவும் விளங்க வேண்டும். இவ்வாறு கணவனும் மனைவியும் இணைந்து வாழும் குடும்ப வாழ்க்கையே வெற்றி பெற்ற வாழ்க்கையாகக் கருதப்படுகிறது. கணவன் மனைவி உறவில் ஒருமை (Oneness) குறைந்துவிட்டால் அவர்களுக்கிடையே உள்ள உறவில் சிக்கல் ஏற்படுகிறது.

கணவனின் தலைமைத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் குடும்பத்திலும், மனைவியின் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்திலும் இருவரும் ஒருவருக்கொருவர் இணையான உரிமை, கொடுத்து வாழும் குடும்பத்திலும் கணவன் மனைவி உறவில் சிக்கல் எழுவதில்லை. இந்நிலை மாறுபட்டால் கணவன் மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது; இச்சிக்கல் காலப் போக்கில் மறையாது, நின்று கணவன் மனைவி பிரிவுக்குக் காரணமாக அமைகின்றது. கணவன் மனைவி உறவுச் சிக்கல்களுக்கு அவர்கள் இருவரும் காரணமாவதோடு மற்றவர் தலையீடும் சிக்கலுக்குக் காரணமாகின்றது.

தமயந்தியின் படைப்பில் கணவன் மனைவி உறவுச் சிக்கல்களாக நீச்சல், அக்கக்கா குருவிகள், ஜன்னல், நமக்காக இடைவெளிகளில் கூடு கட்டும் தூக்கணாங்குருவி, மறுபிரதி போன்ற கதைகளில் பதிவு செய்துள்ளார்.

மனப்பொருத்தமில்லாத தம்பதியரின் வாழ்க்கையை ‘நீச்சல்’ என்ற கதை பிரதிபலிக்கிறது.

வெங்கடேசன் என்கிற மூர்த்தி கணேஷுக்கும், சௌபாவுக்கும் நல்ல பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். ஆனால் அவர்களிடையே மனப்பொருத்தம் கிடையாது. சௌபாவின் காலில் மரக்கட்டை விழுந்தது; இதனால் காலை எடுக்க முடியாத அளவுக்கு வலி. அவள் தரையில் கிடந்ததைப் பார்க்கிறான். அவளை மருத்துவமனைக்குக் கூட்டிக் கொண்டு போகவில்லை. அவன் அவளை வீட்டில் போட்டுப் பூட்டிவிட்டு அலுவலகத்திற்குச் சென்றுவிடுகிறான். இவள் கால்வலி தாங்காமல் அழுது கொண்டிருக்கிறாள்.

‘வெங்கடேசன் என்றகிற மூர்த்தி கணேஷுக்கும் சௌபாவுக்கும் என்று பார்த்து அச்சடித்த அழைப்பிதழ் அல்லவா? ஏதோ பிசிறிவிட்டது. இழை தவறிப் போய்விட்டது.’

> **“ராட்சச வலி முழங்காலிலிருந்து புறப்பட்ட எலும்பு முறிவாக இருக்கலாம். பெரிய கழிதான். அது மரக்கழி என்றாலும், கனமானதுதான், வெங்கடேசன் மனதைப் போல இரும்பு.**
>
> **அவள் தரையில் கிடந்ததைப் பார்த்துச் சிரித்தான் சாப்பிட்டுக்கிட செத்துடாத சாயந்தரம் பார்த்துக்கலாம்.”**[61]

என்று கூறிவிட்டுச் செல்கிறான். தன்னை நம்பி வந்த பிள்ளையை சந்தோஷமாக வைக்க வேண்டும் என்ற மன உணர்வு அற்ற ஆணின் மனநிலையை இக்கதை விளக்குகிறது.

குடிகாரக்கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு நிம்மதியிழந்து வாழும் குடும்பத்தின் நிலையை ‘அக்கக்கா குருவிகள்’ என்ற கதையில் தமயந்தி பதிவு செய்துள்ளார்.

‘அக்கக்கா குருவிகள்’ என்ற கதையில் யசோதாவின் அக்கா புருஷனோடு இருக்கிறாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள். யசோதாவின் அத்தான் தினமும் குடித்துவிட்டு வந்து அக்காவை அடிக்கிறான். அதனால் பாதிநாள் அவள் அம்மா வீட்டில்தான் இருப்பாள். புருஷன் வந்ததும் அவனோடு போய்விடுவாள்.

> **“அக்கா புருஷனோடுதான் இருக்கிறாள். அவளுக்கும் இரண்டு குழந்தைகள். ஆனால் முழு நாளும் அடி உதைதான். அதனால் அவளும் பாதி நாள் இங்கேதான். புருஷன் வந்து நின்றதும் கிளம்பி விடுவாள். போன வாரம்கூட இங்குதானிருந்தாள். வரக்கூடாதுனுதான் பாக்குறேன். ஆனா யசோ . . . என்னால அடி தாங்க முடியலைடினா”**[62]

என அந்தச் சூழலை இந்தக் கதையைப் பதிவு செய்துள்ளார். காதல் திருமணத்திலும் கணவன் மனைவியிடம் புரிதல் இல்லை என்பதை முன்வைக்கும் வகையில் ‘ஜன்னல்’ என்ற கதை இடம்பெறுகிறது.

‘ஜன்னல்’ என்ற கதையில் வரும் சியமளா அக்கா, காதலித்துத் திருமணம் புரிந்தவள். திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியிடையே புரிதல் இல்லாத காரணத்தால் திடீர் திடீரென்று சண்டை நிகழ்வது வழக்கம். ஒருநாள் சியாமளாவைப் பார்க்க அவளது அப்பா வருகிறார். அப்பா வந்தச் செய்தியைத் தன் கணவன் வந்ததும் கூறுகிறாள். அவனோ உன் அப்பா இங்கே வரக்கூடாது என்று கூறி அவளை அடிக்கிறான்.

**‘‘சாயங்காலம் அவள் கணவன் வந்ததும் வராததுமாய் சந்தோஷத்தில் வாசலில் வைத்து அப்பா வந்தது பற்றிச் சொன்னாள். அவன் கையை உதறிவிட்டு உள்ளே போனான். பயங்கர கூச்சலும் சண்டையுமாய் உள்ளே இருந்தது.**’’63

கணவன் மனைவி உறவில் இடைவெளி ஏற்படும்போது குடும்பத்தில் ஏற்படும் குழப்பம் இங்குக் கதையாகிறது.

‘நமக்கான இடைவெளிகளில் கூடுகட்டும் தூக்கணாங்குருவி’ என்ற கதையில் கணவன் மனைவியிடையே விரிசல்கள் ஏற்படுகின்றன. இதனால் மனைவி தனிமையில் யோசித்துக் கொண்டிருக்கிறாள். தன் வாழ்க்கையில் எப்படி இந்த இடைவெளி வந்தது என யோசிக்கிறாள். அவளுக்கு அவன் மேல் கோபம் வந்தாலும் அதை மறைத்துவிடுகிறாள். தான் ஒரு நாயாக, ஒரு எறும்பாக, பல்லியாக, வானொலிப் பெட்டியாகவாவது பிறந்திருக்கலாமோ என்று அவளுக்குத் தோன்றுகிறது.

சாப்பிடும் இடத்தில் கூட ‘ம்’ என்ற ஒரு பதில்தான் அவனிடமிருந்து வரும். இந்த இடைவெளியான போலி வாழ்க்கையைத்தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர்.

**‘‘ஒரு பல்லியாக, ஒரு எறும்பாக, ஒரு நாயாக ஒரு வானொலிப் பெட்டியாக நீ பிறந்திருக்கலாம் என்று தோன்றுகிறதா உனக்கு**’’64

இதே போல ‘மறுபிரதி’ என்ற கதையில் கௌரியின் கணவன் சங்கர். வெளிநாட்டில் வேலை செய்கிறார். திருமணத்திற்குப்பின் 4 முறை வந்திருக்கிறார். இத்தம்பதியருக்குக் குழந்தைகள் கிடையாது. ஆனால் ஒவ்வொரு முறை வரும் போதும் வீட்டில் ஒவ்வொரு பொருள்

வாங்குகின்றனர். இதனால் வீட்டில் செல்வச் செழிப்பு உயர்கிறது. கணவன் மனைவி உறவு குறைகிறது.

சங்கர் வருவது இது நான்காம் முறை. வீட்டின் முகப்பு மாறியது. தரைகளில் டைல்ஸ் முக்கால் சுவர் வரை மார்பிள் உயர் ரக சோபா.

**“கல்யாண மாறதுக்கு முன்னால தனியாருக்கறதுல சங்கடம் இல்லை. ஆகி அப்புறமா, தனியாருந்தா உடம்பு, மனசுனு படுத்துதூங்கிறா.”**[65]

இக்கதைகளில் வரும் பெண்கள் பாதிப்பிற்குள்ளானவர்களாகவும் ஆண் ஆதிக்கத்தால் பாதிக்கப்படுபவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

### 2.11.2 பெற்றோர் – குழந்தைகள் உறவுச் சிக்கல்கள்

கணவன் - மனைவி உறவு மூலம் மனைவி குழந்தை பெறும்போது அக்குழந்தை ஆணாக இருப்பின் ‘மகன்’ என்றும், பெண்ணாக இருப்பின் ‘மகள்’ என்றும் சுட்டப்படுகிறது.

கணவன் மனைவி பிரிவால், பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையால், பெற்றோரின் மீதுள்ள பாசத்தினால் உறவுச் சிக்கல்கள் ஏற்படுகிறது என்பதை தமயந்தியின் படைப்பான வாக்குமூலம், ரிப்வேணு விங்கிள் என்னும் கதை விளக்குகிறது.

‘வாக்குமூலம்’ என்ற கதையில் மகனைப் பிரிந்து வாழும் தாயின் துயரநிலையைக் கூறுகிறது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையானது தன் மகனைத் தாயிடமிருந்து பிரித்துவிடுகிறது. நீதிமன்ற வாய்தாக்கள் ஒத்திப்போடப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதனால் தாயானவள் தனிமையில் தன் மகனை நினைத்துத் துயருகிறாள்.

> **“நீதிமன்றங்களில் உறவுகள் பிரிக்கப்படுகின்றன என்றாலும் தொப்புள் கொடிகளும் அறுத்தெறியப்படுகின்றன என்பதையும் உறுதி செய்தாகிவிட்டது. உன்னைப் பற்றி என்னிடம் மிச்சமிருப்பதாக உன் நினைவுகள் மட்டும்தான்.**
>
> **உலகிலேயே மரண தண்டனையைக் காட்டிலும் கொடிய தண்டனை பிள்ளைகளைப் பிரிவதுதான்”**[66]

இவ்வாறு தன் மகனைப் பிரிந்து வாழும் தாயின் துயர நிலையை ‘வாக்குமூலம்’ என்ற கதையில் பதிவு செய்துள்ளார்.

‘ரிப்வேணு வங்கிகளும் தூங்கிக் கழிந்த காலமும்’ என்ற கதையில் வரும் மாடத்தி, இலஞ்சியின் அப்பா காணாமல் போய்விடுகிறார். இருபது வருஷம் கழித்துத் தன் பிள்ளைகளையும் தன் மனைவியையும் தேடி வருகிறார். அந்நேரம் தன் மனைவி நோய் வாய்ப்பட்டு இறந்து விட்டாள் என்ற செய்தியை அறிகிறார்.

> **“ஆரு? அப்பாவா? என்றாள் மாடத்தி. இவள் அழுதாள். எங்க போன இருவது வருஷமா திரும்ப எங்க போன. அம்மா நொந்தே செத்தாள்.”**[67]

இவ்வாறு தன் மகனைப் பிரிந்து வாழும் தாயின் மன உணர்வையும், பொறுப்பற்றத் தந்தையால் பாதிக்கப்பட்ட பிள்ளையின் மன உணர்வையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**சகோதர உறவுச் சிக்கல்கள்**

மணமான ஆடவனின் உடன்பிறந்தார் வயதில் இளைய ஆணாக இருப்பின் தம்பி என்றும், வயதில் மூத்த ஆணாக இருப்பின் அண்ணன்

என்றும் அழைக்கப்படுவர். இதே நிலையில் பெண்ணாக இருந்தால் அக்காள், தங்கை என்று அழைக்கப்படுவர். இவ்வுறவைச் சகோதர உறவு எனலாம்.

### 2.11.3 அண்ணன் – தம்பி உறவு

சகோதரர்களுள் மூத்தவன் அண்ணன் என்னும் இளையவன் தம்பி என்றும் இரத்த உறவுடையவரிடையே அன்புறவு நிலவுகிறது என்ற கருத்திலிருந்து இன்றைய அண்ணன் -தம்பி உறவு நிலை முரண்படுகிறது. இம் முரண்பாடு திருமணத்திற்குப் பின் பூசல்கள் தோன்றும் போதுதான் இந்த அன்பு உறவு போராட்ட உறவாக மாறுகிறது.

தமயந்தியின் படைப்பான 'திரும்ப வருகிற நாட்கள்' என்ற கதையில் அண்ணன் தம்பி உறவைப் பதிவு செய்துள்ளார். அண்ணன் என்ற அதிகாரத்தில் தம்பியை அடக்கி வைக்கும் நிலை சமூகத்தில் நிலவியுள்ளது. இக்கருத்தாக்க அடிப்படையில் 'திரும்ப வருகிற நாட்கள்' என்ற கதை இடம்பெறுகிறது.

சீனுவுக்கும் அவனது அண்ணனுக்கும் அடிக்கடி சண்டை நிகழ்வது வழக்கம். வீட்டில் எந்த பொருள் காணாவிட்டாலும் அது சீனுதான் எடுத்துவிட்டான் என்று சொல்லிச் சண்டை இடுவான் அவனது அண்ணன்.

அண்ணி பவுடர் டப்பா இடம்மாறினதுக்கு நடந்த கூத்து.

**"ஏடா மாடாட்டம் தூங்கினா ஆச்சா... எழும்பி சித்ராவோட பவுடர் டின்னை எடுத்தியா? எங்கவச்ச"**[68]

என்று தம்பியை அதட்டும் அண்ணனின் நிலையைத் தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

### 2.11.4 சகோதர – சகோதரி உறவு

ஒரு பெண்ணின் உடன் பிறந்தார் உறவு மிக நெருக்கமானது. தனித்து வாழ்வதிலும், உடன்பிறந்தாருடன் வாழ்வதையே ஒரு பெண் விரும்புவாள். சகோதர உறவு என்பது நிலையான நீண்ட கால பாசமிக்க உறவாகும். ஓர் ஆடவன் தன் சகோதரியைத் திறந்த மனத்தோடு எவ்வித உள் எண்ணமின்றிக் காக்கின்றான். அவளிடமிருந்து எதையும் அவன் பெறுவதைவிட அவன் அவளுக்குத் தருவதே மிகுதியாகும் என்று டேவிட் ஜி. மண்டல் பாம் கூறுகிறார். ஆனால் இவ்வுறவில் சில காரணங்களால் பிரச்சனைகள் எழும் போது இவ்வுறவுகளில் சிக்கல்கள் எழுகின்றன என்பதை தமயந்தியின் படைப்பான யாருமற்றவர்களின் உலகம், இலைகள் பேசும் போன்ற கதைகளில் பதிவு செய்துள்ளார்.

திருமணத்திற்கு முன்பு உள்ள அண்ணன் தங்கை உறவானது திருமணத்திற்குப் பின் குறைந்துவிடுகிறது. அதற்குக் காரணம் என் கணவன், என் குடும்பம், என் வீடு என்று தனித்து செயல்படுத்தும் அண்ணன் தங்கையிடம் பாசமாக இருப்பது அண்ணிக்குப் பிடிக்காது. அதை மீறினால் குடும்பத்தில் விரிசல் ஏற்படும் என்பதை ‘யாருமற்றவர்களின் உலகம்’ என்ற கதை விளக்குகிறது.

கலையின் அண்ணன் ராமன், அண்ணன் தங்கைக்குப் பாசம் அதிகம் சிறுவயதில் தங்கைக்குக் காலில் முள் குத்தினால் அண்ணன்தான் எடுத்துவிடுவான். ஆனால் இன்று விதவையாக, தன் அண்ணன் வீட்டில் இருக்கிறாள். இப்பொழுது அவனுக்குக் காலில் முள் குத்தியது. அவள்

எடுத்தாள். இதைப் பார்த்த அவனது மனைவி அவனைப் பாசமலர் சிவாஜினு நினைப்பு என்று கூறுகிறாள்.

> **“ராமன் பள்ளிக்கூடம் படிக்கும்போது இவளுக்குக் காலில் தைத்த முள்ளை எடுத்து விடுகிறான். இப்பொழுது எடுத்துவிட்டால் வைதீஸ்வரி கத்துவாள். அண்ணன்ணா லட்சணமா நடந்துக்கிறீங்களா? அவளுக்குத்தான் அறிவு கிடையாது. உங்களுக்குமா இல்ல? வயசாயிட்டா போறுமா? பெரிய பாசமலர் சிவாஜி சாவித்திரி”**[69]

என்று அண்ணன் தங்கை உறவைக் கொச்சைப்படுத்தும் நிலையைத் தம் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

### 2.12 பிற உறவுச் சிக்கல்கள்

இரத்த உறவுகளைப் போலவே மற்றும் பிற உறவுகளும் பணமதிப்பு காரணமாக உறவுச் சிக்கலுக்குள்ளாகிறது. சான்றாக ஆய்வுக்குள்ளாகும் நாவல் மற்றும் சிறுகதைகளில் தமயந்தி, மாமியார், மருமகள் உறவைப் பதிவு செய்துள்ளார்.

#### 2.12.1 மாமியார் – மருமகள் உறவுச் சிக்கல்கள்

மாமியார் - மருமகள் உறவு என்பது பெரும்பான்மையான குடும்பங்களில் காணப்படும் சிக்கல் மிக்க உறவாகும். பொதுவாக மாமியார் தன் மருமகளைக் கொடுமைப்படுத்துபவளாகவும், மருமகளிடம் கண்டிப்பு மிக்கவளாகவுமே காணப்படுகின்றாள். வீட்டில் அரசியாக விளங்கும் மாமியாருக்குத்தான் அதிகாரத்தில் பங்கு கொள்ள இன்னொரு பெண் வரும் பொழுது அவளால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனாலேயே மாமியார் மருமகளிடம் கடுமையாக இருக்க நேரிடுகின்றது. இத்தகைய

மாமியார் ஆதிக்கம், குடும்பத்தின் இன்றியமையாத இடத்தை ஏற்றிருக்கும் ஒருவனின் அடிமனத்திலிருந்து வரும் எதிர்பார்ப்பாகும் என்று கூறலாம்.

மனைவி தன் கணவன், தனக்கே உரியவனாக இருப்பதைத்தான் விரும்புகிறாளேயன்றித் தன் மாமியாரின் பேச்சுக்குத் தலையசைப்பவளாக இருப்பதை விரும்புவதில்லை. இந்நிலையில் தாய் - மனைவி என்ற இருவருக்குமே ஒருவரிடம் ஒருவருக்கு ஐயம் தோன்றுகின்றது. ஆடவனுக்குத் தான் யாருடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக அமைவது எனப் புரியாத நிலை ஏற்படுகின்றது. இங்குதான் மாமியார் மருமகள் உறவில் சிக்கல் எழத் தொடங்குகின்றது.

‘முள்வீடு’ என்ற கதையில் கணேசன் மனைவி, அம்மணி, அம்மணி நன்றாகச் சமைக்கும். ஒவ்வொரு குழம்பு வைக்க ஒவ்வொரு சட்டியைப் பயன்படுத்த வேண்டுமென்பாள். அவளது மாமியார் ஆனா தினம் அவள் சமைக்கும் சட்டியை முகர்ந்து பார்ப்பாள் அவளது மாமியார். ஒரு நாள் அப்படி மோந்து பார்க்கும். போது அம்மணிக்கு அவளது வீட்டு நாய் நினைவுக்கு வந்தது; உடனே சிரித்துவிடுகிறாள். இதனால் இருவருக்கும் சண்டை ஏற்படுகிறது என்பதைப் பின்வரும் கூற்று வழி அறியலாம்.

> “அவ்ளோதான். கைல வச்சிருந்த பாத்திரத்தை அவ மேல வீசி எறிஞ்சா அம்மாக்காரி. அது எம் மேல விழுந்து டபாடபானு ஓடி சுவர்ல முட்டி நின்னுச்சு. அப்புறமாத்தான் அம்மணி அவ்வளவு நாள் மவுனத்தைஎல்லாம் கண்ணாடி வச்சிக் கிழிக்கிற மாதிரி கிழிச்சி சத்தம் போட்டா, அம்மாக்காரியும் கோவத்துல மீதி இருந்த பாத்திரத்தையும் அம்மணி மேல எறிஞ்சா. சுவர் பூராவும் கெட்ட வார்த்தையா வந்து ஒட்டிக் கொண்டன. ராத்திரி கணேசன் வர்ற வரைக்கும் ரெண்டு பேருமே பாத்திரத்தை

எல்லாம் எடுத்து வைக்கவே இல்லை. அவன் வந்தவுடனேயே அம்மா ஒனு அழுதா. நானே வாய்ல மண்ண அள்ளிப் போட்டுட்டு ஓரமா இருக்கேன். என்ன போய் என்னல்லாம் சொல்லதானு அழுத . . . என் உசிர எடுக்கீகனுட்டு அவன் பங்குக்கு அம்மணியைப் போட்டு அடிச்சான். முகம்லாம் அம்மணிக்கு வீங்கிப் போச்சு. அம்மாக்காரி ஒரு திருப்தியோட ஆவ்ன்னு சத்தமா ஏப்பம் விட்டா.''[70]

'பிணைக் கைதி' என்ற கதையில் துளசியின் கணவன் வனவிலங்குத் துறையில் அதிகாரியாக வேலை பார்க்கிறார். துளசி மாமியாரோடு ஊரில் இருக்கிறாள். திடீரென்று அவன் உட்பட 16 பேரை கொள்ளையர்கள் பிடித்துப் போய் விட்டார்கள் என்ற செய்தி கேட்டு உறவினர்கள் விசாரித்து வந்து கொண்டிருக்கின்றனர். ஒவ்வொருவருக்கும் சமைத்துச் சமைத்து அலுத்துப் போய்விடுகிறாள்.

துளசிக்குச் சமையலறைப் பாத்திரங்களே துணை; வீட்டு வாசலில் வனவிலங்குத் துறை ஜீப் வந்து நின்றது. ரொம்ப நேரம் எட்டிப் பார்த்தால் மாமி திட்டுவாள். 'கட்டுச்சோறு கட்டிட்டுப் போயிறலாமா?' என்று சின்னவள் கேட்டாள்.

'போவோம் துளசிக்குத்தான் சிரமாயிருக்கும்' இவள் மாமி உடனே அவளுக்கென்ன சிரமம். புருசனே எங்கனு தெரியலை. ம் எல்லாம் கட்டித் தருவாள்.

''அநேகமா விசேஷ நாட்களிலெல்லாம் சுமார் 25, 30 பேருக்குச் சமைக்க வேண்டும். மாமியாருக்குச் சோள ரொட்டியும், மாமனாருக்கு தினுசு தினுசாய் சமைக்கிற விதம் சலித்துப் போகாதது.''[71]

மாமியார் - மருமகளிடையே ஏற்படும் கருத்து வேற்றுமையாலும், விட்டுக் கொடுக்கும் மனமின்மையாலும் இவர்களிடையே சண்டைச் சச்சரவுகள் ஏற்படுகின்றன என்பதைத் தம் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

**2.13 தொகுப்புரை**

இவ்வியலில் குடும்பத்தின் தோற்றம், குடும்பத்தில் சிறப்பியல்புகள், குடும்பத்தின் வகைகள், குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், திருமணத்தால் ஏற்படும் மாற்றங்கள், திருமணச் சிக்கல்கள், உறவு நிலைச் சிக்கல்கள் ஆகிய அனைத்தும் தமயந்தி படைப்புகள் வழி வெளிப்படும் சமூக மொழிக் கருத்தாக்கங்கள் ஆராயப்பட்டுள்ளன.

குடும்ப வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் யாவும் சமூக அமைப்பின் மாறுதல்களின் பின்னணியில் உருவானதே என்பதைத் தம் படைப்பு வழி பதிவு செய்துள்ளார். குறிப்பாக ஆண் பெண் நட்பு குறித்துப் பல வகையான கருத்தாக்கங்களைக் கையாண்டுள்ளார். குடிகாரக் கணவனால் அல்லலுறும் பெண்களின் நிலையையும், தீய உறவு வைத்துக் கொள்வதால் பாதிக்கப்படும் பெண்களின் நிலையையும், சந்தேகத்தால் ஏற்படும் விளைவுகளுக்குத் தம் படைப்பு வழிக் கூறி இந்த நிலையில் பாதிக்கப்படும் பெண்கள் எவ்வாறு மீண்டு வந்து சமூகத்தில் வாழ வேண்டும் என்பதற்கான வழி சொல்லும் வகையில் தம் சமூகமொழியைப் பதிவு செய்துள்ளார்.

திருமணத்தால் ஏற்படும் மாறுதல்களைக் கூறும்போது சமூகத்தில் காதல் திருமணம் இருந்தாலும், பெற்றோர்கள் அதை ஆதரிக்கவில்லை என்றும், காதல் திருமணத்தில் முடிந்தாலும் அவர்களது திருமண வாழ்க்கை மகிழ்வாக அமையவில்லை என்றும் தம் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

உறவுகளுக்கிடையே முரண்பாடுகள் தோன்றும்போதுதான் உறவு நிலைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதையும், உறவுகளுக்கிடையே சிக்கல்களைத் தவிர்க்க, சரியான புரிதல்கள் வேண்டும் என்பதையும் தம் படைப்பில் பதிவு செய்துள்ளார்.

## அடிக்குறிப்புகள்

1. சரோஜா. கோ. பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை. ப.76.
2. சீ.பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.336-337.
3. சேதுமணிமணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள், ப.60.
4. A Kinship, Structured Grouping normally composed of an adult male and female oan this off Spring living together in a more or less permanent relationship approved by Socioogy An Introduction, p. 295.
5. எங்கெல்ஸ். குடும்பம்- தனிச்சொத்து-அரசு ஆகியவற்றின் தோற்றம், (மொ.பெ.ஆ) தர்மராஜன், ப.76.
6. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-7, ப.597.
7. பெண்கள் முன்னேற்றத்தில் சுமங்கலி இதழ்களின் பங்கு பக்.49-50.
8. Joint family, Two or more linerally related kinsfolk of the same sex, their spouses and off spring, occupy a single hosested and are jointly subject to the same authority or single head. International Encyclopeadia of the Social Science Vol. x, pp. 5-6.
9. Nuclear family is most frequently used to refer to a group consisting of a man, a woman and their socially recognized children - Ibid, Vol. I, pp. 5-6.
10. The New Encyclopaedia, Britannica, p. 67.
11. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு- ப.522.
12. சேதுமணி மணியன், மு.கூ.நூ., பக். 24-25.
13. முனைவர் சு.வளவன், பெண் படைப்பாளர் தம் படைப்புகள், ப.113.
14. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி எட்டு. பக்.556-557.
15. B.Kupppuswamy, Social Change in India, p. 18.
16. செயராணி, ராசதுரை, பெண்கள் படைப்பில் சமூகம், ப.18.
17. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப.93.
18. தமயந்தி, வாக்கு மூலம். ப.28.
19. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப.43.
20. மேலது., ப.76.
22. தமயந்தி, வாக்கு மூலம், ப.93.
23. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், ப.70.
24. மேலது., ப.73.
25. தமயந்தி, அக்கக்கா குருவிகள். ப14.
26. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப.26.
27. தமயந்தி, தமயந்தி சிறுகதைகள், ப.33.
28. தமயந்தி, வாக்கு மூலம். பக்.23-24.
29. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப.23.
30. மேலது., ப.121.

31. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப.37.
32. தமயந்தி, வாக்கு மூலம், ப.87.
33. சாம்பல் கிண்ணம், ப.43.
34. மேலது., ப.19.
35. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப.35.
36. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப.44.
37. தமயந்தி, வாக்கு மூலம், ப.68.
38. சேதுமணி மணியம், மு.கூ.நூ., ப.60.
39. கி. பக்தவத்சல பாரதி, மு.கூ.நூ., ப.368.
40. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-1. ப.67.
41. International Encyclopedia of the Social Science, Vol. x. p.2.
42. முனுசாமி முதலியார், பிரபஞ்ச உற்பத்தி.ப 133.
43. இந்து திருமணம். ப.5.
44. மதுரை காமராசர் பல்கலைக்கழக, டிசம்பர், 1992. பரல்கள்.6- ப.36.
45. M.S. Gore, Urbanization and Family Change, pp. 207 - 209.
46. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், பக்.104, 105.
47. தமயந்தி, அக்கக்கா குருவிகள். பக்.103,104.
48. பாரதியார் கவிதைக;ளி, ப. 265.
49. தமயந்தி, வாக்கு மூலம், ப.20.
50. தமயந்தி, சாம்பல் கிண்ணம், பக்.14-15.
51. தமயந்தி, அக்கக்கா குருவிகள். ப.44.
52. தமயந்தி, தமயந்தி சிறுகதைகள், பக்.41-42.
53. தமயந்தி, வாக்கு மூலம், ப.88.
54. தமயந்தி, அக்கக்கா குருவிகள். ப.75.
55. டாக்டர் ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.93.
56. சோமலே, தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், ப.54.
57. மேலது., ப.55.
58. டாக்டர் ஆறு இராமநாதன். மு.கூ.நூ., ப.93.
59. மேலது., பக்.93-94.
60. மேலது., பக்.109-110.
61. தமயந்தி, அக்கக்கா குருவிகள். ப.37.
62. மேலது., ப43.
63. மேலது., ப.71.
64. தமயந்தி, வாக்கு மூலம், பக்.39-40.
65. தமயந்தி, சாம்பல் கிண்ணம், பக். 146 - 147.
66. தமயந்தி, வாக்கு மூலம், ப.

67. தமயந்தி, சாம்பல் கிண்ணம், பக்.112-113.
68. தமயந்தி, வாக்கு மூலம்.ப.97.
69. மேலது., ப.67.
70. தமயந்தி, வாக்கு மூலம், ப.55.
71. மேலது., ப.67.

# இயல் – 3

# பொருளாதாரமும் சமூகமொழியும்

## 3.0 முன்னுரை

சமுதாயமானது பொருளாதாரம், அரசியல், சமயம், கல்வி, கலை, இலக்கியம் போன்ற பல்வேறு தளங்களைக் கொண்டதாகும். இவற்றில் பொருளாதாரமே அடித்தளக் கட்டுமானமாகும். ஏனையவை பொருளாதாரக் கட்டுமானத்தின் மேல் அமைந்தவையாகும். எனவே பொருளாதாரமாகிய அடிக்கட்டுமானமே ஏனையவற்றைப் பாதிக்கிறது; பொருளாதாரமே மக்களின் வாழ்க்கை நிலையை வரையறை செய்கிறது. அரசியல், பண்பாடு, சமயம் ஆகிய மேற்கட்டுமானங்களும் ஓரளவிற்கு மனித வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

இப்பொருளாதார நிலையால் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளினால் சமூகம் பிளவுபடுகிறது. இருப்பவன், இல்லாதவனை ஒடுக்குகின்ற நிலை காணப்படுகிறது. திருமணம் தடைபடுதல், வறுமை, வரதட்சணைக் கொடுமை, திருட்டு, ஏமாற்றுதல், கையூட்டு, பரத்தமை, கடன் பிரச்சனை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியன சமுதாயத்தில் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சார்ந்த பொருளாதாரப் பிரச்சனைகள் என்பதை, தமயந்தி தன் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். இப்பொருளாதாரத்தின் வரையறைகளை விளக்குவதோடு, இப்பொருளாதாரம் மக்களின் வாழ்க்கையை எந்தளவிற்குப் பாதித்துள்ளது என்பதையும் தமயந்தி படைப்பின் வழி ஆய்வு செய்யும் நோக்கில் இவ்வியல் அமைகிறது.

**3.1 பொருளாதாரமும் கருத்தாக்கமும்**

மனித வாழ்க்கைக்குப் பொருளாதாரம் மிகவும் இன்றியமையாதது ஆகும். வாழ்வின் இயல்பான நியாயமான பொருட்கள் முதல் ஆடம்பர நுகர்வுகள் வரை அனைத்திற்கும் பொருளாதாரமே வாயிலாக உள்ளது.

"பொருளியல் என்ற தமிழ்ச் சொல்லானது 'ஆய்கோனாமிய' (Oikonomia) என்ற சொல்லில் இருந்து தோன்றியது. இச்சொல்லின் பொருளையே நாம் தமிழில் பொருளியல் என்று கூறுகிறோம்"[1]

மில் எனும் அறிஞர்,

"செல்வத்தை உற்பத்தி செய்வதும் அதனைப் பகிர்வதும் பற்றிய செயல்முறை இயலே பொருளியல்"[2]

எனக் குறிப்பிடுகிறார்.

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' (குறள் 247) என்னும் திருவள்ளுவரின் கூற்று மனித சமுதாயத்தின் வாழ்விற்குப் பொருளாதாரமே அடிப்படை என்பதைத் தெளிவுறுத்துகிறது.

**3.2 பொருளாதாரவியல் – வரையறை**

"செல்வம் பெருகும் வழி வகைகளைப் பற்றி ஆய்வு செய்யும் அறிவியல், பொருளாதாரமாகும்"[3]

"செல்வம் பற்றிப் பேசும் அறிவுத் தொகுப்பே பொருளாதாரமாகும்"[4]

"பணத்தைக் கொண்டு அளவிட முடிகின்ற பொருள்சார் நலம் பற்றியது பொருளாதாரமாகும்"[5]

"பசி என்பது மனிதனது அடிப்படையான அடக்க முடியாத உணர்ச்சியாகும். பசியாற்றிக் கொள்ளும் பெரு முயற்சியில் இடைவிடாது

உழன்று கொண்டிருக்கும் மனித முயற்சியை விளக்கிக் கூறுவதே பொருளாதாரமாகும்"[6]

மேற்கண்ட அறிஞர்களின் கூற்றுக்களிலிருந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடுகின்ற கருவியாகப் பொருளாதாரத்தை நோக்கலாம் என்பது புலப்படுகிறது. மனிதன் உயிர் வாழ்வதற்குச் சாதி, மதம், இனம் போன்றவற்றைவிட அடிப்படைத் தேவையாக உணவு இருக்கிறது. இவ்வுணவிற்கும் அடிப்படை பொருளாதாரமே என்பதும் தெரிய வருகிறது.

இப்பொருளாதாரத்தினை அறிவியல்கண் கொண்டு நோக்குமிடத்து பொருளாதாரவியலுக்கான வரையறை கிடைக்கிறது. மேலும் பொருளாதாரவியல் பற்றிப் பல நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே அறிஞர்கள் சிந்தித்துப் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

"நாட்டிலுள்ள பல்வேறு துறைகளிலும் பண்ட உற்பத்தி பெருகுதலையும் அதனையொட்டி மக்களின் வருமானம் அதிகரிப்பதையும் மக்களுக்குத் தேவையான அளவு நுகர்வுப் பண்ட அளிப்பைப் பெறுதலையும் செல்வ வளம் பெருகுதல் என்றும், பணத்தைச் சேர்த்துச் செல்வத்தைத் திரட்டும் வழி வகையைச் சுட்டிக் காட்டும் அறிவியலே பொருளாதாரவியல் "[7]

எனவே பொருளாதாரம் என்பது செல்வத்தை, பொருளை அடிப்படையாகக் கொண்டது என்பதும், மக்கள் வாழ்வுத் தேடலின் அடிப்படைப் பொருளாதாரத்தை மையம் கொண்டே அமைகிறது என்பதை,

"மனித சமுதாயத்தின் நீண்ட நெடிய வரலாற்றை நோக்கும் போது அது பொருளியல் நிலையின் அடிப்படையில் காலந்தோறும் பல்வேறு வடிவமைப்புகளைப் பெற்று வந்திருப்பதை அறிய முடிகிறது. மனித

**சமுதாயத்தின் வாழ்வுக்குப் பொருட் செல்வம் அடிப்படைப் பொருட் செல்வத்தின் உற்பத்திக்கு மனித குலத்தின் உழைப்பு இன்றியமையாததாகிறது”**[8]

ஆகவே சமுதாயத்தில் பொருளாதாரத்தைக் கொண்டு மக்கள் மதிக்கப்படுகின்றனர் என்பதை அறிய முடிகிறது.

### 3.3 பொருளாதார அடிப்படையும் கருத்தாக்கமும்

பொருள் உடையவர்கள் சமுதாயத்தில் உயர்ந்த தகுதி உடையவர்களாக மதிக்கப்படுகின்றனர். இவர்களே அரசியலிலும் ஆற்றலிலும் செல்வாக்குக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். இன்றுள்ள பொருளாதார, சமுதாய, அரசியல் அமைப்புகளுக்கும், அதன் செயல்பாடுகளுக்கும் இவர்கள் வழங்கும் கருத்தும், விளக்கமுமே பெருவாரியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

குடும்பம் இயங்க அடிப்படைத் தேவை பணமாகும். பணக்குறைவு உண்டாகும்போது குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. வரவுக்கு ஏற்ற செலவு இடம்பெறாத குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. வருவாய் குறையும் போது சமுதாயத் தகுதி நிலையும் (Social Status) குறைகின்றது. எனவே, மக்களின் அடிப்படைத் தேவைகளை ஒரு சமுதாயம் உற்பத்தி செய்து, அச்சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களின் தேவையை நிறைவு செய்ய வேண்டும். இப்பொருட்கள் தாம் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளன. இதனையே பொருளாதார அமைப்பு எனலாம். இவ்வமைப்பில் உற்பத்தி, உழைப்பு, உற்பத்தி உறவு ஆகிய செயல்கள் இடம்பெறுகின்றன. எனவே இவற்றை அறிந்து கொள்ள ஒரு சமுதாயத்தின் பொருளாதார அமைப்பை ஆய்வது இன்றியமையாததாகும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் சிறுசிறு கூட்டங்களாக வாழ்ந்து வந்தனர். இயற்கையின் சீற்றம், கொடிய விலங்குகள், கொடிய நோய்கள் போன்றவற்றை எதிர்த்துப் போராட வேண்டிய கட்டாய நிலையில் இம்மக்கள் வாழ்ந்து வந்தனர். இதனால் அவர்கள் கூட்டாகச் சென்று, கூட்டாக உணவைப் பெற்று, கூட்டாகப் பகிர்ந்து உண்டனர். இம்முறையைக் 'கூட்டு உற்பத்தி முறை' (Yajna Mode of Production) என்பர். இவ்வுற்பத்தி முறையைக் கொண்ட சமுதாயத்தில் மக்களிடையே ஏழை, செல்வந்தன் என்ற வகுப்பு வேறுபாடுகள் காணப்பெறவில்லை. அனைவரும் சமமாகவே மதிக்கப் பெற்றனர். அச்சமுதாயத்தில் தனியுரிமை (Individual Owership), சுரண்டல் (Exploitation) போன்றவை காணப் பெறவில்லை.

மக்களின் அறிவுத்திறமை வளர வளர, உற்பத்திக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. உணவிற்காக நாடோடிகளாக அலைந்து திரிந்த மக்கள் ஓரிடத்தில் நிலையாகத் தங்கி வாழ முற்பட்டனர். தாங்கள் வேட்டையாடிய விலங்குகளின் கன்றுகளை வளர்க்கத் தொடங்கினர். எனவே, ஆடு, மாடுகளுக்காக முதலில் பயிரிடத் தொடங்கிய மக்கள், உணவு உற்பத்தியும் செய்தனர். பயிர் செய்வதற்கும் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கும், நீர் வளமுள்ள இடங்களை நாடிச் சென்று நிலையாக வாழத் தொடங்கினர். இந்நிலையிலும் ஆடு, மாடுகள், நிலங்கள் அனைத்தும் பொதுச் சொத்தாகவே கருதப்பட்டன.

> **"உற்பத்திச் சக்திகளின் முன்னோக்கிய வளர்ச்சி சொத்துரிமைக்கு (Ownership of Property) வழி வகுத்துவிட்டது."**[9]

எனக் கருதப்படுகிறது.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியினால் வேளாண்மை உற்பத்தியிலிருந்து கால்நடைகளை வளர்க்கும் பிரிவினரும், கைத்தொழில்களை மேற்கொண்ட பிரிவினரும் பிரிந்து சென்றதனால் உழைப்புப் பகுப்புகள் (Division of Labour) தோன்றின. வேளாண்மை உற்பத்தி, கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் மிகு உற்பத்தி பெருகியது. இம்மிகு உற்பத்தியின் காரணமாகத் தனியார் உரிமை, தனியார் உழைப்பு என்பன மதிக்கப் பெற்றன. ஏற்றத் தாழ்வுகள் உருவாயின. பழமையான சமுதாய அமைப்பு (Primitive Society) சிதைவுற்று நாகரிகச் சமுதாய அமைப்பு தோற்றம் பெற்றது.

நாகரிகச் சமுதாய அமைப்பில் ஏழை செல்வந்தன், ஆளுவோன் - ஆளப்படுவோன், ஆண்டான் - அடிமை, சுரண்டுவோன் - சுரண்டப்படுவோன் என்னும் பிரிவுகள் உருவாயின. சமுதாய வளர்ச்சியின் பல்வேறு காலக்கட்டங்களில் அடிமையுடைமை அமைப்பு, நிலவுரிமை அமைப்பு முதலாளித்துவ அமைப்பு, போன்ற பல்வேறு சமுதாய அமைப்புக்கள் உருவாகவே பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் வளர்ச்சியுற்றன. பழமையான சமுதாய அமைப்பு சிதைவுற்று, நாகரிகச் சமுதாய அமைப்பு தோன்றிய பிறகே சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் உருவாயின.

### 3.4 இன்றைய இந்தியப் பொருளாதார நிலையும் கருத்தாக்கமும்

இந்தியநாடு விடுதலை பெற்றவுடன் முதலாளித்துவ பொருளாதாரப் பாதையை ஏற்றுக் கொண்டது. எனவே, இது தனிமனிதக் கொள்கைக்கும், சுரண்டலுக்குமே வழி வகுத்தது. இந்தியக் குடிமக்கள் அனைவரும் சம உரிமை உடையவர்களென இந்திய அரசியல் சட்டம் கூறுகின்றது. ஆனால்

நடைமுறை வாழ்க்கையில் சிலர் மாட மாளிகைகளில் பெரும் செல்வந்தர்களாக வாழ்வதையும் பலர் வானமே கூரையாகப் பாதை ஓரங்களில் வாழ்ந்து வருவதையும் காண முடிகிறது. ரூபாய் நான்காயிரம் கோடிக்கு மேல் சொத்து வைத்திருப்பவர்களும், கிழிந்த ஆடைகளையும், நெளிந்த பாத்திரங்களையும் உடைமையாகக் கொண்டவர்களும் இந்தியக் குடிமக்களாக வாழ்ந்து வரும் அவல நிலையைக் காண முடிகிறது.

> **“இந்தியாவிலுள்ள 326.8 மில்லியன் ஹெக்டேர் நிலத்தில் 53 சதவீதத்தை, 10 சதவீதச் செல்வந்தர்கள் வைத்திருக்கின்றனர். மீதமுள்ள நிலத்தில் 38 சதவீதத்தை, 30 சதவீதப் பண்ணையார்கள் வைத்திருக்கின்றனர். எஞ்சியுள்ள 10 சதவீத நிலமே 60 சதவீத ஏழை மக்களுக்கு இருக்கிறது”**[10]

எனப் பொருளாதார அறிஞர்கள் கூறுகின்றனர். இங்கு ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

> **“ஏழைகளின் எண்ணிக்கை இங்கு ஏறிக் கொண்டிருக்கிறது என்றால் ஏற்கனவே இந்நாட்டின் செல்வத்தில் 80 விழுக்காடு வைத்திருக்கும் 20 விழுக்காடு மக்கள் கைகளில் குவியும் செல்வம் ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டுள்ளது. நமது நாட்டில் செயல்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்களும், குறிப்பாக 1970–க்குப் பிற்பட்டவையும் தொழில்மயமாக்கல், பசுமைப் புரட்சி போன்ற வளர்ச்சித் திட்டங்களும், ஏழைகளும், கிராமவாசிகளைவிடவும் பணக்காரர், நகர்ப்புறத்தாரின் முன்னேற்றத்திற்கே அதிகமாக உதவியுள்ளன”**[11]

என தே.அல்போன்சு என்பார் குறிப்பிடுகிறார்.

### 3.5 சமூக வகுப்புக்களும் கருத்தாக்கமும்

“சமூக வகுப்புக்கள் (Social Class) என்பன சமுதாயத்தில் சிறுபான்மை மக்கள் உயர்நிலை வகித்துக் கொண்டு முழு நன்மைகளைப் பெறுவதையும், பெரும்பான்மையான மக்கள் தாழ்நிலை வகித்துக் கொண்டு, மிகக் குறைந்த அளவு நன்மை பெறுவதையும், இவ்விரு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் வாழ்பவர்கள் இடைப்பட்ட அளவு நன்மைகள் பெறுவதையும் குறிப்பனவாய் அமைகின்றன”[12]

என டேவிட் குறிப்பிடுகிறார்.

“சொத்துரிமை, பொருட்கள், வருவாய் போன்றனவற்றால் கிடைக்கப் பெறும் வாழ்க்கை, வசதி வாய்ப்புக்களைப் பகிர்ந்து கொள்ளும் மக்கட் கூட்டமே சமூக வகுப்பு.”[13]

எனப்படும்.

சமுதாயக் கொடைகளின் (Social Rewards) சமனற்ற பகிர்வின் வெளிப்பாடுகளாகச் சமூக வகுப்புக்கள் அமைகின்றன. மார்க்சு என்னும் அறிஞர்,

“வறுமை மற்றும் கருவிகள், இயந்திரங்கள், நிலங்கள் போன்ற உற்பத்திக் காரணிகளை உரிமைகளாகவும், தம் கட்டுப்பாட்டின் கீழும் கொண்டுள்ள பிரிவினர், அவற்றைப் பெற்றிராத வகுப்பினர்”[14]

எனச் சமூக வகுப்புக்களை இரு நிலைகளில் பாகுபாடு செய்து காட்டுகின்றார்.

மேக்ஸ்வெபர் என்ற சமூகவியலறிஞர்,

> ‘‘வகுப்புச் சமுதாயம் (Class Society) பொருளாதார வரிசைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும், வருவாயின் அளவிற்கேற்பவும், செல்வத்தின் அளவிற்கேற்பவும் மக்கள் தரப்படுத்தப் பெறுகின்றனர் என்றும், இந்தப் பிரிவுகளின் கீழ் வாழும் மக்கட் பிரிவினர் சமூக வகுப்புக்கள் எனச் சுட்டப்படுகின்றனர்’’[15]

எனவும் குறிப்பிடுகின்றார்.

> ‘‘சமுதாயத்திலுள்ள பொருளாதாரச் சலுகைகளை (Economical Previleges) அதிகமாகவோ, குறைவாகவோ பகிர்ந்து கொள்ளும் மக்களின் வரிசைகளைக் குறிப்பனவாகவும் சமூக வகுப்புக்களைக் கருதலாம்’’[16]

இவ்விளக்கங்களை நோக்கும் போது சமூக வகுப்புக்கள் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்ட மக்கள் பிரிவினை உடையன எனக் கூறலாம். வகுப்புக்களின் தோற்றத்திற்குப் பொருளாதாரக் காரணிகளைச் சமூகவியலாளர்கள் வலியுறுத்திக் காட்டுகின்றனர். எனவே, மக்களின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் பொருளாதாரக் காரணிகளும், சுற்றுப்புறச் சூழல்களும் பெரும் பங்காற்றுகின்றன எனலாம்.

### 3.6 பொருளாதாரச் சிக்கல்களும் கருத்தாக்கமும்

வியாபாரம் செய்யும் ஒருவர் மென்மேலும் இலாபத்தைப் பெற வேண்டும் என்று விரும்புகிறார். பண்டங்களை நுகரும் ஒருவர் அதிகப்படியான பண்டங்களைப் பெற்று அதிக நிறைவு பெற வேண்டும் என்ற ஆவல் உடையவராகத்தான் காணப்படுகிறார். எனவே அதிகமான

பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்தி எவ்வாறு அதிக அளவு நிறைவைப் பெறுவது என்பது பற்றி மக்கள் சிந்தித்துச் செயலாற்றுதலால்தான் பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றுகின்றன. எனவே பொருளாதாரத்தைப் பெருக்கும் போது சிக்கல்களும் அதிகரிக்கின்றன.

மக்களின் விருப்பங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான காலம், பணம் மற்றும் பிற சாதனங்கள் விருப்பப்படக்கூடிய அளவுக்கு ஏராளமாகக் கிடைத்துவிட்டால் சிக்கல்கள் தோன்றா; அல்லது கிடைப்பவை குறிப்பிட்ட ஒரேயொரு வழியில் மட்டும் பயன்படத் தக்கவையாக இருந்தாலும் சிக்கல்கள் தோன்றா. நடைமுறையில் பணம், காலம் மற்றும் பிற சாதனங்கள் பல வழிகளில் பயன்படுத்துவதற்கு ஏற்றவைகளாகவும் கிடைப்பதற்கு அரியனவாகவும் இருக்கின்றன; இதனால்தான் பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவது பொருளாதார அமைப்பாகும். எனவே இப்பொருளாதார அமைப்பினைப் புரிய வேண்டியது அவசியமானதொன்றாகிறது.

> **“மனிதனது பொருளாதார நடவடிக்கைகளை வெளிப்படுத்துகின்ற தொடர்புடைய சமூக நிறுவனங்களின் தொகுதியே பொருளாதார அமைப்பாகும்** (Economic System)”[17]

இவ்வமைப்பு மனிதனுடைய பொருளாதார உறவுகளை ஆராய்கிறது. தன்னுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடிய பொருள்சார் வழி வகைகளைத் தேடும் நடவடிக்கைகளில் மனிதன் ஈடுபடும் பொழுது பிறருடன் உறவு கொள்கிறான். இப்பொருளாதார உறவு தனித்தவை அல்ல. சமூக உறவுகளோடு தொடர்புடையவையே. எனவே பொருளாதார அமைப்பும் சமூகத்தின் ஓர்

அங்கமேயாகும். ஆகவே, எந்தப் பொருளாதாரக் கூறும், நிகழ்வும் சமூகக் காரணிகள் இல்லாமல் ஏற்பட முடியாது. சமூகத்தில் பொருளாதாரச் செயல்முறைகள் வளர்ச்சியடையும் போது சமூக வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளையும் அவை பாதிக்கின்றன என்பது புரிய வருகிறது.

சமூக நடவடிக்கைகளையெல்லாம் கடைசியில் பொருளாதாரத் தொழில் துறை நடவடிக்கைகளைச் சார்ந்துதான் செயல்படுகின்றன. சமூக நிகழ்வுகளைத் தீர்மானிப்பதில் பொருளாதாரத்தின் பங்கு அதிகமாக இருப்பதை இங்கே காணமுடிகிறது.

இவ்வாறு பொருளாதார அமைப்பிலிருந்து பிரிக்க முடியாத அளவிற்கு நெருங்கிய தொடர்புடைய சமூக வாழ்வியல்தான் எல்லா வகை இலக்கியப் படைப்புக்களின் உள்ளடக்கமாகவும் அமைந்துவிடுகிறது. குறிப்பாக வாழ்க்கையை அலசிப் பார்த்து வெளிப்படுத்துகின்ற இருபதாம் நூற்றாண்டுக் கதை இலக்கியங்களில் பொருளாதாரச் சார்புடன் நிகழும் வாழ்வியல் கூறுகள் படைப்புக்களின் உயிர்நாடியாக அமைந்துவிடுகின்றன. ஆகவே புதினப் படைப்புக்களைப் பொருளாதாரச் சிக்கல் சார்ந்து ஆராய்வது என்பது தேவையானதும் நுட்பமானதுமான ஒரு திறனாய்வாகும்.

### 3.7 தமயந்தி படைப்புக்களில் பொருளதாரச் சிக்கல்களும் கருத்தாக்கமும்

சமூகப் பொருளாதாரப் படிநிலை அமைப்பின் அடிப்படையிலேயே திருமணச் சிக்கல்களும் எழுகின்றன.

குடும்பங்களில் ஏற்பட்ட வறுமை, பண ஆசை, கடன் போன்ற பொருளாதாரச் சிக்கல்களால் வயது முதிர்ந்த ஆணை (கிழவன்) இளம் பெண்ணுக்குக் குடும்பத்தினர் திருமணம் செய்து வைக்கின்றனர். இந்தப்

பொருந்தா மணத்தால் இளம்பெண்ணின் குடும்ப வாழ்வில் பல்வேறு சிக்கல்கள் தோன்றுகின்றன.

பொருளாதார அந்தஸ்து வேறுபாடு, வரதட்சணை, குடும்பச்சுமை ஆகிய பொருளாதாரக் காரணங்களால் காதல் திருமணங்கள் தடைபடுகின்றன. சில காதலர்கள் இச்சிக்கல்களை மீறிக் குடும்பத்தினர்களை மீறி வீட்டை விட்டு ஓடிப்போய் வெளியில் திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றனர். பொருளாதார ரீதியில் குடும்ப உறுப்பினர்களிடையே நடைபெறும் உழைப்புச் சுரண்டலாலும், ஆடம்பரமான வாழ்வின் ஆசை நிறைவேறாமையினாலும் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. இவற்றை தமயந்தி தம் படைப்புக்களில் மிக நேர்த்தியாகக் கையாண்டு கருவாக்கியுள்ளார்.

பொருளாதார ரீதியில் நடைபெறும் திருமணச் சிக்கல்களை நுட்பமாகக் கணித்தால் இரண்டு முக்கியமான நிலைகளில் சிக்கல்கள் வெளிப்படுவதை அறிய முடியும்.

1. பொருந்தா மணம்.

2. திருமணம் தடைபடுதல்.

### 3.7.1 பொருந்தாமணம்

'பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்' என்கிறது நம்பியகப் பொருள்.

ஆண், பெண் இருவரின் மனமும் விரும்பாத நிலையில் நடைபெறும் இத்திருமணத்தைப் பொருந்தாமணம் என்பர். இத்திருமணம் பெரும்பாலும் குடும்பத்தில் ஏற்படும் வறுமை, பண ஆசை, வரதட்சணை போன்ற பொருளாதாரக் காரணிகளால் நடைபெறுகிறது. பொருளாதார அமைப்பினைக்

கொண்டே பல திருமண உறவுகள் அமைகின்றன என்பதை, தமயந்தி தம் படைப்பு வழி, பதிவுச் செய்துள்ளார். தமயந்தியின் பதிவுகளைக் கீழ்க்காணுமாறு வகை செய்ய முடியும்.

1. வயது முதிர்ந்த ஆணோ, பெண்ணோ வயது குறைந்த ஆணையோ பெண்ணையோ பணத்திற்காகத் திருமணம் செய்து கொள்வது.

2. பணத்திற்காக மனம் விரும்பாத ஆணையோ, பெண்ணையோ, திருமணம் செய்து கொள்வது.

### 3.7.2 வயது முதிர்ந்த நிலையில் நடைபெறும் பொருந்தாமணம்

வயதானக் காலத்தில் தன்னைக் கவனிக்க யாருமில்லை என்ற காரணத்திற்காகத் திருமணம் செய்யும் ஆண்களின் நிலையை 'உள்போதைகள்' என்னும் கதையில் பதிவு செய்துள்ளார் தமயந்தி. சங்கரன் மாமாவிற்கு வயது 50. திருமணமாகாதவர். தன் வயது முதிர்ந்த காலத்தில் தன்னைக் கவனிக்க யாருமில்லை என்பதற்காக இருபத்தாறு வயதான பெண்ணைத் திருமணம் செய்கிறார். இங்கு பெருந்திணை என்பது பணத்தினை மையமிட்டே அமைகிறது என்பதைப் பின்வரும் உரையாடல் வெளிப்படுத்துகிறது.

> "பொண்ணு பார்க்கத்தான் தஞ்சாவூர் போனேன்ப்பா. இத்தனை வயசுக்கப்புறம் கல்யாணம்னா சங்கோஜமாத்தானிருக்கு. வயசுக் காலத்தில் தனியா கிடந்து சீரழியப் போறேனு அக்கா ரொம்ப வற்புறுத்தினா. அவளுக்குத் தெரிஞ்ச பொண்ணுதான் ஏழைக் குடும்பம். செலவு ஒண்ணும் செய்ய வேணாம். எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேனுட்டேன். அடுத்த மாசம் கல்யாணம், ஏற்பாடு பண்ண ஒத்தாசையாயிருக்கும்னு அக்காவை அழைச்சிக்கிட்டு வந்துட்டேன்.

**மிஞ்சிப் போனால் இருபத்தாறு வயசிருக்கும். தஞ்சாவூர் ஜாடை முகத்தில் மின்னின . . . இந்த வயசு வரை பிரம்மச்சாரியாய் இருந்துவிட்டு மாமாவுக்கு ஏன் ஐம்பது வயசில் இப்படி ஆசை வந்தது**"[18]

என்று கூறுமளவிற்கு இக்கதையில் வரும் சங்கர் மாமா தன் சுயநலத்திற்காக வேண்டி, ஐம்பது வயதில் தன்னைக் கவனிக்க யாரும் இல்லை என்பதற்காக ராஜலக்ஷ்மியைத் திருமணம் செய்கிறார். பணம் இருந்தால் எத்தனை வயதிலும் திருமணம் செய்யலாம் என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

### 3.7.1.2 மனம் விரும்பா திருமணம்

வீட்டில் நிலவும் வறுமைச் சூழ்நிலையின் காரணமாக மனம் விரும்பாத நிலையில் பொருந்தா மணத்திற்குச் சம்மதிக்கும் பெண்ணின் நிலையைக் 'கதவு' என்ற கதையில் பதிவு செய்துள்ளார். 'கதவு' என்ற கதையில் முப்பது வயதான சாருலதாவை வீட்டில் வறுமைச் சூழ்நிலையின் காரணமாக ஐம்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருவருக்கு இரண்டாம் தாரமாகத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். இதனால் அவளது வீட்டிலுள்ள அனைவரும் சந்தோஷமாக வாழ்கின்றனர். ஆனால் அவளோ மனம் விரும்பாத நிலையில் அவரைத் திருமணம் செய்து மனம் மகிழ்ச்சியின்றி நிம்மதியில்லாமல் வாழ்கிறாள். இவர்கள் இருவரையும் சேர்த்துப் பார்த்தால் அப்பா, மகள் போன்று இருக்கிறது என்று பலரும் கூறுகின்றனர். குழந்தை வேண்டாம் என்று அவர் கூறியதால் இவளது வாழ்க்கை வெறும் கனவு வாழ்க்கையாகக் காணப்படுகிறது என்பதைப் பின்வரும் உரையாடல் மூலம் அறியலாம்.

"கல்யாணமே ஆகலை போலிருக்கு. அவளும் அவ அப்பாவும் மட்டும்தான் இருக்காப்ல இருக்கு . . . பாவம்ங்க அவ அப்பானு நேத்து உங்கட்ட சொன்னேனில்ல. அது அவ புருஷனாம். அம்பத்தஞ்சு ஆகுதாம். ரொம்ப கூச்சப்பட்டுட்டே சொன்னா. கண்ணுல நீர் வந்தாப்ல கூட இருந்துச்சு. . . . புத்தகம்தான் புருஷன் மாதிரினுட்டு சொல்லி சிரிச்சா! . . . முதல் தாரத்துக்கு ஒரு பையன் இருக்கானாம். யூ.எஸ். சாஃப்ட்வேர் இன்ஷினியர். இவர் அவனைக் கண்டுக்க மாட்டாராம். அவன் இவரைக் கண்டுக்க மாட்டானாம். ஆனாலும் திரும்ப ஒரு குழந்தை வேணாம்னுட்டாராம் . . . சொல்றப்பவே அவ அழுதுட்டா . . . தாம்பத்தியங்கிறது வெறும் கனவுதான். அவ அப்பா அம்மாவுக்கு அவர் மாசாமாசம் செக் அனுப்பிருவாராம். அவங்க ரொம்ப சந்தோஷமா இருக்காங்க. இவ மூணு தங்கச்சிங்க பேர்லயும் ஒரு லட்சம் எப்.டி.ல போட்டிருக்கார். ஆளுக்கு அம்பது பவுன் நகையாம்."[19]

சாருலதா தன் வாழ்க்கையைத் தியாகம் செய்து தன் குடும்பத்திலுள்ள அனைவரையும் சந்தோஷப்படுத்துகிறாள். ஆண்கள் தன் சுயநலத்திற்காகவும், தன் சுயதேவைக்காகவும் இத்தகைய பொருந்தா மணத்தைச் செய்கின்றனர். ஆனால் அப்பெண்ணின் மன உணர்வையும், தவிப்பையும் புரிந்து கொள்வது ஆணாதிக்க மனோ பாவத்தில் இல்லை.

### 3.7.2 திருமணத் தடை

திருமணம் தடைபடுவதற்குப் பல வகையான காரணங்கள் உள்ளன. ஆனால் தமயந்தியோ பொருளாதாரப் பிரச்சனையின் காரணமாகத்தான் திருமணங்கள் தடைபடுகின்றன என்ற கருத்தைச் சமூகமொழியாக முன்வைக்கிறார். வரதட்சணை கொடுக்க முடியாத சூழலில் திருமணம்

தடைபடுகிறது. வரதட்சணைக் கொடுமையால் பெண் அவதியுறும் நிலையைப் பார்த்த முதிற்கன்னியின் நிலை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றன என்பதையும் வீட்டில் நிலவும் வறுமைச் சூழலும் திருமணம் தடைபடுவதற்கான காரணமாக அமைகிறது என்பதைப் பல கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

**3.7.2.1 வரதட்சணை**

> "திருமணத்தின் போது நேரடியாகவோ மறைமுகமாகவோ சொத்துக்களை அல்லது மதிப்புடைய பொருள்களைக் கொடுப்பது அல்லது கொடுக்க இசைவது வரதட்சணை எனக் கருதப்படுகிறது"[20]

என்கிறார் இராசேந்திரன். எனவே வரதட்சணை என்பது சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பாவம் என்று கொள்ளலாம்.

> "ஓர் ஆண்மகனை மையமிட்டதுதான் அவள் வாழ்க்கை என்பது சமூகத்தின் தீர்மானம். அதனால்தான் எவ்வளவு கொடுமைகளுக்கும் சிறுமைகளுக்கும் உள்ளானாலும், அவள் ஒரு வட்டத்தைவிட்டு வெளியே வராமல் சுழல்கிறாள். வரதட்சணைக்கான ஆணி வேரே இங்கேதான் இருக்கிறது. ரொக்கம், நகை, பாத்திரம்,பண்டம் என்று அள்ளிக் கொடுத்து என் பெண்ணை மணந்து கொள் என்று மண்டியிடுகிறார்களே ஏன்? ஒரு பெண்ணுக்கு வாழ்வின் அர்த்தமெல்லாம் அவள் கணவனுடன் வாழ்கிறாள் என்பதுதான்"[21]

என வரதட்சணை வாங்குவதற்கான காரணத்தைக் குறிப்பிடுகிறார் சேதுமணி மணியன். இதனைக் கருத்தில் வைத்து, தமயந்தியும் தன்னுடைய

படைப்பில் வரதட்சணை குறித்துப் பதிவு செய்துள்ளார் என்பதை ‘அப்பாவுக்கு எழுத நினைத்தது’ என்ற கதையின் வழி அறிய முடிகிறது.

இக்கதையில் சிவகாமியின் கணவனின் தம்பிக்கு, சிவகாமியின் தங்கையைப் பெண் கேட்கிறார்கள். ‘செயின் இத்ன பவுன்ல போடணும்’ என்று கூறிய காரணத்தால் அத்திருமணம் நடைபெறாமல் போய்விட்டது.

> “ஏற்கனவே இவர் தம்பிக்கு உன்ன கொடுக்கணும்ங்கிற எண்ணத்துல நீ மண்ண அள்ளிப் போட்டுட்ட . . . அவளுக்கு சிவகாமியின் கொழுந்தனை எனக்கு முடித்து வைக்க நினைத்ததிலும் நிச்சயம் பண்ணினதிலும் தப்பில்லாமல் இருக்கலாம் . . .
>
> செயின் இத்ன பவுன்ல போடணும், மோதிரம் இவ்ளோனு பேரம் பேசிய வித்தை . . . இப்போதுள்ள தைரியம் எனக்கு இருந்திருந்தால் அப்போதே தடுத்திருக்க முடியும்”[22]

என்றாள்.

வரதட்சணை கொடுக்கப் பணம் இல்லாத காரணத்தால் திருமணம் தடைபடுகிறது. இன்றைய சமுதாயத்தில் பெற்றோர் ஏற்பாடு செய்கின்ற திருமணத்தில் வரதட்சணை முதன்மைப் பங்கு வகிக்கிறது சு.வெங்கட்ராமன்.

> “ஆண், பெண் இணைந்து வாழும் புனித வாழ்விற்கு உரிய திருமணம் வரதட்சணையால் தீர்மானிக்கப்படுகிறது”[23]

எனக் கூறுவது இங்குப் பொருத்தமாகிறது.

### 3.7.2.2 முதிர்கன்னி

திருமணம் என்பது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைகின்ற இணைவாகும். நாள், நேரம் பார்த்துப் பெரியோர்களால் ஒழுங்குச் செய்யப்படுவதாகும்.

**“பொய்யும் வழுவும் தோன்றியப் பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப”**[24]

என்கிறது தொல்காப்பியம்.

அரசியல் சட்டமானது ஆணுக்கு 25 வயதென்றும், பெண்ணுக்கு 21 வயதென்றும் திருமண வயதை நிர்ணயித்துள்ளது. பெண்ணானவள் திருமண வயதைக் கடந்தும் திருமணமாகவில்லையென்றால் முதிர்கன்னி என்ற பெயரினைப் பெறுகிறாள். அவள் முதிர்கன்னி நிலையை அடைவதற்குப் பெரிதும் காரணமாய் இருப்பது வரதட்சணை வரதட்சணை வாழ்வில் ஒரு அங்கமாகி விட்டது.

வரதட்சணையின் காரணமாகத் திருமணக் கோலமும், மகிழ்ச்சியும் கிடைக்கப் பெறாத பெண்கள் தங்கள் நிலையை எண்ணி வருந்திக் கொண்டிருக்கும் நிலையைத் தமயந்தி ‘அக்கக்கா குருவிகள்’ என்ற கதையின் மூலம் தன் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இக்கதையில் யசோதாவுக்கு வயது முப்பத்திமூன்று. ஆனால் திருமணம் இவளது வருமானத்தை வைத்துதான் குடும்பம் நடக்கிறது. அவளது முன்நெற்றி நரைக்குச் சாயம் அடிக்கலாம் என்றால்கூட பணம் ஒதுக்க முடியாத நிலை. இந்நிலையில் திருமணத்தை யோசித்துக்கூடப் பார்க்க முடியாது என்பதை,

"முப்பத்திரண்டு முடிந்து முப்பத்து மூன்று நடக்கிறது. எவ்வளவு தூரம் நடக்கும்? தடுக்கினால் முப்பத்து நாலு. அரைக்கிழடு இல்லையா? நிஜம்தான். இதை உணர்ந்ததால் தானோ என்னவோ, அப்போதெல்லாம் ஆபீசுக்குக் கிளம்பும் முன்னே கண்ணாடி பார்ப்பதில்லை. இன்று காலைகூட, பஸ்ஸில் காலேஜ் மாணவன் ஒருவன் ஆன்ட்டி இந்த புக்ஸை வெச்சுக்க முடியுமா? என்று கேட்டான் . . ."[25]

என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறார் தமயந்தி.

"என் சித்தி மகளின் கல்யாணத்துக்குச் சென்றிருந்தோம். ஆளாளுக்கு யசோதாவுக்கு ஒண்ணும் முடியலையா? என்று கேட்க அவமானம் என்னுள் பிடுங்கித் தின்றது. இப்போது அப்படி இருக்காது. அதையெல்லாம் தாண்டி வந்துவிட்டேன். நாம் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு உணர்வைத் தொலைத்து விடவோ தாண்டி வந்து விடவோ செய்கிறோம். இப்போது நான் காதல், நாணம், அவமானம் இவற்றைத் தாண்டிவிட்டேன்"[26]

என முதிர்கன்னியின் அவலநிலையைக் கூறுகிறார்.

'பேரிளமை' என்ற கதையில் பெண்ணிற்குத் திருமண வயதைக் கடந்த பின்னும் அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கவில்லை; அவள் சபேசு என்பவரை விரும்புகிறாள். ஆனால் குடும்பத்திலுள்ள பொருளாதாரப் பிரச்சனையைக் காட்டி குடும்பப் பொறுப்பை அவளிடம் கொடுக்கின்றனர்; இதனால் திருமணமாகாமல் முதிர்கன்னியாய் வாழ்கிறாள்.

"பெண்ணுக்கு வயசுப்படி பெயர் உண்டு. நான் பேரிளம் பெண், நரை தோன்றின பெண். குடும்ப பாரம் சுமக்கும் மூத்தப்பெண். எனக்குக்

**கல்யாணம் ஆகாது என்று என் அம்மாவும் அப்பாவும் தீர்மானித்து விட்டார்களாம்''[27]**

குடும்பத்தில் அவளுக்குப் பொறுப்பு அதிகமாக இருப்பதால் அவளைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. இவ்வாறு பெற்றோர்கள் இருந்தும் குடும்பச்சுமை அதிகமாக இருக்கிற காரணத்தால் மூத்தப் பெண்ணுக்குப் பொறுப்பைக் கொடுக்கின்றனர். இதற்குக் காரணம் பொருளாதாரப் பிரச்சனையே.

பொருளாதார ஏற்றத் தாழ்வின் காரணமாகப் பெண்கள் வேலைக்குச் சென்று பொருள் ஈட்டி வருகின்றனர். இவர்களின் வருவாயைக் கொண்டு பெற்றோர் குடும்பத்தை நடத்தி வருகின்றனர். எனவே பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டால் அப்பணத்தைத் தாம் இழக்க நேரிடும் என எண்ணி அவளை வீட்டிலேயே வைத்திருக்கும் முதிர்கன்னியின் அவல நிலை இன்றும் பல குடும்பங்களில் காணப்படுகிறது என்பதை தமயந்தி பதிவு செய்துள்ளார்.

### 3.7.2.3 வரதட்சணைப் பொருளியல்

பெண் திருமணம் முடியும் போது புகுந்த வீட்டிற்கு வரதட்சணை கொண்டு போகாவிடில் அவளுக்கு அங்கு மதிப்பு, மரியாதை கிடையாது. அவளது வீட்டில் அவளைப் பார்க்க யாரேனும் வந்தால் அவர்களைக் குறை கூறுவது வழக்கம். அவ்வாறே 'அனல்மில் மனங்கள்' என்ற கதையில் கிரேசின் அண்ணன் அவளைப் பார்க்க வந்திருந்தார். அன்று அவள் மீன்குழம்பு, மீன் பொரியல் எல்லாம் வைத்து அவரை உபசரிக்கிறாள். இதைப் பார்த்த அவள் மாமியார்,

**''ஏட்டி கிரேசு, நண்டு குழம்பா வக்கறே என்றாள். ஆமாத்தே குழம்புதா, பொரிச்ச இவுகளுக்கு எறங்க மாட்டேங்கே? அண்ணே வேற வந்திருக்கு,**

**சுவையா சமைச்சுப் போடணுமில்லே. போடு, போடு அஞ்சாயிரத்துக்குச் சீலையும், தங்க ஒட்டியாணமும் அள்ளிட்டு துரை ராசா வந்திருக்காரில்லே''**[28]

என்கிறாள். இவை வரதட்சணைப் பொருளியல் சமூகம் சார்ந்த அளவுக்கு மாற்றுப் பாதையில் செல்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

### 3.7.3 வறுமை நிலை

வறுமை இன்றைய இந்தியாவில் நிலவும் மாபெரும் கொடுமையாகும். நமது நாட்டில் மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் ஏழ்மை நிலையில் உள்ளனர். அரைப் பட்டினியாகவே நாள்தோறும் இவர்கள் உறங்கச் செல்கின்றனர். போதிய உணவின்மையால் இவர்கள் பல்வேறுபட்ட உடல், உள்ள நோய்க்கு ஆளாகின்றனர். வறுமையின் காரணமாகக் கல்விக் கூடங்களுக்குச் சென்று பயிலும் வாய்ப்பும் ஏழைக் குழந்தைகளுக்குக் கிட்டுவதில்லை. இத்தகையச் சமுதாய அவலங்கள் வறுமையில் இன்றைய இந்தியாவில் காணப்படுகின்றன.

**''இன்மையின் இன்னாது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது''**[29]

என்னும் திருக்குறள் மூலம் வள்ளுவர் வாழ்க்கையில் இல்லாமை என்பது மிகவும் கொடுமையானது என்கிறார்.

குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக்கூட நிறைவு செய்ய முடியாத அளவிற்குப் பொருளாதார நிலைமை திருப்தியாக இல்லை என்பதை,

'சமையலறையில் ஒரு கனவு' என்ற சிறுகதையில் முத்து என்ற பத்து வயது சிறுமி, வீட்டில் வறுமைச் சூழ்நிலையின் காரணமாகப் பள்ளிக்கூடப்

படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்கிறாள். அவளது அப்பாவோ தினமும் குடித்துவிட்டுச் சண்டையிடுகிறார். காசு கொடுக்க மறுக்கிறார். வீட்டில் சாப்பாட்டுக்கு மிகவும் க டம் என்பதால்தான் முத்து நூற்றைம்பது வரவுக்காகவும் ஒரு நேர உணவிற்காகவும் தன் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறாள்.

**''பெரிம்மா வீட்ல பொன்னிச் சோறாம், கிலோ பதினெட்டு ரூவா.''**[30]

என்றதும், இவளுக்கு உடனே ஸ்கூலைவிட்டு விட்டு வீட்டு வேலைக்குப் போக ஆசையாயிற்று.

முத்துவின் வீட்டில் நிலவும் வறுமை நிலையை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

> **''இவளுக்கு வயிறு ரொம்பவும் பசித்தது. நேற்று இரவு நல்ல சாப்பாடில்லை. அப்பா குடிக்கக் காசெடுத்துப் போய்விட்டார். இருக்கிற நொய்யில் அம்மா கஞ்சி கிண்டினாள். அது கொஞ்சமே இருந்த காரணத்தால் தங்கச்சிக்கும் பசிக்கும் என்று ஒரு வாய் உறிஞ்சிவிட்டு போறும்மா! பெரியம்மா இன்னைக்கு பாசிப்பயிறு அவிச்சிது. அது கும்னு இருக்கு என்று தண்ணீரை மொண்டு மொண்டு குடித்துவிட்டுப் படுத்துக் கொண்டாள்.''**[31]

தொழிலில் ஏற்பட்ட ந டத்தின் காரணமாக வீட்டில் வறுமை நிலை ஏற்படுகிறது. உண்ண உணவில்லாமல் பரிதவிக்கும் ஏழை மக்களின் நிலையை 'அனல் மின் மனங்கள்' என்ற கதை விளக்குகிறது.

செபஸ்தியான் மீன்பிடிக்கிற தொழிலாளி; தன் தொழிலில் ந டம் ஏற்படுகிறது. வீட்டில் உண்ண உணவில்லாமல் கூழ்காய்த்துக் குடிக்கும்

நிலையையும் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடக்கும் வறுமை நிலையையும் தனித்து வருணிக்கும் தமயந்தி,

> ‘‘கால் வயிறு அரை வயிறெல்லாம் போய் பட்டினியும் பழகிப் போனது. காற்றடித்த கடலாய் அலையும் வயிற்றோடு ராத்திரியெல்லாம் படுக்க இம்சையாயிற்று. வெறும் தண்ணீரைக் குடித்துக் கொண்டு அமில ஏப்பங்கள் புறப்பட்டன. பெரிய கிழவிக்கு அந்தப் பசியெல்லாம் தாங்கும் திராணி இல்லை. அவளுக்காக மட்டுமாவது கேப்பங்கூழ் காய்ச்சிக் கொடுப்பாள் கிரேசு. அப்படிக் கிண்டும் போதே இவளது பசித்த வயிறு கூவும். கூழ் வெந்ததா என்கிற தினுசில் கரண்டியில் அள்ளிக் கையில் தொட்டு, நாக்கில் விட்டுக் கொண்டவளுக்கு அந்த ஒரு துளியே வயிற்றுக்குள் சில்லிட்டது. அத்தனையும் எடுத்துக் குடித்துவிடலாமா என்று தோன்றிற்று. செபா கத்துவான். அவனுக்குப் பெரிய கிழவி பசியோடிருக்கக் கூடாது. அவளது கண்கள் தானாகவே கலங்கிவிட்டன. பானை நீரைச் சரித்து மடக் மடக்கென்று குடித்தாள் கிரேசு. செபாஸ்தியன் நின்றிருந்தான். அவன் கண்களும் கலங்கியிருந்தன’’[32]

என அதனை எதார்த்தமாகத் தருகிறார்.

இவ்வாறு வறுமையால் அவதியுறும் குடும்பத்தின் நிலையை தமயந்தி பதிவு செய்துள்ளார்.

‘உறைந்த நொடியில் கத்திமுனை’ என்ற கதையில் அலுவலகத்தில் பணம் கையாடல் பண்ணியக் காரணத்திற்காக மகாதேவனை வேலையிலிருந்து நீக்கி விடுகின்றனர். இதனால் வீட்டில் வறுமை நிலை காணப்படுகிறது. அதனை எதார்த்த நிகழ்வாக்குகிறார் படைப்பாளி.

“சோப்பு வாங்க மகாலெ மி பக்கத்து வீட்டில் பத்து ரூபாய் கேட்டுக் கொண்டிருந்தது அரை மணிக்கு முன்னால் கேட்டது. எனக்கு ஏன் வேலை போச்சுனு உனக்குத் தெரியுமா? இப்ப எதுக்கு அதெல்லாம் என்றாள். அப்ப நான் எப்படிப் போனாலும் நீ எல்லாத்தையும் முழுங்கிப்ப அப்படித்தானே; இருக்கிற பழயத எனக்கு வழிச்சிப் போட்டுக் கொடுப்ப, பத்து ரூவாக்கு பக்கத்து வீட்டுக்காரிட்ட கிசு கிசுப்ப கேட்டுக் கூனிக்குறுகி நிப்ப . . . சோப்பில்லாம குளிப்ப . . . அப்படித்தான மகா”[33]

இவ்வாறு பணம் இல்லை எனில் மனிதன் வாழ முடியாது. சாதி மதங்கள் சமூகத்தோடு தொடர்புடையன; ஆனால் வறுமையோ வயிற்றோடு தொடர்புடையது. எனவே தான் மனிதன் அதற்காக இடைவிடாமல் போராடுகிறான் என்பதை, தமயந்தி தன் படைப்பு வழி பதிவு செய்கிறார்.

‘புத்தகங்கள் விற்கிறவன்’ என்ற கதையில் லெ மணனுக்குச் சிறு பிள்ளையிலிருந்தே புத்தகங்களைச் சேமித்து வைக்கும் பழக்கம் இருந்தது. எந்தச் சூழ்நிலையிலும் யாருக்கும் புத்தகங்களைக் கொடுக்க மாட்டான். ஆனால் திடீரென்று வியாபாரம் நொடிந்து போனதால், தான் சேமித்து வைத்திருந்த புத்தகத்தை மூவாயிரத்துக்கு விற்கிறான்.

பொருளாதாரம் என்பது பசி என்ற அரக்கனைக் கொண்டு அனைத்தையும் அழிக்கவல்லது. குறிக்கோள்கள் மற்றும் மனிதனின் கனவுகள் என அத்தனையும் கலைந்து விடுவது என்பதை, தமயந்தியின் படைப்பு வழி அறியலாம்.

‘வெளிச்சக்கயிறு’ என்ற கதையில் வள்ளியம்மை மகளான மங்களீஸ்வரி மாதர் சங்கம் நடத்தும் பல ஊர்வலங்களுக்குச் செல்கிறாள்.

அந்த ஊர்வலத்துக்கு அவள் ஒரு நேர உணவிற்காகத்தான் செல்கிறாள் என்பதைப் பின்வரும் கூற்று கூறுகிறது.

> **"இருபத்தைந்து ரூபாயும் ஒரு நேர பிரியாணியும் ஊர்வலத்துக்குப் போனால் கிடைக்கும் என்று வெள்ளாயிதான் சொன்னாள்."**[34]

இவ்வாறு உணவிற்காக அவதியுறும் பல குடும்பத்தை ஆசிரியர் காட்டுகிறார். அன்று பாரதி,

> **"தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம்"**[35]

என்றார். இன்று முப்பது விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே ஒரு வேளைகூட உணவில்லாமல் க டப்படும் நிலையை, தமயந்தி தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

### 3.7.4 திருடுதல்

> **"கைப்பற்ற வேண்டுமென்ற கள்ள எண்ணத்துடன் ஒருவர் உடைமையிலுள்ள அசைப்பொருள் ஒன்றை அவரது உடன்பாடு இன்றி புடைபெயர்த்தல் திருட்டு என்ற குற்றமாகும்."**[36]

> **"தனக்குச் சொந்தம் இல்லாத ஒன்றை உரியோரின் அனுமதி இல்லாமல் எடுக்கும் முறையற்ற செயல் சட்ட விரோத அபகரிப்பே திருட்டு"**[37]

ஆகும் என்பதை தமயந்தியின் இலுப்பை பூ ரகசியம், அடையாளம் போன்ற கதைகளின் வழி அறியலாம்.

'இலுப்பை பூரகசியம்' என்ற கதையில் அமுதா, பொம்மி உட்பட மூன்று பெண்கள், விடுதிக் காப்பகத்தில் தங்கி வேலைக்குச் செல்கின்றனர்.

திடீரென்று ஒருநாள் அவர்களது அறையில் திருடன் வந்து புடவை, வாட்ச், மோதிரம் இவற்றைத் திருடிச் செல்கிறான்.

> "ஓர் அதிகாலையில் எங்கள் அறைக்குள் இருவர் நின்றிருந்தனர். அப்போது மணி ஒன்று இருக்கலாம். அந்த இரண்டு பேரும் ஷெல்ஃபிலிருந்த வாட்ச், மோதிரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மெள்ள நடந்து வெளியே போய், எங்களை உள்ளே வைத்து கதவைத் தாழிட்டனர்.
>
> ஷெல்ஃபிலிருந்து என்னென்ன பொருட்கள் திருட்டு போயிருக்கின்றன என்பதைப் பார்த்தபோதுதான் எனது ஷெல்ஃபில் புடவைகள் காணாமல் போயிருப்பது தெரிந்தது"[38]

இங்குப் பொருளாதார நெருக்கடியின் பொருட்டே திருட்டு நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

'அடையாளம்' என்ற கதையில் கிரு ணமூர்த்தியின் சைக்கிள் திருட்டுப் போய்விடுகிறது. அவன் வ.உ.சி. மைதானம் எதிரில் உள்ள இந்தியன் வங்கி எதிரே சைக்கிளை நிறுத்திவிட்டு, உள்ளே போய், பணம் எடுத்துவிட்டு வரும்போது சைக்கிள் நிறுத்தின இடத்தில் இல்லை. திருட்டுப் போய்விட்டது. அருகிலிருந்தவரிடம் கேட்டான். கிடைக்கவில்லை. காவல் நிலையத்தில் போய் 'கம்ப்ளெய்ண்ட்' எழுதிக் கொடுக்கிறான்.

> "இங்கு ஒரு ராலே சைக்கிள் பாத்தீங்களா? பத்து நிமிஷத்துக்கு முன்னதான் விட்டுட்டு பாங்க் போனேன்."[39]

இவ்வாறு தனக்குத் தேவையான பொருளை வாங்க முடியாத சூழலில்தான் ஒருவன் பிறர் பொருளைத் திருடுகிறான் என்பதையும்,

திருடுகிறவர்கள் உள்ள வரை திருட்டு இருக்கத்தான் செய்யும். திருட்டு நடை பெறுவதற்கு முதன்மையான காரணம் பொருளாதார நெருக்கடிதான். பொருளாதாரம் பலவீனமடையும் போது மனிதன் இவ்வாறு சிந்திக்கிறான் என்பதை தமயந்தி பதிவு செய்துள்ளார்.

**3.7.5 ஏமாற்றுதல்**

நேர்மையான முறையில் நடந்து அல்லது பொய் சொல்லி ஒருவரை மோசம் செய்வதே ஏமாற்றுதல் ஆகும். ஆடவருள் சிலர் பெண்களின் அழகில் மயங்கி, அவர்களை ஏமாற்றித் தங்களிடம் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றனர். ஏழ்மை நிலையில் உள்ள பெண்கள் அவர்களை நம்பித் தம் வாழ்க்கையை வீணாக்குகின்றனர் என்பதை தமயந்தியின் படைப்பான ‘அக்கக்கா குருவிகள்’ என்ற கதை வழி அறியலாம்.

‘அக்கக்கா குருவிகள்’ என்ற கதையில் யசோதாவின் தங்கை சியாமளா சேல்ஸ் கேளாக இருக்கிறாள். வெயிலிலெல்லாம் அலைந்து காப்பி பொடி விற்கிறாள். ஒருநாள் அவரிடம் ஒருவர் காப்பிப் பொடி வாங்குவதாகக் கூறி அவளிடம் தவறாக நடந்துவிட்டு ரூபாய் ஐந்நூறு கொடுக்கிறார். உன் செருப்பு அத்து இருக்கு வாங்கிக்கோ என்று கொடுக்கிறார்.

> **“யாரோ ஒருவன் காப்பிபொடி வாங்குகிறேன் என்று வீட்டுக்குள் கூட்டிப் போய் கை வைத்தானாம். ஒரு பாக்கெட்டுக்கு இரண்டு மடங்கு விலை தருகிறேன். உன் செருப்பு பிய்ந்திருக்கிறது பார். நல்ல செருப்பாக போட்டுக்கக் கூடாதா?”**[40]

என்றானாம்.

ஆடவருள் சிலர் பெண்களின் அழகில் மயங்கி அவர்களை ஏமாற்றித் தங்களிடம் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றனர். ஏழ்மை நிலையில் உள்ள பெண்கள் அவர்களை நம்பித் தம் வாழ்க்கையை வீணாக்குகின்றனர். இறுதியில் ஏமாற்றப்பட்ட பெண்கள் நியாயம் கேட்கச் செல்லும் போது அவர்கள் மட்டுமல்லாது அவர்களின் குடும்பத்தினரையும் பேசுகின்றனர். காசுக்காகக் கற்பிழந்த பெண்களின் நிலையை தமயந்தி படைப்புக்களில் வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

### 3.7.5.1 சொத்தை ஏமாற்றுதல்

ஒவ்வொரு அரசிலும் குடிமக்கள் சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளனர். வாழ்வு உரிமை, சொத்துரிமை, சிந்திக்கும் உரிமை போன்றன; இவற்றில் சொத்துரிமை என்பது அப்பாவின் சொத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு என்கிறது அரசியல் சட்டம். தமயந்தியில் 'இலைகள் பேசும்' என்ற கதையில் அப்பாவின் சொத்தைப் பிரிக்கின்றனர்; ஐந்து பங்கில் நான்கு பங்கைச் சரி சமமாகப் பிரித்து இரண்டு அண்ணனும், இரண்டு அக்காவும் எடுத்துவிடுகின்றனர். ஜானு ஊமை என்ற காரணத்தால் அவளுக்கு வீட்டை மட்டும் கொடுக்கின்றனர். இதைப் பார்த்து அம்மா வருத்தப்படுகிறாள்.

> **“அப்பாவின் சொத்தைப் பிரித்தார்கள். பெரிய சண்டை. காச்மூச் என்று பதினைந்து ஏக்கர் நிலத்தை எழுரை ஏக்கராய் இரண்டு அண்ணனும், இரண்டு அக்காவும் பிரித்துக் கொண்டார்கள். ஆளுக்கு மூணே முக்கால் ஏக்கர் என்று பேச்சு. எனக்கு இந்த வீடு மட்டும். அம்மாதான் ரொம்ப அழுதாள்.”**[41]

இன்றைய சமுதாயத்தில் நடைபெறும் பிரச்சனைகளில் ஒன்று சொத்துப் பிரச்சனை. பெண்ணுக்குக் கொடுக்கும் முதல் உரிமை வாக்குரிமை, அடுத்த உரிமை சொத்துரிமை. அரசாங்கமே அவ்வுரிமையைக் கொடுத்தாலும் குடும்பத்தில் இன்றும் இவ் உரிமைப் பிரச்சனை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். இதிலிருந்து பணம் பந்த பாசத்திற்கு அப்பாற்பட்டது என்பதும், இன்று வரை பெண்ணடிமைத்தனம் நிலைத்திருப்பதற்குக் காரணம் பொருளாதாரமே என்பதும் புரிகிறது.

### 3.7.6 கையூட்டு

> **“தனக்குச் சாதகமாகக் காரியத்தை முடித்துத் தருவதற்காக அதிகாரமோ செல்வாக்கோ உள்ளவருக்கு முறையற்ற வழியில் கொடுக்கும் பணம் அல்லது பொருள்தான் கையூட்டு (இலஞ்சம்) ஆகும்.”**[42]

பெண்களைப் படிக்க வைப்பதற்கே யோசிக்கும் காலம் இது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க முன்வந்தாலும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கேட்கும் கட்டணத் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. குழந்தைகளின் படிப்புச் செலவுக்காகப் பெற்றோர்கள் தங்கள் வீடுகளை இழந்து வறுமையின் எல்லைக்கே செல்கின்றனர். அவ்வளவு செலவுகள் செய்தாலும் பட்டங்கள் பெறுவது என்பது எட்டாக்கனியாகவே உள்ளது என்பதை ‘பார்வை’ என்னும் கதை வழியாகத் தமயந்தி பதிவு செய்துள்ளார்.

> **“அம்மா வீட்டை அடகு வச்சிதான் இந்த செலவெல்லாம். கட்டுப்படியாச்சு . . . ரொம்ப ஆர்வமா சேர்ந்தேன் சார். எல்லாம் போயிருச்சு. டிகிரியாவது கெடைச்சா போதும் வீட்டையாவது மீட்டுறனும்”**[43]

என்றாள்.

பட்டங்கள் பெறுவதற்கு எளிய வழிமுறையாக,

**“அட எழவே, தீசிஸ் எழுதிக் கொடுத்திட்டா ஆச்சா? கைட் எல்லாம் இளிச்சவாயனா என்ன? அவனுக்கு ஒரு சபாரி சூட், ஒரு கார்ட்லெஸ்போன், ஒரு நவீன ஊஞ்சல் இல்லனா அவன் பொண்டாட்டிக்காச்சும் ஒரு பட்டு சேலை வாங்கிக் கொடுக்கணும்மா.”**[44]

எனக் கல்லூரி அலுவலர் கூறுகிறார்.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றையவை”**[45]

என்று கல்வி குறித்து வள்ளுவர் கூறிய கூற்று மாறுபாடாகப் படைப்பாளியால் படைப்பாக்கப்பட்டுள்ளது.

### 3.7.7 பரத்தமை

‘பரத்தமை என்பது தொடர்ந்தோ இடையிடையிலோ நிகழ்கின்ற பணத்தை மட்டும் கருதிய கவர்ச்சியூட்டும் பண்பாகிய வரையறையற்ற உடலுறவு’ என்று ஐயா.ஃப்ரே என்ற சமூகவியலறிஞர் கூறுகிறார். பரத்தமையைத் தன் தொழிலாகக் கொண்டு ஒழுக்கத்தை ஒரு பொருட்டாகக் கருதாது தன் உடலை விலைபேசி எப்படியும் வாழலாம் என்று வாழ்கின்ற பெண்ணே ‘விலைமகள்’ என்று குறிப்பிடப்படுகிறது.

பரத்தமையை மூன்று வகைப்படுத்தலாம் என்கிறது சங்க இலக்கியம்.

1) சேரிப் பரத்தமை

2) தேர்ந்து கொண்ட பரத்தமை

3) பரம்பரைப் பரத்தமை

இம்மூன்று பரத்தமைகளின் எச்சங்கள் இக்காலத்திலும் இருப்பது தமயந்தி படைப்புகள் வழி அறிய முடிகிறது.

### 3.7.7.1 சேரிப் பரத்தமை

எவ்விதமான பொருளாதாரச் சார்புமில்லாத கீழ்வர்க்க மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளுக்காக உடலை மூலதனமாகக் கொண்டு விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இந்நிலைமையைச் 'சேரிப் பரத்தமை' எனலாம்.

தமயந்தியின் படைப்பான 'ஒரு பேனா அல்லது பெண்ணின் கதை'யில் பணத்திற்காகப் பரத்தமைத் தொழில் செய்யும் பெண்ணின் நிலை கதையாகிறது.

ஜோஸ்பினின் தந்தை சிறு வயதிலேயே காணாமல் போய்விடுகிறார். இதனால் அவளுடைய அம்மா பொருளாதார வசதியின்மையால் விலை மாதுவாக மாறிவிடுகிறாள். அவளது சித்தப்பா அவள் அம்மாவிற்கு ஆள்பிடித்துக் கொடுக்கிறார்.

> "**அப்பா சின்ன வயசுலேயே யாரோடயோ போயிட்டாரு. அம்மா எங்கப்பாவோட தம்பியோட இருந்துச்சு. கொஞ்ச நாளைலையே எங்க சித்தப்பா எங்கம்மாவுக்கு மாமாவாயிட்டாரு இந்தத் திண்ணைல கைல மிட்டாயோட நாங்க உக்காந்திருப்போம்.**"[46]

எனப் பரத்தை மகள் கூற்றாக மாறுபட்டச் சூழல் படைப்பாளியால் கதையாக்கப்பட்டுள்ளது.

### 3.7.7.2 தேர்ந்து கொண்ட பரத்தமை

வரதட்சணைக் கொடுமை மற்றும் கணவன் குடும்பத்திற்குத் தேவையான பணத்திற்காகவும், உயர், மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த உழைக்கும்

பெண்கள் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இப்பெண்கள் விலைமகளிராக மாறுவதற்குக் கணவன் அல்லது பெற்றோர்களே அனுமதிக்கின்றனர்.

வறுமையிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் தன்னை மீட்டுக் கொள்ள வகையறியாத மனிதகுலம் வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து தப்பித்துக் கொள்ள பாலுணர்வில் மீளக் கற்பு விலை பேசப்படுவதும், ஆணும் பெண்ணும் நெறியிழந்து நாணமிழந்து போவதும் நியாயப்படுத்தப்படுகிறது என்பதை 'குரல்களின் விசை' என்ற கதையில் தமயந்தி வெளிப்படுத்தியுள்ளார்.

> **''திரேசாவின் கணவருக்கு மில் மூடி வேலைக்குப் போகாத நேரம்; அடுத்த வேளை கஞ்சி பத்தித் தெரியாது. வயித்த மாதிரி பெரிய கொடுமை கெடயாது. பெரிய வில்லன் கெடயாது. புள்ளைங்க பசிக்குனு சொல்றப்ப சாவலாமானு தோணும். நான் வீட்டு வேலைக்கிப் போனேன். படிச்ச புள்ளையா என்ன? போன இடத்துல பார்வை முழுதும் மேய்ஞ்சிது. என் புள்ளைகளை நெனைச்சி கம்முனு என் வேலையை நான் செஞ்சேன். பெரிய கவர்மெண்ட் அதிகாரி வீட்ல யாரும் பார்க்காத நேரம் உரசுறது. அது இதுனு ஆரம்பிச்சான். கைல ஐம்பது அறுவது ரூபா கொடுத்தான். வாங்கினேன். புள்ளைங்க படிக்க ஆசைப்பட்டிச்சு, சோறு வடிச்சி சாப்பிட ஆசைப்பட்டுச்சு. பெரிசா மீனு கறி இல்லங்க. சோறு வெறுஞ்சோறு தான் என்று ஆரம்பித்து . . . வேலை தொடர்ந்து கணவன் சம்மதத்தோட தொழிலாகவே மாறிற்று''**[47]

என்று திரேசா பத்திரிக்கைகளுக்குப் பேட்டி கொடுக்கிறாள்.

பொருளாதாரத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் பெண் வேலைக்குச் செல்கிறாள். அங்குள்ள சூழ்நிலை அவளை விபச்சாரத் தொழிலில் ஈடுபட வைக்கிறது. பெண் கற்புக்கடம் பூண்டு ஒழுகுதல் வேண்டும் என்றும்,

**"உயிரினும் சிறந்ததன்று நாணே நாணினும்**
**செயிர்நீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று"**[48]

என்று தொல்காப்பியரின் கருத்திற்கு மாறாக இங்கு வறுமையின் காரணமாகப் பெண்ணின் கற்பை விலை பேசும் பெண்ணின் நிலையையும், பணத்திற்காக பெண்களை இச்சமூகம் கொண்டு செல்லும் வழிமுறை எத்தகைய ஆபத்தானது என்பதை அறிய முடிகிறது.

### 3.7.7.3 பரம்பரைப் பரத்தமை

ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சார்ந்த பெண்கள் மரபு ரீதியாகப் பரத்தமையைத் தங்கள் குலத் தொழிலாகவும் கொண்டுள்ளனர். இப்பெண்களைத் தேவதாசிகள் என்பர். தமயந்தியின் 'ஒரு ஜன்னல்' என்ற கதையில் - தன் மனைவி மூலம் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை என்று விபச்சாரியை நாடுகிறான். விபச்சாரி கர்ப்பமடைகிறாள். இதைத் தெரிவிப்பதற்காக அவனை எதிர்பார்க்கிறாள். இரவு ஆகியும் அவன் வரவில்லை. போன் செய்கிறாள். தூக்கக் கலக்கத்தில் அவனது குரல் ஒலிக்கிறது.

**"குழந்தைகள் மீதான அவனது அனுசரணை அதிகமானதெனினும், அந்த பாக்கியம் அவனுக்கு அவன் மனைவி மூலமாகவோ அல்ல எனில், இவள்**

**மூலமாகவோ கிட்டாது போயிற்று. குழந்தையின் பொருட்டே, இவளை அவன் நாடினான்”**49

இவ்வாறு பொருளாதாரப் பிரச்சனையை நிறைவு செய்வதற்காகவும், பாலியல் தொழிலில் ஈடுபட்டுத் தன் குடும்ப வறுமை நிலையைப் போக்குவதற்காகவும், குடும்ப வாழ்வில் சிறந்த செல்வமாகக் கருதப்படும் குழந்தை பேறில்லாத காரணத்தினாலும் ஆண் பரத்தமையைத் தேடிப் போகிறான் என்ற உண்மை புலப்படுகிறது.

### 3.7.8 குடும்பச்சுமை

காதலில் ஈடுபட்ட ஆணோ, பெண்ணோ குடும்பச் சுமையை ஏற்றிருந்தால் அக்குடும்பச் சுமையின் காரணமாகக் காதல் திருமணம் தடைப்பட்டுவிடுகிறது என்பதைப் ‘பேரிளமை’, ‘தாமிரபரணியின் தாகங்கள்’ என்ற படைப்பு வழியாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

இக்கதையில் ராஜி என்ற பெண் சபேசு என்பவரைக் காதலிக்கிறாள். குடும்பச் சுமையின் காரணமாக அவளால் அப்போது அவனைத் திருமணம் செய்ய முடியாத நிலை. தனது ஐந்து தங்கைக்கும் திருமணம் முடிந்த பிறகுதான் இவள் திருமணத்தை யோசிக்க வேண்டும்; இருப்பினும் அவளால் அவனை மறக்க முடியவில்லை. அவனுக்கு வேறு பெண் பார்த்து உள்ளனர். அவனிடம் வேறு திருமணம் பண்ணு என்றாலும் அவளுக்கு அவனை விட்டுக்கொடுக்க முடியவில்லை. இப்பொழுது தனது முதல் தங்கை சித்ராவின் திருமணத்திற்கு அவனை அழைக்கிறாள். அவளது மனத் தவிப்பை தமயந்தி பின்வருமாறு படம் பிடிக்கிறார்.

"ப்ளீஸ் சபேசு . . . மறக்காம வந்திருங்க. காத்திருப்பேன். யாராச்சும் பார்த்தா பிரசவத்துக்குப் பிரிஞ்சிப் போற புதுப்பெண்டாட்டின்னு நெனைச்சிப்பாங்க."

"லஞ்சமில்லாமல் சித்ராவுக்கு வரன் கிடைத்துவிட்டது. மீதி உன் பொறுப்பு ராஜி என்று . . . ஆபீசில் லோன் வாங்கி, மீதிக்குக் கடன் வாங்கிப் பணம் புரட்டுவது என் பொறுப்பு. இத்தோடு முடியாத பொறுப்பான கடனை இனி மீதிக்கு ஆறு உருப்படி இருக்கிறது. எல்லாமுமாய் முடித்து நான் நிற்கும்போது அறுபது வயசாகி இருக்கும். ஒரேயடியாய் அறுபதாம் கல்யாணத்தைத்தான் நம்மால் பண்ணிக் கொள்ள முடியும். செலவு மிஞ்சுமே சபேசு."[50]

வீட்டிலுள்ள பொருளாதாரப் பிரச்சனையின் காரணமாக இரண்டு வருஷமாய் உயிருக்கு உயிராய்க் காதலித்த காதலைவிட்டுத் தவிக்கும் பெண்ணின் மன உணர்வையும், மனநிலையையும் இங்குப் பதிவாகியுள்ளது.

குடும்பச் சுமையின் காரணமாகக் காதலியைத் திருமணம் செய்ய முடியவில்லை. இதனால் காதலி தற்கொலை செய்து விடுகிறாள் என்பதைத் 'தாமிரபரணியின் தாகங்கள்' என்ற கதையில் பரணி – சசி என்பவரின் உரையாடல் மூலம் அறியலாம்.

இதில் பரணி சசி என்ற பெண்ணைக் காதலிக்கிறான். இதைப் பரணி வீட்டில் சொல்கிறான். அம்மா அவனிடம் உனக்குப் பின் இரு தங்கைகள் இருக்கின்றனர். அவர்களுக்குத் திருமணம் முடிந்த பின் நீ திருமணம் செய்துக்க என்றாள். இதை சசியிடம் அவன் சொல்கிறான். மூன்று நாள்

கழித்துச் செய்தி வருகிறது. சசி விஷம் குடித்துவிட்டு இறந்து போய்விட்டாள் என்று. பரணிக்கு நம்ப முடியவில்லை.

> ''விஷயத்தைச் சொன்னதும் ஒரு நிமிஷம் எல்லோருக்கும் நடுவில் நிசப்தம் வந்து உட்கார்ந்து கொண்டது. பிறகு ஆறக்காள் கத்தினாள். எதிர்ப்பு தெரிவித்தார்கள்''
>
> ''மறுநாளிலிருந்து அவள் ஆபீஸ் வரவில்லை. அந்த சசி இருக்கா. இல்லே பரணி . . . அவளுக்கு கல்யாணமாம் என்ற செய்தி இவனுக்குக் கேட்டது.
>
> அவன் வீட்டிற்குச் செல்கிறான். அம்மா அவனிடம் சசி . . . சசி தற்கொலை பண்ணிக்கிருச்சுடா . . . ஆஸ்பத்திரிக்கு போஸ்ட் மார்ட்டத்துக்கு தூக்கிட்டுப் போயிருக்காங்க.''[51]

என்கிறாள்.

காதலின் தோல்விக்குச் சமூகவியலாளர் செல்வ வேறுபாடு, சாதி வேறுபாடு, இவற்றையே காரணங்களாகக் கூறுகின்றனர். இவற்றைத் தவிர, தோல்விக்கு மேலும் பல காரணங்கள் சமுதாயத்தில் காணப்படுகின்றன. மேற்கூறிய இரண்டோடு இரு குடும்பங்களிடையே பகைமை, காதலன், காதலியிடம் கொள்ளும் ஐயம், காதலன் மனமாற்றம், காதலியின் விதவைத்தாயின் மறுமணம், காதலியின் குடும்பத்திற்கு ஏற்படும் அவப்பெயர், விதவையின் மீது கொள்ளும் காதல் ஆகிய இவை படைப்பாளிகளால் காரணங்களாகக் கூறப்படுகின்றன என்பதைத் தன் படைப்பு வழி தமயந்தி பதிவு செய்துள்ளார்.

### 3.7.9 குடும்பம் + பணிச்சுமை

இன்றைய நடைமுறை வாழ்வில் ஆண் பிறந்தால் பொருளாதார வலுவாகவும், பெண் பிறந்தால் பொருளாதார இழப்பாகவும் கருதும் நிலை காணப்படுகிறது. அதனால் பெண் பிறப்பே விருப்பமில்லாததாக அமைகிறது. இந்த நிலை மாறி ஆணும், பெண்ணும் சரிநிகர் சமம் என்பதை உறுதி செய்யும் வகையில் பெண்களும் கல்வி கற்று வேலைக்குச் செல்கின்றனர். குடும்பச் சுமையைத் தாங்கும் பெண்கள் பல பேர் உள்ளனர் என்பதை தமயந்தி 'தாமிரபரணியின் தாகங்கள்' என்ற கதை மூலம் வெளிப்படுத்துகிறார்.

'தாமிரபரணியின் தாகங்கள்' என்ற கதையில் முரளி மனைவி கீதா. குடும்பச் சூழ்நிலையின் காரணமாக வேலைக்குச் செல்கிறாள். இதனால் தன்னால் தானே குடும்பம் நடக்கிறது என்று அவளுக்குக் கர்வம் ஏற்படுகிறது. இதனால் குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகிறது.

அண்ணியின் சம்பளம் அண்ணனை மதிப்புக் காட்ட வைத்தது. சராசரிக்கு மிஞ்சிய உயரத்தில் அவளை வைத்தாள். அவள் மேல் என்பது போல் பேசினாள். மெது மெதுவாய் அண்ணியின் தலையிலும் கர்வம் படர ஆரம்பித்தது. என்னால் தானே குடும்பம் நடக்கிறது என்று அகங்காரமாய்ப் பார்வை பார்த்தாள்.

இங்குக் குடும்பச் சூழலைக் காரணம் காட்டிப் பெண்ணை வேலைக்கு விடுகிறாள். இதனால் பெண்ணிற்குக் கர்வம் ஏற்பட்டுக் குடும்ப நிம்மதியை இழக்கின்றனர். சமூகப்படிநிலையைப் பொருளாதாரம் உயர்த்தினாலுங்கூட குடும்ப அமைப்பு சிதைவதற்கான அடிப்படைக் காரணம் பொருளாதாரமே என்ற உண்மை புலப்படுகிறது.

### 3.7.10 வேலையில்லாப் பிரச்சினை

பொருளாதாரப் பிரச்சினையில் முதன்மையான பிரச்சினை வேலையின்மையாகும். வேலையின்மையால் சமூகத்தில் திருட்டு, கொலை, களவு போன்றவை அதிகரித்துக் கொண்டிருக்கிறது; மேலும் வேலையின்மையால் வறுமை நிலையும் ஏற்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மூல காரணம் பணமாகும்.

தமயந்தியின் படைப்பான ‘உறைந்த நொடியின் கத்திமுனை’, ‘திரும்ப வருகிற நாட்கள்’, ‘தொடர்வது’, ‘எதார்த்தம்’ போன்ற கதைகள் வேலையில்லாப் பிரச்சனை பற்றி விளக்குகிறது.

வேலையில்லாத காரணத்தால் வீட்டில் பணப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் வீட்டிலுள்ள பொருளைத் திருடி விற்றுப் பணம் பெறும் நிலையை இந்தக் கதையில் பதிவு செய்துள்ளார் தமயந்தி.

மகாலெக்ஷ்மியின் கணவன் மகாதேவன். மகாதேவன் அலுவலகப் பணத்தைக் கையாடல் பண்ணிய காரணத்தால் வேலை பறிபோகிறது. இதனால் வீட்டிலுள்ள பொருளைத் திருடிச் செல்கிறாள் என்பதை,

> **“இன்று எதை விற்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்து சுற்றி பார்வையைச் சுழல விட்டான் இவன்”**[52]

இவ்வாறு வேலையில்லாத காரணத்தால் பணத்தேவையைப் பூர்த்தி செய்ய, திருட்டுத் தொழிலில் ஈடுபடும் ஆணின் நிலையைப் பதிவு செய்துள்ளார்.

வேலையில்லா இளைஞனின் மன உணர்வைத் ‘திரும்ப வருகிற நாட்கள்’ என்ற கதையில் பதிவு செய்துள்ளார்.

'திரும்ப வருகிற நாட்கள்' என்ற கதையில் சீனுவிற்கு வேலையில்லாததால் வீட்டில் மரியாதையில்லை. அண்ணனும், அண்ணியும் வேலை வெட்டியில்லாதவன் என்று அடிக்கடித் திட்டுவார்கள். அவனுக்கு வேலை கிடைக்கிற மாதிரி கனவு காணுகிறான்; ஆனால் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலைக்குச் செல்பவர்களின் சத்தத்தைக் கேட்கிறாள். தனக்கும் வேலை கிடைத்தால் அம்மா அப்பாவை சந்தோஷமாய் வைக்கலாம் என்று நினைக்கிறான். எனவே வேலை என்பது மனத்திற்கான மகிழ்ச்சி என்பது மாறி, பொருளாதாரத்தின் மூலம் ஏற்படும் கௌரவம் என்ற நிலையை அடைந்துள்ளது.

> **''வெளியே யாரோட ஒருவன் யமஹாவை உறும விட்டுக் கொண்டு பறந்தான். காது கிழிகிற சப்தம் ரணமாய் மனசுக்குள் பொங்கிற்று. சீனு நடு அறை சுவரில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். ஜன்னல் வழியாய் தெரு தெரிந்தது. யார் யாரோ ஆபீஸ் போனார்கள். சிரித்துப் பேசி நடந்தார்கள். ஒரு மாணவனாய் இருந்திருக்க வேண்டும். இல்லை வேலை கிடைத்திருக்க வேண்டும். இதற்கு நடுவில் உள்ள இம்சை கூடாது. படித்து முடித்து வேலை தேடுகிற காலம் பயங்கரம். இருட்டில் தெரிகிற கறுப்பு உருவம் மாதிரி நடுங்க வைக்கிற விஷயம்''**[53]

ஒரு வேலை இருந்திருந்தால் அண்ணி இப்படி ஏவ மாட்டாள். அண்ணன் கத்த மாட்டான். அப்பாவையும், அம்மாவையும் கூட்டிக் கொண்டு தனி வீடு பார்த்து, ராஜா ராணி மாதிரி வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறான். தனக்கு வேலையில்லாததால் அண்ணன் 'தண்டச்சோறு தடியனுக்கு என்னாப் பேச்சு' என்று கூற மாட்டான். இதற்கு முடிவு எனக்கு

வேலை கிடைக்க வேண்டும் என்று ஆதங்கப்படும் ஒரு இளைஞனின் மன உணர்வை இக்கதையில் பதிவு செய்துள்ளார்.

வேலையில்லாத காரணத்தால் திருமணம் தடைபடுகின்றது என்பதைத் தொடர்வது, எதார்த்தம் என்ற கதைகள் வழி அறியலாம்.

'தொடர்வது' என்ற கதையில் மோகன் அவனது அத்தைப் பெண்ணைக் காதலிக்கிறான். அவனுக்கு வேலையில்லாத காரணத்தால் அத்தைப் பெண்ணை வேறு பையனுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றனர்,

> **"அது அவனது அத்தை வீடு. அவள் அப்பாவுக்குத் தங்கைமுறை. அத்தைக்கு நாலு பெண்கள் என்பதால், நாலில் ஒன்றை இவனுக்குக் கட்டி வைத்து விடலாம் என்று அவளுக்கு ஆசை. இவனுக்கு வேலை ஒன்று கிடைக்க வேண்டும் என்று நிறையப் பிரயாசைப்பட்டாள் . . ."**[54]

'எதார்த்தம்' என்ற கதையில் காயத்ரி முரளி இருவரும் காதலிக்கின்றனர். முரளிக்கு வேலையில்லாததால் காயத்ரியை பரணீதரனுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். எட்டு வருஷங்கள் கழித்து எதிர்பாராமல் காயத்ரியும் முரளிதரனும் சந்திக்கின்றனர்.

> **"காயத்ரியா? எட்டு வருஷங்கள் காதலித்து எனக்கு வேலை இல்லை என்கிற ஒரே காரணத்துக்காக அவள் அப்பா திருமணம் செய்து கொடுக்க மறுத்த காயத்ரியா?"**[55]

அவளுக்குக் கல்யாணமான மறு மாதம் முரளிக்கு வேலை கிடைத்தது. ஆனால் லாபமில்லை. காயத்ரி ஏற்கனவே மிஸஸ் பரணீதரனாய் ஆகியிருந்தாள் என்பதிலிருந்து திருமணமும், பொருளாதாரமும் பிரிக்க

முடியாத சக்தி என்பதை அறிய முடிகிறது. இவ்வாறு வேலையில்லாக் காரணத்தால் திருட்டு நடைபெறுகிறது என்றும் திருமணம் தடைபடுகிறது என்பதையும் சமூகமொழியாக, தமயந்தி முன் வைக்கிறார்.

### 3.7.11 கடன்களுக்கு ஆளாதல்

நடுத்தர நகர்ப்புறக் குடும்பங்களில், கல்வி, திருமணம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்குப் பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும்போது கடன் வாங்கி அத்தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர் என்பதைப் பார்வை என்ற கதையில் கருவாக்கியுள்ளார். கடன் வாங்கி முனைவர் பட்டம் பெறும் வசந்தி என்ற பெண்ணைப் படைத்துள்ளார் தமயந்தி.

'பார்வை' என்ற கதையில் வசந்தி என்ற பெண் பி.எச்டி. பட்டம் பெற கடன் வாங்கிப் படிக்கிறாள். வேலை கிடைத்ததும் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறாள்.

> **"அம்மா முருகேசன்ட்ட பத்து வட்டிக்கு பத்தாயிரம் வாங்கியிருக்கு. தீசிஸ் பைண்ட் பண்ண, ஜெராக்ஸ் எடுத்து அஞ்சு காப்பி எடுக்க, நேத்து அந்தாள் ராத்திரி வந்து ஒரே கலாட்டா, . . . டிகிரி வந்துட்டா வேலைக்காச்சும் போய் கடனை அடைக்கணும்"**[56]

என்று கடன் வாங்கப் பட்டம் பெறப் பாடுபடும் பெண்ணின் நிலையைக் கூறுகிறது.

### 3.7.12 கடன் பிரச்சனை – தர நிலையில் இறக்கம்

நடுத்தர வர்க்கத் தனிக்குடும்பங்களின் பொருளாதாரத் தேவையின் காரணமாகச் சிக்கல்கள் உருவாகும்போது, இச்சிக்கல்களிலிருந்து மீளச் சிலர் கடன்களை வாங்குகின்றனர். நாளடைவில் கடன்களையும் அடைக்க

முடியாமல், சொத்துக்களை எல்லாம் விற்றுப் பொருளாதாரத் தர நிலையில் கீழிறக்க நிலையை அடைகின்றனர். நடுத்தர வர்க்கத்தில் ஏற்படும் இத்தர நிலை இறக்கம் மீண்டும் உயர்தர நிலையை அடைய வாய்ப்பில்லாமல் முடிவில் அழிவில் போய்விடுகிறது. இவ்வாறு நடுத்தரநிலை இறக்கத்தினால் தனிக்குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களை 'முள்வீடு' என்ற கதை விளக்குகிறது.

'முள்வீடு' என்ற கதையில் கணேசனுக்கு வியாபாரத்தில் ந டம் ஏற்படுகிறது. இதனால் கடன் வாங்கியிருந்தான். கடனைக் கொடுக்க முடியாத காரணத்தால் வீட்டை விற்றுக் கடனை அடைக்க முடிவு செய்கிறான்.

> **"நானே கடன்காரன்ட்ட மல்லுக்கட்டிட்டு வர்றேன். ஏன் உசிர எடுக்கீக . . . கடன் வாங்கியிருக்கீகளானு பதிலுக்குக் கேட்கிறாள் அம்மணி."**[57]

'தலைக்கு மேல போயிட்டு வீட்டை வித்துறலாம்னு இருக்கேன்னான் . . அவன் மொள்ளமா நாளைக்கு வர்றவங்க அட்வான்ஸ் கொடுங்க' என்று வரவுக்கு மீறி செலவு செய்வதால், செலவை ஈடுசெய்யக் கடன் வாங்குகிறான். இறுதியில் கடனை அடைக்க முடியாமல் தன் வீட்டையோ, சொத்தையோ இழக்கும் நிலை இன்று சமூகத்தில் காணப்படுகிறது என்பதை, தமயந்தி தன் படைப்பின்வழி பதிவு செய்துள்ளார்.

### 3.7.13 கந்துவட்டி

மக்களிடம் வசூலிக்கப்படும் வட்டிகளில் ஒன்று கந்துவட்டி. இது பெரும்பாலும் வாரச் சந்தையில் நடைபெறுகின்றது.

> **"ஒரு குறிப்பிட்ட நாளில் வாரச் சந்தையன்று ரூ.100 கடன் வாங்கினால் ரூ.12.50 பிடித்தம் போக ரூ.87.50 ரூபாய்களாகப் பத்து வாரங்களுக்குக்**

கட்ட வேண்டும். அப்படிப் பணம் கட்டத் தவறினால் அவர்களுக்குச் சொந்தமானப் பொருட்களையோ அல்லது பெண்களையோ கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் அவர்களை அடித்துத் துன்புறுத்தி வசூல் செய்யும் முறைகளைக் கையாளுகின்றனர். இந்நிலை இன்று கல்வராயன் மலையில் உள்ளது''[58]

என்பதை நோக்கும் விதத்தில் தமயந்தியின் படைப்பான மல்லியும் ஒரு பாட்டில் பீரும் என்ற கதையில் கந்து வட்டியில் மக்கள் படும் அவலநிலையைப் பதிவு செய்துள்ளார்.

'மல்லியும் ஒரு பாட்டில் பீரும்' என்ற கதையில் கந்து வட்டியினால் சிக்கிய கணேசன் செய்தித்தாளைப் பார்க்கிறான். கந்து வட்டியில் தற்கொலை. பெரிய நிறுவனங்கள் வந்த காரணத்தால் இவனது தொழிலில் ந டம் ஏற்படுகிறது. முதலில் பத்து வட்டி என்று பணம் வாங்கி இப்போது கடன் தொல்லை தாங்க முடியவில்லை. வெற்றுப் பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறான். இறுதியில் தனது வீட்டை விற்கிறான். போலீசுக்கும் போகிறான். எல்லாம் அவன் ஆளுதான். இப்போது அவன் ஜாமீனில் வெளியே வருகிறான்.

''முதலில் பத்து வட்டி என்றவனிடம் சரி என்றால் அசலில் வட்டியும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் பெட்ரோல் செலவுக்காகவும் ஆயிரம் ரூபாய் அவன் எடுபிடிக்காகவும் எடுத்துக் கொண்டான். பதினைந்து நாட்களில போன் செய்து என்ன தம்பி தரலையா? அப்படினா பதினைஞ்சி நாளுக்கு ஒரு வாட்டி வட்டி போட்டுக்கோனு வட்டி போட்டான். ஈரக்குலை வற்றி ரத்தம் சிந்தி வட்டி கட்டினேன். வீட்டில் பொட்டுத் தங்கமின்றிப் போனது.

**ஒரு தடவை ஐந்தாம் தேதி வட்டி கட்டத் தவறிய போதுதான் வேலுசாமி வெற்றுப் பத்திரங்களில் கையெழுத்து வாங்கிக் கொண்டான். வட்டி கட்டலையோ ரோட்ல வெட்டிப் போடுவேனுலன்னு வேலுசாமி கூறியதால் நானும் என் மனைவியோடு வேலுசாமிக்குப் பயந்து ரயில்வே ஸ்டேஷனில் நின்றேன். தற்கொலை செய்து கொள்ளலாமா என்று யோசித்தேன்.**"[59]

கந்து வட்டியை அடியோடு அழிக்க வேண்டும் என்று அரசு முயற்சிகள் எடுத்தாலும், இன்றும் இவ்வட்டிக் கொடுமைப் புழக்கத்தில் தான் உள்ளது என்பதற்குச் சான்று செய்தித் தாளில் வரும் தற்கொலை, கொலை, தலைமறைவு போன்ற செய்திகளும் இக்கொடுமையால் ஏழை மக்கள் படும் அவலநிலையை, தமயந்தி தன் படைப்பிலும் பதிவு செய்துள்ளார்.

### 3.7.14 தரநிலையில் இறக்கம் – இறப்பு

நடுத்தர வர்க்கத் தனிக்குடும்பங்களில் பொருளாதாரத் தேவையின் காரணமாகச் சிக்கல்கள் உருவாகும்போது இச்சிக்கல்களிலிருந்து மீளச் சிலர் கடன்களை வாங்குகின்றனர். நாளடைவில் கடன்களையும் அடைக்க முடியாமல், சொத்துக்களை எல்லாம் விற்றுப் பொருளாதாரத் தர நிலையில் கீழிறக்க நிலையை அடைகின்றனர்.

சங்கரனுக்குத் தொழிலில் ந டம் ஏற்படுகிறது. நாளை ஒருவனிடம் கடனைத் திருப்பித் தருவதாகக் கூறுகிறான். ஆனால் பணம் கிடைக்கவில்லை. அதனால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் தற்கொலை செய்து கொள்ளலாம் என்று நினைத்து எலி விஷத்தை உண்டு இறந்து போகிறான்.

“நேற்று மூன்று முறை கந்தசாமி ஆளை விட்டிருந்தான். இன்னிக்கு அநேகமா பணம் கெடைச்சிரும் சார். கொடுத்துருவேன் என்று பதில் சொன்னது மனசுள் வேதனைக் கீற்றாய் ஓடியது. ஐயர் நம்பிக்கையூட்டும் அளவில் பேசி காலையில் கையை ஒரு பெரிய கால்வாய் அளவிற்கு விரித்து விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை. கடைக்காரனும் சந்தேகத்துடன் இன்று மறுபடி எலிப்பாஷாணத்தை எடுத்துக் கொடுத்தபடி நேத்து தானே வாங்கிப் போனீங்க? என்றான் . . . எலி தொந்தரவு அதிகம் என்றான் இவன். பின்பு உணவுடன் கலந்து விஷத்தை உண்கிறான்.”[60]

இவ்வாறு நடுத்தர வர்க்கத்தில் ஏற்படும் இந்த நிலை இறக்கம் மீண்டும் உயர்தர நிலையை அடைய வாய்ப்பில்லாமல் முடிவில் அழிவில் போய்விடுகிறது. இவ்வாறு நடுத்தர வர்க்கத் தரநிலை இறக்கத்தினால் தனிக்குடும்பத்தில் ஏற்படும் சிக்கலை ‘சாம்பல் கிண்ணம்’ என்னும் கதை மூலமாகத் தமயந்தி பதிவு செய்துள்ளார்.

### 3.8 தொகுப்புரை

இவ்வியலில் பொருளாதாரம் குறித்த சிந்தனைகள் விளக்கப்பட்டு, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளால் மக்கள் படும் அவலங்கள் மக்களைத் தனித்து உணர வைக்கிறது என்பது கண்டறியப்பட்டது.

பொருளாதார அமைப்பினைக் கொண்டே திருமண உறவுகள் அமைகின்றன என்பதையும், பொருளாதார பிரச்சனைகளினால் திருமணம் தடைபடுகின்றது என்பதையும் தமயந்தி தன் படைப்பு வழி சமூக மொழியாகப் பதிவு செய்துள்ளார்.

வறுமையின் காரணமாகக் கல்வி பாதிக்கப்படுகிறது என்பதையும், வறுமையின் காரணமாகச் சிறுவர்கள் வேலைக்குச் செல்ல

கட்டாயப்படுத்தப்படுகின்றனர் என்பதையும் கூறி, வாழ்க்கைக்குக் கல்வியின் அவசியத்தையும் தன் படைப்பு வழி பதிவு செய்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் பொருட்டு, திருட்டு, பரத்தமை நடைபெறுகிறது என்பதையும், கடன் வாங்கி வாழ்க்கை நடத்தித் தற்கொலை செய்த குடும்பத்தின் நிலையையும், கந்து வட்டியினால் மக்கள் படும் அவலங்களையும் தன் படைப்பு வழி, பதிவு செய்துள்ளார் தமயந்தி.

## அடிக்குறிப்புகள்

1. தே.இராஜகோபாலன், பொருளியல் ஆய்வு, ப. 3.
2. மேலது., ப. 1.
3. கூற்று எடுத்தாள்பவர்கள், எஸ்.வி.பாலசுப்பிரமணியன், த.ச. செல்லதுரை, நுண்ணியப் பொருளியல், ப. 2.
4. கூற்று எடுத்தாள்பவர்கள், மேலது, ப. 2.
5. கூற்று எடுத்தாள்பவர்கள், எஸ்.வி.பாலசுப்பிரமணியன், த.ச.செல்லத்துரை, மு.கூ.நூ.,ப. 4.
6. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும், ப. 101.
7. கூற்று எடுத்தாள்பவர்கள், எஸ்.வி.பாலசுப்ரமணியன், த.ச.செல்லத்துரை, நுண்ணியப் பொருளியல், ப.2.
8. கூற்று எடுத்தாள்பவர்கள், பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், மொ.பெ.ஆ., ஜெ.நாராயணன், ப.22.
9. Ronald, W.Smith, Sociology, An Introduction, p. 147.
10. அன்னம், இறையியல் சிற்றேடு-5, ப. 9.
11. எஸ்.டி.செல்வராஜ் (தொ.ஆ.), அல்போன்ஸ் (க.ஆ.), வறுமை ஒழியட்டும்! வாழ்வு மலரட்டும்! புத்துலகம் படைக்கவே, ப. 129.
12. David C. King, Marvinkoller, Foundation of Sociology, p. 104.
13. James, B.Makee, Sociology A Study of Sociology, p. 196.
14. George Ritzer, Sociology, p. 226.
15. Ronald, W. Smith, Sociology - An Introdution, p. 147.
16. S.A.Donge, Op.Cit, p. 104.
17. கூற்று எடுத்தாள்பவர்கள், பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், மொ.பெ.ஆ., ஜெ.நாராயணன், ப. 22.
18. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், ப. 62.
19. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 40-42.
20. மு.இராசேந்திரன், அய்க்கண் நாயர்களில் வரதட்சணைக் கொடுமை 1994, ஆய்வுக் கோவை தமிழண்ணல் க.ப. அறவாணன் (ப.ஆ.), ப. 1844.
21. சேதுமணி, மொழி என்னும் பெருவரம், ப. 22.
22. தமயந்தி, வாக்குமூலம், ப. 33, 35.
23. பெண்ணிய நோக்கில் அம்பையின் சிறுகதைகள், ப. 55.
24. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.எண். 143.
25. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 41.
26. மேலது, ப. 44.
27. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், பக். 76, 77.
28. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 22.
29. திருக்குறள், எண். 1041.

30. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 47.
31. மேலது., ப. 48.
32. மேலது., ப. 24.
33. தமயந்தி, வாக்குமூலம், ப. 25.
34. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 89.
35. பாரதியார் கவிதைகள், ப. 150.
36. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-10, ப. 404.
37. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 545.
38. தமயந்தி, வாக்குமூலம், ப. 26.
39. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 95.
40. மேலது., ப. 45.
41. மேலது., ப. 17.
42. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 887.
43. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 139.
44. மேலது., ப. 139.
45. திருக்குறள், கு.எண். 400.
46. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 13.
47. மேலது., பக். 84-85.
48. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.எண். 111.
49. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 23.
50. தமயந்தி, வாக்குமூலம், பக். 105, 106.
51. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், பக். 105, 112.
52. தமயந்தி, வாக்குமூலம், ப. 22.
53. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், ப. 45.
54. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 32.
55. தமயந்தி, தமயந்தியின் சிறுகதைகள், ப. 30.
56. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 141.
57. தமயந்தி, வாக்குமூலம், ப. 55.
58. சீ.இராமச்சந்திரன், மலையின மக்களின் வறுமை சில ஆய்வுக் குறிப்புகள், ப. 13.
59. தமயந்தி, வாக்குமூலம், ப. 82.
60. தமயந்தி, சாம்பல் கிண்ணம், பக். 77, 79.

# இயல் – 4

# சாதி சமயமும் சமூக மொழியும்

## 4.0 முன்னுரை

மக்களிடையே வேற்றுமையுணர்வினை உண்டாக்கும் சாதிப் பாகுபாடு இந்திய நாட்டின் மிகப்பெரும் சாபக்கேடு எனலாம். ஒவ்வோர் இந்தியனும் சமய, வர்க்க வேறுபாடுகளோடு சாதி முத்திரையும் குத்தப்பட்டே பிறக்கிறான். சமயத்தையும் வர்க்கத்தையும் மனிதன் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் சாதியை மாற்றவியலாது; அது நிரந்தரமானது. பொருளாதாரம், அரசியல், சமுதாயம், கலாச்சாரம் ஆகிய எல்லாத் தளங்களிலும் சாதியுணர்வு ஊடுருவி, இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிக்கிறது.

இச்சாதி, மதம் என்ற கருத்தாக்கம் தமயந்தியின் படைப்புக்களில் இடம்பெறும் விதத்தை ஆராய்வது அவசியமாகிறது. 'சாதி சமயமும் சமூக மொழியும்' என்ற இவ்வியல், சாதி தீண்டாமை மற்றும் மதம் குறித்து விளக்குகிறது. கிறித்தவ தலித் மக்கள் ஆலயத்தில் ஒடுக்கப்படும் முறைமையினையும், கிறித்தவ தலித் மக்கள் படும் இன்னல்களையும் எடுத்துரைக்கிறது. மேலும் கிறித்தவ சீர்திருத்தத் திருச்சபையின் செயல்பாடு குறித்தும், கிறித்தவ நிறுவனங்களின் செயல்பாடுகளும், படைப்பாளர் தரும் சிந்தனைகளையும் விளக்கும் நோக்கில் இவ்வியல் அமைகிறது.

## 4.1 சாதி – விளக்கம்

சாதி என்பதற்குப் பல்வேறு விதமான விளக்கங்கள் கூறப்படுகின்றன.

> **"சாதி என்ற சொல் (Caste) இனம், மரபுக்குழு, வகை என்பவற்றைக் குறிக்கின்ற காஸ்டா (Casta) என்ற போர்த்துக்கீசியச் சொல்லில் இருந்து வந்ததாகும். முதன் முதலில் 1563–இல் கார்சியா டி ஒரேட்டா என்பவர்**

இந்தச் சொல்லை ஒரு வரையறைக்கு உட்பட்ட பொருளில் சாதி என்று கையாண்ட பிறகே வழக்கிற்கு வந்தது என்று சாதி என்ற சொல்லின் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் ஹட்டன் (Hutton) என்ற சமூகவியல் அறிஞர்''[1]

''சாதி என்பது இரண்டு தனிப்பண்புகளைக் கொண்ட ஒரு சமூகக் குழு, ஒன்று சாதியின் உறுப்பினராகும் தகுதி, அந்தச் சாதியில் பிறந்தவருக்கும் பிறக்க இருக்கின்றவருக்கும் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது ஒரு சாதியின் உறுப்பினர்கள் அந்தச் சாதிக்கு வெளியே திருமணம் செய்ய முடியாதவாறு சமூகக் கட்டுப்பாடுகளால் பிணைக்கப்பட்டுள்ளனர்''[2]

''சாதி என்பது ஒரு அமைப்பு முறை. இந்த அமைப்பில் ஒரு ஆண் அல்லது ஒரு பெண் எந்தவொரு குறிப்பிட்ட குழுவில் பிறந்தனரோரா, அக்குழுவின் மூலமாக அவர்களுக்குச் சமூக பிரதிநிதித்துவம் வழங்கப்படுகிறது; சமூகப் படிநிலை வரிசையில் ஒவ்வொரு குழுவுக்கும் குறிப்பிட்ட நிலைபாடு வழங்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கென ஒத்துக் கொள்ளப்பட்ட குறிப்பான தொழில் அல்லது தொழில்கள் உள்ளன. அக்குழுவிற்குள் மட்டுமே ஒருவன் திருமணம் செய்து கொள்ள முடியும். சமபந்தி போஜனம் (ஒன்றாக உண்ணுதல்) போன்ற நெருக்கமான சமூக உறவுகளை அக்குழுவுக்குள் மட்டுமே மேற்கொள்ள முடியும். இக்குழுவானது கட்டுப்பாடானதொரு குழுவாகும். தனி உறுப்பினர்களுக்கென வரையறுக்கப்பட்ட நடத்தை விதிகளைக் கொண்டது; தனி உறுப்பினர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவல்லது; குழு அதிகாரத்தை மீறுபவர்களைக் குழுவிலிருந்து நீக்குவதற்குரிய உரிமைகளைப் பெற்றது; இப்படியொரு குழுவில் பிறந்த

ஒருவன் தன் வாழ்நாள் முழுவதும் அக்குழுவின் உறுப்பினன் ஆவான். சட்டபூர்வமாக முழுவதும் அக்குழுவின் உறுப்பினன் ஆகான். சட்டபூர்வமாக வேறொரு குழுவில் ஒருவன் தன்னை இணைத்துக் கொள்ள முடியாது.”[3]

“சாதி என்பது ஒரு சமூகத்தில் (மனிதக் குழுமத்தில்) வாழும் மக்களை, அச்சமூகத்தின் பாரம்பரியத்துக்கேற்ப, அதிகார வன்முறை நெறியில் குழுக்களாக வகுத்துக் கொள்வதாகும். அதாவது அவர்களிடையே அசமத்துவத்தை (In equality) நிலைநாட்டும் சமூக அதிகார வைப்பு முறையாகும். இதனைச் சமூகவியலாளர் நிறுவனமாக்கப்பட்ட (சமூக) அசமத்துவ நிலையாமை (Institutionalized Inequality) என்பர்.”[4]

“அகமணம் வாயிலாக மக்களைக் குறிப்பதும் வரையறுக்கப்பட்டதுமானத் தனித்தனி அலகுகளாக்கி எந்த ஓர் அலகும் மற்ற வேறு எந்த ஓர் அலகோடும் புனைவதிலிருந்தும் தந்திரமாகத் தடுப்பது இந்தியாவில் சாதி என்பதன் பொருளாகும். அதாவது அகமணமே சாதிக்குரிய தனித்தனியான ஒரே இயல்பு என்பது தவிர்க்க முடியாத முடிவாகப் பெறப்படுகின்றது.”[5]

மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்து சாதி என்பது அகமணம், பிறப்பு, தொழில் ஆகியவற்றின் மூலம் மனிதனிடையே புகுந்தது என்பதும், சாதி ஒன்றே சமூகத்தைப் பகுத்துப் பார்க்கும் நெறியுடையது என்பதையும் அறிய முடிகிறது.

### 4.2 சாதி தோற்றமும் வளர்ச்சியும்

இந்தியச் சமூகத்தில் சாதிகளின் தோற்றத்தைப் பற்றி இரண்டு கருத்துக்கள் நிலவுகின்றன. புராணங்களிலும், மனு நெறிகளிலும் சாதிகள் இருந்ததாகக் கூறுபவர்களும் உண்டு. ஆரியக் கலப்பிற்கு முன்பே திராவிடப் பண்பாட்டில் சாதியம் இருந்தது என்று நம்புகிறவரும் உண்டு.

> ‘‘கில்பர்ட் ஸ்லேட்ஸ் போன்ற சமூகவியல் அறிஞர்கள், இந்தியப் பண்பாட்டில் திராவிடக் கூறுகளைப் பற்றி ஆராய்ந்ததில் இந்தியாவின் வடபகுதியைக் காட்டிலும் தென்பகுதியில் சாதி செல்வாக்குப் பெற்றுள்ளதை வைத்து, ஆரியக் கலப்பிற்கு முன்பே திராவிடப் பண்பாட்டில் சாதி இருந்தது என்றும், பழந்தமிழ் இலக்கியங்களில் நிலப்பிரிவுகள் அடிப்படையில் பல்வேறு தொழில்களைச் சார்ந்த மக்களின் வாழ்வில் இடம்பெற்றுள்ள வகையில் சாதிப் பிரிவுகளின் தோற்றத்திற்கானச் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன என்றும் கருதுகின்றனர்.’’[6]

இவ்வாறு இந்தியாவிலும், தமிழகத்திலும் சாதியின் தோற்றம் பற்றி ஆராய்ந்தவர்களில் பெரும்பான்மையோர் இங்கு ஏற்கனவே உருவாகியிருந்த தொழில் பிரிவுகள் ஆரியர் வருகைக்குப் பின் சாதிப் பிரிவுகளாக மாற்றம் பெற்றனவென்று கருதுகின்றனர். இக்கருத்துப் பற்றிய விவாதம் அறிஞர்களிடையே இன்றும் நடைபெற்று வருகின்றது. தொடக்ககாலச் சமுதாயத்தில் குலம் அகமணமுறையை, நீக்கம் செய்ததால் குலத்துக்குள் மணம் என்பது மாறி, குலங்களுக்குள் ஏற்படும் புறமண முறை (Exogamy) குலங்கள் பல சேர்ந்து குலக்குழுவாக மாற்றம் பெறக் காரணமாக அமைந்தது எனலாம்.

சமுதாயத்தின் ஒரு பாதி இனக்குழு இணைப்புக்களாலும், மற்றொரு பாதி தொழிலமைப்புகளாலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்பர்.

குலக்குழு தனது சுய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டு வாழ்ந்ததால் அவற்றின் உறவுகள் அகமண முறையைச் சுற்றியே அமைந்தன; அதாவது ஒரு குலக்குழு பிற குலக்குழுக்களுடன் எந்தவிதத் தொடர்பும் இல்லாதவாறு பொது வழக்காறுகளைப் பெற்று அதன் இயக்கம் அதற்குள்ளேயே அமைந்துவிடுகின்றது. இந்த இயக்கம் நீண்ட காலம் நீடித்துக் கெட்டியாய் தேங்கிப் போவது சாதியின் தோற்றத்திற்குக் காரணம் ஆகின்றது. இதனாலேயே காரல் மார்க்ஸ்,

> **“சாதி என்பது குல இனக்குழு அமைப்பின் எஞ்சிய வடிவங்களில் ஒன்று என்றும், அக்குல இனக்குழு வடிவிலேயே யாவற்றிலும் கடைக்கோடியான கண்டிப்பான வடிவத்தை மேற்கொள்கிறது என்றும் கூறுவர்”**[7]

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து இந்தியாவில் இருந்த குலக்குழுக்களே சாதியாக மாற்றம் பெற்றன என்பதையும், இந்தியாவில் குலக்குழுக்கள் இருந்த இடமெல்லாம் சாதி இருந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

### 4.2.1 சாதியும் வருணமும்

வருணம் என்ற சொல் ரிக் வேத காலத்தில் நிலவிய நால்வகைப் பிரிவுகளையும் குறிக்கிறது. இதற்கு நிறம் என்று பொருள். வெண்மை நிறம், பார்ப்பனர்களோடும், செம்மை நிறம் சத்திரியரோடும், மஞ்சள் நிறம் வைசியரோடும், கருமை நிறம் சூத்திரர்களோடும் தொடர்புபடுத்தப்பட்டன.

புராணங்களிலும் மனுநெறிகளிலும் வருணப் பிரிவுகளைப் பற்றிக் குறிப்புகள் காணப்படுகின்றன. ரிக் வேத காலத்தில் நிலவிய வருணாசிரம தர்மம். சாதிப் பிரிவுகளையும், ஒரு மனிதனின் வாழ்வு நிலைகளையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பாகும். ஆசிரம விதிப்படி ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் பிரம்மச்சரிய ஆசிரமம், கிருஹஸ்த ஆசிரமம், வனப்பிரஸ்த ஆசிரமம், சன்யாச ஆசிரமம் என்ற நான்கு நிலைகளைக் கடக்கின்றனர். வருண தர்மம் ஒரு மனிதனின் இயற் பண்புகளின் அடிப்படையில் அவனது சமூக இடத்தை நிர்ணயிக்கின்றது. அதன்படி கேள்விகள் இயற்றவும் வேதங்கள் ஓதவும் விழைகின்ற பார்ப்பனர்கள் அறிவார்ந்த வளர்ச்சி பெற்று, சமூகத்தின் உயரிய இடத்தையும் மக்களைக் காத்துச் சமூக ஒழுங்கினை நெறிப்படுத்தும் சத்திரியர்கள் இரண்டாம் இடத்தையும், உற்பத்தி முறைகளில் பங்கேற்று வணிகம் செய்யும் வைசியர்கள் மூன்றாம் இடத்தையும், ஏவல் தொழிலைச் செய்யும் சூத்திரர்கள் நான்காம் இடத்தையும் பெற்றனர்.

இவ்வருண அமைப்பு இறுக்கமான கட்டமைப்புகளை உடையது. இந்த வேதகால வருண அமைப்புக் கொள்கை, வருண அமைப்பிற்கு உட்பட்டவர்கள் உட்படாதவர்கள் என்று பிரிக்கிறது. பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் முதலியன நான்கு பிரிவினரும் வருண அமைப்பிற்கு உட்பட்டவர்கள், இந்திய மக்களில் தீண்டத்தகாதச் சாதியினரும், மலைவாழ் பழங்குடி இனத்தவரும் வருண அமைப்பிற்கு உட்படாதவர்கள். வேத காலத்து நால் வகைப் பிரிவுகளுக்கும் இன்று பயன்டுத்தப்படும் வருணம் என்ற சொல்லுக்கும் தொடர்பில்லை. பல உட்பிரிவுகளை உள்ளடக்கிய சாதிகளின் குழுக்களையே இன்று வருணம் என்ற சொல் குறிக்கிறது.

> **"18, 19–ஆம் நூற்றாண்டில் வருணம், சாதி என்ற சொற்களைத் தவறான ஒரே பொருளில் வழங்கத் தலைப்பட்டதனை அறிஞர் சுட்டியுள்ளார். சாதிப் பாகுபாட்டின் பிறப்பிடம் சமஸ்கிருத வேதங்களே. அதனைப் பேணி வளர்த்தவர் பிராமணர்களே என்பதில் சிறிதும் ஐயமில்லை. குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட சாதிதான் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு கண்டிப்பாகக் கடைபிடிக்கப்பட்டதால் சாதி என்னும் அமைப்பு வளர்ந்து விட்டது. உலகில் வேறெங்கும் காண முடியாத அமைப்பு இங்குள்ளது."**[8]

ஆரியர்களும் ஆரியர் அல்லாதவர்களுக்குமிடையிலான நிற வேற்றுமைதான் தொடக்கக் காலச் சமூக வேற்றுமையின் அடிப்படையாக இருந்தது. பிற்காலத்தில் தீண்டாமை (தொடக்கூடாதது) முதலியவை உள்ளிட்ட வெளிப்படையான சாதி வேற்றுமை வளர்வதற்கு வேண்டிய அடிப்படை இந்த வர்ண வேற்றுமையிலேயே அடங்கி இருந்தது.

> **"சிந்துவெளி நாகரிகத்தை அழித்து ஒரு புதிய நாகரிகத்தை உருவாக்கிய ஆரியர்கள், அடிமைகள், எசமானர்கள் என்ற வர்க்க வேறுபாட்டிற்குப் பதிலாக தொடக்கத்தில் நான்கு வர்ணங்களும், பிறகு எண்ணற்ற சாதிகளும் உப சாதிகளும் அடங்கிய ஓரமைப்பை உருவாக்கினர் என்பதை வரலாற்றாய்வாளர்கள் தெளிவாக்கியுள்ளனர்."**[9]

இந்தியாவில் பிறந்த தனிமனிதனின் சாதி, தந்தைவழிப் பிறப்பினாலேயே அமைந்துவிடுகின்றது. ஒரு சாதியைச் சேர்ந்தவர், பிறிதொரு சாதியில் மணஉறவு கொள்ளக் கூடாது; உணவு உண்ணுவதிலும், நீர் அருந்துவதிலும் கூடக் கட்டுப்பாடு தோன்றியது. இந்தியாவைப் பொறுத்தவரை சாதி வாழ்க்கையின் வழிமுறை ஆகிவிட்டது.

> **“இன்றைய இந்தியாவில் கிட்டத்தட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சாதிகள் காணப்படுகின்றன”**[10]

இங்குச் சாதிகளின் எண்ணிக்கை என்பதைவிட அதன் படிநிலை அமைப்புதான் பிரச்சனைக்குரியதாகின்றது.

**4.3 சாதி சமூக மாற்றம்**

சாதிப் படிநிலை அமைப்பு இந்திய மரபு வழிச் சமூக அமைப்பில் நெடுங்காலமாகச் செல்வாக்குப் பெற்றிருந்த சாதி, ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினரின் சமூகத் தரநிலையை நிர்ணயித்தது. மேல் உயர் சாதியினர், உயர் சாதியினர், கீழ்ச்சாதியினர், தீண்டாத சாதியினர் என்று நான்கு பிரிவுகள் மடி (Purity) விழுப்பு (Pollution) என்ற அளவை விதிகளால் பிரிக்கப்பட்டன.

படிநிலை அமைப்புள்ள எந்தச் சமூகத்திலும், மேல்நோக்கிய சமூக இடமாற்றம் பெற மக்கள் விரும்புவது இயற்கை. இந்தியச் சமூகத்தின் சாதிப் படிநிலையில் இத்தகைய இடமாற்றம் கடினமாகும்; இல்லாததும் ஆகும். ஒரு மனிதன் ஒரு சாதியில் பிறந்து அதற்குள்ளேயே மடிந்தும் போகிறான். எனவே, ஒரு மனிதன் திறமைகளாலும், தகுதிகளாலும் அவனது சாதிக்குரிய சமூக இடத்தை மாற்றவே முடிவதில்லை.

விடுதலைக்குப் பின் மேலைக் கல்வி முறைகளும், தொழில் மயமாதலும், நகர்மயமாதலும், இயக்கங்களின் செல்வாக்கும் மக்களிடையே மேல்நோக்கிய இடமாற்றம் பெறும் ஆர்வத்தைத் தூண்டின.

> **“ஒரு தனி மனிதன் அல்லது ஒரு சமூகம் இட மாற்றத்தைத் தங்கள் நோக்கமாகக் கொள்ளுகின்ற போது சமூகத்தின் மேல்நிலைப் பிரிவினரை மேற்கோள் குழு(Reference Group)வாகத் தெரிவு செய்து அவர்களைப்**

**பின்பற்றுகின்றனர். இந்தியச் சமூக அமைப்பில் சாதி அடிப்படையில் பார்ப்பனர் மேல் நிலையினராகக் கருதப்படுகின்றனர். எனவே பார்ப்பனச் சாதி மேற்கோள் குழுவாகக் கொள்ளப்பட்டுப் பிற சாதியினரால் பார்ப்பனரின் பழக்க வழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன**"[11]

என்கிறார் ஒரு சமூகவியல் அறிஞர்.

பார்ப்பனரின் மொழி, சமையல் முறை, ஆடை, நகைகள் மற்றுமுள்ள வாழ்வியல் முறைகள் ஆகியவற்றைப் பிற சாதியினரும் பின்பற்ற இயலாததால் சமூகத்தில் பார்ப்பனர்களின் பழக்க வழக்கங்கள் பரவலாகி வருகின்றன. இதன் காரணமாகச் சாதிப் படிநிலையில் இடமாற்றம் ஏற்படவே இல்லை. தன்னளவில் ஒரு சாதியாக இல்லாமல் பல சாதி உட்பிரிவுகளைக் கொண்டுள்ள சாதிக் குழுவாக இயங்கும் ஒவ்வொரு வருணங்களுள்ளும், மேல்நோக்கிய இடமாற்றம் நிகழுகின்றது. இதனால் சாதி உட்பிரிவுகளில் மேல், கீழ் என்ற பாகுபாடு உண்டாகிறது. எனவே ஒரு தனிமனிதனால் சமூக இடமாற்றம் பெற முடியாது என்பதால் குழுக்கள் ஒவ்வொன்றும் குழு அளவில் இன்று இடமாற்றம் பெற முயல்கின்றபோது சாதியம் இன்னும் வலிமை பெறுகிறது.

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வியல் முறைமைகளும், அவனது சாதியினருக்குரியனவாகவே அமைகின்றன. வழக்காறுகளும் சமயச் சடங்குகளும், பிறப்பு, திருமணம், இறப்பு ஆகியவற்றில் சாதிக்குரிய சடங்குகளும் ஆகிய எல்லாவற்றையும் 'சாதி உறுப்பினர்' என்ற தகுதி நிர்ணயிக்கிறது. எனவே ஒவ்வொரு சாதியும் தன்னளவில் தனித்து

இயங்கக்கூடிய சமூகக் கூறாக விளங்குகிறது. மத மாற்றங்களும் கூட ஒரு மனிதனின் சாதியை அழிக்க முடிவதில்லை.

சாதியை ஒழிப்பதற்கான முயற்சிகள் நீண்ட காலமாகவே எடுக்கப்பட்டு வந்தன; சீர்திருத்த இயக்கங்கள் இதில் தீவிர கவனம் செலுத்தின. சாதிப் பிரிவுகளை நீக்குவதற்குக் கலப்புத் திருமணம் ஒரு வழியாகக் கருதப்பட்டது. 1862-இல் (கேசவசந்திரசென்) கலப்புத் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தார். 1893-இல் அன்னிபெசண்ட் தலைமை ஏற்ற பிறகு சென்னை பிரம்மஞான சபை சாதி ஒழிப்பிற்காகப் போராடியது.

ஆங்கில அரசு 1860-இல் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று இந்திய அரசியல் சாசன நிதி ஒன்றைக் கொண்டு வந்தனர். ஒரு பெரிய மாற்றத்திற்கான தூண்டுதல் இந்தியச் சமூகத்தில் ஏற்பட்டது. உயர் கல்வி வாய்ப்புகளும் அரசுப் பணிகளும், நகர்மயமாதலும் புதிய சிந்தனைகளும் உருவாயின. 1916-இல் நீதிக்கட்சி, பார்ப்பனரல்லாதார் நலனுக்காகப் பார்ப்பனச் செல்வாக்கை எதிர்த்துப் போராடியது. காந்தியடிகளின் தலைமைக்குப் பிறகு, விடுதலை இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்காகப் போராடியது.

பொதுச் சாலைகளைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்தக்கூடாது என்பதை எதிர்த்து, திருவிதாங்கூரில் 1924-இல் வைக்கம் என்னுமிடத்தில் போராட்டம் நடைபெற்றது. 1929-இல் தீண்டாமை ஒழிப்பு மாநாடு ஒன்று சென்னையில் கூடியது. இறுதியில் 1950-களில் இந்திய அரசியல் அமைப்பில் சமத்துவக் கொள்கை ஏற்கப்பட்டது. சட்டத்தின் முன் இந்திய மக்கள் அனைவரும் சமம் என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது.

**4.4 தமயந்தி படைப்புகளில் சாதியச் சிக்கல்கள்**

சமூக மாற்றத்தின் விளைவுகளைச் சமூகம் சந்தித்த போதிலும், ஒவ்வொரு தனிமனிதனும் அவரவர் சாதிக்குரிய உறுப்பினராகவே தங்களை இனம் காணும் நிலை இன்றும் நீடித்து வருகிறது. சாதி ஒரு தனிமனிதனுக்குச் சமூகப் பாதுகாப்பளிக்கிறது; ஒரு பெரிய சமூகக் குழுவோடு தொடர்புடையவர்கள் என்ற இன உணர்வைத் தோற்றுவிக்கிறது; சாதி என்பது பிறப்பை அடிப்படையாகக் கொண்டது; அகமண முறையை ஏற்றுக் கொண்டது; விருப்பம், தகுதி அடிப்படையில் அல்லாமல் பிறவியின் அடிப்படையில் தொழில் அமைவது; வேலைப் பிரிவினையின் வடிவம், உற்பத்தி உறவின் வெளிப்பாடு ஒரு குறிப்பிட்ட உணவு முறையைக் கட்டாயமாக்குவது; சமூக அமைப்பில் பல படிநிலைகளைத் தோற்றுவிப்பது; தனிமனித ஒழுக்கங்களைக் கட்டுப்படுத்தக்கூடியது. பொதுநலன்களை மக்கள் அனைவரும் அனுபவிப்பதைத் தடை செய்வது எனலாம்.

இந்தியாவில் சாதிப்பாகுபாடு அதிகமாகக் காணப்படுவதையும், கிறித்தவ மதத்தில் அளவுக்கு அதிகமாகக் காணப்படுவதையும் நிழலிரவு நாவலில் ஒரு வரலாற்று நிகழ்வாகப் பதிவாக்கியுள்ளார் தமயந்தி. 1745-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் தேதியில் புதுச்சேரி சம்பாக் கோயிலில் நடந்த ஒரு சம்பவம், கோவிலில் தடுப்புச் சுவர் கட்டி இந்தப்புறம் மேல் சாதியர்கள், அந்தப்புறம் தலித்துக்கள் என்ற நிலை காணப்பட்டது. வெள்ளைக்காரப் பாதிரியிடம் தலித்துக்கள் முறையிட்டார்கள். உடனே பாதிரியார்,

> **“கோயிலுக்கு நடுவில் கட்டப்பட்டிருந்த சுவரை இடியுங்கள். எனக்குக் கிறித்தவர்களில் பேதம் இல்லை. எல்லாம் என் மக்களே!”**[12]

என்றார். தலித்துக்கள் சுவரை இடித்தார்கள். ஆனால் மேல்சாதிக்காரர்கள் கோவிலுக்குள் வருவதைப் புறக்கணித்தார்கள். பாதிரியாரை இழிவாகப் பேசிக் கொண்டு தகராறு செய்கிற மேல்சாதிக் கிறித்தவர்களை அடித்துப் பிடித்து சிறைக்குள் தள்ளும்படி ஆளுநர் உத்தரவைப் பிறப்பித்தார். அதன் பின்னரும் தங்கள் ஆசாரத்தைக் காப்பாற்றிக் கொண்டனர். மேல்சாதிக் கிறித்தவர்கள். இவற்றை நிகழ்வாகத் தரும் தமயந்தி கிறித்தவர்களைக் கிறித்தவத்திற்குத் திரும்பச் சொல்கிறார்.

சமூகத்தில் உயர்சாதிக்காரர்களுக்கும் தாழ்ந்த, சாதிக்காரர்களுக்கும் இடையே சண்டை நடப்பது வழக்கம் என்பதைத் தெரிவு செய்யும் வகையில் ‘விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்’ என்ற கதையில் ஒரு நிகழ்வு நடைபெறுகிறது. பள்ளிக்கூடத்திலுள்ள கிணற்றில் உயர்சாதிக்காரப் பையன்கள் சிறுநீர் இருந்து வைக்கிறார்கள். அதைக் கீழ்சாதிப் பையன்கள் குடித்ததால் குடலைப் புடுங்குகிற வாடையாயிற்று. இதை புகார்க் கொடுத்ததால், சாதிக் கலவரம் ஊரில் நடைபெறுகிறது.

### 4.4.1 உயர் சாதியினர் ஆதிக்கம்

‘நிழலிரவு’ நாவலில் கார்மேல் பாட்டி,

> **“ஊசிக் கோபுர கோயில்ல அப்பல்லாம் பிள்ளைமார் ஆதிக்கம் ஜாஸ்தி. ரத்தினா மேல்ஜாதிக்காரங்கதான் முன் வரிசையில் சேர்ல உக்காரலாம்”**[13]

என்றார். மேலும்,

> **“நாடார் சாதி மக்கள் இடைச் சாதியாக இருந்தாலும் கீழ்ச்சாதியோடுதான் சேர்க்கின்றனர். திருவாங்கூரில் பிராமண சாதியினர் பட்டினியாக இருந்தாலும் இடைச்சாதி, கீழ்ச்சாதி மக்கள் தொட்ட சாப்பாட்டைச் சாப்பிட**

மறுக்கின்றனர். இன்னும் சில இடங்களில் மேல்ச்சாதி வீட்டுப் பெண் சாப்பாடு தயார் என்று கூறியவுடன் மற்றைய சாதி மக்கள் ஏழு, எட்டு கிலோ மீட்டருக்கு தள்ளிப் போகின்றனர். மீண்டும் முதலாளியின் மனைவி வீட்டிற்குள் போனவுடன் மறைந்து நின்றவர்கள் வருகின்றனர். மறைந்து நின்றவர்கள் வருவதற்குள் சோற்றை ஒரு குழியில் காக்காவிற்குப் போடுகின்றனர். மனிதனை மனிதனாக நடத்தாமல் இந்த இடங்களில் மெஷினரிங்க அதிக வேலை செய்கின்றனர்.''[14]

என்பதைத் தம் படைப்பு வழி பதிவு செய்துள்ளார் தமயந்தி.

### 4.4.2 திருவிழாக்களில் தீண்டாமை

திருவிழாக்களிலும் தீண்டாமைக் கொடுமை உண்டு என்பதையும் தமயந்தி பதிவு செய்கிறார்.

``தேரும் சப்பரமும் பிள்ளைமார் சாதியினரும், முதலியார்களும் நடப்பிக்கின்றனர். கொடியும், தீவெட்டியும் நாடார் சமுதாயத்தார் எடுத்து நடப்பிக்கின்றனர். திருக்குடும்பத்தின் ஆலயத்தைச் சுற்றி இருக்கும் தெருக்கள் பிள்ளைமார், முதலிமார் தெருக்கள், இந்தத் தெருக்களில் இவர்கள் மட்டுமே சப்பரம், கொடி, தீவெட்டியெடுத்து திருநாளை நடத்துகின்றனர்''[15]

என்கிறார்.

### 4.4.3 ஆலயத்தில் தீண்டாமை

``ஆலயத்தில் பூசைக்கு உதவி செய்தல், அனைத்துப் பீடங்களையும் அலங்காரம் செய்தல், இலத்தீன் தமிழ்ப் பாட்டுப் பாடுதல் ஆகியவற்றை பிள்ளைமார், முதலியார் மட்டும் செய்கின்றனர்.''[16]

ஒடுக்கப்பட்ட மக்களான சக்கிலியச் சாதி மக்கள் அவர்கள் பூட்டன் காலத்தில் இருந்து கிறித்தவத்தில் இருக்கின்றனர். இம்மக்கள் கிறித்தவ ஆலயம் கட்ட இடமும், கட்டிட வேலையும் பார்க்கின்றனர். இம்மக்களை மேல்ச்சாதிக் கிறித்தவர்கள் மனிதர்களாக நினைக்க மறுக்கின்றனர். சக்கிலியச் சாதி மக்களில் ஒருவர் இறந்தால் ஆலயத்திற்குக் கொண்டு சென்று இறை வழிபாடு செய்யவும், தூம்பாவைத் தூக்க விடாமல் மேல்ச்சாதிக் கிறித்தவர்கள் மறுக்கின்றனர். ஐயர் சக்கிலியச் சாதி மக்களை ஆலயத்திற்கு வரக்கூறுகிறார்.

> **‘‘மேல்ச்சாதிக் கிறித்தவர்கள் சக்கிலியக் கிறித்தவன் பொணம் ஆலயத்திற்கு வந்தாலும், தூம்பாயை தூக்கினாலும் பொணம் விழும் என்று மிரட்டுகின்றனர்’’**[17]

ஆடு, மாடுகளை மந்திரிப்பதிலும், மேல்ச்சாதிக் கிறித்தவர்களுக்கு மந்திரிச்ச பின்னர் கடைசியில் தான் சக்கிலியச் சாதி மக்களுக்கு மந்திரிக்கின்றனர். முதலில் மந்திரிக்கச் சொன்னால் அங்கு கலவரம் வருகின்றது என, சாதிக் கிறித்தவர்களின் தனி முகங்களை வெளிப்படுத்துகிறார்.

### 4.4.4 சாதி வைத்துப் பெயரிடல்

சிலர் பெயருக்குப் பின்னால் சாதியில் பெயரை வைப்பது வழக்கம். ‘மல்லியும் ஒரு பாட்டில் பீரும்’ என்ற கதையில் வரும் கணேசன் தன் சாதியின் பெயரைத் தன் பெயரோடு இணைத்துக் கொள்கின்றார். தன் சாதிக்கேற்றத் தொழிலையும் செய்கிறான். அவன் தன்னை அறிமுகம் செய்யும் போது,

> **‘‘என் பெயர் கணேசன் ஆசாரி. ஜாதிப் பெயரை போடுவது எனக்குப் பிடிக்காத ஒன்று. ஆனால் இப்போது எதற்காகச் சொல்கிறேன் என்றால்**

**சாதியை மையமாக வைத்துத்தான் தொழில் செய்ய ஒரு மனிதனுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**"[18]

என அதனை வெளிப்படுத்துகிறார்.

'நிலை' என்ற கதையில் 'வசந்தி' நாயர் சாதியைச் சார்ந்தவள்; எனவே அவள் வீட்டைச் சொல்லும் போது 'நாயர் வீடு' என்று தான் சொல்வார்கள் எனத் தொடங்கி,

"**நாயர் வீட்டிலிருப்பதற்கு ரேடியோ அலறுவது அடையாளம். நாயர் மகள் தடுப்புக்குக் கீழே துணி காயப்போட்டுக் கொண்டிருந்தாள். நாயர் வாசித்துக் கொண்டிருப்பார்.**"[19]

என்றெல்லாம் அவருடைய பெயரைச் சொல்லாது அவருடைய சாதிப் பெயரைச் சொல்லி அழைக்கின்றனர்.

'சமையலறையில் ஒரு கனவு' என்ற கதையில் முத்துவிடம் கடையிலிருந்து எலுமிச்சம்பழம் வாங்கி வரச் சொல்கிறாள் செல்வியின் அம்மா. அவள் கடைக்காரரின் பெயரைச் சொல்லாது அவரது சாதியின் பெயரைத்தான் சொல்கிறாள்.

"**நாடார் கடைல போய் லைம் வாங்கிட்டு வா**"[20]

என்று கூறுகிறாள்.

### 4.4.5 நிராகரிக்கப்பட்டக் காதல்

மனித இனங்கள், மனங்களால் ஒருமித்திருந்தாலும், சாதி, மதப் பிரிவினைகளால் மாசற்ற காதலையும் மாசுபடுத்திவிடும் என்பதைத் தெரிவு செய்யும் விதத்தில் 'ஒரு பேனா அல்லது பெண்ணின் கதை' இடம்பெறுகிறது.

ஜோஸ்பின் என்ற பெண்ணை அவளது அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவன் காதலிக்கிறான். பின்பு வேறு சாதி என்ற காரணம் சொல்லி விலக்கி விடுகிறான்;

**''உங்க வீட்ல ஏத்துப்பாங்களா? சாதி வேற, குடும்பம் வேற எனக்கு நீதான் வேணும்''**[21]

என ஆழமான வார்த்தை பேசும் அவன், இயல்பாய் விலகிவிடுகிறான்.

**''நீரூற்று'' என்ற கதையில் விஜி என்ற பெண்ணிடம் தன் காதலைத் தெரிவிக்கிறான் ராசய்யா. ''அவள் அவனிடம் உன் சாதி என்ன? என் சாதி என்ன? நாங்க சட்டை போடுர சாதி, நீங்கள் சட்டைப் போட முடியாத சாதி? நாங்க ஆட்டுக் கறி திங்கிறவங்க, நீங்க பண்ணிக்கறி தின்னுருங்க என்று கூறி அவனது காதலை நிராகரித்து விடுகிறாள்.''**[22]

அவனை அடித்து இறுதியில் கொன்றுவிடுகிறாள்.

மேற்குறிப்பிட்ட பல்வேறு விதமானப் பதிவுகளைப் பதிவு செய்ததன் மூலம் சாதி குறித்த தனது சுய எண்ணங்களில் தனித்து நிற்கிறார் தமயந்தி.

### 4.5 மதம்

மதம் என்பதற்குப் பல்வேறு வகையான கருத்தாக்கங்கள் கீழே கூறப்படுகின்றன.

**''உலகத்தை அரசோச்சும் ஒரு பெரிய சக்தியுடன் தொடர்பு கொண்டு அதனுடன் இணைந்து வாழ முயலும் மனித வாழ்க்கையின் பகுதியே மதம்''**[23]

என்று ஃபிளெய்டெரர் (Pylaiderer) என்பார் இலக்கணம் வகுக்கிறார்.

**“ஆன்மாவிடம் உள்ள நம்பிக்கையே மதம்”**[24]

என்று டைலர் வரையறை செய்கிறார்.

**“மதம் என்பது ஆறு பரிமாணங்களைக் கொண்ட ஒன்றாகும். கோட்பாடுகள், ஐதீகங்கள், ஒழுக்க நெறிகள், போதனைகள், சடங்குகள், சமூக நிறுவனங்கள் மத அனுபவம் தரும் உந்துதல் அல்லது இயக்கப் பாட்டுயிர்ப்பு என்பனவே அந்த ஆறு பரிமாணங்களுமாம்”**[25]

என்று பேராசிரியர் நினியன் ஸ்மார் கூறுகிறார்.

தெய்வீகச் சக்திகளிடம் வைக்கின்ற நம்பிக்கையும், அந்த நம்பிக்கையோடு இயைந்த உணர்வுகளும் அந்த நம்பிக்கை வெளிப்படுத்துகிற நடவடிக்கைகளும் அமைந்த ஒரு தொகுதி மதம் எனப்படுகிறது. இது நம்பிக்கை, உணர்வுகள், நடவடிக்கைகள் ஆகிய மூன்று அம்சங்களைக் கொண்டிருக்கிறது.

### 4.5.1 மதத்தின் பணிகள்

மதம் தனிமனிதனைப் பொறுத்த அளவில் அவனைத் தெய்வீக சக்திகளோடு இணைத்து வைக்கிறது. இந்த இணைப்பிற்குப் பிறகு அவன் தெய்வீகச் சக்திகளைச் சார்ந்து தன் வாழ்வை அவற்றுடன் பிணைத்துக் கொள்கிறான்.

தனக்குத் துன்பங்களும் சிக்கல்களும் வரும்போது மனிதன் சமயத்தை நாடுகிறான். தெய்வீகச் சக்திகளை வணங்கும்போது துன்பங்களும், சிக்கல்களும் மறைந்து போகுமென மனிதன் நம்புகிறான்; இந்த நம்பிக்கையின்

காரணமாக அவன் துன்பங்களையும் சிக்கல்களையும் கண்டு மனம் வருந்துவதில்லை.

> **“சமயம் பொழுது போக்குச் சாதனமாகவும் அமைவதுண்டு. சிலர் வழிபாடு, சமய நடவடிக்கை, சமயக் கொள்கைப் பரப்பு முதலியவற்றில் ஈடுபட்டுப் பொழுதைக் கழிக்கின்றனர். கீழ்த்தர வர்க்க மனிதர்களுக்குப் பெரும்பாலும் வழிபாட்டுக் கூட்டங்களே பொழுதுபோக்குச் சாதனமாக அமைகின்றன”**[26]

என இலிசுட்டின் போப்டி என்ற அறிஞர் கூறுகிறார்.

### 4.5.2 கிறித்துவம்

கிறித்துவ சமயம் ஐரோப்பியர் இந்நாட்டிற்கு வருவதற்கு முன்பே வந்துவிட்டது. வணிகத் தொடர்புகளும், பண்பாட்டுத் தொடர்புகளும் இந்தியாவில் கிறித்துவத்தைச் சேர்த்தன. ஏசுநாதரே இந்தியா வந்து சென்றதான கதை உண்டு. எனினும் காலனியாட்சி வேரூன்றிய பிறகே இச்சமயம் இந்திய மண்ணில் நிறுவி உருக்கொண்டது. இந்தியா முழுமையும் கல்விப் பணிகள் மிகுதியாக நடைபெறுவதற்கு இந்தச் சமயம் வழி வகுத்தது. இந்திய மொழிகளில் ஓர் அறிவியல் வளர்ச்சியை இச்சமயத்தினர் ஏற்படுத்தியுள்ளனர். சமயம் பரப்பும் நோக்கில் பல கிறித்துவர் உயிர் துறந்திருக்கின்றனர்.

இவ்வாறாக 20–ஆம் நூற்றாண்டுகளில் சமய வரலாறு இந்தியாவில் பல வரலாற்றுத் திருப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. பேரரசுகளின் வாழ்வும் தாழ்வும் இந்தச் சமயங்களின் வீழ்ச்சிகளில் இருந்திருக்கின்றன. மக்கள் வாழ்வின் கட்டுப்பாடுகளையும், சடங்குகளையும் சமயங்கள் கொண்டவை. கடவுளை ஒத்துக் கொள்ளாத நாத்திகக் கருத்தும் தொடக்கக் காலத்திலிருந்தே

சொல்லப்பட்டிருக்கிறது. 20-ஆம் நூற்றாண்டில் சமய உலகங்களில் பல சீர்திருத்தங்களும் மாற்றங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

### 4.5.3 கிறித்தவமும் சீர்திருத்தத் திருச்சபையும்

#### 4.5.3.1 கிறித்தவம்

இயேசு பெருமான் வாழ்ந்த காலக்கட்டத்தில், மக்களது வாழ்வு நிலைகளுக்கு ஏற்ப அவர் பல கருத்துக்களை மக்களுக்குப் போதித்தார். நல்லவை எவை? தீயவை எவை? என மக்களுக்கு அறிவுரை கூறினார். எடுத்துக்காட்டாக,

> **‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்’’**[27]

> **‘‘பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது’’**[28]

மேற்கண்ட ஞான போதனைகளை இயேசு பெருமான் மக்களது நலனுக்காக உபதேசம் செய்தார். இந்த ஞான போதனைகளை எல்லாம் அவருக்குப் பின் பரப்பியவர்கள், அவரைத் தொடர்ந்து தொண்டாற்றிய திருத்தூதுவரும், திருத்தொண்டர்களும் ஆவார். அவரது வாரிசுகள் இந்த அறிவுரைகளைத் தொகுத்து அற்புதமான நூலாக்கி உலகுக்கு வழங்கினார்கள்.

அந்த நூலுக்கு ‘வேதாகமம்’ என்று பெயர். ‘பைபிள்’ என்றும் கூறுவார்கள். வேதாகமத்தைப் பின்பற்றி வாழ்பவர்களைக் ‘கிறித்தவர்கள்’ என்று அழைப்பர்.

மனித ஆத்துமாக்களை இயேசுகிறித்துவிடம் சேர்ப்பவன் அல்லது வழி நடத்துபவன் தான் கிறித்தவன். இந்தத் தொண்டு தான் கிறித்துவ அடியார்களின் திருத்தொண்டாகும்.

கிறித்தவ மார்க்கத்தைப் போதிக்கும் சபைக்குத் திருச்சபை என்றும், கர்த்தராகிய இயேசு கிறித்துவே அதை உருவாக்கியவர் என்றும், அதனுடைய ஆரம்பமும், முடிவும் இயேசு கிறித்துவே என்ற நம்பிக்கையோடும் இந்த மார்க்கத்தைப் பின்பற்றி வருகின்றனர்.

கிறித்தவ ஞான உபதேசங்களை உலக நாடுகள் அனைத்தும் ஏற்று அதற்கான கிளைகளைத் தொடங்கி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து வழி நடத்திச் செல்கின்றனர். இவர்களைத் தலைவர்கள் என்று அழைப்பர்.

மதத் தலைவர்கள் இறைவனுடைய வழிபாட்டிற்குரிய நிர்வாகப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

கிறித்தவ மதம் பல பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

1) ரோமன் கத்தோலிக்க இயக்கம் (Roman Catholic Institution)

2) புரொட்டெஸ்டண்டு இயக்கம் (C.S.I.)

3) பெந்தேகோஸ்தே (Pentecost)

4) யோகோவா சாட்சிகள் (Jehovah witness)

### 4.5.4 ரோமன் கத்தோலிக்க இயக்கம் (Roman Catholic Institution)

இயேசுவின் தாயாகிய மரியாளை வழிபட்டு அதன் மூலம் மகனிடம் வேண்டுதல் செய்வர். சிலை வழிபாடு உண்டு. அன்றாடம் செய்யும், பாவங்களைப் பாதிரியாரிடம் முறையிட்டு மன்னிப்புக் கேட்பர்.

### 4.5.5 புரொட்டெஸ்டண்டு இயக்கம் (C.S.I.)

சிலை வழிபாடு கிடையாது. தேவன் ஆவியாயிருக்கிறார்; எனவே, சிலையாக உருவகப்படுத்தி வணங்க மாட்டார்கள். பிதா, சுதன், பரிசுத்த ஆவி மூவரும் ஒருவரே என எண்ணிச் செயல்படுகிறார்கள். வழிபாடுகளில் அதிகமாகப் பரிசுத்த ஆவிக்கு முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள்.

### 4.5.6 பெந்தேகோஸ்தே (Pentecost)

பரிசுத்த ஆவியானவருக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். நகை அணிய மாட்டார்கள். வெள்ளாடை உடுத்துவார்கள்.

### 4.5.7 யோகோவா சாட்சிகள் (Jehovah witness)

பழைய ஏற்பாட்டின் காலத்தில் இருந்த யோகோவா தெய்வம் என்ற கருத்துடையவர்கள் இயேசுவைத் தெய்வமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இயேசுவை ஒரு சீடன் என்றுதான் நினைப்பார்கள்.

இப்பிரிவுகளில் ஒன்றான புரோட்டஸ்டாண்டு அதாவது சீர்திருத்தத் திருச்சபையைப் பற்றியும் அதனுடைய வளர்ச்சியுயையும் பின்வருமாறு காணலாம்.

### 4.5.8 சீர்திருத்தத் திருச்சபை

சீர்திருத்தம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு Reformation என்ற ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதாவது Reform என்ற வினைச் சொல்லுக்குச் சீர்திருத்து, சீர்படுத்து, திருத்து, தீமைகளை அகற்றி ஒழி என்று பல விளக்கங்கள் உள்ளன.

> **“Reformation என்ற பெயர்ச் சொல்லுக்குச் சீர்திருத்துதல், மறுசீராக்கம் எனப் பல விளக்கங்கள் காணப்படுகின்றன.”**[29]

அதன் அடிப்படையில் சீர்திருத்தம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**4.5.8.1 சீர்திருத்த திருச்சபை உருவாதலும் கருத்தாக்கமும்**

கிறித்துவைப் பின்பற்றக்கூடிய புத்தகங்களை எழுதி அன்பிலும், அறிவிலும் அவர்களை நெறிப்படுத்தினார் லூதர். இதன் பயனாக, ஜெர்மனி, சுவீடன், பின்லாந்து, நார்வே, டென்மார்க், ஐஸ்லாந்து, பிறகு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்ரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் எல்லாம் சுவிசேஷக் கிறித்துவ விசுவாசச் சபைகள் தோன்றின. லூதர் தனது சுவிசேஷத் திருச்சபையைப் பற்றியும், இயேசு பெருமானைப் பற்றி வேதாகமத்தில் கூறியுள்ள அருள்மொழிகளை அடிப்படையாகக் கொண்டு ஏறத்தாழ முன்னூற்றைம்பது நூல்களுக்கு மேல் எழுதிக் குவித்தார்.

இயேசு பெருமானுடைய உபதேசங்களைத் தொகுத்து வினா - விடை அடிப்படையில் Catechism என்ற நூலொன்றை வெளியிட்டார். 1529-ஆம் ஆண்டில் நடந்த மாநாட்டில் போப் மார்க்கத்தார் லூதரைப் பின்பற்றும் விசுவாச மக்களை எதிர்மறுப்போர் Protestant என்ற பெயர் சூட்டித் தூற்றினார்கள்.

போப் பிரிவினர் லூதர் பிரிவினரை ‘புரோட்டஸ்டண்டு’ என்று பெயரிட்டு அடையாளம் காட்டினார்கள். Protest என்ற சொல்லுக்கு மறுப்பு என்று பொருள். அத்துடன் அந்தச் சொல்லைக் கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால், ஒன்றைச் சாதித்து உறுதிப்படுத்துதல் என்ற பொருளும் உண்டு.

ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் சுவிசேஷ சபைகள் தோன்றின. இந்தச் சுவிசேஷ மார்க்கம் உலகெங்கும் தழைத்துவிட்டன. உலகெல்லாம் சுவிசேஷத் திருத்தூதுவர்கள் என்று இயேசு பெருமானுடைய

அருள்மொழியினை நீங்கள் உலகமெங்கும் சென்று, சர்வ சிரு டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்பதற்கு ஏற்றவாறு சுவிசேஷ அருளொளியை ஏந்தி ஊழியம் செய்து வருகின்றார்கள். சீர்திருத்தத் திருச்சபை பூ பூத்துக் குலுங்கியது.

### 4.5.8.2 இந்தியாவில் சீர்திருத்த சபைப் பணியின் தொடக்கம் குறித்த கருத்தாக்கம்

இந்தியாவிற்குச் சீர்திருத்தச் சபையின் மிஷனெரிகளை அனுப்ப வேண்டுமென முதன் முதலாகக் கருதியவர் டென்மார்க் நாட்டின் அரசரான நான்காம் பிரட்ரிக் என்பவர்; இவர் லுத்தரேனியர் சபையைச் சார்ந்தவர். இவர் தம் அரச மன்ற ஆயரிடம் இந்தியாவிற்கு அனுப்புவதற்கு ஏற்ற ஒரு சிலரைத் தேடி அழைத்து வருமாறு கேட்டார். ஆனால் எவரும் முன்வரவில்லை. ஆனால் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த பார்த்தலோமேயு சீகன்பால்கு, ஹென்றி புளுச்சால் ஆகிய இருவரும் இந்தியாவிற்குச் செல்ல முன் வந்தனர். இவர்கள் ஜெர்மானிய நாட்டில் 17-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய பயட்டிசம் (Pietism) எனும் பக்தி இயக்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் லுத்தரன் சபை அங்கத்தினர் ஆவார்கள். 1706-ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 9-ஆம் நாள் தரங்கம்பாடி வந்து சேர்ந்தார்கள். தங்கள் பணிகளைச் செய்வதற்குப் போர்த்துக்கீசிய மொழியையும், தமிழ் மொழியையும் கற்றுக் கொண்டு தங்கள் பணிகளைச் செய்ய ஆரம்பித்தார்கள்.

### 4.5.9 திருச்சபை – அமைப்பு – ஆளுகையும் கருத்தாக்கமும் திருச்சபை

கிறித்தவ இயக்கத்தின் தனிச் சிறப்புக்களில் ஒன்று திருச்சபை. திருச்சபை என்பதை ‘கிறித்துவின் உடல்’ என்பர். திருச்சபை, பிறருக்காகப் பணி செய்யவும் சமூகத்திற்கு ஒரு முன்மாதிரிச் சமூகமாகவும் அமைவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மனித வரலாற்றில் காணப்படும் மிகப் பெரிய புதுமைகளில் ஒன்று திருச்சபையின் உருவாக்க அமைப்பைக் கூறலாம். இந்தியாவைப் பொறுத்தவரைத் திருச்சபை அமைப்பு என்பது ஒரு மிகப் பெரிய சாதனை என்றே கூறலாம். ஆனால் திருச்சபை தன் அமைப்பிலும், வாழ்விலும் இயேசுவினுடைய நெறியைக் கடைபிடிக்காவிடில் ஆகாயத்தில் சிலம்பம் அடிப்பவைகளாக அமைந்துவிடும். இதனைக் கிறித்தவத் திருப்பணியாளர்கள் ஏற்று ஒரு முன் மாதிரிச் சமூகமாகத் திருச்சபையை மாற்றி அமைப்பது அவர்களின் பணியாகும்.

#### 4.5.9.1 ஆரம்பகாலத் திருச்சபை

ஆரம்பகாலத் திருச்சபையில் தீர்க்கர்கள் அதிகமாக மதிக்கப்பட்டனர். தீர்க்கர்கள் என்பவர்கள் தூய ஆவியால் நிறைந்தவர் எனவும், சிறப்பானவை பெற்றவர் எனவும் கருதப்பட்டனர். ஆனால் இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் புரட்டுத் தீர்க்கர்கள் அநேகம் பேர் தோன்றினர்.

சுவிசேஷகர் என்பவர்கள் நிலையாக ஓரிடத்திலிருந்து பணியாற்றாமல் சுற்றித் திரிந்து நற்செய்திப் பணியைச் செய்பவர்கள் ஆவர். மேய்ப்பர் அல்லது போதகர் என்னும் ஊழியக்காரர் நிலையாக அமைக்கப்பட்டச் சபைகளின் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் ஆவர். மேலும் உதவிக்காரர் என்னும் மற்றொரு வகை ஊழியக்காரர்களும் இருந்துள்ளனர். இவர்கள் திருச்சபையில் உள்ள ஏழைகளுக்கு உதவவும், கவனித்துக் கொள்ளவும், மூப்பர்களுக்கு உதவவும் நியமிக்கப்பட்டவர்கள்.

‘மூப்பர்’ என்ற மற்றொரு ஊழியக்காரர் இருந்துள்ளார். இவரைப் பேராயர் எனவும் அழைப்பர். இவர்கள் சமுதாயத்தில் நன்கு மதிக்கப்பட்ட தலைவர்களாகவும், பொறுப்புமிக்க மக்களாகவும், சபைப் பொறுப்பை ஏற்றுக்

கொள்பவர்களாகவும் இருந்தனர். புனித பவுல், தீமோத்தேயுவிற்கும், தீத்துவிற்கும் எழுதிய கடிதங்களில் 'Elder', 'Presbyter', 'Bishop' என்னும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே ஒரே நபருக்குப் பல்வேறு சமயங்களில் பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

நகரங்களில் உள்ள சபைகளின் பொறுப்பு பேராயரிடம் இருந்தது. ஒவ்வொரு நகர சபையிலும் அனேக மூப்பர்கள் அல்லது போதகர்கள் (Presbyters) தோன்றியிருக்க வேண்டும். அவர்கள் தங்களின் அதிகமாக மதிக்கப்பட்டவரைத் தான் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இத்தகையத் தலைவர், அச்சபையின் பேராயர் எனக் கருதப்பட்டார்; அவர் அச்சபைக்கு மட்டும் பொறுப்பாக இருந்தார்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் நகர சபைகள் வளர்ச்சியடைந்தன. அங்கத்தினர்கள், எண்ணிக்கை விரிவடைந்தது. எனவே திருமண்டிலங்கள் உருவாக்கப்பட்டன. நகர சபையின் பேராயராயிருந்தவர், திருமண்டிலத்தின் பேராயரானார். ரோமப் பேரரசில் உள்ள சபைகள் திருத்தூதுவரால் உருவாக்கப்பட்டவை எனக் கருதப்பட்டன.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரோம் நகரப் பேராயர் பிற சபைகளின் மேல் தன் அதிகாரத்தைச் செலுத்த முற்பட்டார். இது நான்காம் நூற்றாண்டின் துவக்கத்தில் அதிகமாக வளர்ந்தது. இதன் காரணமாகத் திருச்சபையில் பணிபுரியும் பேராயர்களிடையே அதிகமான கசப்புணர்வும், போட்டியும், பொறாமையும் வளர்ந்தது.

மத்தியக் காலத்தில் ரோமப் பேராயரின் ஆட்சியே கை ஓங்கியது. ரோமப் பேராயர் 'போப்' என அழைக்கப்பட்டார்; போப் என்னும் லத்தீன் சொல் 'தசுப்பனி' என்னும் பொருளை உடையதாகக் காணப்பட்டது.

பின்பு போப்புகளின் அதிகாரப் போக்கு, திருச்சபையிலும் எதிர்க்குரல் எழச் செய்தது. திருச்சபையைச் சீர்திருத்தம் செய்ய பதினான்காம் நூற்றாண்டிலிருந்தே முயற்சிகள் எடுக்கப்பட்டன. சீர்திருத்தக் கருத்துக்களின் விளைவினால் பல இடங்களிலிருந்தும் சபைகள் பிரிந்தன. திருச்சபை சீர்திருத்தத்தினால் எழுந்த மற்றொரு பிரிவு சபை ஆளுகைப் பிரிவு என்று அழைக்கப்படுகின்றது. திருச்சபைச் சீர்திருத்தத்தினால் ஏற்பட்ட மற்றொரு முக்கியப் பிரிவு 'மூப்பராளுகை' சபை ஆகும். இச்சபைப் பிரிவு ஆயர்களால் அல்லது மூப்பர்களால் நடத்தப்டுகின்றது.

### 4.5.10 திருச்சபைத் தேர்தல் முறைகளும், கருத்தாக்கமும்

ஒவ்வொரு தேர்தலையும் அறிவிக்கும் முறை, வாக்களிக்கக்கூடியவர்கள், போட்டியிடக்கூடியவர்கள், தேர்தல் நடத்தும் முறை, தேர்தலின் முடிவை அறிவிக்கும் முறை, வெற்றி பெற்றவர்களுக்கான பொறுப்புகள், பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்றாவிடில் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்று எல்லாவற்றையும் தீர ஆலோசித்து அச்சிட்டு அனைவரும் வெளிப்படையாக அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்குத் திருச்சபைத் தலைவர்கள் வழி வகுத்துள்ளனர். ஆனால் திருச்சபைத் தேர்தல்கள் இன்று நடக்கும் முறைகளை அதைச் சார்ந்த அனுபவங்களின் அடிப்படையில் பார்க்கும் போது தலைக்குனிவே ஏற்படுகின்றது.

**4.6 இன்றைய நிலைமை**

திருச்சபைகளின் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியாகும்; தேர்தல் பிரச்சாரப் பணிகள் நடக்கும்; தேர்தலுக்குச் சில நாள்களுக்கு முன் யார் வெற்றி பெறக்கூடும் என்று சொல்லத்தக்க வகையில் சூழ்நிலை உருவாகும். தாம் தோற்றுவிடுவோம் என்று எண்ணிய எதிர்க்கட்சியினர் தேர்தலை நடத்த விடாமல் நீதிமன்றத்தில் தடையுத்தரவு வாங்குவார்கள். இப்படியாக சமூகத்தில் கீழ்த்தரமான நிகழ்ச்சிகள் திருச்சபைகளில் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

திருச்சபைத் தேர்தல்களை ஒழுங்குமுறைக்கு உட்படுத்த வேண்டியது ஆயர்களின் பணியாகும். ஆனால் ஆயர்கள் கீழ்த்தரமான முறைகளைப் பின்பற்றும்போது, திருச்சபையின் மக்களும் நமக்கென்ன என்ற எண்ணத்தில் இன்னும் ஒரு படி, கீழிறங்கி வேண்டாத செயல்களைச் செய்கின்றனர்.

திருமறையைப் படிக்க நேரமில்லாது திருச்சபைச் சட்ட நூல்களை மனப்பாடம் செய்து கொண்டு இருக்கும் பேராயர்களின் நிலை காணப்படுகிறது. மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டிய ஆயர்களும், தெளிவான புரிந்து கொள்ளுதல் இல்லாமலும், செல்ல வேண்டிய திசையறியாமலும் இருக்கின்றனர். ஆயர்களும் தங்கள் அழைப்பை உணர்ந்து தேர்தல் நேரங்களில் பாகுபாடற்றத் திருச்சபையை உருவாக்க முன்வர வேண்டும்.

இன்றையச் சமுதாயத்தில் திருச்சபைத் தேர்தல்கள் தீய வழியில் செல்லும் முறை காணப்படுகிறது. போட்டி, பொறாமை நிறைந்தவைகளாகக் காணப்படுகின்றன. இதனைப் போக்க வேண்டுமானால், அனைவரும் உழைக்க முன்வர வேண்டும். அனைவரும் சமம் என்ற நிலை

உருவாக்கப்படல் வேண்டும். அப்பொழுது தான் பாகுபாடற்றத் திருச்சபையை உருவாக்க முடியும்.

### 4.6.1 இன்றைய ஆளுகை முறையும் கருத்தாக்கமும்

1947-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி தென்னிந்தியத் திருச்சபை உருவாகியது. தென்னிந்தியத் திருச்சபையின் அமைப்பு, பேராயராளுகை முறையைக் கையாள வேண்டும் எனத் தீர்மானித்தது. பேராயர் பெருமையுடன் செயல்படாமல் 'மந்தைக்கு முன் மாதிரியாய்' செயல்பட வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது; எனவே தென்னிந்தியத் திருச்சபை இயங்குகிற திருச்சபையாக அமைக்கப்பட்டது. அது ஒரு குறிப்பிட்ட அமைப்பு முறையில் அமைந்து விடாமல் பரந்த ஐக்கியத்தின் பலி பீடத்தில் மேல் தன்னைப் பலியாக்குவதற்கு ஆயத்தமானச் சபையாக மாறியது. இதன் ஆட்சி முறைப் படிவங்கள் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது. இது மக்களாட்சி முறையின் பிரபதிபலிப்பே என்றே கூறலாம்.

## ஆட்சி முறை

| | |
|---|---|
| | ஆயர் |
| | ↓ |
| குருவட்டங்கள் | குருவானவர் |
| | ↓ |
| **Pastrate** | குருவட்ட ஆட்சிக்குழு<br>(சபையார் தேர்ந்தெடுப்பர்) |
| | ↓ |
| கவுன்சில்கள் | கவுன்சில் தலைவர் குருவானவர் |
| | ↓ |
| **Council** | கவுன்சிலுள்ள குருக்கள்<br>தேர்ந்தெடுக்கப்பட்ட பொது நிலைமையாமை<br>(சபை மக்கள்) |
| | ↓ |
| பேராய ஆட்சி மன்றம் | பேராயர் |
| | ↓ |
| **Dioceran Council** | பேராயர் குருக்கள் அனைவரும்<br>தேர்ந்தெடுக்கப்பட்ட பொது நிலையினர்<br>(சபை மக்கள் பிரதிநிதியாக இருப்பர்) |
| | ↓ |
| பேராயர்கள் மாமன்றம் | மாடரேட்டர் (தேர்ந்தெடுக்கப்பட்ட பேராயர்)<br>பேராயத்திலுள்ள பேராயர்கள் அனைவரும்<br>தேர்ந்தெடுக்கப்பட்ட குருமார் பிரதிநிதிகள்<br>தேர்ந்தெடுக்கப்பட்ட சபை மக்கள் பிரதி<br>நிதிகள் (பொது நிலையினர்) |

என்ற படிநிலை முறையில் ஆட்சியின் முறை அமைந்துள்ளது"[30]

பேராயரின் பணியானது, ஆடு மேய்ப்பவன் தன்னுடைய மந்தைகளை மிகுந்த பாதுகாப்புடன் கவனத்துடன் அழைத்துச் செல்வதைப் போன்று செயல்படுவதாகும். பேராயரின் பணியை 'மேய்ப்புப் பணி' என்று கூறுவார்கள். எந்தச் சிறப்பான சலுகையும், அதிகாரமும் பேராயருக்குக் கிடையாது. திருப்பேரவையும், பேராயரும் இணைந்தே செயல்பட வேண்டும்; பேராயருக்குத் தடுப்பு முறை அதிகாரம் (Veto) கிடையாது; ஆனால் தற்போது இந்நிலை மாறிவிட்டது. பேராயருக்கு அளவுக்கு மிஞ்சிய ஆளுகையும்,

அதிகாரமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அனைத்து மன்றங்களில் பொது நிலையினர் பங்கு பெறுவதால் இழுபறி நிலை காணப்படுகிறது. இன்றைய ஆளுகை முறை அதிகாரத்தை மையமிட்டுக் கொண்டே நகர்கிறது.

### 4.6.2 திருச்சபையின் அமைப்பாளுகை குறித்த அறிக்கை

ஆங்கலிக்கன், ஆங்கிலேய மொடிஸ்ட், பிரஸ்பித்தீரியன், காங்கிரிகேஷனல் ஆகிய நான்கு மரபுச் சபைகள் ஒன்றாகச் சேர்ந்து தென்னிந்தியத் திருச்சபையை உருவாக்கின. தென்னிந்தியத் திருச்சபையின் வாழ்வையும் பணியையும் ஆய்ந்து மதிப்பிடுவதற்கு குழுக்கள் அமைக்கப்படுவதுண்டு. இந்தத் திருச்சபை 30 ஆண்டுகளை நிறைவு செய்திருந்த காலக்கட்டத்தில், 1976-இல் திருச்சியில் நடந்த மாமன்றத்தில் (Synod) குழு அமைக்கப்பட்டது. இக்குழுவில் முப்பது பேர் உறுப்பினர்களாய் இருந்தனர். அடுத்த ஆண்டிலேயே இக்குழு தன் அறிக்கையை உருவாக்கியது. இந்த அறிக்கை 1978-இல் கோட்டயத்தில் நடந்த மாமன்றத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டது. திருச்சபையின் வாழ்வு, பணிகள், அதனுடைய அமைப்பு முதலியவை பற்றிய இக்குழுவின் பரிந்துரைகள் புரட்சிகரமாகத் தோன்றின. வெளியரங்கில் அறிக்கையை வெளியிட்டாலும், உள் மட்டத்தில் ஒன்றும் செய்யாமல் இருப்பது திருச்சபையின் அதிகாரத்தில் இருப்பவர்களின் தந்திரச் செயலாகும். இன்றைய நிலையில் இந்நிலை இன்னும் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாமன்றங்கள் அமைக்கப்படுகின்றன. அதனால் மாமன்றங்களில் எடுக்கும் முடிவுகளைச் செயல்படுத்துவதில் நேரம் போதாக் காரணத்தினால் செயல்முறைகள் ஒழுங்காக அமைக்கப்படவில்லை.

அதிகாரத்தை அனுபவித்தவர்கள், தங்களுடைய இருப்பு நிலைகளைத் தக்க வைப்பதற்காக, புதிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய திறனும், துணிவுமுடையயோரைத் தலைமையேற்க இவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். இந்நிலையில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டால்தான் சுயநலமில்லாத ஆளுகையைக் காண முடியும். இல்லாவிடில் அதிகாரத்தின் கையே ஓங்கியிருக்கும். மேற்குறிப்பிட்ட அனைத்தையும் உள்ளடக்கமாகக் கொண்டது நிழலிரவு நாவல்; திருச்சபை நிகழ்வுகள். அதில் உருவாகும் குழப்பங்கள், திருச்சபை சட்ட திட்டங்களுக்குப் புறம்பான தனித்த அரசியல் அனைத்தையும் தமயந்தி தனித்துப் பதிவாக்கியுள்ளார்.

### 4.7 நாவலில் திருச்சபை அமைப்பும், செயல்பாடுகளும்

'நிழலிரவு' நாவலில் காணப்படும் திருச்சபையானது அதிகார வெறியும், பதவிப் போட்டிகளும் நிறைந்தனவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிறித்தவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த தமயந்தி தன் அனுபவங்களின் அடிப்படையில் கிறித்தவ நிறுவனங்களின் மீது தனது குற்றச்சாட்டுகளை விவரித்துள்ளார். இன்றைய கிறித்துவ மதம், போலித்தனம் மிகுந்ததாகக் காணப்படுகிறது என்கிறார். இந்நாவலில் அவர் திருச்சபைகளில் நிலவும் உள் அரசியலைப் பற்றியும், கல்வி குறித்த விமர்சனங்களையும் விளக்கியுள்ளார்.

#### 4.7.1 தமயந்தி காட்டும் மதம்

மனித ஆத்துமாக்களை வழிநடத்திச் செல்பவன்தான் கிறித்தவன். கிறித்தவ மார்க்கத்தைப் போதிக்கும் சபையைத் திருச்சபை என்றும் கூறுவர். கிறித்தவ மார்க்கத்தை உலக நாடுகள் அனைத்தும் ஏற்று அதற்கான கிளைகளைத் தொடங்கி, உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து வழிநடத்திச்

செல்லுகின்றனர். இவர்களைத் தலைவர்கள் என்று அழைப்பர். திருச்சபைத் தலைவர்கள் இறைவனுடைய வழிபாட்டுக்குரிய நிர்வாகப் பணிகளைச் செய்து வருகிறார்கள். அப்பேர்ப்பட்ட மதத் தலைவர்கள் இன்றையச் சூழலில் போலித்தனமான வாழ்வை மேற்கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் மேற்கொண்டுள்ள பணியை முழு மனதாக ஏற்றுச் செயல்படாமல் ஏனோ தானோ என்று செயல்படுகின்றனர். அவர்களின் மெத்தனப் போக்கையே ஆசிரியர் 'நிழலிரவு' நாவலில் வெளிப்படுத்துகிறார்.

மரணப் படுக்கையில் இருக்கும் எலிசிப் பாட்டியைப் பார்க்கச் சபையின் பாஸ்டரும் அவரது மனைவியும் கையில் வேதாகமத்தோடு உள்ளே வந்தார்கள். பாஸ்டரும் அவரது மனைவியும் தேநீர் அருந்திவிட்டு செபிக்க ஆரம்பித்தனர். திடீரென்று பாதிரியார் பல மொழிகளைப் பேசத் தொடங்கினார். அவரது மனைவியும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று அலறினார்.

> **"இடையே பாஸ்டர் டெபோரா காத்திரீன் ரத்னகுமாரியை விட்டு சாத்தானே விலகு"**[31]

என ஒரு தனித்த விமர்சனத்தை தமயந்தி வெளிப்படுத்துகிறார். மேலும் மதத் தலைவர்களது போலி உணர்வு, வெளிவேடம், ஆதிக்க உணர்வு, முறையற்ற உறவு அனைத்தையும் நிழலிரவில் வெளிப்படுத்துகிறார்.

### 4.7.2 குறிப்பிடப்படும் சபை

தமயந்தி சபைகளில் நிலவும் உள் அரசியலையும், ஆசிரியர் சங்கங்களில் நிலவும் உள் அரசியலைப் பற்றியும் விவாதிக்கிறார். 'நிழலிரவு' நாவலில் ஊசிக் கோபுரம் கோயிலைப் பற்றியும் அதன் உள் நிகழும்

நிகழ்வுகள் குறித்தும் விவாதித்துப் பல்வேறு விமர்சனங்களை வெளிப்படுத்தும்போது திருச்சபையின் உண்மைத்தன்மை, வெளிப்பாடு தனித்து வெளிப்படுகிறது.

#### 4.7.2.1 திருச்சபைப் பணியாளர்கள்

கடவுளின் திருப்பணியைச் செய்வதற்குப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டார்கள்.

குருமார்

↓

உதவிக் குருமார்கள்

↓

பேராயர்

↓

மாடரேட்டர்

என்ற அடிப்படையில் சபையின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் திருச்சபையின் பணிகளைச் செய்ய அமர்த்தப்பட்டவர்கள் ஆவர். இவர்களின் பணியானது மக்களைக் கிறித்தவ வாழ்விற்கு வழிநடத்திச் செல்வதாகும்; ஆனால் இன்றைய சமுதாயத்தில் எதிர்மறையானச் செயல்களே காணப்படுகின்றன. இச்செயல்களை தமயந்தி அவர்கள் ‘நிழலிரவு’ நாவலில் விளக்கியுள்ளார்.

### 4.7.3 திருச்சபையின் செயல்பாடுகள்

திருச்சபை மக்களுடைய குழப்பம், துயரம் முதலியவற்றில் பங்கெடுப்பதுடன் அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். திருச்சபையில் சபைப் பணியாளர்கள் தன்னலமற்ற தலைவர்களாயிருந்து தனிப்பட்ட மக்களை மட்டுமின்றி, நாடுகளையும், சமுதாயங்களையும் இயேசு கிறித்து உங்களை மீட்டுக் கொள்கிறார் என்பதற்குத் தகுந்த சான்றுரைப்பவர்களாக

இருத்தல் வேண்டும். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபட்டு வருவது மட்டுமல்ல; எல்லாக் காலத்திலும், எல்லா நேரங்களிலும், எல்லா வேலைகளிலும் நாம் இறைவனை நினைத்துக் கொள்ள வேண்டும்.

> **“நமது வாழ்க்கையை வழி நடத்த வேண்டிய விதிகள் நான்கு தூய்மை, நேர்மை, அன்பு, தன்னலமின்மை”**[32]

என்ற தன்மையில் சபையின் ஊழியக்காரர்கள் செயல்பட வேண்டும் என்பதை ‘ஆக்ஸ்போர்டு குழு’ கூறுகின்றது. பொதுவாக இன்றைய சூழ்நிலையில் இத்தகைய குணங்களைக் கொண்ட சபைப் பணியாளர்களைக் காண இயலாது; எங்கேயாவது ஒரு சிலர் நல்ல போதர்களும் ஐயர்மார்களும் இருக்கின்றனர். சபையின் செயல்பாடுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) ஆன்மீகப் பணி

2) சமூகப் பணி

3) திருமண்டலத் தேர்தலின் பணி

சபைப் பணியாளர்கள் சபையில் பணிகளை நிர்வாகித்துக் கொண்டு அதனை ஏற்றுச் செயல்முறைப்படுத்துகின்றனர்.

### 4.7.4 இரத்த சாட்சிகள்

ஆன்மீகப் பணியில் சிலர் உயிர் விடுவதும் உண்டு; நாவலில் ரத்னகுமாரியின் மாமா சபை உபதேசியராக இருந்துள்ளார். அந்தக் கோயிலில் உள்ள பாதிரியாருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக, ரத்னாவின் மாமாவை அடித்ததில் இறந்துவிடுகிறார்; இதனைப் போன்று தென் மாவட்டங்களில் பல ஊழியக்காரர்கள் கிராமத்தில் ஊழியம் செய்யப் போய் அவர்களை

அக்கிராமத்து மக்கள் கொன்று விடுவதும் உண்டு. இவற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு பதிவாக்கும் தமயந்தி ஒரிசாவில் ஏற்பட்ட 'ஸ்டேனிஸ் பாதிரியார்' நிகழ்வையும் இவற்றோடு இணைத்து தனித்த ஒரு விமரிசனமாக்குகிறார்.

### 4.7.5 மரபு மீறின நிகழ்வு

கோவிலுக்குச் சென்று வழிபடும் காலங்களில் பல மரபு மீறல்கள் கையாளப்படுகின்றன. அதில் ஒன்று பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் நற்கருணை வாங்குவது தவறான முறை எனக் கருதப்படுவது. நிழலிரவு நாவலில் தமயந்தி அதைப் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

பதினெட்டு வயதில் மாதவிடாயின்போது எலிசி நற்கருணை எடுத்தாள். வரிசையில் அவள் நின்றதும் அவளது அம்மா அவளைக் கண்டித்துள்ளாள். ஆனால் அதைப்பற்றிக் கவலைப்படாமல் நற்கருணை எடுத்தாள். நற்கருணை எடுக்கும்போது அவள் முக்காடு போடாதிருந்ததைக் கண்டு பாதிரியார் ஸ்தம்பித்து நின்றார். தயக்கத்துடன் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் கொடுத்தார்.

எலிசி பாட்டியிடம்,

> **"நான் கடவுள்ட்ட போறதுக்கு என் உடம்பும் உடம்போட சம்பந்தப்பட்ட விஷயங்களும் தடைக் கல்லா இருக்காது. என்னை நன்றாகவே கர்த்தர் நேசிப்பார்ன்னு தெரியும். இது அவர் கொடுத்த உடல். அவர் கொடுத்த முடி. அவர் கொடுத்த கண். புருவம் கழுத்தும் எனில் மாதவிடாயும் அவர் கொடுத்ததுதான்"**[33]

என்றாள்.

மேற்குறிப்பிட்ட பதிலில் மரபு மீறினத் தன்மை காணப்படுகிறது. திருச்சபை சில மரபு விதிகளுக்கு உட்பட்டது; சபைப் பணியாளர்களும் அம்மரபுக்கு உட்பட்டு ஆராதனை நடத்துகின்றனர். தமயந்தி தனது தனித்த பெண்ணியப் பார்வையில் அதை விமர்சிக்கிறார்.

### 4.7.6 பொய் தீர்க்கர்கள்

ஆன்மீகப் பணியில் பொய் தீர்க்கர்கள் தோன்றுகின்றனர். மனிதர்களுக்கு வியாதிகள் வருவது இயற்கை; அதனைக் குணப்படுத்துவதற்கு பிரார்த்தனைக் கூட்டங்களில் தான் அத்தகையச் சக்தி இருக்கிறது என்று மக்கள் நம்பி கூட்டத்திற்குச் செல்லுகின்றனர்.

'நிழலிரவு' நாவலில் ஜெபராஜின் பாட்டியோடு கூட ரத்னா, சகோதரர் மனோகரன் பர்னாந்துவின் கூட்டத்திற்குச் சென்றார்.

> **"சர்க்கரை வியாதியில் பீடிக்கப்பட்ட உடலின் தளர்ச்சியும், புண்ணொன்று கோரமாய் பெரு விரலோடே பெருகின வலியும் கூடப் பொருட்படுத்தாமல் வேன் பிடித்து மெய்ஞானபுரம் சென்றாள் பாட்டி. சகோதரரைச் சந்தித்து செபிக்க வேண்டினாள். சகோதரர் பாட்டிக்காக செபித்து வேண்டினார். சகோதரர் பாட்டிக்காக செபித்துவிட்டு சாயந்தரம் கூட்டத்துக்கு வந்துருங்க"**[34]

என்றார். சாயங்காலம் வரை அவர் அறையின் முன்கூட்டம் குறையவில்லை. மாலையில் ஜெபத்துடன் கூடிய பாடல்களோடு கூட்டம் தொடங்கியதும் சகோதரர் தீர்க்கதரிசனம் கூறலானார்.

**“மெர்ஸி பொன் ராஜிக்கு இதோ ஆண்டவர் சர்க்கரை வியாதியை நீக்குகிறார். தேவனுடைய பரிசுத்த கரம் அவர் மேல் தன் பரிசுத்த சக்தியைப் பலப்படுத்துகிறது”**[35]

என்றார். உடனே பதட்டத்துடன் ஜெபராஜின் பாட்டி மயங்கி விழுந்தார். சிறிது நேரத்தில் பாட்டி மயக்கத்தில் இருந்து விடுபட்டு

**“ஒன்றுமில்லை. மதியம் சர்க்கரை நோயிற்கான மாத்திரை போடவில்லை. அதனால்தான் தலை சுத்தியது”**[36]

என்கிறாள் என மக்கள் மத்தியில் மிகவும் பரப்பு ஏற்பட்டது. நிகழும் மாலை நேர வேண்டுதல் கட்டம் தமயந்தியால் தனித்துப் பார்க்கப்படுகிறது.

### 4.8 சமூகப்பணி

சபைப் பணியாளர்கள் சமூகப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, பல கல்விச் சாலைகளுக்கு உதவி செய்கின்றனர். பார்வையற்றோர் கல்விச் சாலை போன்ற நிறுவனங்களுக்குத் தாங்களே முன் சென்று உதவி புரிகின்றனர். இத்தகையத் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய குணாதிசயங்களைப் பற்றி அட்டவணைப்படுத்தியுள்ளார் ஆய்வாளர். நேர்மை, முன்னோக்கிய பார்வை, தூண்டுதல் அளித்தல், அறிவுக் கூர்மை, தெளிவான மனப்பான்மை, உதவி செய்தல், துணிச்சல், கவனம், ஊக்குவித்தல் போன்ற குணநலன்களைப் பெற்றால்தான், சமூகப் பணியில் முழுமையாக, ஆர்வத்தோடு ஈடுபடுத்திக் கொள்ள முடியும்.

‘நிழலிரவு’ நாவலில் கல்வி குறித்த விமர்சனங்களை ஆசிரியர் தனித்து வெளிப்படுத்துகிறார். கிறித்தவ மதம் இங்குக் காலூன்றும்போது, அது

கோவிலோடும், கோவிலோடு இணைந்தப் பள்ளி, கல்லூரிச் சேவையைச் செய்தமையும் தனித்த பணிகள் என்று கூறும் தமயந்தி,

தொடக்கக் காலத்தில் உயர் சாதி மற்றும் சூத்திர ஜாதிப் பெண்களுக்குக் கற்க கல்வியைக் கொண்டு வந்தது கிறித்தவ மதம் ஆகும். கல்வி மறுக்கப்பட்ட தலித்துகளும், நாடார்களும் முயன்று படித்து மேல் நடுத்தர வர்க்கம் ஒன்றை உருவாக்கினார்கள். அடுத்து வந்த தலைமுறைகளுக்குக் கல்வி தந்த அதிகாரத்தைச் சிலர் தவறான முறையில் பயன்படுத்தினர் என ஒரு தனித்த சமூகத்தினர் அடையாளம் தமயந்தியால் இனம் காட்டப்படுகிறது.

### 4.8.1 வேலைக்கு லஞ்சம் வாங்குதல்

செல்லம்மாளின் தங்கையை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் படிக்க வைத்து அவளுக்கு வேலை தேடும் போது ஐம்பதாயிரம் கேட்டார்கள்; இதனைக் கேள்விப்பட்ட ரத்னா பாட்டி, எலிசியுடன் பாதிரியாரைப் பார்க்கச் சென்றார்கள். ஆனால் பாதிரியாரோ உதவி புரியாமல் வேலை என்றால் லஞ்சம் கொடுத்துத்தான் ஆக வேண்டும் எனக் கூறினார்.

> **“கிறிஸ்டினா கன்வர்ட் ஆனாலும் சில விஷயங்கள் பிராக்டிகலா இருக்க என்ன செய்ய?”**[37]

என்கிறாள்.

### 4.8.2 கல்விச் சீரழிவு

கல்வி நிறுவனங்களை நிர்வாகிக்கும் சபைப் பணியாளர்கள் லஞ்சம் கேட்கும் நிலை உருவாகியுள்ளது. ‘நிழலிரவு’ நாவலில் பல்கலைக்

கழகங்களில் மேற்பட்டங்கள் பெற ஆசிரியர்களுக்கு தட்சணை கொடுக்கிறார்கள்.

> **“கல்விச் சாலைகள் கோவில் என்றும், ஆசிரியர்கள் தெய்வங்கள் என்பதையும் உன்னால் ஏற்க இயலாது. பல்கலைக் கழகங்களில் மேற்பட்டயங்கள் பெற ஆசிரியர்கள், ஆசிரியர்களுக்குத் தட்சணை கொடுக்கிறார்கள். மோகன் கலைகுமார் புரபசர் கமலா தேவதாசுக்கு வி.ஐ.பி. சூட் ஒரு பவுன் மோதிரம், அகலக்கரை காஞ்சிபுரம் பட்டு வாங்கிக் கொடுத்தார். செல்வியின் புரொபசர் மனைவி இல்லையெனில் இவள் வீட்டில் இரவு தங்கினார். அவளது அப்பா புரொபசருக்கு முறுகலாய் தோசை சுடச் சொல்லுகிறார்”**[38]

கல்வியைப் பற்றி திருவள்ளுவர் ‘அழியாத சிறந்த செல்வம் கல்வி’ எனப் பெருமைப்படுத்தியுள்ளார். அத்தகையக் கல்வியை து பிரயோகம் செய்கிறார்கள். சில ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளைத் தவறான முறையில் நடத்துகின்றனர். வழிகாட்டியாக விளங்குகின்ற பேராசிரியர்கள் செய்யும் பாலியல் கொடுமையால் தற்கொலை செய்யும் பெண்கள் பலர். இன்றையச் சூழ்நிலையில்கூட இப்படிப்பட்டக் கொடுமைகள் நடந்தேறிக் கொண்டுதான் வருகின்றன.

சபைப் பணியாளர்கள் இதனைத் தட்டிக் கேட்காமல், கண்டு கொள்ளாமல் இருந்து வருகின்றனர். இதற்குக் காரணம் ஊழல், லஞ்சம் ஆகும். இதனைக் கொடுத்து சரி செய்துவிடுகின்றனர். அதுபோல்,

இன்றையக் கல்விச் சாலைகளில் சில ஆசிரியர்கள் தாங்கள் சொன்னதை மறுக்காமல் தலையசைக்கும் மாணவர்களையே

விரும்புகின்றனர். மாற்றுக் கருத்துக்கள் கூறினால் மதிப்பெண்களில் கை வைப்பது வழக்கம் ஆகிவிட்டது.

நாவலில் ரத்னா ஆசிரியரைப் பற்றிப் பல எதிர்மறைக் கருத்துக்களைக் கூறினாள்; அதனால் அவளுக்கு மதிப்பெண் குறைகிறது.

ஆசிரியர் பெருமாள்புரத்து முனிசிபல் பள்ளிக்கூடத்து நிலையைச் சுட்டிக் காட்டுகிறார்.

கல்விச் சாலைகளில் சரியான முறையில் பராமரிப்பு இல்லாமல் காணப்படுகிறது.

> **‘‘டீச்சர்மாரெல்லாம் பேன் பாத்துட்டு இருக்காங்க என்ற தன்மையில் காணப்படுகிறது. இதனைச் சரிசெய்ய ஒருவரும் முன் வரவில்லை. தேர்தல் தினங்களில் ஓட்டுப் போடும் போதும், சொட்டு மருந்து கொடுக்கும் போதும்தான் ஒளி பெறுகிறது. இல்லாவிடில் இருட்டறை போன்று காட்சி தருகிறது’’**[39]

என்று ஆசிரியர் கூறுகிறார்.

### 4.8.3 தேர்தலில் நடக்கும் சீரழிவுகள்

திருச்சபைத் தேர்தலின் முக்கியத்துவம் என்பது கடவுளின் பணியை மேற்கொள்வதற்காக நடத்தப்படும் வழிமுறையாகக் கருதப்படுகிறது. ஆனால் தேர்தலில் கடவுள் பெயரைக் கூறிக் கொண்டு தொண்டு செய்கிறேன் என்று து பிரயோகம் செய்கிறார்கள். கோவிலில் கர்த்தரை விற்கும் நிலை காணப்படுகிறது. நாவலில் எலிசி தனது பாட்டியிடம் கூறுவதாகக் காணப்படுகிறது. போலித்தனம் மிகுந்த கட்டமைப்பின் நீட்சியாகவே கிறித்தவ மதம் மாறிவிட்டது.

“கர்த்தர கோவில்கள்ள விக்றாங்களோன்னு பயமாருக்கு பாட்டியம்மா”[40]

என்கிறாள் எலிசி.

தேர்தலில் ஒரு சாரர் வெற்றி பெற்றால், அடுத்தக் கட்சியிலுள்ள ஊழியர்கள் இடமாற்றம் செய்வது மூலம் பழித் தீர்க்கும் படலம் நிகழ்கிறது. ரத்னாவின் அம்மா செபஸ்தியாபுரம், சுரண்டை, சாத்தான்குளம், பண்ணைவிளை என்று ஊர் ஊராகப் பந்தாடப்படுகிறாள். ஒவ்வொரு வருடமும் ரத்னாவின் தாயார் பாதிக்கப்படுகிறாள். பள்ளி நிர்வாகப் பொறுப்பிலுள்ள பாதிரிமார்களின் வீடு தேடிச் சென்று முறையிடுகிறாள். அவர்கள் இனிப்புப் பொட்டலங்களை வாங்கிக் கொண்டு மேலும் மோசமான ஊர்களுக்கு மாற்றுகிறார்கள். இன்றையச் சமுதாயத்திலும் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தேறிக் கொண்டுதான் இருக்கின்றன. நிர்வாகிகளை எதிர்த்து நின்று குரல் கொடுத்தால் சிக்கல்கள் தோன்றிவிடும். அதனால் பயந்து கொண்டு இதனை எதிர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

ஒவ்வொரு வருடத் தேர்தலின் போதும், ஆலயத்திற்கு முன்பு நான்கு சக்கர வாகனங்களும், காவல் துறையின் பாதுகாப்பும் இருப்பது கண்கூடு.

“டயோசீஸ்க்குள்ளேயே சாத்தானிருக்கு”[41]

என்று பிரசிங்கித்த ஐயரை உடனடியாக மாற்றம் செய்தார்கள். அரசியலில் உட்கட்சிப் பிரச்சனைகளைப் போன்று ஒருவருக்கொருவர் கணக்குக் கேட்பதும் ஊர் முழுக்க விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவதுமாகக் காணப்படுகிறது. திருமண்டல அரசியலில் முன் விரோதத்தின் காரணமாக ஒரு பெண்ணோடு தொடர்புபடுத்திப் பேசும் வழக்கம் இயல்பானதாகும். இதன் செயலைக் கண்டித்து எலிசியின் பாட்டி

சுற்றறிக்கையை அடித்து ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலின் முன் விநியோகித்தாள். விநியோகித்ததைப் பார்த்தப் பாதிரியார் கண்டித்தார்.

> **“இங்க வச்சுக் கொடுக்க வேணாமே. பிரச்சனையானா எந்தலைல விடியும்”**[42]

என்று கடிந்து கொண்டார்.

### 4.8.4 பணிமாற்றம்

‘தேனும் ஒரு கொயர் கோல நோட்டும்’ என்ற சிறுகதையில் ஜார்ஜ் சார் கிறித்தவ அமைப்பின் கீழிருந்த பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிறார். வருஷந்தோறும் ஏப்ரல் மாதத்தில் கேக் பொட்டலங்களோடு பிஷப்பையும், பாதிரிமார்களையும் ‘ட்ரான்ஸ்பர்’ இல்லாம இருப்பதற்காகப் பார்க்கப் போவார். இந்த வருஷம் அவருக்கு மார்ச் கடைசியில் அம்மன் வந்த காரணத்தால் அவர்களைப் பார்க்கப் போகவில்லை. அதனால் அவரைச் சாத்தான் குளத்துக்கு மாற்றி விட்டார்கள்.

> **“அந்த வருஷம் அவருக்கு மார்ச் கடைசிலயே அம்மன் வந்துருச்சு. ஏப்ரல் நடுவரைக்கும் எழும்ப முடியாம சாத்திருச்சு. அதுக்கப்புறமாவும் அவரால எல்லாரையும் போய்ப் பார்க்க முடியல. மே நடுல அவர சாத்தான்குளத்துக்கு மாத்திட்டாங்க. அதுக்கப்புறம் அவங்களுக்கெல்லாம் கேக் வாங்கிட்டுப் போய்ப் பார்க்க சார் தயாராக இல்லை”**[43]

‘நிழலிரவு’ என்ற நாவலிலும் ரத்னாவின் அம்மா ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு இடத்திற்குப் பணிமாற்றம் செய்யப்படுகிறாள். அவள் கேக் பொட்டலங்களோடு, பாதிரிமார்களைப் பார்க்கச் செல்கிறாள். ஆனால் அவர்களோ மேலும் மோசமான ஊருக்கு தான் அனுப்பி வைக்கிறார்கள்.

> ‘‘செபஸ்தியாபுரம், சுரண்டை, சாத்தான்குளம், பண்ணைவெளை என்னு கிறித்தவ அமைப்பு சார்ந்த பள்ளி நிர்வாகத்தால் பந்தாடப்பட்டாள்’’[44]

### 4.9 மதம் மாறுதல்

ஜெயராஜின் மாமா இந்து, அத்த ரெண்டு வருஷத்துக்கு முன்னால தான் பேப்டிசம் எடுத்து கிறிஸ்டீனா மாறிட்டாங்க. அத்தைக்கு எஸ்டேட் அம்மன் கோவிலில் சாமியாடுகிற பழக்கம் உண்டு. கீறிஸ்டீனா மாறின பிறகு சாமியாடவில்லை. அதுக்கப்புறம் எஸ்டேட்லேயும் யாருக்கும் சாமி வர்றதிலையாம்.

> ‘‘வேதத்துக்கு வந்தப்புறம் சாமியாடுவதில்லைன்னாலும் சாமி வரது மாதிரி உடம்பெல்லாம் முறுக்கன மாதிரியிருக்கும். ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்னு அலறுனாங்க. காலையில் கதவைத் திறந்தாலும் ஆலமரம் பொசுங்கி நின்றது. எஸ்டேட்லயும் யாருக்கும் சாமி வறவில்லையாம்’’[45]

### 4.10 மதம் செயல்பாடற்ற ஜெபம்

கிறித்தவ மதத்தில் பல பேர் ஊருக்கு உபதேசம் செய்கின்றனர். அவர்களிடம் சாந்தம், பொறுமை, அன்பு போன்ற எந்தப் பண்பையும் பார்க்க முடியாது. பிறருக்கு அறிவுரை கூறுவதிலும், வேதம் வாசிப்பதிலும், ஜெபம் செய்வதிலும் எந்தக் குறையும் இருக்காது என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் ‘மரங்கொத்திப் பறவைகள்’ என்ற கதை இடம்பெறுகிறது.

> ‘‘ஸ்டீபனின் அம்மா எந்த நேரமும் ஜெபம்தான் செய்வார்கள். ஆனால் தன் மருமகளிடம் எப்பொழுதும் சண்டை போடுவாள். இதைப் பார்த்துக் கொண்ட ஸ்டீபனுக்கு மதத்தின் பெயரிலும், ஜெபத்தின் பெயரிலும் நம்பிக்கை கிடையாது’’[46]

மதம் என்பது நல்லதொரு வியாபாரமாகிவிட்டது. காணிக்கைப் பணம் என்று அள்ளிக் கொண்ட மத புரோக்கர்கள் பக்தியைப் பரப்ப பணம் தேவை என்று மதத்தைப் போதிக்கிறார்கள் என்று தன் தாயின் செயல்பாடற்ற ஜெபத்தினால் மதத்தின் மீது தவறான கருத்தை வைக்கிறான்.

இன்றும் சமுதாயத்தில் இத்தகைய பொய் தீர்க்கதரிசிகள் மக்களிடையே பணத்தைச் சம்பாதிக்கும் விதத்தில் வீடு வீடாக ஜெபம் செய்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட முறையில் அவர்களை நோக்கினோம் என்றால் அவர்களிடம் பரிசுத்த ஆவியானவரின் கனிகள், கொடைகள் இருக்காது.

**4.11 தொகுப்புரை**

சாதியின் தோற்றம், வளர்ச்சி, சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றம், கிறித்தவ மதத்தைப் பின்பற்றுவோரிடம் காணப்படும் சாதிய உணர்வுகள், திருச்சபையின் செயல்பாடுகளும், பணிகளும் இது குறித்த தமயந்தியின் பார்வைகளும் படைப்பாளியின் பார்வைகளும் 'சாதி சமயமும் சமூக மொழியும்' என்ற தலைப்பில் இவ்வியலில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

1) கிறித்தவர்களிடையே சாதி உணர்வு மேலோங்கிக் காணப்படுகிறது. உயர்சாதிக் கிறித்தவன், தலித் கிறித்தவன் என்றும் பாகுபாடு உருவாகியுள்ளது. இந்நிலை மாற வேண்டும்.

2) கிறித்தவ மதம் அன்பைப் போதிக்கின்ற மதமாகும். கிறித்தவ மதம் பல பிரிவுளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

3) அதிகாரம், ஆளுமை என்பது கடவுள் மனிதர்க்கு அருளிய மகத்தான கிருபையாகும். மனிதர்கள் இக்கிருபையை தவறான முறையில்

பயன்படுத்துகின்றனர். தங்களின் சுயநலத்திற்காகப் பிறருடைய நலன்களைப் பலியிடத் துணியும் போக்கு காணப்படுகிறது.

4) இன்றையத் திருச்சபையில் அதிகார வெறியும், பதவிப் போட்டிகளும் காணப்படுகின்றன. சபை ஊழியர்களின் அலட்சியப் போக்கினால் ஊழல், பொய், புரட்டு போன்றவற்றால் கிறித்தவ மதம் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கின்றது என்பன போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## குறிப்புகள்

1. S.V. Ketkar, History of Caste in India, p. 15.
   கூற்று எடுத்தாள்பவர்: மேலது., ப. 187.
2. கெய்ல் ஓம்வெட், வர்க்கம், சாதி, நிலம் (மொ.பெ.ஆ.) இராசாராம், பக். 48 - 49.
3. கா. சிவத்தம்பி, தற்காலத் தமிழிலக்கியத்தில் வறுமையும் சாதியும், ப. 7.
4. பி.ஆர். அம்பேத்கர், இந்தியாவின் சாதிகள் (மொ.பெ.ஆ.) இராசாராம், பக். 48-49.
5. கூற்று எடுத்தாள்பவர், செயராணி ராசதுரை, மு.நூ.ப. 187.
6. கூற்று எடுத்தாள்பவர், கோ.அ.அந்தோனவா, சி.ம. பொன்கரந், இந்திய வரலாறு-பாகம் 1, (மொ.பெ.ஆ.) பூ.சோமசுந்தரம், பாஸ்கரன், ப. 57.
7. செயராணி ராசதுரை, மு.நூ.ப., ப189.
8. கலைக்களஞ்சியம் தொகுதி -4, ப. 462.
9. இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட், இந்திய வரலாறு (மொ.பெ.ஆ.), பி.ஆர். பரமேஸ்வரன், ப. 86.
10. இரா. கல்பகம், சமூகவியல், ப. 86.
11. While aiming at upward Social mobiliity and individual or a Society adopts a Social group at the top as a reference group and tries to imitate it. In case of Indian Society having caste system the Brahmin caste is treated as the top most caste. N.D. Kamble, Deprived Caste and Their struggle for Equality, p. 41.
12. தமயந்தி, நிழலிரவு, ப. ix.
13. மேலது., ப. 27.
14. மேலது., ப. 28.
15. மேலது., பக். 30, 31.
16. மேலது., ப. 31.
17. மேலது., ப. 31.
18. தமயந்தி, வாக்கு மூலம், ப. 81.
19. மேலது., ப. 92.
20. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப. 51.
21. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 14.
22. தமயந்தி, அக்கக்கா குருவிகள், ப.58.
23. கூற்று எடுத்தாள்பவர், பாஸ்கல் கிஸ்பர்ட், மு.நூ., ப. 280.
24. மேலது., ப. 280.
25. மேலது., ப. 280.
26. கூற்று எடுத்தாள்பவர், கா.சிவத்தம்பி, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும், ப. 14.
27. பரிசுத்த வேதாகமம், அப்.16: 30, 31.
28. மேலது., 1 தீமோ 1:15.

29. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம், வரலாற்றில் கிறித்தவம் தொகுதி-3, திருச்சபைச் சீர்திருத்தம், ப. 1.
30. சி.ஆர். டிபிள்யூ, டேவிட், மு.நூ., பக் 30 - 31.
31. தமயந்தி, நிழலிரவு, ப. 3.
32. சி.ஆர். டபிள்யூ, டேவிட், மு.நூ., ப. 101.
33. தமயந்தி, நிழலிரவு, ப. 13.
34. மேலது., ப. 17.
35. மேலது., ப. 18.
36. மேலது., ப. 19.
37. மேலது., ப. 25.
38. மேலது., ப. 6.
39. மேலது., ப. 16.
40. மேலது., ப. 13.
41. மேலது., ப. 19.
42. மேலது., ப. 20.
43. தமயந்தி, வாக்குமூலம், ப. 62.
44. மேலது., ப. 6
45. மேலது., ப. 16.
46. தமயந்தி, சாம்பல் கிண்ணம், ப. 62.

# இயல் – 5

# படைப்பாளியும் பெண்ணியப் பார்வையும்

## 5.0 முன்னுரை

பெண்ணியம் என்ற கலகக்குரல் மனித இனத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சமுதாயத்தில் உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்து, தங்கள் நிலையை உணராதிருந்த பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியது; இதனால் பெண்கள் தங்கள் தாழ்நிலையை உணர்ந்து அதிலிருந்து விடுபடுவதற்காகப் போராடத் துவங்கினர். இவ்வாறு பலகாலமாக ஆண்களுக்கிணையான உரிமை வேண்டுமென்று பெண்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இவ்வுரிமைக் குரலே ‘பெண்ணியச் சிந்தனை’ தோற்றம் கொள்ளக் காரணமானது.

இவ்வியலில் பெண்ணியம் என்ற சொல்லிற்கு வழங்கப்படும் விளக்கங்களும், அப்பொருள் குறித்த அறிஞர்களின் கருத்துரைகளும் விவாதிக்கப்பட்டு ஆராயப்படுகிறது. மேலும் மேலைநாடுகளில் பெண்ணியம் தோன்றிப் பிற நாடுகளுக்குப் பரவியது; இதனால் பெண்ணியத் திறனாய்வு தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தது. இந்த மாற்றங்களைத் தனக்குள்ளே உள்வாங்கிய தமயந்தி தன்னுடைய படைப்பில் பெண்களுக்கு எதிரான பல்வேறு பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளையும், விழிப்புணர்வுக் கருத்தாக்கங்களையும் அதனடிப்படையிலான எழுச்சியையும் பதிவு செய்துள்ளார். மேலும் புதுமைக் கருத்தால் சீர்திருத்தங்களை வெளிப்படுத்தியுள்ளார். இச்சீர்திருத்தக் கருத்துக்கள் படைப்பாளிகள் கூற்றாகவும், பாத்திரங்களின் கூற்றாகவும் அமைந்துள்ளன.

### 5.1 பெண்ணியச் சொல் விளக்கம்

1889-ஆம் ஆண்டு பெண்களின் உரிமைத் தொடர்பான பிரச்சினைகளையும் அதனடிப்படையிலான போராட்ட உணர்வுகளையும், 'Womanism' என்ற சொல்லால் குறிப்பிட்டனர். 1890 முதல் இச்சொல்லுக்குப் பதில் 'Feminism' என்றச் சொல் வழங்கப்பட்டது. இது 'Femina' என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து உருவானதாகும். இதற்குப் பெண்ணின் குணநலன்களைக் கொண்டுள்ள (Having the qualities of female) என்ற பொருள் அமைகின்றது.

> Feminsm என்ற ஆங்கிலக் கலைச் சொல்லையே தமிழில் பெண்ணியம் என்று வழங்குகின்றனர்.
>
> "1895–ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாளன்று வெளியிட்ட அத்தீனா என்ற கிரேக்கப் பெண் தெய்வக் கோயில் என்ற நூலில் ஆலிஸ் ரோசி என்பவர் மேலே குறிப்பிட்ட பெண்ணியம் என்ற சொல்லை மகளிரியம் என்ற சொல்லுக்கு மாற்றுச் சொல்லாகப் பயன்படுத்தினார்"[1]
>
> "பாலினச் சமத்துவக் கோட்பாட்டையும், பெண்ணுரிமைகளையும் சிக்கல்களையும் முன்னிலைப்படுத்தும் இயக்கங்களையும் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டில்தான் இச்சொல் பெருமளவில் வழக்கத்திற்கு வந்ததெனலாம். பெண்ணியம் என்ற சொல் பெண்நிலை வாதம், பெண்ணுரிமை ஏற்பு, பெண்ணுரிமை, பெண்விடுதலை என்ற பொருள்களை உள்ளடக்கியதாக விளங்குகிறது"[2]

இச்சொல்லுக்கு ஆக்ஸ்போர்ட் அகராதி (1894) பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது (Advocacy of the Claims of Women) என்று விளக்கமளிக்கின்றது.

### 5.2 பெண்ணியம் கருத்து விளக்கம்

பெண்ணியம் என்னும் குரல் அது வழங்கப்படும் இடத்திற்கும், காலத்திற்கும், பெண்களின் பிரச்சனைகளுக்கும் ஏற்ப வெவ்வேறு பொருளைத் தருவதாக அமைந்துள்ளது. பிரிட்டானியாக் கலைக்களஞ்சியம்,

> **‘‘பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அதோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும் சமுதாய, அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையிலும் அவள் ஆண்களுக்குச் சமமானவள் எனும் உயர்நெறியை நிலைநாட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது’’**[3]

என்று பெண்ணியத்திற்கு விளக்கமளிக்கின்றது.

சார்லட்பன்ச் (Chartotee Bunch) என்ற பெண்ணியவாதி,

> **‘‘பெண்ணியம் என்பது பெண்களில் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம் உலகளவில் அரசியலிலும், பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்’’**[4]

என்றுரைக்கிறார். ரெ. ஸ்டான்சி (Ray Stancy) என்பவர். பெண்ணியத்தின் மையச் செயல்பாடு, சமுதாயப் பெண்கள் நிலையை மாற்றுவது என்கின்றார். இது போன்றே ரோசலிண்ட் டென்மார் (Rosalint Delmar) என்பவர்,

‘‘பெண்ணியம் பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் (A Movement for Change in the Position of Woman)’’[5]

என்று கருத்துரைக்கின்றார். தெரசா பளிங்டன் (Teresa Billington) இது உலகத்தையே மாற்றியமைக்கும் இயக்கம் என்கின்றார்.

கார்டன் (Garden) என்பவர்,

‘‘பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதைமாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே பெண்ணியம்’’[6]

எனவும் பார்பரா ஸ்மித் (Barbara Smith) என்ற பெண்ணியலார்,

‘‘பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத் தளையிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள் தன்பால் சேர்க்கையுடைய பெண்கள், வயதான மூதாட்டிகள் மற்றும் துன்புறும் பெண்கள், இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்கமாகும்’’[7]

என்று விரித்துரைக்கின்றார்.

இக்கருத்தையொட்டி புட்சக் என்பவர்,

‘‘பெண்ணியம் என்பது பெண்கள் பாலினப் பாகுபாட்டார் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்’’[8]

என்று கருத்துரைக்கின்றார்.

பெண்ணியம் குறித்து இரா. பிரேமா,

> "பெண்கள் மீதான வரலாறு, மத, பொருளாதார, பண்பாட்டு ரீதியான ஒடுக்குமுறையின் அகநிலை உண்மைகளை ஆராய்வது; அதாவது பெண்கள் மீதான ஒடுக்கு முறையின் பல்வேறு பரிமாணங்கள், அதற்கான தீர்வுகள் அதை அடைவதற்கான வழிமுறைகள் இவற்றை ஆராய்வதாகும்"[9]

என்கிறார்.

பெண்ணியத்திற்கு ஆண்கள் எதிரி அல்ல, அதன் வளர்ச்சிக்கு அவர்களின் ஒத்துழைப்பு மிகத் தேவை என்பதை வெ. பத்மா,

> "பெண்ணியம் ஆண்பாலரை விலக்கும் தத்துவமன்று, ஒட்டு மொத்த ஆணாதிக்கச் சட்டத்தை மாற்றுகின்ற பணியை மேற்கொண்டுள்ள பெண்ணியம் அதே பணியில் பிராயச்சித்த உணர்வோடு பங்கேற்கும் ஆண்களையும் உள்ளடக்க வேண்டிய தேவை உள்ளது"[10]

என்று எடுத்துரைக்கின்றார். தீவிரவாதப் பெண்ணியவாதிகளைத் தவிர, பிற பெண்ணியலாளர்கள் இக்கருத்தை ஏற்றுக் கொள்கின்றனர்.

திருமதி மீனாட்சி ஆப்தே,

> "பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான உரிமைகள், சமமான வேலைவாய்புகள், வேலைக்கேற்ற சமமான ஊதியம், தனக்கு எத்தனைக் குழந்தைகள் எப்பொழுது வேண்டும் என்று நிர்ணயிக்கும் அம்சங்களை எடுத்துரைக்கின்றார். பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்ணுரிமையை வற்புறுத்தும் ஓர் இயக்கம் என்று பொருள் கொள்ளப்படுவது இங்குக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்."[11]

அபர்ணா மகந்தா என்ற பெண்ணியலாளர் பெண்ணியம் என்பது தத்துவமும், வாழ்க்கை முறையுமாகும் என்கின்றார்.

> ''பெண்ணியம் பெண்கள் அனுபவிக்கும் எல்லாவிதமான அடக்கு முறைகளையும் எதிர்ப்பது மட்டுமன்றி பெண்களின் மேம்பாட்டிற்குரிய வழிமுறைகளையும் செயல்படுத்துகிறது. இந்த அடக்கு முறைகள் பெண்ணியத்திற்குப் பொதுவாக இருப்பதால் இந்நிலைமாறப் பெண்களே பாடுபட வேண்டும்''[12]

என்று பெண்ணியத்திற்கு விளக்கமளித்ததுடன், அதன் செயல்பாடு குறித்தும் பெண்கள் நிலை உயர்வதற்கான வழிமுறைகளை எடுத்துரைக்கிறார் டாக்டர் முத்துச் சிதம்பரம்.

கி. மாரியம்மாள் என்பவர்,

> ''பெண்கள் தங்கள் உரிமைகளை யாரிடமும் யாசித்துக் கேட்க வேண்டிய நிலையில் இல்லை. தங்களுக்குள் உறைந்து கிடக்கும் அறிவுப் பூர்வமான சிந்தனைகளை வெளிக்கொணர்வது, சுய உரிமைகளைச் சுயவாயால் பேசுவது, சிந்திப்பது தான் பெண்ணியம்''[13]

என்கிறார்.

இவரைப் போன்றே டோனா ஹார்க்ஸஸ்ட் மற்றும் சூமாரோ என்பவர்களும்,

> ''பெண்ணியம் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி அரசியல் மற்றும் தத்துவ நிலையாகவும் செயல்பட வேண்டி இருப்பதால் இதற்குத் தேவை தீவிர

**நடைமுறை செயல்பாடு தான்; தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி தானே இல்லாமல் போய்விடும்”[14]**

என்று எச்சரிக்கின்றார்.

பெண்ணியத்திற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டுள்ள போதும் அது வழங்கப்படும் இடத்திற்கும், காலத்திற்கும் பெண்களின் பிரச்சனைகளுக்கும் ஏற்பமாறுபடும் தன்மையுடையது. இதனைக் குறித்து டாக்டர் முத்துச் சிதம்பரம்,

**“இதன் விளக்கம் ஒரு சமுதாயத்தின் வரலாறு, பண்பாடு இவற்றைப் பற்றிய உணர்வு நோக்கு, செயல் இவற்றைப் பொறுத்து மாறுபடும்”[15]**

என்கின்றார். மொலீனா, தேன்மொழி ஆகியோரும் இதற்குப் பொதுவான வரையறையில்லையென்று கருத்துரைக்கின்றார்.

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து பெண்ணியம் குறித்துப் பின்வருமாறு தீர்மானிக்க முடியும்; பெண்ணியம் பாலியல் சமத்துவத்தையும் சமூக மாற்றத்தையும் முதன்மைப்படுத்தினாலும் பெண்களது அனைத்துப் பிரச்சனைகளையும், சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதுடன் அவர்களின் அறிவார்ந்த சிந்தனைகளைத் தூண்டி, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை ஊக்குவித்து அனைத்துத் துறைகளிலும் பெண்களை ஈடுபடுத்தி முன்னேறச் செய்வதே இதன் மையச் சிந்தனை எனலாம்.

### 5.3 பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**“பெண்கள் தாங்கள் அடிமைப்படுத்தப்படுகிறோம் என்பதை உணர்ந்து அதனை எதிர்த்துப் போராடத் துவங்கிய காலத்தைப் பெண்ணியத்தின்**

தோற்றமாகக் கொள்ளலாம். இரு காலக்கட்டங்கள் பெண்ணிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இதனைப் பெண்ணியவாதிகள் இருபெரும் அலை என்று குறிப்பிடுகின்றனர். முதல் அலை 1830–இல் அமெரிக்காவில் தோன்றி ஐரோப்பாவிற்கு விரைவாகப் பரவியது. இவ்வகையின் காரணமாகப் பெண்கள் ஓட்டுரிமைப் பெற்றனர். இரண்டாவது அலை 1960–இன் தொடக்கத்தில் அமெரிக்காவில் தோன்றி உலகத்தின் பல பாகங்களுக்குப் பரவி மிகப் பெரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியது"[16]

முதல் அலை தோன்றிய பதினெட்டாம் நூற்றாண்டிற்கு முன்பே பெண் விடுதலைச் சிந்தனைகள் அவ்வப்போது தோன்றின; ஆனால் 'பெண்ணியம்' என்பது முறையான முழுவடிவம் பெற்றது இருபதாம் நூற்றாண்டில் தான்.

### 5.3.1 அமெரிக்காவில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

1840-ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற உலக அடிமைகள் மாநாட்டில் பெண்கள் என்ற ஒரே காரணத்திற்காக அமெரிக்காவிலிருந்து வந்த பெண்களை மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்காததே அமெரிக்காவில் பெண்ணியம் தோன்றக் காரணமாக அமைந்தது. இதன் எதிரொலியாக அமெரிக்காவில் ஒகையோ மாநிலத்தில் நடைபெற்ற மாநாட்டில் ஆண்கள் அனுமதிக்கப்படவில்லை. மேலும் இச்சம்பவம் பாலினச் சமத்துவம் காரணமானது. 1848- ஆம் ஆண்டு செளகாபாய்ஸில் நடந்த பெண்கள் மாநாடு பல கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன்வைத்தது. 1869-இல் சால்கம் நிறுவி வாக்குரிமைக்காகத் தொடர்ந்து போராடியதால் 1920-இல் பெண்கள் அவ்வுரிமையைப் பெற்றனர். அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவால் பெண்களின் வேலைகளே முதலில் பறி போயின. ஆனால்

இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறையால் பெண்கள் எல்லாத்துறைகளிலும் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

1960-இல் பெண்ணிய இரண்டாம் அலையால் அமெரிக்காவில் பல இயக்கங்கள் தோன்றின. 1963-இல் சம ஊதியம் சட்டப்பூர்வமானது. பெண்கள் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகத் தீவிரமாகப் போராடத் துவங்கினர். இக்கால கட்டத்தில் பெண்களின் நிலையை விளக்கிப் பல நூல்களும் கட்டுரைகளும் வெளியாயின. 1967-இல் பாலின வேறுபாடு கூடாது என்ற சட்டமியற்றப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் அமெரிக்காவில் தீவிரவாதப் பெண்கள் அமைப்புத் தோற்றம் கொண்டது. சிவப்புக்காலுறைகள், என்றழைக்கப்படும் தீவிரவாதப் பெண்கள் அமைப்புகள் பெரும் எழுச்சியுடன் செயல்பட்டன. 1968-இல் உலக அழகிப் போட்டிக்கு எதிராக உள்ளாடை எரிப்புப் போராட்டம் நடைபெற்றது. 1960 முதல் 1970 வரை தீவிரவாதப் புத்தாண்டாகக் கணக்கிடப்பட்டது. 1971-இல் தேசிய மகளிர் அரசியல் குழுவை நிறுவியதன் விளைவாக அரசியலில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்து 1970-இல் பெண்ணியப் பத்திரிக்கைகள் பல வெளியாயின. அவற்றுள் ‘மிஸ்’ என்ற பத்திரிகை குறிப்பிடத்தக்கதாகும்.

1972-இல் வயதான பெண்களுக்கான அமைப்பு கறுப்பர் இனப் பெண்களின் விடுதலைக்காகப் போராடியது. 1975-ஆம் ஆண்டு பெண்கள் ஆண்டாகவும், அதனைத் தொடர்ந்து வரும் பத்தாண்டுகளும் பெண்கள் பத்தாண்டாகவும் அறிவிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தீவிரவாதப் பெண்ணியம் செல்வாக்குப் பெற்று மிதவாதப் பெண்ணியத்தைக் கடுமையாக விமர்சித்தது. பெண்ணிய இரண்டாம் அலையால் மகளிரியல் கல்வி அமெரிக்காவில் தோன்றி உலகெங்கும் பரவியது. இது ஆண்மைய வாதத்தில்

அமைந்த அனைத்தையும் பெண்மையவாதப் போக்கில் மறு ஆய்வுக்கு உட்படுத்தியது. இதனால் அமெரிக்காவில் பெண்ணியம் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் முத்திரையைப் பதித்தது.

### 5.3.2 இங்கிலாந்தில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

அமெரிக்காவைப் பின்பற்றி இங்கிலாந்திலும் பெண்ணிய இயக்கங்கள் வளர்ச்சி பெற்றன. 1903-இல் பெண்களின் சோசலிச அரசியல் கூட்டமைப்பு வாக்குரிமைக்காகப் போராடியது. முதல் உலகப் போரில் பெண்களின் சிறந்த பங்களிப்பாகக் கண்ட அரசு 1918-இல் பெண்களுக்கு வாக்குரிமை அளித்தது. எனினும் 1929-இல் தான் முழு வாக்குரிமை வழங்கப்பட்டது. இங்குப் பெண்கள் திருமண வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தராது. அதனை மறுத்தமையால் ஆணாதிக்கம் சரியத் தொடங்கியது. 1953-இல் ராணி எலிசபெத் பதவியேற்ற பின் பாலினச் சமத்துவம் ஏற்பட்டது. இதனால் பெண்கள் அதிக அளவில் வேலைக்குச் சென்றனர். அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்தில் தீவிரவாதப் பெண்ணியம் வரவேற்பைப் பெறவில்லை எனலாம். இரண்டாம் அலையால் மகளிரியல் கல்வி அமெரிக்காவில் தோன்றி உலகெங்கும் பரவியது. இது ஆண்மைய வாதத்தில் அமைந்த அனைத்தையும் பெண்மையவாதப் போக்கில் மறு ஆய்வுக்கு உட்படுத்தியது. இதனால் அமெரிக்காவில் பெண்ணியச் சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் முத்திரையைப் பதித்தது.

1969-இல் லண்டன் மகளிர் விடுதலைப் பயிற்சிப் பட்டறையும், 1970-இல் தொடர்பு சாதனப் பெண்கள் குழுவும் 1971-இல் கைவிடப்பட்ட பெண்களுக்கான மையமும் ஸ்பேர்ரிப் ஸ்ரூ என்பவையும் மிக

பிரபலமானவையாகும். 1975-இல் பெண்களுக்காக ஃபாஸ்ட் நூலகமும் பெண்கள் பற்றிய ஆராய்ச்சி மையங்களும் நிறுவப்பட்டன.

“**1975–**இல் லண்டனில் வீட்டு வேலைக்கான ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டி முதல் பொது மக்கள் பிரச்சாரம் நடந்தது. அத்துடன் பெண்களின் கூட்டுச்சக்தி, பெண் ஒருபாலியல் சேர்க்கையாளரின் உரிமை, கறுப்பர் இனப் பெண் உரிமை, விலைமாதர் உரிமை, பாலியல் வன்முறை எதிர்ப்பு என்பனவற்றைப் பற்றியும் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன”[17]

**1976–**இல் பாலியல் வன்முறை எதிர்ப்பு மையம் துவங்கப்பட்டதும், பெண்கள் மீதான ஆண்களின் வன்முறையைக் கண்டித்து **1977, 1978–**இல் நடைபெற்ற தேசிய மகளிர் மாநாட்டில் எதிர்ப்புக் குரலும் கொடுத்தனர். மேலும் இக்காலக்கட்டங்களில் பெண்கள் மீதான வன்முறை மற்றும் ஆபாசத் திரைப்படங்களை எதிர்த்து, இரவு நேரங்களில் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினர். தொடர்பான போராட்டங்களும் சட்டபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. எழுபதுகளில் பெண்ணியம் பிரிட்டன், அமெக்காவில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் வளர்ந்து வரும் பல நாடுகளிலும் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி பெற்றது. எழுபதுகளின் தொடக்கத்தில் ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் பெண்கள் சமஊதியம், சமவேலை வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை இவற்றைப் பெற்றனர். ஆனால் மூன்றாம் உலக நாடுகளின் பெண்களுக்கும் பணம் படைத்த அமெரிக்க மற்றும் பிரிட்டனில் உள்ள பெண்களுக்கும் உள்ள பிரச்சனைகள் வேறுபட்டவைகளாக அமைந்திருந்தன. அதிலும்

**கத்தோலிக்க, இஸ்லாமிய நாட்டுப் பெண்களுடைய பிரச்சனைகள் வெளிப்படையாகவே வேறுபட்டிருந்தன''[18]**

1981- ஆம் ஆண்டு இஸ்ரேலில் அனைத்துலகப் பெண்ணியக் கூட்டம் நடைபெற்றது. இதில் இந்தியா உள்பட பலநாட்டுப் பெண்ணியக் கல்வியாளர்களும் செயல்பாட்டாளர்களும் கலந்துகொண்டு குடும்பம், குழந்தைப் பிறப்பு, குழந்தை நலம், இதனைச் சீர்படுத்தும் என்று குறிப்பிட்டனர்.

1970 முதல் 1981 வரையிலான காலகட்டங்களில் முதியோர் கல்வி நிறுவனங்களும் தொழில் பயிற்சி நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் மகளியல் கல்வியை அறிமுகப்படுத்திப் பாடத்திட்டங்களிலும் இடம்பெறச் செய்தன.

**''லண்டனில் கருக்கலைப்புச் செயற்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள், தேசிய பெண்கள் கருக்கலைப்பு மற்றும் கருத்தடைப் போராட்டம் (NWACC) ஒன்றை நடத்தினர். இப்போராட்டத்தில் அடிப்படைத் தத்துவம் பெண் தனக்கு வேண்டியதைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் என்பதாகும்''[19]**

பெண்ணின் ஆட்சிக்குட்பட்டிருந்த சூரியன் மறையாத நாடு என்றழைக்கப்படும் இங்கிலாந்து அரசே படிப்படியாகத் தன் பெண்களுக்கு உரிமை வழங்கியது.

### 5.3.3 பிறநாடுகளில் பெண்ணியத் தோற்றமும் வளர்ச்சியும்

அமெரிக்காவையும் இங்கிலாந்தையும் தொடர்ந்து உலக நாடுகள் பலவற்றிலும் பெண்ணுரிமை பொருளாதார விடுதலை போன்றவற்றைப்

பற்றி விவாதித்தனர். எகிப்தில் அகமது பெயார் எல் சிட்யாக், காசிம் அமீன் போன்றோர் பெண்ணுரிமைத் தொடர்பான தங்கள் நூல்கள் மூலம் விழிப்புணர்வூட்டினர். சீனாவில் ஹஸ்யூ வெய் (1859–1927) என்பவர் பெண்களின் பாதக்கட்டுக்களை எதிர்த்தார். மேலும் அவர் ஆண்களுக்குப் பெண்கள் கீழ்ப்படிய வேண்டும் என்ற கருத்தையும் எதிர்த்தார்"[20]

இஸ்லாமிய நாடான ஈராக்கில் பெண்கள் ஒடுக்கும் முறையையும் ஆண்களின் பலதார மணத்தையும் எதிர்த்துப் பலர் பெண்ணுரிமைக்காப் போராடினர். அவர்களுள் குவாரம் உல்அயின் குறிப்பிடத்தக்கவர்.

### 5.4 பெண்ணிய வகைகள்

பெண்களின் பிரச்சனைகளையும், அவர்கள் அடிமையுறுவதற்கான காரணங்களையும் கண்டறிந்து இவற்றிலிருந்து பெண் விடுதலை பெறுவதற்கான வழிமுறைகளையும் வகுத்தனர் பெண்ணியவாதிகள். இவ்வழிமுறைகள் வெவ்வேறான கொள்கைகளையும், செயல்பாட்டையும் கொண்டிருந்தன. பெண்ணியம், மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism) சமதர்மப் பெண்ணியம் (Socialist Feminism) தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism) எனும் மூன்று கோட்பாடாகச் செயல்பட்டு வருகின்றது. பெண்ணியவாதிகள் தங்கள் கொள்கைகளாலும், செயற்பாட்டாலும் வேறுபட்டிருந்தாலும் பெண்ணுரிமை, பெண் விடுதலை என்னும் குறிக்கோள்களில் ஒன்றுபட்டிருந்தனர்.

### 5.4.1 மிதவாதப் பெண்ணியம்

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இப்பெண்ணியத்தை மேம்போக்கான பெண்ணியம், தாராளப் பெண்ணியம், ஆதாரப் பெண்ணியம் என்றழைத்தனர். பாலினச் சமத்துவத்தை முன்வைத்து உருவான

இப்பெண்ணியம் குடும்ப அமைப்பைச் சிதைக்காமல், அதில் பெண் சுதந்திரமாகச் செயல்படவும், மரியாதையுடன் நடத்தப்படவும் வேண்டுமென்று வற்புறுத்தியது. மிதவாதப் பெண்ணியம் சமுதாயத்தில் மாற்றத்தை உருவாக்கிப் பெண்களுக்குச் சமகல்வி, சொத்துரிமை, வாக்குரிமை, வேலைவாய்ப்பு, சம ஊதியம் போன்ற பல உரிமைகளைப் போராடிப் பெற்றது. பெண் விடுதலை, சுதந்திரம், சமத்துவம் என்பனவற்றையே இப்பெண்ணிம் வலியுறுத்தியது.

> **“தனிநபர் முக்கியத்துவம் வாய்ந்தவர், அவரது சுதந்திரம் அரசால் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கருத்து இக்கொள்கைக்கு அடிப்படையாகும். இதன் அடிப்படை நோக்கம் 1. மகளிர்க்கு சமவுரிமைகள் வழங்கப்பட வேண்டும், 2. சமூகப் புரட்சி, சட்டப்புரட்சி இவற்றின் மூலம் மகளிர்க்கு சுதந்திரம், சமத்துவம், சமநீதி முதலியவை கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதாகும்”**[21]

மிதவாதப் பெண்ணியத்திற்கு வித்திட்ட மேரிவுல்ஸ்டன் கிராப்ஃஃட் என்பவர் எழுதிய ‘பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு’ ஜான் ஸ்டுவர்ட்டி மில் என்பவர் எழுதிய ‘பெண் அடக்குமுறைகள்’, ‘பெண்ணியத்தின் தாய்’ என்று போற்றப்படும் பெட்டி ஃபிரைடன் எழுதிய பெண் விடுதலை இயக்கத்தினரின் வேதநூலான ‘பெண்ணியல்பு’, ‘புதிர்நிலை’ போன்ற நூல்களும் தேசியப் பெண்கள் அமைப்பும் இப்பெண்ணிய வளர்ச்சிக்குத் துணை நின்றன.

> **“மிதவாதப் பெண்ணியவாதிகள் பாதிக்கப்பட்ட பெண்கள் பாலியல் வன்முறைகளிலிருந்து பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டி பெண்கள் காப்பகம், மறுவாழ்வு மையம், குழந்தைகள் காப்பகம் போன்றவற்றை அமைத்து உதவுவதோடு தனிநபர் வெற்றிக்கும் உதவி வருகின்றனர்”**[22]

''இவ்வாறு பெண் விடுதலைக்காகப் போராடிப் பல உரிமைகளைப் பெற்று அரசியல் வட்டாரத்தில் பெருத்த மாற்றத்தை உருவாக்கிய மிதவாதப் பெண்ணியம், குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு சமூகப் பழக்க வழக்கங்ககளில் மாறுதல்களைக் கொண்டுவர விரும்பினர். சட்டங்களின் தொகுதி சமூகத்தை மாற்றிவிடும் என நம்பினர். அதனால் அடிப்படையான மாற்றம் தேவை என்று உணரலாயினர்''[23]

முதலே தோன்றிய இப்பெண்ணியம் விமர்சனங்களை மிகுதியும் எதிர்நோக்க வேண்டியதாயிற்று.

### 5.4.2 சமதர்மப் பெண்ணியம்

மிதவாதப் பெண்ணியத்திலுள்ள குறைகளை நீக்கும் பொருட்டு உருவானதே இப்புதிய கோட்பாடு. சமதரும சமுதாயத்தை உருவாக்குவதே இக்கோட்பாட்டின் நோக்கம்; பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளுக்கு மதிப்பு இல்லாத பொருளாதார அமைப்பையும், பெண்களின் உழைப்பைச் சுரண்டிப் பெரும் இலாபம் சம்பாதிக்கும் முதலாளித்துவத்தையும் கண்டித்து, மார்க்சிய, தீவிரப் பெண்ணியலாளர்களின் ஒருங்கிணைப்பாக உருவான சமதர்மப் பெண்ணியம் அனைத்திலும் பெண்கள் என்ற சமுதாயத்தை உருவாக்கப் போராடியது.

''குடும்பம், தனிச்சொத்து, வாரிசுருவாக்கல் ஆகியவற்றால் பெண்களை ஒடுக்கும் தந்தை மேலாதிக்கச் சமூகத்தை எதிர்த்து எழுந்தது இந்தப் பெண்ணியம்''[24]

அமெரிக்காவைவிட இங்கிலாந்தில் இப்பெண்ணியம் வேகமாகப் பரவியது. இதன் மூல நூலாக 1884-இல் ஃபிரெட்ரி ஏங்கல்ஸ் எழுதிய குடும்பம்

தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூல் அமைந்துள்ளது. பெமினிஸிட் ரிவ்யூ என்ற பெண்ணிய இதழ் குறிப்பிடத்தக்கதாகும்.

பெண்ணடிமைத் தனத்திற்கு, ஆண்களின் சொத்துரிமை முக்கிய காரணமென்றும், பாலின அடிப்படையில் மட்டுமன்றி, வேறுபல சமூகக் காரணங்களாலும் பெண்கள் துன்பத்திற்கு உள்ளாகின்றனர் என்றும் எல்லாப் பிரச்சனைகளும் பெண்களைப் பாதிக்கும் பிரச்சனைகள்தான் என்றும் இப்பெண்ணியவாதிகள் கருதுகின்றனர். பெண் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்காகப் போராடிச் சம ஊதியத்தைச் சட்டபூர்வமாக்கியதுடன், வியட்நாம் விடுதலைப் போராட்டம், தென்னாப்பிரிக்க நிறவெறி எதிர்ப்புப் போராட்டம் போன்றவற்றிலும் சமதர்மப் பெண்ணியவாதிகள் பங்கு கொண்டனர்.

> **“பெண் இனப்பெருக்கக்காரணி என்ற இயற்கை நியதியை வைத்துக் கொண்டு அதைச் சுற்றி எழுப்பப்பட்ட குழந்தைப் பராமரிப்பு, வீட்டுவேலை, சமையல், போன்ற பூரண இல்லறப் பொறுப்பிற்கு அவளை நிர்ப்பந்தப்படுத்துவது தவறு என்பது மட்டுமே இவர்களதுவாதம். ஆண்கள் தங்கள் மனப்பான்மையை மாற்றிக் கொண்டு இல்லற வேலையில் பங்கு கொள்ள வேண்டும் என்று சமதர்மப் பெண்ணியவாதிகள் வலியுறுத்துகின்றனர்”**[25]

இவ்வாறு தீவிரப் பெண்ணியவாதிகளின் கருத்திலிருந்து மாறுபட்டிருந்தனர்.

சோசியலிசப் பெண்ணியத்தின் வளர்ச்சி பெற்ற நிலையாகப் பொருள் முதல் பெண்ணியத்தைக் கூறலாம். பெட்டி, பிரைடன், கேட்மில்லட்,

ஜுலியட்மிட்சர்ல, சிமேடான்தியூலா, கிளாராஜெட்கிண், ஏஞ்சல் போப் போன்ற பெண்ணிய வாதிகள் சமதர்மப் பெண்ணியத்தின் வளர்ச்சிக்குத் துணைநின்றனர். இச்சமதர்மப் பெண்ணியவாதிகள் பெண்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றவும், உரிமைகளைப் பெறவும் தனித்துப் போராட வேண்டுமென்று கருதினர். பெண்களின் பிரச்சனைகள் தீர, அவர்களுக்குக் கல்வி வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றும் பெண்களும் ஆண்களைப் போன்ற பொது வேலைகளில் ஈடுபட வேண்டுமென்றும் வற்புறுத்தினர். பொருளாதார அமைப்பில் மாறுதல் ஏற்பட்டால் தான் சமூக அமைப்பிலும் சமத்துவத்தை ஏற்படுத்த இயலும் என்று இப்பெண்ணியவாதிகள் கருதினர். இப்பெண்ணியம் குறை கூறும் வகையில் இல்லை என்பதே திறனாய்வாளர்களின் கருத்து.

### 5.4.3 தீவிரவாதப் பெண்ணியம்

மிதவாதப் பெண்ணியத்தில் அதிருப்தி அடைந்தவர்கள், நவீனப் பெண்ணியம் என்றழைக்கப்படும் இப்பெண்ணியத்தை உருவாக்கினர். மிதவாதம் மற்றும் சமதர்மப் பெண்ணியங்கள் பாலியல் சமத்துவத்தை நோக்கமாகக் கொண்டிருந்தன. ஆனால் தீவிரவாதப் பெண்ணியவாதிகள், ஆண்கள் அனைவரும் பெண்களுக்கு எதிரிகள், ஆண்கள் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்று எண்ணினர். இதனால் ஆண்களை முழுமையாக ஒதுக்கிய சமுதாயத்தை (Society for cutting upmen - Scom) உருவாக்க முனைந்தனர்.

> **ஆண் ஆதிக்கமே பெண் அடக்கு முறைகளுக்கு அடிப்படைக் காரணமென்றும் இப்பெண்ணியவாதிகள் கருதியதால், ஆணாதிக்கத்தின் மூலவேரான தந்தைவழிக் குடும்ப அமைப்பை (Patriarchy Family**

Society) மாற்றப் போராடினர். இதன் மூலம் திருமணம், குடும்பம், தாய்மை போன்ற மரபுகளைத் தகர்க்க எண்ணினர். பெண்களின் உடல்கூறே அவர்கள் அடிமையாவதற்கு அடிப்படைக் காரணம் என்று எண்ணிய தீவிரப் பெண்ணியவாதிகள் பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாடு, குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு ஆகியன இவர்களின் செயல்பாடுகளாயின. ஆண் மேலாண்மையை முழுவதுமாய்ப் போக்க பால்ரீதியான புரட்சி தேவை என்றால் விழிப்புணர்வை ஊட்டுவதின் மூலம் மரபுகள், பாலியல் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தகர்க்க வேண்டுமென்றனர்"[26]

தீவிரவாதப் பெண்ணியத்தின் ஒரு கிளையாக, ஓரினக்கலவிப் பெண்ணியம் (Lesbian Feminism) அமைந்துள்ளது. இப்பெண்ணியமே உண்மையான பெண்ணியம் என்று தீவிரப் பெண்ணியலார் ஓரினக்கலவிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். லீட்ஸ் புரட்சிப் பெண்ணியமும் (Lees Re Volution Feminist) ஓரினக்கலவிப் பெண்ணியமே பெண்ணியம் என்று முழங்கியது.

தீவிரப் பெண்ணியவாதிகள் நடைமுறையிலுள்ள பால் பேதத்தை (Gender discrimination) ஆராய்ந்ததுடன் ஆண்களால் உருவாக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் சமூக மதிப்புக்களையும் மாற்ற எண்ணினர். எதிலும் எங்கும் பெண்கள் மட்டுமே முழுவதும் பெண்ணாட்சியே என்ற சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர். குடும்பம், பாலியல், ஆண்நாயகம், பெண் வரலாறு என்ற கோட்பாடுகளும் இப்பெண்ணியவாதத்திற்குள் அடங்குகின்றது.

அந்தரங்கம் பகிரங்கம் (Personal is Political) என்பது இப்பெண்ணியத்தின் குறிப்பிடத்தக்கதான கருத்துப் படிவமாகும். சுலாமித் பயர்ஸ்டோனின் பாலியல் பற்றிய வாதம் (The dialetic of Sex) என்ற நூல் தீவிரவாதப் பெண்ணியத்தின் ஆதார நூலாகும். ஆனி, கொயட்டின் புணர்ச்சிப் பரவசப் புனைகதை (The Myth of the Viginal Orgarm) என்ற நூல், ஆண் தேவையில்லை என்ற கருத்து உருவாகக் காரணமானது.

> **''இயற்கைக்கு மாறான கருத்தோட்டங்கள் இவர்கள் கொண்டிருந்தார்கள். உலக அரங்கில் இவ்வகைப் பெண்ணியம் வரவேற்பைப் பெறவில்லை. அது மட்டுமின்றி பெண்ணியம் என்றாலே ஆணை எதிர்ப்பது, குடும்பத்தை உடைப்பது என்ற தவறான கண்ணோட்டத்தைச் சமுதாயத்தில் ஏற்படுத்தக் காரணமாக இருந்தது தீவிரவாதப் பெண்ணியம்''**[27]

எனவே தான் புரட்சிகரமான கருத்துகளை உள்ளடக்கிய இப் பெண்ணியம் மிக வேகமாகப் பரவியபோதும் தீவிரவாதப் பெண்ணியம் வெற்றிபெறவில்லை.

### 5.4.4 பிற பெண்ணிய வகைகள்

மிதவாதப் பெண்ணியம், சமதர்மப் பெண்ணியம், தீவிரவாதப் பெண்ணியம் தவிர, வேறு சில பெண்ணிய வகைகளும் மேலைநாடுகளில் காணப்படுகின்றன. அவை மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism), ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism), கிறிஸ்தவப் பெண்ணியம் (Christian Feminism), கலாச்சாரப் பெண்ணியம் (Cultural Feminism), மனைப் பெண்ணியம் அல்லது இல்லப் பெண்ணியம் (Domestic Feminism), தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism) கறுப்புப் பெண்ணியம் (Black Feminism) சூழல் பெண்ணியம் (Eco Feminism)

போன்றவையாகும். இப்பெண்ணிய வகைகளும் பெண்ணிய வரலாற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். மேலை நாடுகளில் கறுப்புப் பெண்ணியம் என்றழைக்கப்படுவதே தலித் பெண்ணியமாக இந்தியச் சூழலில் உருமாறியுள்ளது. இக்கறுப்புப் பெண்ணியமும் சூழல் பெண்ணியமும் நவீன பெண்ணியச் சிந்தனைகளாகும்.

### 5.5 இந்தியாவில் பெண்ணுரிமை சிந்தனைகள்

இந்தியாவில் தந்தை வழிச் சமுதாயம் தோன்றிய பின் வேதகாலத்தில் பெண்ணடிமைக் கருத்துக்கள் நிலைபெற்றன. ஆங்கிலேயர் வருகையால் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டதன் விளைவால் பெண்ணுரிமைப் போராட்டங்கள் நடைபெற்றன.

#### 5.5.1 தந்தைவழிச் சமூகத்தின் தோற்றம்

வரலாற்று நோக்கில் இந்தியப் பெண்களின் நிலையை ஆராயும்போது தொடக்கக்காலத்தில் தாய்வழிக் குடும்ப அமைப்பு (Matriarchal Family Society) இருந்ததை அறியலாம். இக்காலகட்டத்தில் பெண்கள் நிலை மேம்பட்டிருந்தது. பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்தார்கள்; பெண்ணின் மறு உற்பத்தித்திறன் ஆணுக்கு அவள் மேல் அச்சமும், மதிப்பும் ஏற்படக் காரணமாக அமைந்தன. பெண்கள் பாலியல் சுதந்திரம் பெற்றிருந்ததால் சந்ததிகள் தாயின் பெயரிலேயே அடையாளம் காணப்பட்டனர். தென்னிந்தியாவில் உள்ள நாயர் மற்றும் வெள்ளாள இன மக்களிடம் காணப்பட்ட மருமக்கள் வழி தாய்முறை தாய் வழிச் சமுதாயத்தின் எச்சம் எனலாம். நிலவுடைமைச் சமுதாயத்தில் பெண்ணின் நிலை தாழ்வுற்றதுடன், மணமுறைகளால் ஏற்பட்ட கற்புக் கோட்பாட்டால் பெண் வீட்டிற்குள்ளேயே முடக்கப்பட்டு, பிள்ளைகளைப் பெறும் இயந்திரமாகவும் கருதப்பட்டாள்.

**“இனப்பெருக்க வாய்ப்பைப் பெண்கள் ஆணின்றித் தனியாகப் பெறமுடியாது என்ற உண்மை உணரப்பட்ட நிலையில் தந்தைவழிச் சமூகம் தோற்றம் பெற்றது”**[28]

### 5.5.2 வேதகாலத்தில் பெண்ணடிமை

இந்தியாவில் ரிக்வேத காலத்தில் பெண்கள் ஆணுக்கிணையாகக் கல்வி கற்பது, வேள்வி நடத்துவது, கவிதை இயற்றுவது போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர். புகழ்பெற்ற தத்துவவாதிகளான மைத்ரேயி, கார்க்கி, வசகனவி போன்றோர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இதன் பின்னர் தோன்றிய வேதங்கள் பெண்ணடிமைக்கு வித்திட்டன. மனுதர்மத்தில் பால்யவிவாகம், விதவை மறுமணத்தடை, பெண்ணின் திருமண வயதை ஏழாகக் குறைத்தல், கணவனைத் தெய்வமாகப் போற்றிக் கீழ்ப்படிந்து வாழ வேண்டும் போன்ற பெண்ணடிமைக் கருத்துக்கள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. இங்ஙனம்

**“வேதகாலத் துவக்கம் தாய்வழிச் சமூகமாகவும் வேதகாலப் பின்பகுதி தந்தைவழிச் சமுதாயத்தில் துவக்கக் காலமாகவும் இருந்துள்ளது”**[29]

இந்துமதம் மட்டுமன்றிப் பிற மதங்களும் பெண்ணை ஆணுக்குக் கீழாகவே கருதுகின்றன.

### 5.5.3 முகமதியர் காலத்தில் பெண்ணடிமை

முகமதியருடைய காலத்தில் பெண்கள் நிலை மேலும் தாழ்வுற்றது. உடன்கட்டை ஏறுதல், பால்ய விவாகம் போன்றவை அதிகரித்தன. கல்வி மறுக்கப்பட்டது; எனினும் கவிபாடுவதில் சில பெண்கள் சிறந்து விளங்கினர்.

### 5.5.4 விழிப்புணர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சியில் தொடக்கக் காலத்தில் பெண்கள் நிலை கீழானதாக இருந்த போதும் பலர் வீராங்கனைகளாகத் திகழ்ந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட கிறிஸ்தவ மத வளர்ச்சி இந்துக்களிடம் தங்கள் மதத்தைக் காக்க வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கவே, மதத்தில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர். இதில் பெண்கள் மேம்பாடும் அடங்கும்; பெண்கள் தொடர்பான இந்து சட்டச் சீர்திருத்தம், பெண் கல்வி இவற்றை வேண்டியும், குழந்தை மணம், உடன்கட்டை ஏறுதல், தேவதாசிமுறை இவற்றை ஒழிப்பது குறித்தும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் பெண்களிடையேயும் விழிப்புணர்வையும் ஊட்டினர்; ஆனால் குடும்பத்தில் ஆணாதிக்கத்தினால் பெண் அடிமை வாழ்வு வாழ்வது குறித்து இச்சீர்திருத்தவாதிகள் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இந்தியாவில் பெண்விடுதலைச் சிந்தனைகளை முதலில் பரப்பியவர்கள் ஆண்களே. வெளிநாடுகளுக்குச் சென்று வந்த சிலர் அந்நாட்டுப் பெண்களின் சுதந்திர வாழ்வையும் தம்நாட்டுப் பெண்களில் அடிமை வாழ்வையும் கண்டு ஆணாதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தனர்.

### 5.5.4.1 பெண்ணுரிமைக்காகப் போராடியவர்கள்

இந்தியாவில் பெண்ணுரிமைக்காகப் போராடியவர்களுள் பிரம சமாஜத்தை நிறுவிய ராஜாராம் மோகன்ராய் குறிப்பிடத்தக்கவர். இவரது முயற்சியால் தான் 1829-ஆம் ஆண்டு உடன் கட்டை ஏறுதலைத் தடுப்பதற்குச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1872-இல் கேசவசந்திர சென்னின் முயற்சியால் குழந்தை மணம் சட்ட விரோதமாக்கப்பட்டது. மகாதேவ கோவிந்தரானடே பிரம்ம சமாஜத்தையும் நிறுவி, பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர். இவர்களைத் தவிர ஈஸ்வர சந்திர வித்யாசாகர், கோபால கிரு ணகோகலே, சுரேந்திரநாத் பானர்ஜி, மலப்பகி, ராமகிரு ண பரமஹம்சர், விவேகானந்தர்,

காந்தியடிகள் போன்றவர்களும் தம் சீர்திருத்தக் கொள்கைகளாலும், செயல்பாடுகளாலும் பெண் விடுதலைக்குத் துணை நின்றனர்.

காந்தியடிகள் பெண்களை அதிக அளவில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தார். இவர் தலைமையேற்ற சத்தியாகிரகங்களில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர். சுபா சந்தரபோஸ் ‘ஜான்சி’ என்ற பெயரில் பெண்களுக்கான படைப்பிரிவை ஆரம்பித்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்தார்.

### 5.6 தமிழ் இலக்கியத்தில் பெண்ணியக் கருத்தாக்கம்

பெண்ணியத் திறனாய்வின் ஒரு கூறான மறுபார்வையைப் பயன்படுத்தி பல ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. பழைய இலக்கியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தித் திறனாய்வு மேற்கொள்ளும் போது அதன் மற்றொரு பரிமாணம் வெளிப்படுகின்றது. பெண்ணியத் திறனாய்வு வளர்ந்து வரும் நிலையில் பெரும்பான்மையான அனைத்துத் தமிழ் இலக்கியங்களும் மறுபார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இலக்கியங்கள் வாயிலாகப் பெண்ணடிமைக் கருத்துக்களைப் பரப்பிய ஆணாதிக்கச் சமுதாயத்தின் மறுபக்கம் தெளிவாகின்றது. தொல்காப்பியம் பெண்ணைக் கடல் கடந்து செல்லுதல் கூடாது; தன் காதலைத் தலைவனிடம் எடுத்துரைக்கக்கூடாது; சங்ககாலத்தில் பெண்களின் கற்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் முதல், இடை, கற்பின் பெயரில் பெண்கள் கொலை செய்யப்பட்டனர்; பெண் ஆணைச் சார்ந்தே வாழ வேண்டும் என்ற சமூகக் கட்டுப்பாட்டைக் காட்டுகின்றது. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்கள் எல்லா வகையிலும் கட்டுப்படுத்தும் நிலையே காணப்படுகின்றன. காப்பியங்கள் பெண்ணைப் பந்தையப் பொருளாகவும், மணப்பொருளாகவும் சித்திரிக்கிறது.

பாரதி, பெரியாரின் பெண்விடுதலை குறித்தக் கருத்தாக்கங்களைத் தற்காலப் படைப்புக்கள் எடுத்துரைக்கின்றன.

### 5.7 தமயந்தி படைப்புக்களில் வெளிப்படும் பெண்ணியச் சிந்தனைகள்

இந்நூற்றாண்டின் தமிழ்ப் பெண் எழுத்தாளர் வரிசையில் தனக்கெனத் தனிஇடத்தைப் பெற்றவர் படைப்பாளர் தமயந்தி அவர்கள். மனதில் பட்டதைத் தனித்துச் சொல்லும் சிந்தனை மிக்கவர். சமூக அக்கறை கொண்டவர். இந்தப் பண்புகள் இவரது தொகுப்பிலுள்ள கதைகளிலும், நாவல்களிலும் பதிவாகியுள்ளன.

> **‘‘பெண்கள் தங்களைப் பற்றித் தாங்களே எழுதிக் கொள்ளத் துணிச்சலூட்டப்பட வேண்டும், தங்களை வெளிப்படுத்திக் கொள்ள துணிச்சலோடு பேச வேண்டும்’’**[30]

என்று கூறியுள்ளதற்கேற்ப, தமயந்தியின் பெண்ணியச் சிந்தனை, அன்போடும், நெகிழ்ச்சியோடும, போராட்டங்களோடும், பாய்ச்சலோடும், சமூக வாழ்வோடும் பின்னிப் பிணைந்துகிடக்கிறது. அவரது சமூக முன்னேற்ற ஈடுபாடு ஒவ்வொரு படைப்பிலும் அழுத்தமாகவே பதிவாகியுள்ளது.

தமயந்தி படைப்புக்களில் வரும் பெண்ணியச் சிந்தனைகளை ஐந்து பெண்ணிய வகைகளுக்குள் அடக்கிப் பார்க்க முடியும்.

1. மிதவாதப் பெண்ணியம்
2. சமதர்மப் பெண்ணியம்
3. தீவிரவாதப் பெண்ணியம்
4. கிறிஸ்தவப் பெண்ணியம்
5. மனைப் பெண்ணியம்

### 5.7.1 மிதவாதப் பெண்ணியம்

பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் சமத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே மிதவாதப் பெண்ணியத்தின் நோக்கமாகும். இது பெண்களுக்கு உண்டாகும் சிக்கல்களை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு ஆராய்கிறது. இப்பெண்ணிய நோக்கினைத் தமயந்தியின் படைப்பான 'அப்பாவுக்கு எழுத நினைத்தது', 'தேனும் ஒரு கொயர் கோல நோட்டும்', 'அக்கக்கா குருவிகள்', 'தொடர்வது', 'மல்லியும் ஒரு பாட்டில் பீரும்', 'நிழலிரவு', 'நிலை' போன்ற கதைகள் வெளிப்படுத்துகின்றன.

'அப்பாவுக்கு எழுது நினைத்தது' என்ற கதையில் சிவகாமியின் தங்கைக்குத் திருமண ஏற்பாடு நடைபெறுகிறது.

> **"செயின் இத்ன பவுன்ல போடனும், மோதிரம் இவ்ளோனு பேரம் பேசியவிதம், சிவகாமியின் தங்கைக்குப் பிடிக்கவில்லை."**[31]

அதனால் அவளே தைரியமாக அந்தத் திருமணத்தை தடுத்துவிடுகிறாள்.

பொதுவாக மாப்பிள்ளை வீட்டார் தான் பெண்ணுக்கு நிறமில்லை, குணமில்லை, அழகில்லை என்று பெண்ணை ஒதுக்குவர். ஆனால் இங்கு மணப் பெண்ணே தனக்கு மாப்பிள்ளை பிடிக்கவில்லை என்று துணிச்சலாகக் கூறும் நிலையை மாறுபாடாகப் பார்க்கலாம். குடும்ப அமைப்பில் பெண்ணின் பல்வேறு இன்னல்களுக்கு வரதட்சணை அடிப்படைக் காரணமாகிறது. பெண்களைப் பெருமளவில் பாதிப்படையச் செய்கின்ற இக்கொடுமைக்குரிய தீர்வுகள் இன்னும் செயல்வடிவம் பெறவில்லை. எனினும் கதைகளில் சில தீர்வுகள், பாத்திரங்கள் வாயிலாக உருப்பெற்றுள்ளன.

**“சீதனம் என்பது மக்கள் தொகையில் சரிபாதியினராக உள்ள பெண்களைப் பண்டமாற்று செய்வதை அனுமதிக்கிற ஒரு சமுதாயத்தின் பிரதிபலிப்பே. இது ஆயிரக்கணக்கான இளம் பெண்களை விரக்திக்கும் வெறுப்புக்கும் இட்டுச் செல்லும் ஓர் அமைப்பு”**[32]

என்ற கருத்தை நினைவூட்டும் வகையில் கணவனைப் பாதுகாக்கவும், குழந்தைகளைப் பெற்று வளர்க்கவும், சந்தையில் மாடு வாங்குவது போல் வரதட்சணை என்ற பெயரில் பெண்ணை விற்பதும் மிகவும் வேதனைக்குரியதாகும். இந்நிலையை மாற்றி, பெண் வெறும் உயிரற்ற ஜடம் இல்லை; உணர்ச்சியுள்ள பெண், அவள் வெறும் போகப் பொருள் அல்ல; அவள் ஆணுக்கு நிகராக இருக்கக்கூடியவள் என்பதை, தமயந்தி பதிவு செய்துள்ளார்.

மனதிற்கு ஒவ்வாத மணவாழ்விலிருந்து விடுபடும் வகையில் 'நிலை' என்ற கதை அமைந்துள்ளது. புதிதாய்த் திருமணமான நாகலிங்கம் என்பவர் குடித்து விட்டுக் கலாட்டா பண்ணுகிறதைப் பார்த்து அவனது மனைவி, மாறி வரும் பெண்ணியச் செயற்பாடுகளை இதன் மூலம் தமயந்தி வெளிப்படுத்தியுள்ளார்.

**“இவர் திருந்தட்டும் பிறகு இவனோடு வாழலாம்”**[33]

என்று கூறிவிட்டு அவளது தாய்வீட்டிற்குச் சென்று விடுகிறாள்.

‘தொடர்வது’ என்ற கதையில் வேலையில்லாமல் ஊதாரியாகத் திரியும் படித்த இளைஞருக்கு வேலைத் தேடிக் கொடுக்கும் பெண்ணை ஆசிரியர் படைத்துள்ளார். ‘வினையே ஆடவருக்கு உயிரே’ என்ற நிலைமாறியுள்ளது என்பதைத் தெளிவுறுத்தும் வகையில் இக்கதை இடம்பெற்றுள்ளது.

மோகனுக்கு வேலையில்லை என்ற காரணத்தால் மோகனின் அத்தை மகள் அவனுக்கு வேலை வேண்டி, சிபாரிசுக் கடிதம் ஒன்றை எழுதிக் கொடுக்கிறாள்.

ஆணும் பெண்ணும் சமம் என்பது இருவரும் ஒத்த மதிப்பினர் என்பதையே சுட்ட வேண்டும்; ஒத்த இயல்பினர் என்பதையல்ல. வேறு சொற்களில் கூறினால், ஆணின் உடலைமைப்பும், வலிமையும் இயல்புகளும், சமூகக் கடமைகளும், உயர்வானவை என்றும், பெண்ணின் உடலமைப்பும் மென்மையும், பண்புகளும், சமூகப் பொறுப்புக்களும் தாழ்வானவை என்றும் கருதுவதைப் பெண்ணியம் எதிர்க்கும் வகையில் தமயந்தியின் படைப்புகள் அமைந்துள்ளன.

‘தேனும் ஒரு கொயர் கோல நோட்டும்’ என்ற கதையில் தேன் ஆணைக் குறைகூறும் பாத்திரமாகப் படைத்துள்ளார். ஆம்பிளைப் பசங்கல்லாம் கோமாளிப் பசங்கன்னு அவ அடிக்கடி சொல்லுவாள். ஆனாலும், ஆம்பிளைப் பசங்களோடப் பழகுறத அவ ஒருநாளும் விட்டதில்லை. தங்கசாமி அவளுக்கு லெட்டரைக் கொடுக்க,

> **“எல்லா ஆம்பிளைப் பசங்களும் இப்படித்தான். ஃபெரண்டு, சிஸ்டர்னு கூட சொல்வான். கடைசியில் இப்படி எழுதுவான்”**[34]

என்பன இன்றைய ஆண் இயல்பு வெளிப்பாடு.

‘நிழலிரவு’ நாவலில் ரத்னகுமாரி செல்லம்மா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கின்றாள்; ஆனால் அவள் கணவனோ யாரிடம் பேசினாலும் சந்தேகப்படுகிறான்; அடித்துக் கொடுமைப்படுத்துகிறான்; இதை பார்த்த ரத்னகுமாரி விடுதலைப் பத்திரம் வாங்கிக் கையெழுத்துப் போட்டு செல்லம்மாளையும் அவள் கணவனையும் பிரிக்கிறாள்.

ஒரு பெண் சந்தோஷமாக வாழ்வதற்குத் தான் திருமணமே தவிர, சந்தேகத்தோடு வாழ்வதற்கு அல்ல; அவ்வாறு சந்தேகம் வந்துவிட்டால் வாழ்க்கை சிறப்பாக அமையாது. துயரத்தோடு, கண்ணீர் வடித்து நிம்மதி இழந்து அக்கணவனின் கொடுமைக்கு உள்ளாகி இருக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை. தன் வாழ்க்கைக்கு ஏற்றக் கணவனாக அவன் இல்லாவிட்டால் அக்கணவனே தேவையில்லை என்பதை வலியுறுத்தும் வகையில் தன் படைப்பிலுள்ள கதாபாத்திரங்கள் மூலமாகச் சமூகத்திற்கு முன்வைக்கிறார் தமயந்தி.

குடும்ப அமைப்பில் பெண்ணைக் காலம் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த நிலையைமாற்றி, புதுமைப் பெண்ணாகப் படைத்துள்ளார் தமயந்தி. குடும்பத்தில் ஏற்படும் தவறுகளைத் தட்டிக்கேட்கும் பெண்ணாகவும், சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் பெண்ணாகவும், ஆண் பெண் சமத்துவத்தை முன்னிறுத்தும் பெண்ணாகவும், ஆண், பெண் நட்பில் பெண் ஆணோடு பழகுவது தவறில்லை. ஆனால் அதைத் தவறாகப் பயன்படுத்தும் ஆண்களுக்கு அறிவுரைக்கூறும் பெண்ணாகவும் விளங்கும் வகையில் மிதவாதப் பெண்ணியக் கருத்துக்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

### 5.7.2 படைப்பில் சமதர்மப் பெண்ணியம்

சமதர்மப் பெண்ணிய சமூகத்தில் வேரூன்றியுள்ள தந்தைவழிச் சமூகத்தின் மூலத்தைத் தூக்கி எறிவதைக் குறிக்கோளாகவும், தன்னலவாதிகளின் தன்னலத்தையும், ஆண் பெண் என்று பாகுபடுத்துவோரின் கொள்கைகளையும், சமூக நெறியில் ஒழிப்பதைச் செயல்பாடாகவும் கொண்டிருந்தது என்பதன் அடிப்படையில் தமயந்தியின் படைப்பான ‘அலர்’, ‘விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்’, ‘மாமிசம்’,

‘முற்பகல் ராஜ்யம்’, ‘துரு’, ‘அவரும் அவர்களும்’, ‘முகங்கள்’ போன்ற படைப்புகளில் சமதர்மப் பெண்ணியக் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

கணவனின் கொடுமைகளைத் தாங்கிக் குடும்ப அமைப்புக்குள் இருக்க விரும்பாமல் தாலியை அறுத்தெறிந்துவிட்டு, சுவரில் அடித்த பந்தாய்த் தன் தாய்வீட்டிற்குத் திரும்பி வந்து, தன் பெற்றோருக்குப் பாரமாய் இருக்கக் கூடாதென்று, தனியாய் அலுவலத்தில் வேலைப்பார்க்கும் பெண்ணையும், தன் மகளின் நிலையை வருத்தத்தோடு அவள் தோழியிடம் கூறும் போது,

> **“அட போங்க மாமா . . . கல்யாணம் தான் வாழ்க்கைல முடிவா அது ஒரு ஜெயில்”**[35]

என்று திருமண வாழ்க்கையைக் கொச்சையாகப் பேசும் பெண்ணின் மனநிலையையும் ‘அலர்’ என்ற கதை வெளிப்படுத்துகிறது. திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டும்; சட்டத்தின் முன் சமத்துவம் நிலவ வேண்டும் என்பதன் அடிப்படையில் தமயந்தி இக்கதையைப் பதிவுச் செய்துள்ளார்.

பெண் உரிமை, விடுதலை என்பது ஆண்களுக்குத் தொடர்பான ஒன்று. பெண்ணை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் வரை ஆண்களை மேம்பட்டவர்கள் என்று கருத முடியாது. சரிநிகர் சமானமாக ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் மாற்றத்தைக் கொண்டு வரமுடியும் என்ற பெண்ணியச் சிந்தனையை மனதில் கொண்டு.,

> **“பெண்களின் மேல்**
> **காலங்காலமாய்ப் படிந்த**
> **அடிமைப் புழுதியை**
> **அவ்வவ்போது பெய்யும்**

**சலுகைத் தூறல்களால்**

**சலவை செய்ய முடியாது**"[36]

என்று கூறிய பெண்களின் உரிமைகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கி, நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதை நோக்கும் வகையில் தமயந்தியின் 'விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்' என்ற கதை அமைகின்றது.

பெண்களைப் படிதாண்டுதல் கூடாது; சமையலறை தாண்டிப் பெண் வரக்கூடாது என்று விதிக்கப்பட்ட ஆடவரின் ஆதிக்க வரையறைகளை உடைக்கிறார் தமயந்தி; சந்திரசேகரும் சித்ராவும் காதலிக்கின்றனர். தங்கள் காதலுக்குச் சம்மதம் வாங்க சித்ரா சந்திரசேகர் வீட்டிற்கு வருகிறாள். அங்கு அவன் அப்பாவின் ஆணாதிக்கப் பேச்சு, செயல்பாடு அவளுக்குப் பிடிக்கவில்லை. அப்பாவின் முன் யாரானாலும் நின்றுதான் பேசவேண்டும். பெண் சபையில் பேசக்கூடாது. இதை எதிர்த்து சித்ரா பேசுகிறாள். அவன் அப்பாவின் முன் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொள்கிறாள்.

**"எங்க குடும்பத்துல ஆம்பளைங்க முன்னால பொம்பளைங்க உக்கார மாட்டாங்க**"[37]

என்று சந்திரசேகர் கூற, என்னால் அப்படி இருக்க முடியாது என்கிறாள் சித்ரா. சித்ராவின் மூலம் மரபு நிலையிலிருந்து மாற்றம் பெற்ற பெண்ணியக் குரல் வெளிப்படுகிறது.

பெண் படிதாண்டக் கூடாது என்று இருந்த காலத்தை, பெண்ணின் விருப்பத்தைக் கேட்காமல் திருமணம் செய்து கொடுக்கும் நிலையை மாற்றி

பெண்ணே தனக்குப் பிடித்த மாப்பிள்ளையைத் தேர்வு செய்யும் ஒரு புதிய மரபை உருவாக்குகிறார் தமயந்தி.

"பெண்ணியம் ஆணுக்கு எதிரானதோ, ஆணை ஒதுக்கியதோ அன்று, ஆணுக்குத் துணைபுரிந்து இருவரும் இசைந்து, இணைந்து சமத்துவமாய் வாழ்வது"[38]

என்னும் கருத்தை முன்னிறுத்தி இக்கதையைப் பதிவுச் செய்துள்ளார் தமயந்தி.

பெண்கள் பணிபுரியும் இடங்களில் ஆண்களின் சில்மிசங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதைப் பிரதிபலிக்கும் வகையில் 'மாமிசம்' என்ற கதை அமைந்துள்ளது. சரஸ்வதி பணியாற்றும் அலுவலகத்தில் சரவணன் வேலை பார்க்கிறான். அவன் அவளின் உடலழகையும், மார்பழகையும், இடையழகையும் வேறொருவனிடம் வர்ணிக்கிறான். இதைக் கேட்ட சரஸ்வதி அவனிடம்,

"இந்த முலைகள் உன் மனைவியுடையதைப் போன்றவை, உன் மகளுக்கு இனி மலரப் போகிறவை, உன் தாயினதைப் போல வற்றிப் போக வேண்டியவை"[39]

என்ற துணிச்சலோடு பேசுகிறாள்.

"'அலர்' என்ற கதையில் ஜோதி, கலை, நளினி மூவரும் படம் பார்க்க தியேட்டருக்குச் சென்றனர். அங்கு கலையை ஒருத்தன் இடித்து விட்டுப் போய்விட்டான். ஜோதி அவன் சட்டையைக் கொத்தாகப் பிடித்து ஓங்கி முகத்தில குத்துகிறாள். போய் உங்காத்தா, அக்காவை இடிடா"[40]

என்கிறாள்.

'முற்பகல் ராஜ்ஜியம்' என்ற நாவலில் வரும் இந்து என்ற பாத்திரத்தை மிகத் துணிச்சலான பாத்திரமாகப் படைத்துள்ளார் ஆசிரியர். இந்து, பேருந்தில் பயணம் செய்கிறாள். பிரேக் போட்டத்தில் இடுப்பை ஒருவன் கிள்ளிவிடுகிறான்; பார்க்க அவர் தொப்பையும், நரையுமாக இருந்தார்.

> **"யாரோ ஒருத்தியின் அப்பா, மற்றொரு பெண்ணின் கணவர், இன்னுமொரு பெண்ணின் மகன் என்று யோசித்தவாறு, அம்பது ரூவா ரேட், வர்றியா? என்றதும் அவன் அடுத்த ஸ்டாப்பில அவசரமாக இறங்கி ஓடிவிடுகிறான்."**[41]

முள்ளை முள்ளால் எடுப்பது போல், சமூக விரோதத்தில் செயல்படும் ஆடவரிடம் இப்படி நடந்தால்தான் சமூகத்தில் பெண்கள் தலைநிமிர்ந்து நடக்க முடியும் என்பதை அப்படைப்பு வழி பேசுகிறார் தமயந்தி. ஆண்களின் துரியோதனப் பார்வை நீங்க வேண்டும். அவர்களுக்குப் புதிய மனங்களுடன் புதிய பார்வைகளும் வேண்டும். பாலினவக்ர எண்ணங்கள் தனிமனித மனத்தில் முதலில் நீங்க வேண்டும் என்பதைத் தம் படைப்பின் வழி மையப்படுத்தியுள்ளார்.

ஆண் பெண் நட்பு என்பது சங்ககாலம் தொட்டு தற்காலம் வரை நிலவிக் கொண்டு தான் இருக்கிறது. சங்க கால ஆண் பெண் நட்பிற்கு எடுத்துக்காட்டாக அதியமான் ஔவையாரைக் கூறலாம். ஆனால் தற்காலத்தில் ஆண் பெண் நட்பு குறித்தக் கருத்தாக்கமானது மாறுபாடாக உள்ளது என்பதைப் படைப்புகளும், திரைப்படங்களும் எடுத்துரைக்கின்றன. இதை எதிர்க்கும் வகையில் தமயந்தியின் படைப்புகள் படைக்கப்பட்டுள்ளன.

‘துரு’ என்ற கதையில் தன் நண்பனுக்காகக் கணவனிடம் வாதிடும் பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவள்,

**“ஸ்ரீராம் என் நல்ல நண்பன், அவனை அவமானப்படுத்துவது தவறு”**[42]

என்கிறாள். மேலும், ‘அவளும் அவர்களும்’ என்ற கதையில் சுகன்யா சுந்தர் நட்பை லவ் என்று நினைத்துத் தவறுதலாகப் பேசிய அலுவலக ஊழியரிடம் சுகன்யா,

> **“லவ்னா என்னா, காதலா? காதல் மட்டும் தானா? அன்பு, நேசம், ஸ்நேகம், பாசம், கருணை இன்னும் நிறைய எல்லாமே வவ்தான். ஸ் லவ்சுந்தர், ஐ லவ் மை வுட்–பி, ரெண்டுமே வேறவேற லவ். நம்ம நாட்டுல அம்மா அப்பாட்ட ஐ லவ்யூ சொல்ற மகளோ, மகனோ குறைச்சல். நான் எல்லோரையும் நேசிக்கிறேன். இவ்வளவு பொறுமையா என் உணர்ச்சிகளை உங்களுக்கு விளக்கறேன் ஏன்...? ஐ லவ் யூடு...”**[43]

என்கிறாள். மேற்குறிப்பிட்ட வரிகள் நட்பு என்பதற்கான முழு விளக்கத்தையும், காதல் நட்பு என்பதில் முரண்படும் சமூக உறுப்பினர்களின் எண்ணங்களைப் பதிவு செய்துள்ளார்.

‘முகங்கள்’ என்ற கதையில் ஆண் பெண் நட்பு என்பதைத் தன் பார்வையிலேயே விளக்குகிறார். நான் ஆண், நீ பெண் என்கிற பாகுபாட்டைத் தாண்டி, காமம் மறந்த மனத்தொடர்பு நட்பு என்கிறார்.

பெண்களின் உலகம் குடும்பம் என்னும் எல்லைக்குள் கட்டுப்பட்டு விடுகிறது. ஆனால் பெண்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களைத் துடைக்கும் வகையில் தயமந்தியின் படைப்பு இடம்பெற்றுள்ளது. குடும்பம்

என்ற நிறுவனத்தில் ஆணின் ஆதிக்கம் கூடாது; இருவருக்கும் சம உரிமை நிலவ வேண்டும். பெண்கள் வெறும் கொலுப் பொம்மைகளோ, போகப் பொருள்களோ அல்லர் என்பதைத் தெளிவு செய்யும் வகையில் தமயந்தியின் படைப்பு இடம்பெறுகிறது. ஆண்-பெண் நட்பு குறித்தும், பெண்ணடிமைக் குறித்தும் சமூகத்தில் பெருமளவில் மாற்றத்தைக் கொண்டு வரமுடியாவிட்டாலும், தனது படைப்பின் மூலம் சமூகத்திற்கு விழிப்புணர்வு கொடுக்கும் வகையில் தமயந்தியின் படைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 5.7.3 படைப்பில் தீவிரவாதப் பெண்ணியம்

பெண்கள் உடற் கூற்றின் அடிப்படையில் நசுக்கப்படுகின்றனர் என்பதால் அவர்கள் தம்மைக் காத்துக் கொள்ளப் பாலியல் சுதந்திரம், கட்டுப்பாடற்ற விடுதலைக் காதல், பெண் ஓரினச் சேர்க்கை போன்றவற்றை நாடுகின்றனர். தீவிரவாதப் பெண்கள், திருமணம், குடும்பம், குழந்தைப் பேறு கருத்தரித்தல் போன்றவற்றை மேற்கொள்ள மறுத்தனர். இக்கருத்தாக்க அடிப்படையில் தமயந்தியின் படைப்பான ‘மழை’, ‘முற்பகல் ராஜ்ஜியம்’ போன்ற படைப்புக்கள் இடம்பெறுகின்றன.

திருமணமானப் பெண் என்பதை அவள் அணிந்திருக்கும் தாலி, குங்குமம் என்பவை சமூகத்திற்கு வெளிப்படுத்தும். ஆனால் தமயந்தியோ இம்மரபு கட்டை மீறி, ஆணாதிக்கச் சமுதாயத்தின் அடையாளச் சின்னங்களில் கட்டுப்பட்டு வாழாமல் பெண்கள் முழுச் சுதந்திரத்தோடு வாழவேண்டும் என்பதை ‘மழை’ என்ற கதையில் மூலம் சமூகத்திற்கு வெளிப்படுத்துகிறார்.

இன்றுள்ள சமுதாயத்தில் பெரியோர்கள் நல்ல நேரம் பார்த்து, திருமணம் செய்து வைக்கின்றனர். அவ்வாறு திருமணம் செய்துகொண்ட பெண்கள் எல்லாம் சந்தோஷமாக வாழ்கின்றார்களா? ஏதாவது

பிரச்சனையோடும், கணவனுக்கு அடிமைப்பட்டும், தங்கள் பிரச்சனையை வெளியே சொல்லாமல் வாழ்கின்றனர். ஒரு ஆடவனோடு வாழ்வதற்குத் தாலி தேவையில்லை.

> **''தாலி என்பது ஒரு அடையாளச் சின்னம்தான். அப்படிப்பட்டட தாலி எனக்குத் தேவையில்லை. நாங்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு முழுச் சுதந்திரத்தோடு வாழ்கின்றோம். ஏதாவது பிரச்சினை வந்தால் பிரச்சினையோடு வாழாமல் பிரிந்து விடுவோம்.''**[44]

என்று கூறும் தீவிரவாதக் கருத்துடைய பெண்ணையும் படைத்துள்ளார் தமயந்தி.

'முற்பகல் ராஜ்ஜியம்' நாவலில் இந்து சிவராமனைக் காதலித்து மணக்கிறாள். ஆனால், **''தாலியணிய மாட்டேன் என்றும், குழந்தை வேண்டாம்''**[45]என்றும் கூறுகிறாள். இங்கு தாலி என்னும் பண்பாட்டு மரபை மீறும் பெண்ணாக இந்துவைப் படைத்துள்ளார் தமயந்தி.

திருமணமானப் பெண் என்றால் அவளுக்குச் சில அடையாளங்கள் இருக்கின்றன. ஆனால் ஆணுக்கு இல்லை. இதை பட்டுக் கோட்டையாரும், 'போட்டுகிட்டா தாலி இரண்டு பேரும், போட்டுக்கணும்' என்பார். இதையே தமயந்தி அவர்களும், அடையாள சின்னங்கள் திருமண உடன்படிக்கைக்குத் தேவையில்லையெனவும், அன்புள்ளங்கள் தான் தேவை; அன்புள்ளங்கள் அங்கு இல்லை எனில் அடிமையாக அங்கு இருக்கத் தேவையில்லை, குடும்ப அமைப்பை விட்டு வெளியே வா, உன் விருப்பப்படி சுதந்திரமாய் வாழ் என்ற கருத்தை முன் வைக்கிறார்.

‘முற்பகல் ராஜ்ஜியம்’ நாவலில் இந்து என்ற பாத்திரத்தைத் தீவிரவாதப் பெண்ணாகப்படைத்துள்ளார். இந்து தன் முறைமாப்பிள்ளையால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டதால் அவனைத் திருமணம் பண்ணாமல் வீட்டை விட்டு தனியே வெளியே சென்று தனித்து வாழ்கிறாள். திருமணம் குறித்த அவளது கருத்து,

> **“அப்ரூவ்ட் ப்ராஸ்டிடியுஷன், அம்மா, அப்பா, அருந்ததி எல்லாரும் பார்க்க பெண்ணை விபசாரியாக்கும் ஓர் இயக்கம் தான் திருமணம் என்கிறாள்.”**[46]

இவ்வாறு தம் படைப்பில் திருமணம் குறித்தக் கருத்தாக்கத்தை முன்வைக்கிறார் தமயந்தி.

‘ஒரு பேனா அல்லது ஒரு பெண்ணின் கதை’ என்ற கதையின் மூலம் மரபு மாற்றத்தைக் கொண்டு வருகிறார் தமயந்தி. கணவனால் கைவிடப்பட்ட பெண்ணோ அல்லது கணவனை இழந்தப் பெண்ணோ சமூகத்தில் பலவிதமான கொடுமைகளுக்குள்ளாகின்றனர். அத்தகைய கொடுமையின் ஒன்று பரத்தமை. ஆனால் இங்கு பொருளாதாரத் தேவைகளை நிவர்த்திச் செய்வதற்காக இத்தகையத் தொழிலில் ஈடுபடுகின்றாள் அப்பெண். மேலும் தன் மகனோடு அமர்ந்து மது அருந்துவதாகவும் அப்பெண்ணைப் படைத்துள்ளார்.

ஆண் தன் கவலையை மறப்பதற்காக மது அருந்துவது போல இங்கு அப்பெண்ணும் தன் கவலையை மறப்பதற்காக மது அருந்துவதாகப் படைத்துள்ளார் ஆசிரியர்.

### 5.7.4 கிறிஸ்தவப் பெண்ணியம்

கிறித்துவ வேதமாகிய பைபிள் கூறுவதற்கும், கிறித்துவ தேவாலயங்களில் பெண்களை ஒடுக்கி அடக்கியாளும் போக்குக்கும் இடையே ஒன்றுக்கொன்று மாறுபட்டுள்ளதைக் கண்டு, கிறித்தவ தேவாலயங்களில் பெண் உரிமையை நிலைநாட்டத் தோன்றியதே கிறித்தவப் பெண்ணியமாகும். தமயந்தியின் படைப்பான ‘நிழலிரவு’ நாவலும் ‘மரங்கொத்திப் பறவை’ என்ற கதையும் கிறித்தவப் பெண்ணியக் கருத்தை வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு மதத்திலும் பெண்களுக்குச் சில விதிமுறைகள் காணப்படுகின்றன. கிறித்தவ மதத்தில் பெண்கள் ஆலயத்திற்குள் செல்லும்போது முக்காடு இட்டுத்தான் செல்ல வேண்டும். இந்துப் பெண்கள் சபரிமலைக்குச் செல்லக்கூடாது, முஸ்லிம் பெண் தொழுகைக் கூடத்திற்குச் செல்லக் கூடாது என்பது மரபாகும். ‘நிழலிரவு’ நாவல் கிறித்தவ மரப்பிரச்சனையை எடுத்துக்கூறுகிறது. தேவாலயத்திற்குள் செல்லும்போது முக்காட்டிட்டுத்தான் செல்ல வேண்டும். ஆனால் எலிசியோ முக்காடு போடாமல் போகிறாள். முக்காடு தேவையில்லை அது செயிண்ட்பால் எழுதின விஷயம். பொம்பளைங்கள முக்காடு போடச் சொல்றதே என்கிறாள். தீட்டு நேரம் நற்கருணை எடுக்கக்கூடாது என்ற மரபையும் மீறுகிறாள்.

> **“நான் கடவுள்ட்ட போறதுக்கு என் உடம்பும் உடம்போட சம்பந்தப்பட்ட விஷயங்களும் தடைக்கல்லா இருக்காது. இது அவர் கொடுத்த உடல், அவர் கொடுத்த முடி, அவர் கொடுத்த கண், புருவம், கழுத்து எனில் மாதவிடாயும் அவர் கொடுத்தது தான்”**[47]

என்று பிரச்சாரம் பண்ணுகிறார். இங்கு மதக்கட்டுப்பாட்டை மீறும் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

> **“ஸ்தீரிகளுக்கும் ஜீவன் உண்டு. மனம் உண்டு புத்தியுண்டு, ஐந்துபுலன்கள் உண்டு, அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடிகொடிகளைப் போலவுமல்லர், சாதாரணமாக ஆண் மாதிரியாகவேதான் புறவுறுப்புக்களில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி”**[48]

என்ற பாரதியாரின் கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையில் இக்கதை அமைந்துள்ளது.

மேலும் கிறிஸ்தவப் போதகர்களின் தவறான நடத்தையையும், ‘டயோசீஸிக்குள்’ ஏற்படும் சீர்கேடுகளையும் லஞ்ச ஊழலையும் தட்டிக் கேட்கும் பெண்ணாக எலிசியின் பாட்டியின் பாட்டியை படைத்துள்ளார் தமயந்தி. கிறிஸ்தவ உலகம் எதை நோக்கிப் போகிறது? ‘டயோசீசன்’ எங்கே செல்கிறது? பெண்களுக்கு எங்கே நிம்மதி? என்ற கேள்விகளையும் முன்வைத்துள்ளார்.

இவ்வாறு கிறித்தவ மதச் சட்டத்தையே மாற்றிப்போடும் ஒரு படைப்பாக தமயந்தியின் நிழலிரவு நாவல் அமைந்துள்ளது. கிறித்தவ மதத்தில் உள்ள ‘டயோசீசன்’ பிரச்சனை, ஆசிரியர்களின் பணிமாற்றம், கல்வி கற்க லஞ்சம், வேலை கொடுக்க லஞ்சம் இவற்றை எல்லாம் தட்டிக்கேட்கும் ஒரு பெண் கதாபாத்திரம் மூலமாக சமூகத்திற்கு முன்வைக்கிறார் தமயந்தி.

### 5.7.5 மனைப் பெண்ணியம்

இது பெண்ணியத் தொடக்ககாலச் சிந்தனையால் பெண்கள் உடலியல் அடிப்படையில் இல்லம் சார்ந்தவர்கள்; வெளியுலகப் பணிகளுக்குத்

தகுதியற்ற வர்கள். தாய், மனைவி என்ற இல்லப் பணிகளுக்கு மட்டுமே தகுதியுடையவர்கள். ஆகவே இல்லப் பணிகளை ஆற்றும் தகுதியை வளர்த்துக் கொண்டால் போதுமானது என்ற கருத்தின் அடிப்படையில் தோன்றியது. தமயந்தியின் படைப்பான முற்பகல் ராஜ்ஜியம், விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும் என்ற படைப்பில் மனைப் பெண்ணியக் கருத்தாக்கத்தை வைத்துப் படைத்துள்ளார் தமயந்தி.

'முற்பகல் ராஜ்ஜியம்' என்ற நாவலில் சரசு என்ற பாத்திரத்தின் மூலம் மனைப் பெண்ணியக் கருத்துக்களைப் படைத்துள்ளார் படைப்பாளர் தமயந்தி அவர்கள். தன் கணவனுக்கு என்ன தேவையோ அதை அறிந்து செயல்படும் பெண். படம் பார்க்க தியேட்டருக்குச் சென்றாலும் தன் கணவன் சாப்பிட்டிருப்பரா? தயிர் நன்றாக விட்டிருப்பாரா என்று தன் கணவனைப் பற்றி மட்டும் நினைப்பாளே தவிர படத்தோடு ஒன்றிப் படத்தைப் பார்க்க மாட்டாள்.

> "ஏங்க . . . நீங்க நல்லாச் சாப்பிட்டீங்களா என்னவோன்னு தான் நினைப்பு சுத்திச் சுத்தி அலைக்கழிச்சிது"[49]

என்கிறாள்.

> "அவளுக்குத் தெரிந்ததெல்லாம் காலைல எழும்பி காப்பி, இட்லி பண்ணவும் ராத்திரியில அடுப்புக்கழுவி படுக்கைல விழவும், நடுல ஒரு வித்தியாசத்துக்கு ஒரு சினிமா. மூணுமணி நேரத்துக்கு மேலே முழுசா கத கூட ஞாபகம் இருக்கிறதில்ல. நாளைக்குக் காலைல என்ன பலகாரம் செய்யலாம்னுதான். சத்தியமா இப்போது தோணுது, நீங்க கொஞ்சம் மெலிவா தெரிறீங்களே. கேப்பைக் களி கிண்டிறலாமானு தோணுது"[50]

என்று தன் கணவன், சமையல், குடும்பம் என்ற அமைப்புக்குள்ளே இருக்கும் பெண்ணைப் படைத்துள்ளார்.

‘விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்’ என்ற கதையில் வரும் பெண்களுக்கு ‘கம்பியூட்டர பத்தியோ’, ‘இன்டர்நெட்’ பற்றியோ எதுவும் தெரியாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம்,

> **“காலையில் எழுந்தால் இட்லியா, தோசையா என்பதும் மத்தியானம் சாம்பாரா, கோழிக் குழம்பா என்பது மட்டும்தான்.”**[51]

தற்காலத்தைக் கணினி காலம் எனலாம். இத்தகையக் காலத்தில் கூட கணினிப் பற்றித் தெரியாமல், ‘இன்டர்நெட்’ பற்றியும் தெரியாமல் கணவனே கண்கண்ட தெய்வம் என்று, கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் பணிசெய்யும் இல்லப் பெண்கள் இன்றும் இச்சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றனர். பெண் மகளாகத் தோன்றி, மனைவியாக வாழ்ந்து, தாயாகத் தொண்டு செய்து தெய்வமாகக் காட்சி தருபவள் என்ற கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் தமயந்தியின் படைப்புகள் திகழ்கின்றன.

## 5.8 தொகுப்புரை

இவ்வியலில் பெண்ணியம், பெண்ணியம் குறித்த உலகளாவிய சிந்தனைகள், பெண்ணிய வரலாறுகள் ஆகியன ஆராயப்பட்டுள்ளன. மேலும் பெண்ணியவாதிகளின் பார்வைகள், தமயந்தியின் பல்வேறு வகைப்பட்ட பெண்ணியப் பார்வைகள், பெண்ணியப் பார்வைகளில் மாறுபட்டப் பதிவுகள் செய்த தமயந்தியின் தனித்த நோக்கு ஆகியனவும் ஆராயப்பட்டுள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. தேவதத்தா மற்றும் கமலி, பெண்ணிய கலைச்சொல் விளக்கக் கையேடு, ப.27.
2. முத்துச்சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.9.
3. சித்துசாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப.10.
4. மேலது., ப.13.
5. பிரேமா இரா., பெண்ணியம், ப.14.
6. முத்துச்சிதம்பரம், மு.நூ., ப.10.
7. இரா.பிரேமா, மு.நூ., ப.13.
8. சித்துசாலமன், மு.நூ., ப.14.
9. இரா. பிரேமா, மு.நூ., ப.19.
10. மேலும் (இதழ்), டிசம்பர், 1993, ப.33.
11. சைவப்பிரகாசம், கருத்தரங்க மலர், ப.4.
12. முத்துச்சிதம்பரம், மு.நூ., ப.11.
13. ஆய்வுக்கோவை, 2003, ப.1272.
14. இரா. பிரேமா, மு.நூ., ப.14.
15. முத்துச்சிதம்பரம், மு.நூ., ப.9.
16. இரா. பிரேமா, மு.நூ., ப.17.
17. மேலது., ப.41.
18. இரா.பிரேமா, பெண்ணியம், ப. 33.
19. சித்து சாலமன், பெண்ணியம் போட்ட பதியங்கள், ப. 62.
20. அபர்ணா மகந்தா, மார்க்சீயமும் பெண்நிலை வாதமும், ப. 14.
21. தேவதத்தா கமலி, பெண்ணிய கலைச் சொல் விளக்கக் கையேடு, ப. 48.
22. இரா.பிரேமா, பெண்ணியம், ப. 64.
23. மேலும் (இதழ்), மே, 1991, ப. 6.
24. அரங்கமல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப. 3.
25. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப.22.
26. மேலும் (இதழ்), மே. 1991, ப. 8.
27. இரா.பிரேமா, பெண்ணிய அணுகுமுறைகள், ப. 22.
28. விஜயலட்சுமி, தமிழ்க் கவிதைகளில் பெண்ணுரிமை, ப. 30.
29. மேலது., ப. 30.
30. தேவதத்தா, பெண்ணியம், ப. 16.
31. தமயந்தி, வாக்குமூலம், ப. 35.
32. சேதுமணியன், மொழி என்னும் பெருவரம், ப. 23.
33. தமயந்தி, வாக்குமூலம், ப. 95.
34. மேலது., ப. 60.
35. மேலது., ப. 88.
36. கவிஞர் இரா. வைரமுத்து, திருத்தி எழுதிய தீர்ப்புகள், ப. 19.

37. தமயந்தி, அ.கு., ப. 103.
38. முனைவர் இரா.ரெங்கம்மாள், முனைவர் சி. வாசுகி, பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும், ப. 1.
39. தமயந்தி, அ.கு., ப. 78.
40. தமயந்தி, வாக்குமூலம், ப. 87.
41. தமயந்தி, மு.ரா., ப. 32.
42. தமயந்தி, அ.கு., ப. 13.
43. தமயந்தி, த.சி., ப. 98.
44. தமயந்தி, சா.கி., ப. 133, 134.
45. தமயந்தி, மு.ரா., ப. 137.
46. மேலது., ப. 31.
47. தமயந்தி, நிழலிரவு, ப. 13.
48. பாரதியார் கட்டுரைகள், பக். 290 - 291.
49. தமயந்தி, மு.இ., ப. 6.
50. மேலது., ப. 8.
51. தமயந்தி, அ.மு., ப. 104.

# இயல் – 0
# ஆய்வு முடிவுரை

படைப்பாளி தமயந்தி, புனைகதைகளில் நாவல், சிறுகதை என்ற இரு வகைமைகளிலும் எழுதுகின்றவர்; ஆண்களின் மேலாதிக்க அதிகாரம், சமூகத்தை இயக்கி வருவதை அறிந்தவர். ஒரு பெண்ணாக வாழ்கிற சூழலில், சமூகத்தின் பல்வேறு பிரிவுகளான, குடும்பம், கல்வி, மதம், சாதி, அரசு, சட்டம், காவல் போன்றவற்றின் செயல்பாடுகளை, அவற்றின் போக்குகளைத் தம் ஆக்கங்களில் விமர்சிக்கின்றார். படைப்பாளி தமயந்தியின் அனுபவத் தளங்கள் விரிந்தவை; பல அடுக்குகளைக் கொண்டவை. தற்காலம், அறிவியல் வழிகாட்டலால், புதிய சமூகமாகத் தன்னைத் தகவமைத்து வருகிறது. இப் போக்குகளும், பெண் படைப்பாளி என்ற நிலைப்பாடும் இணைந்து, புதியதொரு சமூகமொழியை, அவருடைய படைப்புகளில் உண்டாக்கியிருக்கிறது. ‘சமூக மொழிக் கருத்தாக்க’மென்ற பின்புலத்தில் தமயந்தியின் புனைகதைகள் ஆராயப்பட்டு, ஆய்வு முடிவுகள் இயல்தோறும் கூறப்பட்டுள்ளன. அவற்றைச் செறிவுடன் ஈண்டு மீண்டும் ஆய்வாளரால் தொகுக்கப்படுகின்றன.

மொழிதான் மனித இனத்தை இனங்காட்டுகிறது. கருத்துப் பகிர்வுக்குத் துணை மொழியே. சமுதாய வாழ்வின் அறிகுறியாக, வளர்ச்சியின் அடையாளமாகத் திகழும் மொழி, காலந்தோறும், நிலவும் சூழல்களால் மாறும். அப்படிப்பட்ட மொழி குறித்த பல்வேறு அறிஞர்களின் வரையறைகளும், விளக்கங்களும் மொழியப்பட்டுள்ளன. மொழி, தனிமனிதனாலும், சமுதாயத்தாலும் பாதிப்புக்குள்ளாகும். அதுபோலவே மொழியும், செல்வாக்கைத் தனிமனிதனிடத்தும், சமுதாயத்திடத்தும் வெளிப்படுத்தும்.

அதனால் மொழி, சமூகமொழி என்ற தகுதி பெறுகிறது. கருத்தாக்கம் பற்றிய கருத்துக்களும் விவரிக்கப்படுகின்றன; விவாதிக்கப்பட்டுள்ளன. சமூக மொழிக் கருத்தாக்கமென்பது புதிய சொல்லாடல். மொழி, சமூக வளர்ச்சி, கருத்தாக்கம், மூன்றும் இணையப் பிறந்த சொல்லாடல். இலக்கியம் காலம் கடந்து நிற்பதற்கு, அதிலுள்ள அழகியல் பங்கு முக்கியமானது. இப்பின்புலத்தில்தான், பெண் படைப்பாளி தமயந்தியின் புனைகதைகளில் சமூகமொழி என்ற தளம் ஆராயப்பட்டுள்ளது.

தமிழ்மொழி வரலாற்றில் ‘பெண்நிலை பற்றிய’ ஆண், பெண், படைப்பாளிகளின் கருத்தாக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் ஔவையார், வெள்ளி வீதியார் போன்றோருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள இடைவெளி, ஆண்டாள், காரைக் காலம்மையாரால், ஓரளவிற்கு நிரப்பப்பட்டாலும், இருபதாம் நூற்றாண்டில்தான், பெண்மைக்குரிய இடங்கள் ஓரளவு அதிகப்பட்டன என்று சொல்ல முடிகிறது.

ஐரோப்பியர் வருகை, தமிழ்ப் புனைகதை எழுத்துக்களில், பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. தமயந்திக்கு முந்தைய பெண் படைப்பாளர்களின் ஆக்கங்கள் பற்றிய குறிப்புகளோடு, ஒத்திசைந்து பார்க்கும் பொழுது, தமயந்தி அப்படைப்பாளிகளோடு, இயைந்ததுவும், வேறுபட்டு நிற்பதையும் உணர்த்த முடிந்துள்ளது.

ஆண், பெண் என்ற கட்டமைப்பு உயிரிகளால் ஒன்றுதான். உடலாலும், உருவாக்கப்பட்ட உள்ளத்தாலும் பெண் வேறுபட்டுள்ளாள். ஆதலால் ஆண் மொழி, பெண் மொழிக் கருத்தாக்கங்களும் வேறுபடுவதால், அவை குறித்த செய்திகளும் ஆய்வாளரால் கொடுக்கப்பட்டுள்ளன.

குடும்பம், தோன்றிய சூழலை, எங்கல்ஸைத் துணையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது.

தனிக்குடும்பம், கூட்டுக் குடும்பத்தோடு, விரிவாக்கப்பட்ட குடும்ப அமைப்பை, ஆய்வாளர் சிறப்பாக விளக்கியுள்ளார். விரிவாக்கப்பட்ட குடும்பம், பொருளாதாரப் பகிர்வை அடித்தளமாகக் கொண்டதாகும்.

கல்வி, வேலை வாய்ப்பு, நகரங்களுக்குப் புலம் பெயர்தல் சாதிக் கொள்கையில் மாற்றம் இவையெல்லாம், கூட்டுக் குடும்ப மரத்திலிருந்து, தனிக்குடும்ப விழுதுகளை உண்டாக்கின.

**'கணவன் – மனைவி உறவின் இறுகிய நிலைப்பாடு**

**ஆண் – பெண் நட்பு குறித்த கதையாடலில் மாற்றம்'**

போன்றவை, கூட்டுக் குடும்பச் சிதைவின் விளைவுகள் எனலாம். தமயந்தியின் புனைகதைகளில் குடும்ப நிறுவன மொழியமைப்பு, புதிய சமூகமொழியாக உருப்பெற்றுள்ளமையை விளக்கப்பட்டுள்ளன. வயது வேறுபாடின்றி, ஆண்களின் பாலிய நுகர் பொருளாகத்தான், பெண்கள் வாழ்நிலை அமைந்திருப்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பாரதி அமைத்த 'தோழமை' நிலைமைதான் தமயந்தியின் ஆண் - பெண் உறவுகளிடையே மலர வேண்டுமென்ற கொள்கையாகும்.

குடும்பத்தில் கணவன் - மனைவி உறவுநிலை, சமூக மாற்றம் காரணமாக விரிசல் அடைகிறது. இதற்கான பல காரணிகளை ஆசிரியர் முன் வைக்கிறார். இதுவும் சமூக மொழியின் ஒரு கூறாகும்.

சந்தேகப்படுதல் என்பது, பெண்ணின் உளவியல் பகுதிதான். ஆனால் பெண்ணைவிட, ஆணே அதிகம் ஐயப்படுகிறவனாய் இருக்கிறான்.

குடும்பக் கட்டுமானம் உண்டாக, திருமண ஏற்பாடு முக்கியத் திருப்பமாகிறது. இத்திருமணம், காதல் திருமணம், பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணமென்ற இரு வகையில் உருவாகிறது. இவ்விரு வகைத் திருமணங்களிலும், சந்தேகம் என்ற சமூகமொழி காரணமாக உறவுகள் பாதிக்கப்படுகின்றன.

மணமுறிவு, விதவையர் மறுமணம், முதிர்கன்னியர் என்பன போன்ற அண்மைக்காலச் சமூக மொழிகளும் தமயந்தியின் படைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

உறவுகள் மூன்று வகை; போராட்டம், அன்பு, இரண்டும் மாறிச் செயல்படும் உறவுகள் என்ற கருத்தாக்கங்கள், சமூகமொழியாகி, ஈண்டு விவாதிக்கப்பட்டுள்ளன. கணவன் – மனைவி; பெற்றோர் – பிள்ளைகள்; சகோதரத்துவமிடையேயான உறவுகள்; பல உறவுகளில் தோன்றுகின்றவற்றை, தமயந்தியின் படைப்புகளில் காண முடிகிறது.

குடும்பம் என்னும் சமூக நிறுவனம், உறவுகளால் கட்டமைக்கப்பட்டுள்ளது.

உறவுகள் உண்டாக்கப்படுகின்றன. முரண்பாடுகள் முளைக்கின்றன. சிக்கல்கள் கால்கொள்கின்றன.

இச்சிக்கல்களைத் தவிர்க்கவும், தீர்க்கவும் வேண்டுமானால் சரியான புரிதல்கள் வேண்டுமென்பதே தமயந்தி தன் புனைகதைகள் மூலம் விடுக்கும் செய்தியாகும்.

அடிக்கட்டுமானம் பொருளாதாரம் என்று கொண்டால் மேற்கட்டுமானங்களான, சமுதாயம், அரசியலில் அது செல்வாக்கைச்

செலுத்தும். சீனம், அரசியலை அடிக்கட்டுமானமாக ஏற்றுச் செயல்பட்டது. அடிக்கட்டுமானமும், மேற்கட்டுமானமும், ஒன்றினுள் ஒன்று ஊடுருவி, மாறி மாறிப் பாதிப்பேற்படுத்தும் என்பது நவீன மார்க்சிய நிலைப்பாடு, பொருளாதார உற்பத்திக் கேந்திரங்கள் தொழிற்சாலைகள் எந்திரங்கள், அவற்றில் உழைக்கும் தொழிலாளிகள், உற்பத்திப் பொருட்களோடு உழைப்பவர்கள் அந்நியப்பட்டுப் போவதால், உபரி மதிப்புகளும் உடைமையாளருக்குச் செல்வதாலும், தொழிலாள, ஏழை மக்கள் கந்து வட்டிக்குக் கடன் வாங்குகின்றனர்; அதனால் அல்லலுக்கு ஆளாகின்றனர். முதலாளியக் கலாச்சாரத்தால் பெண், நுகர், விலை பொருளாக, வரதட்சணை திருமணங்களை உறுதி செய்ய ஆரம்பித்தது.

கிராமிய வாழ்வு, சிறு, பெரு நகரங்களை நோக்கிப் பயணிக்க அதனாலுண்டான இன்னல்களை, தமயந்தி தன் புனைகதைகளில் புலப்படுத்துகிறார். வேலையில்லாமை, நகரப் பெயர்ச்சி, திருமணங்கள் பணத்தால் தீர்மானிக்கப்படுதல், கந்துவட்டிக் கொடுமை போன்றவை முதலாளியப் பொருளாதாரம் ஈன்றவை.

வயது முதிர்ந்த ஆணுக்கு, இளம்பெண்கள் திருமணம் செய்விக்கப்படுதல்; படாத தேனீக்களாகப் பெண்களை ஒதுக்கி வைத்தல்; சாதி மீறி உடன்போகிய கல்யாணம்.

பொருளாதார நெருக்கடியால், திருட்டு, பரத்தமைத் தொழில்கள் நிகழ்கின்றன. ஆய்வாளர் பரத்தமையை, சேரிப் பரத்தமை தேர்ந்து கொண்ட பரத்தமை, பரம்பரைப் பரத்தமை என மூன்றாகப் பிரித்து, தமயந்தி எழுதிய படைப்புக்களில் பொருத்திக் காட்டியுள்ளார்.

இது போலவே கடன் சுமையால், தற்கொலைகளும் நடந்தேறுகின்றன.

பொருளாதாரப் பசிப்பகாசூரன் அனைத்தையும் பலிகடா ஆக்குவான். குறிக்கோள், மனிதனின் கனவுகள் போன்றவற்றைக் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்களாகிவிடுகின்றன என தமயந்தி தன் படைப்புச் செய்தியாகத் தருகிறார்.

தமிழில் சமயம் சார்ந்த இலக்கியங்களே மிகுதி. சைவ, வைணவ, புத்த, சமண, கிறித்தவ, இசுலாமிய, மதங்கள் முதன்மை முரண்பாடுகளாலும், உள் முரண்பாடுகளாலும், ஒன்றோடொன்று எதிர்கொண்டமையைத் தமிழ்ப் படைப்புக்கள் சித்திரித்துள்ளன. தமிழகத்தை ஆண்ட அரசுகள் மதத்தை ஆதரிப்பதும், மதங்கள் அரசுகளின் வாழ்வாதாரங்களைத் தீர்மானித்ததும், வரலாறு உணர்த்தும் செய்தியாகும்.

விடுதலைக்குப் பின், இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருக்கின்றது. ஆனாலும் மதத்தைப் பின்னணி அளவுகோலாகக் கொண்டு, ‘சிறுபான்மை’ தீர்மானிக்கப்படுகிறது.

தமயந்தி பெண் படைப்பாளி; கிறித்தவ மதத்தினர். உரோமன் கத்தோலிக்கத்திற்கு மாற்றாகத் தோன்றிய ‘புரொடஸ்டண்ட்’ பிரிவினர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மக்களின் ஆளுமையைக் கணிக்கிறது சாதி நிறுவனந்தான். கிறித்தவ மதத்திற்குள்ளும், சாதி நிறுவனம், தன் அதிகாரத்தைச் செலுத்துவதை, நடைமுறை வாழ்வு நிகழ்வுகளால் அறிய முடியும். மாற்கு, ஐசக் அருமை ராஜன் போன்ற கிறித்தவ ஆக்ககர்த்தாக்களைத் தொடர்ந்தும், விலகி நின்றும் எழுதுகிறார் தமயந்தி.

தமயந்தியின் படைப்புகள், கிறித்தவ நிறுவனங்கள், நிர்வாகிகளின் செயல்பாடுகளைத் தயக்கமில்லாமல் விசாரணைக்குட்படுத்துகின்றன. அவர் சார்ந்த சமயத்தின் ஆதிக்க மனப்போக்கும், அதனை எதிர்கொள்கின்ற கருத்துருவாக்கமும் புனைகதைகளால் புலப்படுத்தப்பட்டுள்ளன.

வர்ணமும், வர்க்கமும் வெவ்வேறானவை. ‘பஞ்சமர்’ எனப்படும் தலித்திய மக்கள். கிறித்தவ வழிபடுமிடங்களில் ஒதுக்கியே வைக்கப்பட்டுள்ளமையை, தமயந்தி சித்திரித்துள்ளார். அதுபோலவே கிறித்தவ விழாக்களிலும், ஒதுக்குதலும், தள்ளுதலும் நிகழ்கின்றன என்கிறார்.

கிறித்தவ சீர்திருத்தச் சபைக்கான தேர்தல்கள், காவல்துறைக் கண்காணிப்புடன் நடக்கின்றன. தேர்தலுக்கு முன்பும், பின்பும், வேட்பாளர்கள் நீதிமன்றம் செல்கின்றனர். மதமெனும் மொழி, சமூகத்தில் உண்டாக்கியதை, தமயந்தி தன் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

கோயிலில் நற்கருணை, மாதவிலக்கு நாட்களில் பெண்கள் பெறக் கூடாதென்பதை விவரிக்கிறார் தமயந்தி. வேலைக்குக் கையூட்டு, குருமார்களின் அரசியல், மதம் மாறுதல் எனப் புதுப்புது சமூக மொழிகளைப் படைப்பாளி கையாள்கிறார்.

தமிழில் இலக்கிய வரலாறு, பெரிதும் ஆண்களால், ஆண் நோக்கில் புனையப்பட்டவையாகவே உள்ளன. சங்க இலக்கியங்கள் தொடங்கி, தற்காலம் வரை, பெண்களின் படைப்புகள் வியப்புக்குரியதாக நோக்கப்பட்டன; பெண்மொழி, பெண்ணுடல், பெண் பற்றிய சமூகமொழி போன்றவை வெளிப்படுத்தப்படவில்லை. கல்வி, வேலை வாய்ப்பு, மேலை நாட்டவர் வருகையால், ஆணுக்குச் சமமான இடத்தில் தங்களையும் இருத்த வேண்டும்

என்று புதிய சமூக மொழியாடல் புறப்பட்டது. இதனையே பெண்ணியம் என்கிறோம்.

மதவாதம், சோஷலிஸவாதம், தீவிரவாதம், கிறித்தவப் பெண்ணியம், இந்துப் பெண்ணியம், இசுலாமியப் பெண்ணியம், குடும்பப் பெண்ணியம், குடும்ப மறுப்புப் பெண்ணியம் எனச் சமூக மொழியாடல்கள் ஆற்று வெள்ளமெனக் கொப்பளித்தன. தமயந்தி தன்னைப் பெண்ணியப் படைப்பாளி என்று சொல்லிக் கொள்வதில்லை. ஆனாலும், பெண் உடலும் உள்ளமும் கொண்டவராததால், தன்னியல்பாகவே, தமயந்தியிடமுள்ள பெண்ணியப் பார்வை வெளிப்பட்டுள்ளது.

அன்பு, நெகிழ்வு, போரட்டப் பாய்ச்சல், சமூக முன்னேற்றத்தில் கொண்ட ஈடுபாடு, புதிய சமூகமொழிச் சொல்லாடல்களைத் தமயந்தியின் புனைவுகளில் தோற்றுவித்துள்ளது.

தமயந்தி, கிறித்தவ மதத்தினர்; குடும்பம் பேணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டினர். எனவே பெண்ணியத்தில் பல்வகைத் தடங்களிலும் தன் பாதம் பதிக்கின்றதை, அவரின் புனைவுகள் புலப்படுத்துகின்றன.

பெண்ணெனில் அவளின் உடல், உடல் சார்ந்தவையன்றி வேறில்லை; அவளை மனுஷியாகக் கூட சமூகம் ஏற்பதில்லை என்கிறார் ஆசிரியை.

கலாச்சாரச் சீரழிவு; பண்பாட்டுச் சிதைவு போன்றவை பெண்ணுடல் சார்ந்தே பேசப்படுவதை வருத்தத்துடன் பதிவு செய்கிறார்.

பெண்களின் குடும்பவெளி, உணவு தயாரிக்கும் சமையல் பகுதி; விட்டால் ஆணுடன் உறங்குகின்ற படுக்கைவெளி என விமர்சிக்கின்றதையும் கணிக்க முடிகிறது. மரபாகத் திணிக்கப்படுகின்ற, இந்தக் குடும்ப வெளியை,

தமயந்தியின் பெண் மாந்தர்கள் தாண்டியும், கடந்தும் போக நினைப்பதால், புதிய பெண் சமூகமொழி ஏற்படும் வாய்ப்பிருக்கின்றது.

இயல்பான மொழிக் கையாளலில் தமயந்தி திறனுடையர் என நிறுவியுள்ளார். வாழ்வின் சிக்கல்களைக் கையாண்டு, அவை கை நடுவில் போகக்கூடிய தீர்வுகளையும் முன்மொழிகிறார்.

படைப்பாளர் பேட்டி தர விரும்பாத காரணத்தால் பேட்டி இப்பகுதியில் இடம்பெறவில்லை.

**எதிர்கால ஆய்வும் பயனும்**

இவ்வாய்வைத் தொடர்ந்து, தமயந்தியின் படைப்புகளில் எதிர்காலத்தில் ஆய்வு செய்ய விரும்புவோர், பின்வரும் இலக்கியப் புலங்களில் கவனம் செலுத்தலாம்.

தமயந்தியின் படைப்புகளில் கிறித்தவப் பெண்ணியம் என்பது படைப்பாளியின் மதநிலைப்பாடு பற்றி வெளிப்படுத்தும்.

'பெண்ணிய உடல், உள்ளம் சார் மொழியாடல்' தமயந்தியின் பெண் மாந்தர்களின் வாழ்வியலைப் புலப்படுத்தும்.

பிற பெண் படைப்பாளிகள் குறிப்பாக, ஆர்.சூடாமணி, அம்பை, வாஸந்தி, சிவசங்கரி இவர்கள் புனை கதைகளோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம்.

படைப்புகளை அணுகும் உத்திமுறைகள் பல உண்டு.

அமைப்பியல், குறியியல், நவீனத்துவம், பின்னை - நவீனத்துவம், பின் - காலனியம் போன்ற உத்திமுறைகளின் பின்புலத்தில் நோக்கினால் தமயந்தியின் படைப்புகளில் புதுச்செய்திகளைக் கொண்டு வர முடியும்.

# துணைநூற்பட்டியல்

**அ) முதன்மை ஆதாரங்கள்**


**1. தமயந்தி** – **தமயந்தியின் சிறுகதைகள்,**
Gnaana Cheri,
37 Luz Church Road,
Mylapore,
Madras - 600 044.
முதற் பதிப்பு - 1989.

**2. தமயந்தி,** – **அக்கக்கா குருவிகள்,**
போதி பதிப்பகம்,
ஜி2, தரைதளம்,
வி.ஜாலி அபார்ட்மெண்ட்ஸ்,
38 (ப.எண். 26) காவேரி தெரு,
சாலி கிராமம்,
சென்னை - 600 093.
முதல் பதிப்பு - ஜுலை 1999.

**3. தமயந்தி,** – **முற்பகல் ராஜ்ஜியம்,**
கவிதா பப்ளிகேஷன்ஸ்,
8, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார்,
தி.நகர்,
சென்னை - 600 017.
மு.ப. - நவம்பர் 2000.

**4. தமயந்தி,** – **சாம்பல் கிண்ணம்,**
போதி பதிப்பகம்,
ஜி2, தரைதளம்,
வி.ஜாலி அபார்ட்மெண்ட்ஸ்,
38 (ப.எண். 26) காவேரி தெரு,
சாலி கிராமம், சென்னை - 600 093.
மு.ப. 2001 அக்டோபர்.

**5. தமயந்தி,** – **நிழலிரவு (நாவல்),**
காவ்யா வெளியீடு,
14, முதல் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
முதல் பதிப்பு - டிசம்பர் 2002.

**6. தமயந்தி,** – **வாக்குமூலம்,**
போதி வெளியீடு,
ஜி-2, ஜாஸ்மின் கார்டன்,
5, வேத வள்ளி தெரு,
சாலி கிராமம்,
சென்னை - 600 093.
மு.ப. - 2010.

**ஆ) துணைமை ஆதாரங்கள்**

**7. அந்தோனவா, கோ., அ.கரந், பொன், சி.ம., பூ.சோமசுந்தரம், பாஸ்கரன் (மொபெ.ஆ.)** – **இந்திய வரலாறு பாகம்,**
முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ.

**8. அம்பேத்கர், பி.ஆர்., செங்கோடன் (மொ.பெ.ஆ.)** – **இந்தியாவின் சாதிகள்,**
கார்முகில் பதிப்பகம்,
மதுரை,
மு.ப. - 1989.

**9. அரங்கமல்லிகா,** – **தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - 2002.

**10. இராஜம் கிரு ணன்,** – **காலந்தோறும் பெண்,**
தாகம்,
G# 3/8, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார்,
தி.நகர்,
சென்னை - 600 017.
மு.ப. - 1990.

**11. கல்பகம்,** – **சமூகவியல்,**
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை,
மு.ப. - 1975.

12. **கார்த்திகேசு சிவத்தம்பி,** – **இலக்கியமும் கருத்து நிலையும்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - 2011.

13. **கெய்ல் ஓம் வெட், இராசாராம் (மொ.பெ.ஆ.)** – **வர்க்கம் சாதி நிலம்,**
கார்முகில் பதிப்பகம்,
மதுரை,
மு.ப. - 1988.

14. **கௌமாரீஸ்வரி, எஸ்., கார்த்திகா தேவி, ஆர்.,** – **திருக்குறள் பரிமேலழகர் உரை,**
சாரதா பதிப்பகம்,
சென்னை - 600 014.
மு.ப. - ஏப்ரல் 2002.

15. **சரோஜா. கோ.,** – **பெண் படைப்பாளர்களின் புதினங்களில் பெண்ணியப் பார்வை,**
ஸ்ரீ சக்கரம் வெளியீடு,
சென்னை,
மு.ப. - 2000.

16. **சித்து மா சாலமன்,** – **பெண்ணியம் போட்ட பதியங்கள்,**
திருப்பதி பிரிண்டர்ஸ்,
47, மேலவடம் போக்கித் தெரு,
மதுரை - 1.
மு.ப. - 1997.

17. **சிவசுப்பிரமணியன், ஆ.,** – **கிறித்தவமும் சாதியும்,**
காலச்சுவடு பதிப்பகம்,
669, கே.பி. சாலை,
நாகர்கோவில்,
மு.ப. டிசம்பர் 2001.

18. **சிவத்தம்பி, கா.,** – **தற்காலப் புனை கதைகளில் பெண்கள்,**
தமிழ்ப் பதிப்பகம்,
சென்னை,
மு.ப. - 1970.

**19. சிவத்தம்பி, கா., – இலக்கியமும் கருத்து நிலையும்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
8, மாசிலாமணி தெரு,
பிளாட் எண் – 3,
பாண்டி பஜார்,
சென்னை – 600 017.
மு.ப. – 1982.

**20. சிவத்தம்பி, கா., – தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்,**
தமிழ்ப் புத்தகாலயம்,
சென்னை,
மு.ப. – 1983.

**21. சீனிச்சாமி, து., – தமிழ் நாவல்களில் உளச் சித்திரிப்பு,**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 005.
மு.ப. – டிசம்பர் 2004.

**22. சுயம்பு, பெ., – செம்மொழித் தமிழ் சிறப்பும் வரலாறும்,**
பாரதி பதிப்பகம்,
113, இராஜீவ் நகர்,
திசையன்விளை – 627 657.
நெல்லை மாவட்டம்,
மு.ப. – டிசம்பர் 2010.

**23. செயராணி ராசதுரை, – பெண்கள் படைப்பில் சமூகம்,**
வைகை வெளியீடு,
பவானி,
மு.ப. – 1992.

**24. செல்வராஜ், எஸ்.டி., (தொ.ஆ.)– புத்துலகம் படைக்கவே,**
தூய பவுல் இறையியல் கல்லூரி வெளியீடு,
திருச்சி,
மு.ப. – 1991.

**25. சேதுமணி மணியன், – தமிழ் நாவல்களில் மதிப்புகள்,**
செண்பகம் வெளியீடு,
மதுரை.
மு.ப. – 1990.

**26. ஞானி,** – **எண்பதுகளில் தமிழ் நாவல்கள்,**
விஜயா பதிப்பகம்,
20, ராஜ வீதி,
கோவை - 641 001,
மு.ப. - 1994.

**27. டேவிட், சி., ஆர்டபிள்யூ.,** – **கிறித்தவக் கல்வி,**
தமிழ் இறையியல் நூலோர்க் குழு,
மதுரை,
மு.ப. - 1995.

**28. டேவிட், சி., ஆர்டபிள்யூ.,** – **திருச்சபை அமைப்பு ஆளுகை,**
தமிழ் இறையியல் நூலோர்க் குழு,
மதுரை.
மு.ப. - 1995.

**29. தாசன், மு.,** – **தொல்காப்பியக் களஞ்சியம் பொருளதிகாரம்,**
அபிலா பதிப்பகம்,
நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
67/1, கோர்ட் ரோடு,
நாகர்கோவில்,
மு.ப. - மார்ச் 2001.

**30. திருவாளன்,** – **குடும்பத்தில் பெண்களின் கடமை,**
வானதி பதிப்பகம்,
சென்னை,
மு.ப. - 1978.

**31. தேவகடாட்சம்,** – **வரலாற்றில் கிறிஸ்தவம் தொகுதி–2,**
இடைக்காலத் திருச்சபை,
தமிழ் இறையியல் நூலோர் குழு,
மதுரை.
மு.ப. - மார்ச் 1995.

**32. தேவதத்தா கமலி, தி.,** – **பெண்ணியக் கருத்தாக்கங்கள்,**
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்,
கொடைக்கானல்,
மு.ப. - 1999.

**33. தேவதத்தா கமலி, தி.,** – **பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு,**
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 032.
மு.ப. - 1992.

**34. தேவதத்தா கமலி, தி.,** – **பெண்கள் படைப்பில் பெண்கள்,**
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்,
கொடைக்கானல்,
மு.ப. - 1986.

**35. தேவதத்தா கமலி, தி.,** – **தமிழ் சிறுகதைகளில் பெண்கள் பிரச்சினைகள்,**
அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்,
கொடைக்கானல்,
மு.ப. - 1986.

**36. நம்பூதிரிபாட், இ.எம்.எஸ்.,** – **இந்திய வரலாறு ஒரு மார்க்சியக் கண்ணோட்டம்,**
சென்னை புக்ஸ்,
சென்னை,
மு.ப. - 1988.

**37. பக்தவத்சல பாரதி, சீ.,** – **பண்பாட்டு மானிடவியல்,**
மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை,
மு.ப. - 1990.

**38. மங்கை, அ.,** – **பெண்ணிய அரசியல்,**
கங்கு வெளியீடு - வரிசை 5,
1, இந்தியன் வங்கி காலனி,
வள்ளலார் தெரு,
பத்மநாபநகர்,
சூளைமேடு,
சென்னை-94.
டிசம்பர் 2005.

**39. முத்துச்சிதம்பரம்,** – **பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்,**
15, மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார்,
தி.நகர்,
சென்னை - 600 017.
மு.ப. - 1999.

**40. மெய்யப்பன், ச.,** – **பாரதியார் கவிதைகள்,**
மணிவாசகர் பதிப்பகம்,
8/7, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை - 600 108.
மு.ப. - 1995.

**41. பரிமளம், அ.மா., பாலசுப்பிரமணியம், கு.வெ.,** – **புறநானூறு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - ஏப்ரல் 2004.

**42. பரிமளம், அ.மா., பாலசுப்பிரமணியம், கு.வெ.,** – **அகநானூறு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - ஏப்ரல் 2004.

**43. பழனியப்பன், மு.,** – **விடுதலைக்கு முந்தைய பெண்களின் நாவல்கள்,**
தி பார்க்கர்,
293, அகமது வணிக வளாகம்,
இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை - 600 014.
மு.ப. - அக்டோபர் 2003.

**44. பஞ்சாங்கம், க.,** – **நவீன இலக்கியக் கோட்பாடுகள்,**
காவ்யா,
16, 17 குறுக்குத் தெரு,
இந்திரா நகர்,
இரண்டாம் ஸ்டேஜ்,
பெங்களூர் - 560 030.

**45. பஞ்சாங்கம், க.,** – **பெண் மொழி புனைவு,**
காவ்யா,
16, 17 குறுக்குத் தெரு,
இந்திரா நகர்,
இரண்டாம் ஸ்டேஜ்,
பெங்களூர் - 560 030.
மு.ப. - 1999.

**46. பஞ்சாங்கம், க.,** – **மகாகவி பாரதியாரின் பெண்ணியக் கட்டுரைகள்,**
பாரதி அன்பர்கள்,
15, 19-வது குறுக்குத் தெரு,
அவ்வை நகர்,
புதுச்சேரி.

**47. பாக்கியமுத்து, தி., (ப.ஆ.),** – **இலக்கியத்தில் பெண்கள்,**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை,
மு.ப. - 1977.

**48. பாக்கியமுத்து, தி.,** – **பெண்கள் பார்வையில் பெண்கள்,**
சங்கீதா பதிப்பகம்,
சென்னை - 600 014.
மு.ப. - 1994.

**49. பாலசுப்பிரமணியன், கு.வெ.,** – **சங்க இலக்கியத்தில் புறப்பொருள்,**
மீரா பதிப்பகம்,
புதுக்கோட்டை,
மு.ப. - 1986.

**50. பாலசுப்பிரமணியன், எஸ்.வி., செல்லத்துரை, த.ச.,** – **நுண்ணினப் பொருளியல்,**
பாரதிதாசன் பல்கலைக் கழகம்,
திருச்சி,
மு.ப. - 1991.

| | | |
|---|---|---|
| **51. பாஸ்கல் கில்பர்ட், நாராயணன், ஜெ., (தமிழாக்கம்)** | **–** | **சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,** தமிழ் வெளியீட்டுச் சங்கம், தமிழ்நாடு, மு.ப. - 1964. |
| **52. பாஸ்கல் கில்பர்ட்,** | **–** | **சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்,** சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, மு.ப. - 1984. |
| **53. பாஸ்ட், R.H.S.** | **–** | **இந்தியக் கிறித்தவ இறையியல்,** சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, மு.ப. - 1984. |
| **54. பிரேமா, இரா.,** | **–** | **பெண்ணியம்,** தமிழ்ப் புத்தகாலயம், 8, மாசிலாமணி தெரு, பிளாட் எண் - 2, பாண்டி பஜார், தி.நகர், தபால் பை - 5193. சென்னை - 600 017. மு.ப. - 2000. |
| **55. பிரேமா, இரா.,** | **–** | **பெண் எழுத்துக்களில் அரசியல்,** அறிவுப் பதிப்பகம், 142/17, ஜானிஜான் கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014. டிசம்பர் 2007. |
| **56. பிள்ளை, கே.கே.,** | **–** | **தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, மு.ப. - 1972. |

**57. ராஜேந்திரன், பி.எல்.,** – **பெண்கள் பார்வையில் பெண்கள்,**
சங்கீதா பதிப்பகம்,
14/2, பீட்டசு சாலைக் குடியிருப்பு,
இராயப்பேட்டை,
சென்னை - 14.
மு.ப. 1994 டிசம்பர்.

**58. ரெங்கம்மாள், இரா.,**
**வாசுகி, சி.,** – **பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும்,**
அறிவுப் பதிப்பகம்,
142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014.
மு.ப. - பிப்ரவரி 2005.

**59. லூர்து, தே.,** – **நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்,**
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை - 627 002.
மு.ப. - ஆகஸ்டு 1997.

**60. வரதராசன், மு.,** – **மொழி வரலாறு,**
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை,
சென்னை - 1.
மு.ப. - 1954.

**61. வளவன், சா.,** – **பெண் படைப்பாளர் தம் படைப்புகள்,**
திருமலை தெய்வம் ஆக்ட் பிரிண்டர்ஸ்,
ஏஜி 129/ 12A ஏழாவது முதன்மைச் சாலை, அண்ணாநகர்,
சென்னை - 600 040.
மு.ப. - டிசம்பர் 1995.

**62. வெங்கட்ராமன், சு.,** – **எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
பி.டி.டி.ஐ. அஞ்சல்,
தரமணி,
சென்னை - 600 113.
மு.ப. - 1993.

**63. வெண்ணிலா, அ.,** – **மீதமிருக்கும் சொற்கள் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள்,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - டிசம்பர் - 2007.

**64. வேலம்மாள், நா.,** – **தமிழ் நாவல்களில் பொருளாதார சிக்கல்கள்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல்
எஸ்டேட்,
அம்பத்தூர்,
சென்னை - 600 098.
மு.ப. - 2008.

**65. வேலம்மாள், நா.,** – **பெண்மையவாதம்,**
காவ்யா பதிப்பகம்,
16, இரண்டாம் குறுக்குத் தெரு,
டிரஸ்ட்புரம்,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
மு.ப. - டிசம்பர் 2009.

**66. ஸ்டீபன் சாமுவேல் வேதநாயகம்,– வரலாற்றில் கிறிஸ்தவம் தொகுதி–3,**
திருச்சபைச் சீர்திருத்தம்,
தமிழ் இறையியல் நூலோர்க்குழு,
மதுரை.
மு.ப. 1996.

**67. ஸ்ரீகுமார், எஸ்.,** – **நாவலும் சமுதாயமும்,**
சுபா பதிப்பகம்,
J. 80, ரமணி பவன்,
சற்குண வீதி,
நாகர்கோவில் - 629 002.
மு.ப. - 1992.

**இ) ஆங்கில நூல்கள்**

**68. David, C. King & Marvin Koller,** - **Foundation of Sociology,**
Sanfrancisco,
F.E. - 1975.

**69. Donge, S.A., Commune** - **India from Permitive to Slavery,**
Sanfrancisco,
F.E. 1980.

**70. George Ritzer, Yetman** - **Sociology - Experiencing A Kammeyer and Normal Changing Society,**
Boston,
F.E. 1987.

**71. James B. Makee,** - **Sociology, A Study of Society,**
Holt,
Rinehart and Winston,
New York,
F.E. 1981.

**72. Renald W.Smith & Perston,-** **Sociology and Introduction,**
St. Marfin's Press,
New York,
F.E. 1977.

**ஈ) அகராதி**

**73. . . . . . . . . . . . ,** – **க்ரியாவின் தற்காலத் தமிழகராதி,**
க்ரியா பதிப்பகம்,
சென்னை,
மு.ப. - 1992.

**74. . . . . . . . . . . . . ,** – **தமிழ்க் கலைக்களஞ்சியம் தொகுதி–5,**
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை,
மு.ப. 1956.

**75. . . . . . . . . . . . . ,** – **வாழ்வியற் களஞ்சியம்–தொகுதி–7,**
மு.ப. - 1986.

**உ) இதழ்கள்**

**76. அன்னம்,** – **இறையியல் சிற்றேடு,**
சிற்றேடு 4, 5.
வைகறைப் பதிப்பகம்,
திண்டுக்கல்.

**77. சரோஜினிதேவி (க.ஆ.),** – **இந்தியப் பெண்குமாரி மலர்,**
மே - 1974.

**78. மூர்த்தி, து.,** – **புலமை இதழ்,**
திசம்பர் - 1982.

**79. மேலும்,** – **மாத இதழ்,**
டிசம்பர் - 1993.

## பின்னிணைப்புகள்

# 1) முற்பகல் ராஜ்ஜியம் கதைச்சுருக்கம்

சிவராமன் பிரபல எழுத்தாளர். இவருடைய மனைவி சரசுவதி. இவருக்கு கணே , காஞ்சனா என்ற இரண்டு பிள்ளைகள். சரசு 12-ம் வகுப்பு படித்தவள். தன் வீடு, கணவன், பிள்ளைகள் என்று இருப்பவள். விதவிதமாக சமைக்கவும், கணவனைக் கவனிப்பதுமே கடமையாக இருந்தாள். பொழுது போக்கிற்காக பக்கத்து வீட்டு பார்வதியுடன் சினிமாவுக்குச் செல்வாள். ஆனால் சினிமாக்கூட ஒழுங்காகக் பார்க்க மாட்டாள். கணவன் நன்றாக மோர் விட்டிருப்பாரா, அடுப்பில் வெண்டைக்காய் கூட்டு இருந்ததை எடுத்துருப்பாரா? என்ற எண்ணத்தில் இருப்பாள். படம் பார்க்கும் போது இறக்கின்ற காட்சி, துயரமான காட்சிகள் வந்தால் அழுதுவிடுவாள்.

சிவராமன் பல கதைகள் எழுதியுள்ளார். இவருக்குப் பல ரசிகர்கள் உண்டு. அவர்களுள் ஒரு ரசிகை இந்துமதி என்ற பெண். அவரது ரசிகை மட்டுமல்லாது வாழ்க்கைத் துணைவியாகவும் மாறிவிடுகிறாள். அவருக்கு கதை எழுதுவதற்குத் தூண்டுகோலாயும் அமைகிறாள். இந்துமதி தனியார் அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண். அவளது அப்பா இறந்து விட்டார். அப்பா இவங்களுக்குச் சிறந்த நண்பன். கௌரி என்ற அக்காவும் உண்டு. அவள் விரும்பிய ஒருவனோடு ஓடி விட்டாள். அம்மாவும், அவள் மாமா சண்முகமும் இவளுடன் இருக்கிறார்கள். சண்முகத்திற்கு, அவள் எப்படிவாயவது தன்னைக் காதலித்து விடுவாள் என்கிற தீர்மானம் அவளை டீ போட்டு கூப்பிடுவதற்கும், அடிப்பதற்கும் தயங்க மாட்டான். ஒரு நாள் அவனை பலவந்தமாக பலாத்காரம் செய்து விட்டாள். அப்பாவின் தூண்டுதலினால் சில கதைகளை வாசிக்கத் தொடங்கினாள் இந்துமதி.

அதன்பால் ஈர்க்கப்பட்டது சிவராமன் கதைகள். பல நாட்கள் கடிதங்கள் மூலம் விமர்சனம் எழுதியிருக்கிறாள். ஒரு நாள் அவளை அவரது மனைவி வரவேற்றாள். உபசரித்தாள். அவரை பார்த்ததன் விளைவே சண்முகம் இவளை பலாத்காரம் செய்தது. இந்துவின் அலுவலகத்தில் தாமஸ் என்ற நண்பனும் பாரதி என்ற தோழியும் உண்டு. தாமஸ் நன்றாக கவிதை எழுதுவான். நிறைய கவிதைகள் எழுதிய மதியம் உணவு இடைவேளையின் போது வாசித்துக் காட்டுவான். கவிதை நோட்டின் முன்புறம் பல எழுத்தாளர்களின் பெயர்களை எழுதி இவர்களைப் போல நானும் வர வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறான். தாமஸ் பாரதியைக் காதலித்தான். அதனை இந்துவிடம் கூறினாள். பாரதி இவனைக் காதலிக்கிறாளா என்று தெரியவில்லை.

ஒருநாள் ஒரு விபத்தில் தாமஸ் இறந்து விடுகிறார். அந்த அதிர்ச்சியை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மேலும் சண்முகத்தால் தனக்கு நேர்ந்த செயலைப் பற்றி சிவராமனிடம் பேசினாள். அம்மாவும் சண்முகத்திடம் எதுவும் கேட்கவில்லை. எனவே வீட்டில் இருப்பதற்கு மனமில்லாமல் ஏதாவது விடுதியில் தங்கலாம் என்று எண்ணினாள். அது பற்றி சிவராமனிடம் பேசினாள். அவர் அவரது ரசிகை ஸ்வப்னா. விடுதிக் காப்பாளராக இருப்பதாகக் கூறினார். மறுநாள் அவரே இந்துவைக் கூட்டிக் கொண்டு ஸ்வப்னாவைப் பார்த்து விடுதியில் சேர்ந்து விட்டார். விடுதிக்கு அடிக்கடி சிவராமன் போன் செய்தார். அவரது நண்பர்கள் கே.பி.என். சிவபரணி இருவருக்கும் ஒரு விபத்தின் காரணமாக கை முறிந்துவிட்டது. அவர்களைப் பார்ப்பதற்கு மருத்துவமனைக்கு இருவரும் சென்று நலம் விசாரித்தார்கள்.

விடுதியில் தினசரி என்ற தோழி இருந்தாள். ஆனால் அவ்வளவாக ஒட்டுதல் கிடையாது.

சிவராமனுடன் அடிக்கடி வெளியில் செல்லும் இந்துமதியை, ஸ்வப்னா கண்டித்தாள். சிவராமனும் இந்துமதியும் திருநெல்வேலிக்கு சென்றனர். அங்கு கரியபெருமாள் என்ற ரசிகர் தன் வீட்டிற்கு விருந்துக்கு வர வேண்டும் என்று அழைத்தார். இருவரையும் கிரு ணாபுரம் கோவிலுக்கு அழைத்துச் சென்றார். தாமிரபரணி ஆற்றங்கரையில் உட்கார்ந்து தன் கதையை ஆரம்பித்தார். இந்தக் கதை இந்துவுக்கு சமர்ப்பிக்கிறேன் என்று எழுதியிருந்தார். சிவராமன் விடுதிக்கு அக்கடி போன் பண்ணியதால், ஸ்வப்னா இந்துவை கடினமான சொற்களால் திட்டினாள். எனவே விடுதியைவிட்டு வெளியே சென்று ஒரு வீடு வாடகைக்கு வாங்கி அமர்ந்தாள். இந்த விஷயத்தை சிவராமனுக்கு போன் பண்ணிச் சொன்னாள். சிவராமன் மிகவும் வருத்தப்பட்டார். ஒருநாள் வீட்டிற்கு வருவதாகப் போன் பண்ணினார். வீட்டிற்கு வந்து உன்னைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை. கதை எழுதவும் முடியவில்லை என்று கூறினார். எனவே நாம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினார். இந்துவும் அதனை ஏற்றுக்கொண்டு தனக்கு தாலி வேண்டாம், குழந்தை வேண்டாம் என்று கூறுகிறாள். ஆனால் தெருவோரக் குழந்தையை எடுத்து வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். அதன்படியே ஒரு குழந்தையை எடுத்து அதனை விடுதியில் தங்கி படிக்க வைத்தாள். இந்துவையும், சிவராமனையும் ஓட்டலில் பார்த்ததாக சரசுவிடம் மணி கூறுகிறாள். ஆனால் அவள் நம்பவில்லை. ஒருநாள் அவருக்கு கலியபெருமாள் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதனைப் பார்த்தபோது, இந்துவை அவரது மனைவி என்று

குறிப்பிட்டிருப்பதைக் கவனித்தாள். சிவராமன் அப்பொழுது தான் இந்துவைப் பற்றிக் கூறினான்.

சரசுவால் தாங்க முடியவில்லை. இருவருக்கும் தொழிலாளிக்கும், முதலாளிக்குமான பேச்சு வார்த்தையாக அமைந்தது. மகன் கணே சிறுவயதிலேயே அப்பாவை வெறுத்தான். அதுவே படிப்படியாக வளர்ந்து, அடியோடு வெறுத்தாள். சில நாட்கள் கழித்து வீட்டிற்கு வருவதும், போவதுமாய் இருந்தான். சிவராமன் செலவுக்கு மட்டும் அடிக்கடி பணம் கொடுப்பாள். ஒரு நாள் கணேஷக்கும் சிவராமனுக்கும் பேச்சு வார்த்தை அதிகமாகி சண்டை போட்டுக் கொண்டு இந்துவின் வீட்டிற்குச் சென்று விட்டாள். செலவுக்குப் பணம் இருக்காது என்று இந்துவே வீட்டிற்குச் சென்று கொடுத்தாள். ஆனால் சரசு அவளை வெளியே செல்லுமாறு கூறிவிட்டாள்.

சஞ்சனா மட்டும் அப்பா பக்கம் இருந்தார். இந்துவையும் அவளுக்கு பிடித்திருந்தது. இந்து தன் வாழ்க்கையில் நடந்த சோகங்களைச் சஞ்சனாவுடன் பகரிந்து கொண்டாள். சஞ்சனா மிகவும் வேதனைப்பட்டாள். அப்பா, இந்துமதியைத் திருமணம் செய்தது சரியே என்று நினைத்தாள். நீ எனக்கு அம்மாவாக இருந்திருக்கக் கூடாதா என்றும் கூறினாள். ஒருநாள் சிவராமன், இந்து, சஞ்சனா மூவரும் ஓட்டலுக்குச் சென்றார்கள். அங்கு கணே , மஞ்சுளா என்ற பெண்ணுடன் சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள் என்று சரசுவிடம் கூறினார். சரசு அவளைப் பற்றி கணேஷிடம் கேட்டாள். ஒருநாள் கணே அப்பாவின் மேல் உள்ள வெறுப்பால் மருந்தைக் குடித்து விடுகிறான்.

சரசுவிடம் சஞ்சனாவிற்கு கொடைக்கானலில் மாப்பிள்ளைப் பார்த்திருப்பதாக சிவராமன் கூறினான். சஞ்சனாவுக்கு அந்த மாப்பிள்ளை பிடித்து விடவே திருமணமும் நடந்தது. சஞ்சனா ஊருக்குச் சென்று

இந்துவுக்கு அடிக்கடி போன் பண்ணி தான் சந்தோசமாக இருப்பதைக் கூறினாள். அவள் அம்மாவுக்ளுப் போன் பண்ணுவது கிடையாது.

ஒருநாள் அம்மாவிற்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் தன் கணவன் வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் என்னை வெளியே செல்லுமாறு கூறிவிட்டாள். மேலும் விவாகரத்து வாங்கப் போவதாகவும், மயிலாப்பூரில் வேலைக்குப் போவதாகவும் எழுதியிருந்தாள். அந்தக் கடிதத்தை வாசித்துவிட்டு, சிவராமனுக்கு போன் செய்து வரச் சொல்லுகிறாள். அவர் வந்து இந்த கடிதத்தைப் படித்துவிட்டு அப்படியே இருந்துவிட்டார்.

# 2) நிழலிரவு (நாவல்)

டெபோரா காத்தரீன் ரத்னகுமாரி என்னும் வயதான பாட்டியின் பேத்தி எலிசி. எலிசியின் அப்பா சேகர். ரத்னகுமாரி வயதான நிலையில் உடல்நலக் குறைவால் கட்டிலில் படுத்துக் கிடக்கிறாள். மருத்துவர் ரத்னகுமாரியை ஒரு நாள் இரவு மட்டும் உயிருடன் இருப்பாள் என்று கூறி வீட்டிற்கு அனுப்புகிறார்.

சேகர் ஆசிரியர் பணி செய்கிறார். சேகருடன் ஆசிரியர் பணி புரியும் ரத்னவேலுவும், ரத்னகுமாரியை மருத்துவமனையிலிருந்து கொண்டு வரும் வேளையில் சேகரிடம் ரத்னவேலு சொல்ல வேண்டிய உறவினர்கள் யார் என்று சொல். நான் பார்த்துக் கொள்கிறேன் என்கிறார். சேகர் ரத்தினவேலுவிடம் எலிசியின் அத்தை ஜெசியின் தொலைபேசி எண்ணைக் கொடுக்கிறார்.

எலிசி, ரத்னகுமாரியின் கையைப் பிடித்துக் கொண்டு ரத்னகுமாரி கூறிய வார்த்தையை நினைத்துப் பார்க்கிறாள். எலிசி ரத்னகுமாரியைப் பார்த்து நீ ரொம்ப அழகு என்கிறாள். அதற்கு ரத்னகுமாரி எலிசியிடம் ‘உன் கணவன் முருகனால் என்னை மாதிரி ஒரு பெண்ணைப் பெத்துக்கோ’ என்று கூறுகிறாள்.

ரத்னகுமாரிக்காக இறைவழிபாடு செய்ய கிறித்தவ சபையின் ஐயரும், அவரது மனைவியும் வந்து ரத்னகுமாரிக்காக ஆண்டவரை நோக்கி வழிபடுகின்றனர். வழிபடும் வேளையில் ஐயர் பல மொழிகளில் பேசுகிறார். ‘ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்’ என்று சத்தமிடுகிறார். இறைவனிடம் வழிபடும்போது ஐயர் “டெபோரா காத்தரீன் ரத்னகுமாரியை விட்டு சாத்தானே விலகு” என்று கூறியும் ரத்னகுமாரியிடம் எந்த அசைவும் இல்லை.

எலிசியின் அப்பா சேகர். ஆசிரியர் சங்கத்தில் இருந்தால் எலிசியின் அம்மா ஆசிரியர் பணியிலிருந்து கிறித்தவ நிர்வாகம் மூலம் இடம் மாற்றம் செய்யப்படுகிறாள். இதனால் வழக்குப் பதிவு செய்வதற்குச் சென்னை செல்கின்றனர். அங்கு எலிசியின் அம்மாவுடன் மாற்றலாகி இருந்தவர்கள் ஜெபமணி ஆசிரியை விமலாபாலின் ஆசிரியை இருவரும் வழக்குப் பதிவிற்காக வரும் வேளையில் சென்னையில் எலிசியின் அம்மாவைச் சந்திக்கின்றனர்.

எலிசி 18 வயதில் மாதவிடாயின் போது ஆலயத்தில் நற்கருணை எடுக்க முடியாது என்று தெரிந்தும், பதினெட்டு வயதில் மாதவிடாயின்போது நற்கருணை எடுக்கிறாள். ஆலயத்தில் நற்கருணை எடுக்கும் வேளையில் புடவை முந்தானையால் முக்காடிடாமல் எலிசி இருந்ததை ஆலயத்தில் அனைவரும் பார்த்தனர். முக்காடிடாமல் இருந்ததற்கு எலிசியின் அம்மா எலிசியைத் திட்டிவிட்டு வீட்டிற்குச் செல்கிறாள். எலிசி தன்னுடைய வீட்டில் ரத்னகுமாரியிடம் ‘‘கர்த்தர ஆலயத்திற்குள் வியாபாரம் செய்கிறார்கள் என்று பயமாக இருக்கு பாட்டிமா’’ என்று கூறுகிறாள். அதற்கு ரத்னகுமாரி ‘‘வெறும் வியாபாரம் ஆகிப்போன ஆலயத்தில் கர்த்தர் இருப்பாரா’’ என்று கூறுகிறாள். ‘கிறித்தவ ஆதின நிர்வாகத்தில் சாத்தானிருக்கு’ என்று கூறிய ஐயரை உடனடியாக மாற்றம் செய்கிறார்கள்.

இவ்வாறு பல நிகழ்ச்சிகளை எலிசி நினைத்துப் பார்க்கிறாள். பின்பு எலிசி ரத்னகுமாரியின் கையைத் தூக்கி விரலில் முத்தமிடுகிறாள். அப்போது செல்லம்மா என்ற பெண்ணின் நினைவு வருகிறது. செல்லம்மாவின் அம்மா ரத்னகுமாரியின் வீட்டில் வேலை செய்த பழக்கத்தால் செல்லம்மாவைத் தன் மகள் போன்று வளர்க்கிறாள்.

செல்லம்மாவை புரோட்டாக்கடை வைத்திருக்கும் ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றனர். செல்லம்மா யாரிடம் பேசினாலும் சந்தேகப்பட்டு அவனை வச்சிருக்கிறாயா? என்று கூறி கொடுமை செய்த காரணத்தால் ரத்னகுமாரி விடுதலைப் பத்திரம் வாங்கி கையெழுத்துப் போட்டு செல்லம்மாளையும் அவள் கணவனையும் பிரிக்கிறாள். செல்லம்மாவின் தங்கை ரோசாலிக்கு ஆசிரியர் பயிற்சி படித்த பின் வேலைக்கு கிறித்தவ ஆதின நிர்வாகத்தில் வேலைக்கு ஐம்பதாயிரம் லஞ்சமாகக் கேட்கிறார்கள். இதனால் ரத்னகுமாரி வேதனைப்படுகிறாள். பின்பு ரோசாலிக்கு வேலை கிடைத்தும் ரத்னகுமாரியின் மனத்தில் காயம் ஆறாமல் இருந்ததை எலிசி உணர்கிறாள். எலிசியின் உறவினரான கிருபா என்பவள் எலிசியிடம் ‘‘நீ ஒரு இந்து மதத்தில் உள்ளவனை கல்யாணம் பண்ணப் போறனு திருமதி விக்டர் ரொம்ப வருத்தப்பட்டார். ‘‘நீ இந்து மதத்திற்கு மாறுவதற்காகப் பொட்டு வைப்பதாக அவர் கூறி வருத்தப்படுகிறார்’’ என்கிறாள். அதற்கு எலிசி கிறித்தவப் புனித நூலில் பொட்டு வைக்கக்கூடாதுன்னு எங்காவது இருக்கா என்று திருமதி விக்டரிடம் கேட்க வேண்டுமென்று என்று எலிசி கூறுகிறாள்.

பின்பு டெபோரா காத்தரின் ரத்னகுமாரி தன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் முறையில் நாவலில் நிகழ்வுகள் நகர்த்தப்பட்டுள்ளன.

05.03.1974 அன்றைய தினத்தில் ஜெபராஜின் பாட்டி மெர்ஸி பொன்ராசுடன் சகோதரர் மனோகரன் பர்னாந்துவின் கிறித்தவக் கூட்டத்திற்கு மெஞ்’’ானபுரத்திற்கு ரத்னகுமாரியும் செல்கிறாள். மாலை நேரத்தில் இறைவன் வழிபாட்டில் சகோதரர் மனோகரன், ‘‘மெர்ஸி பொன்ராஜிக்கு இதோ ஆண்டவர் சர்க்கரை வியாதியை நீக்குகிறார்’’ என்று கூறியவுடன் ஜெபராஜின்

பாட்டி மயங்கி விழுகிறாள். எழுந்து கொண்டு ‘‘ஒண்ணுமில்லை. பயந்துட்டேன்’’ மத்தியானம் சர்க்கரை நோய்க்கு மாத்திரைப் போட்டுக்க மறந்துட்டேன் தலை சுத்திருச்சி என்று ஜெபராஜின் பாட்டி கூறுகிறாள்.

04.04.1974 அன்றைய தினத்தில் தன் ஆங்கில ஆசிரியரை ரத்னகுமாரி நினைக்கிறாள். ரத்னகுமாரியோ அல்லது அவள் குடும்பத்தைச் சார்ந்தவர்களோ மொட்டைக் கடிதம் எழுதியதாக ஏழாம் வகுப்பில் ஒரு குண்டு ஆசிரியை ரத்னாவின் தொப்புளைச் சுற்றிச் சுற்றியே கிள்ளியதால் அழுகிறாள். இதனால் பள்ளிக்கூடம் வெறுக்கத்தக்க கூடமாய் ரத்னகுமாரிக்குத் தோன்றுகிறது. கல்விக்கூடம் கோவில் என்றும் ஆசிரியர் தெய்வம் என்பதையும் ரத்னகுமாரி ஏற்க மறுக்கிறாள். ரத்னகுமாரிக்கு கிறித்தவ அமைப்பு சார்ந்த பள்ளியில் ஆசிரியர் வேலை கிடைக்கிறது. ஆனால் ரத்னாவின் தாய் கிறித்தவ அமைப்பு சார்ந்த பள்ளி நிர்வாகத்தால் செபத்தியாபுரம், சுரண்டை, சாத்தான்குளம், பண்ணைவிளை என்ற ஊர்களுக்கு மாற்றப்படுகிறாள். அதற்காக ரத்னாவின் தாய் கேக் வாங்கிக் கொண்டு பாதிரிமார்களின் வீடுகளுக்குச் செல்கிறாள். கேக் பொட்டலங்களைப் பெற்றுக் கொண்டு அவளை மேலும் மோசமான ஊருக்கு மாற்றுகிறார்கள். ரத்னாவின் தாய் விசுவாசத்தைக் கைவிடாமல் மீண்டும் ஆலயங்களுக்குச் செல்கிறாள். ரத்னாவின் வீட்டிற்கு இறைவன் வழிபாடு நிகழ்த்த வரும் ஐயர்களுக்கு ரத்னாவின் தாய் தேநீர் கொடுக்கிறாள். அதையும் குடித்துவிட்டு ரத்னாவின் அப்பா உடல் நலம் குறைவைப் பார்த்து அந்தப் ஐயர் நல்ல மருத்துவராப் பாருங்க என்று கூறிச் செல்கிறார்.

04.06.1974 அன்றைய தினத்தில் ரத்னகுமாரி நடுநிலைப்பள்ளி ஆசிரியையாக நியமனம் செய்யப்படுகிறாள். பள்ளிக்கூடம் அருகில் உள்ள

டீக்கடைக்காரர் மகன்  ரத்னாவைப் பார்த்து உங்கள் தலையில் உள்ள ரோஜாப்பூவைப் பார்த்தால் மஞ்சள் கலர் பலூன் போன்று இருக்கிறது என்று கூறுகின்றான். இதனால் ரத்னகுமாரியுடன் ஆசிரியர் பணியாற்றிய வினோத் பிராங்கிளின் என்ற ஆசிரியரின் நினைவு ரத்னகுமாரிக்கு வருகிறது. ரத்னகுமாரியின் தலையில் இருந்த ரோஜா கீழே விழ அதை வினோத் ப்ராங்கிளின் எடுத்துக் கொடுத்து நீங்க தென்னிந்தியத் திருச்சபைக் கிறித்தவத்தைச் (C.S.I.) சார்ந்தவரா என்று கேட்கிறான். அதற்கு ரத்னா தலையசைத்துச் சிரிக்கிறாள். அவ்வாறு ரத்னாவிடம் அறிமுகம் ஆகிக் கொள்கிறான். மறுவாரமே டோனாவூர் பள்ளிக்கு ரத்னகுமாரியை மாற்றுகிறார்கள். அதற்குப் பதில் ஒரு ஐயரின் உறவினர் வருகிறார். பின் கிறித்தவப் பிறப்புவிழாவிற்கு வாழ்த்து மடலையும் பின் மேமாதம் திருமண அழைப்பும் ‘செல்வி டெபோரா காத்தரீன் ரத்னகுமாரி’ என்று பள்ளி முகவரிக்கு வினோத் ப்ராங்க்ளின் எழுதியதை ரத்னகுமாரி கிழித்துவிடுகிறாள்.

24.06.1974 அன்றைய தினத்தில் ரத்னகுமாரியுடன் ஆசிரியை வேலை பார்க்கும் அகஸ்டா இறந்து விடுகிறாள். இவள் இறந்த செய்தி முதலில் தலைமையாசிரியர் முதலில் பார்த்துவிட்டு பின்விளையாட்டு ஆசிரியர் ஆனந்த சகாயத்திடம் கூறுகிறார். பின் அனைத்து மக்களுக்கும் தெரிகிறது. அகஸ்டாவின் இறப்பால் அகஸ்டாவின் மாமா தன் மார்பில் அடித்துக் கொண்டு அழுகிறார். அகஸ்டாவுடன் நாட்டுக் கோழியும் மாடும் இறக்கின்றன. அகஸ்டாவின் உடலை அரசு மருத்துவமனை வண்டி ஏற்றிச் சென்றதை ஆனந்தசகாயம் பார்த்து ரத்னகுமாரியிடம் அகஸ்டா இரண்டு மாதம் கர்ப்பமாக இருக்கிறாள். ஆனால் அக் குழந்தையை யார் குழந்தையின்னு

காவலர்கள் சந்தேகப்படுகிறார்கள் என்று கூறுகிறான். இதனால் ரத்னகுமாரி வேதனைப்படுகிறாள்.

07.08.1974 அன்றை தினத்தில் ரத்னகுமாரி அம்மா வழி உறவினரான பாட்டி கார்மேல் இறந்துவிடுகிறாள். அன்று கார்மேல் பாட்டி ரத்னகுமாரியிடம் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்க்கிறாள். திருநெல்வேலியில் மாம்பழச் சங்கத்திற்காக ரத்னகுமாரியும் கார்மேல் பாட்டியும் வருகின்றனர். சூராங்கனி அம்மன் கோவில் திருவிழாதான் இப்படி மாறிவிட்டது ரத்னா என்று கார்மேல் கூறுகிறாள். ஊசிகோபுர ஆலயத்தில் முன்பெல்லாம் பிள்ளைமார் சாதி மக்கள் ஆதிக்கம்தான் ரத்னா மேல் சாதிக்காரங்கதான் முன் வரிசையில் நாற்காலியில் அமர்கின்றனர். நாங்க எல்லோரும் வீட்டிலிருந்து நாற்காலி கொண்டு வருவோம் என்கிறார் கார்மேல். நாடார் சமயத்தைச் சார்ந்தவர்கள் இடைச்சாதியாக இருந்தாலும் கீழ்ச்சாதியோட தான் இருந்தாங்க என்று கார்மேல் பாட்டி ரத்னகுமாரியிடம் கூறியதை நினைத்துப் பார்க்கிறாள். கார்மேல் பாட்டியின் மூத்த மகன் எபநேசர். எபநேசரின் மனைவி கிரேஸ். எபநேசர் திருநெல்வேலியில் கல்லூரியில் வேலை பார்க்கிறான். அவனுடைய மனைவி நல்லூரில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் வேலை பார்க்கிறாள். இருவரும் நல்லூரில் தங்கி இருக்கின்றனர்.

ரத்னகுமாரி கண்களை இறுக மூடிக் கொள்கிறாள். அவளுடைய கனவில் தாடிக்கார மார்க்சும் இயேசு கிறித்துவும் வருகின்றனர். மார்க்சிடம், கிறித்து தன் அங்கியினுள் இருந்து ஒரு ஆவணத்தாளை எடுத்துக் கொடுத்து வாசிக்கக் கூறுகிறாள். அதில் மூன்று வித செய்திகள் இடம்பெறுகின்றன. அவற்றில் முதல் செய்தி, சக்கிலிய சாதி மக்கள் கிறித்தவ மதத்தில் இருக்கின்றனர். அவர்கள் முன்னோர்கள் தான் ஆலயத்தைக்

கட்டியிருக்கின்றனர். ஆனால் அவர்களை மனுசப் பிறவியாக நினைக்க மறுக்கின்றனர். யார் இறந்து போனாலும் ஆலயத்திற்கு உடலைக் கொண்டு சென்று ஐயர் இறைவன் வழிபாடு செய்வது வழக்கம். ஆனால் அவர்கள் உடலை ஆலயத்திற்குள் கொண்டு செல்ல மறுக்கின்றனர். திருவிழா போன்ற நாட்களில் ஆடுமாடுகளை மந்திரிக்கின்றனர். ஆனால் முதலில் மேல்சாதி மக்கள் ஆடுமாடுகளை மந்திரிச்சி அனுப்பிய பின் இறுதியில்தான் சக்கிலியச் சாதி மக்களின் ஆடுமாடுகளை ஐயர் மந்திரிப்பார். அதுவரை ஓரமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் பெரிய கலவரமே வந்துவிடும்.

இரண்டாவது செய்தி, தேரும் சப்பரமும் பிள்ளைமாரும் முதலிமாரும் எடுத்து நடத்துகின்றர். கொடியும் தீவட்டியும் நாடார் சமுதாயத்தார் எடுத்து நடப்பிக்கின்றனர். திருக்குடும்பத்தின் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்கள் மேல்ச்சாதி மக்கள் தெருவாகும். இத்தெருக்களில் பிள்ளைமார் முதலிமார் மட்டும் சப்பிரம் கொடி தீவெட்டி எடுத்து திருநாளை நடத்துகின்றனர்.

மூன்றாவது செய்தி, ஆலயத்தில் பூசைக்கு உதவி செய்தல், பீடங்களை அலங்காரம் செய்தல், இலத்தின் தமிழ்ப்பாட்டுப் பாடுதல் இவற்றைப் பிள்ளைமார் முதலிமார் மட்டும் செய்கின்றனர். இந்த வாசகங்களை வாசித்த மார்க்சின் முகம் கறுத்துவிடுகிறது.

02.03.1975 அன்றைய தினத்தில் ரத்னகுமாரியும், இவளது அப்பாவும் திருநெல்வேலி நரகத்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு ரத்னகுமாரியின் அப்பாவின் கண்ணைக் காட்டச் செல்கின்றனர். பேருந்தில் இருந்து இறங்கும்போது ரத்னகுமாரியுடன் இளநிலை அறிவியல் பட்டம் படித்த சாலமன் என்பவன் நிற்கிறான். சாலமனைப் பார்த்தவுடன் ரத்னகுமாரிக்குப் படிக்கும் வேளையில் சாலமன் கூறிய வார்த்தையை நினைத்தப் பார்க்கிறாள்.

ரத்னகுமாரியிடம் சாலமன் உன்னை நான் திருமணம் செய்ய விரும்புகிறேன் என்று கூறியதை நினைக்கிறாள். பின்பு சாலமன் பல இடங்களில் ரத்னாவைப் பார்த்தும் 'நல்லாருக்கீங்களா'? என்ற கேள்வியுடன், சிறிய புன்னகையுடன் சென்றுவிடுகிறான். சாலமனைப் பார்த்தவுடன் இவ்வாறு ரத்னகுமாரி நினைத்துப் பார்க்கிறாள். சாலமன் ரத்னகுமாரியின் அப்பாவிற்கு குடை கொடுக்கிறான். குடையை வாங்கிக் கொண்டு ரத்னகுமாரியும் அவளது அப்பாவும் செல்கின்றனர்.

03.04.1975 அன்றைய தினத்தில் ரத்னகுமாரிக்கும் சாலமனுக்கும் திருமணம் நடைபெறுகிறது.

10.12.1980 அன்றைய தினத்தில் ரத்னகுமாரியும் அவளது கணவன் சாலமனும், ஆலந்தூரில் அவனது சித்தி வீட்டிற்குச் செல்கின்றனர். சாலமன் அவனுடைய சித்தப்பாவுடன் சாராயம் குடித்தது ரத்னகுமாரிக்கு பிடிக்கவில்லை. ரத்னகுமாரியுடன் ஆசிரியர் பணியாற்றிய இளவரசியை இதே நாளில் சந்திக்கிறாள். திருமணம் முடிந்த பின்பு ரத்னகுமாரி இதே நாளில் இளவரசியைச் சந்திக்கிறாள்.

திருமணம் முடிந்த பின்பு இளவரசி மெலிந்து காணப்படுகிறாள். இளவரசியின் கணவர் ஆணுமல்லாமல், பெண்ணுமல்லாமலான ஒரு உணர்வினைக் கொண்டு காணப்படுகிறான். திருமணம் முடிந்த பிறகு இதனை இளவரசி அறிந்து கொள்கிறாள். வேதனையும் அடைகிறாள். இளவரசியின் கணவன் தன்னை விட்டுப் போய்விட வேண்டாம் என இளவரசியின் காலைக் பிடித்துக் கொண்டு அழுகிறான். இளவரசி இடைநிலைப் பள்ளி ஆசிரியையாக இவ்வளவு வசதியாக இருந்தும் வேதனையுடன் காணப்படுகிறாள்.

15.07.1989 அன்றைய தினத்தில் தனராஜை முதல்வராக்க ஆரோக்கியதாஸ், ஸ்டீபன் பெரும் முயற்சி எடுக்கின்றனர். இதனால் தனராஜ் முதல்வராக ஆகிவிடுகிறான். சாலமன் இறந்து நான்கு வருடம் ஆகிய நிலையில் ரத்னகுமாரி வருத்தமுடன் காணப்படுகிறாள்.

இவ்வாறு டெபோரா காத்தரீன் ரத்னகுமாரி தன் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும் முறையில் நாவலின் நிகழ்வுகளை ஆசிரியர் நகர்த்தியுள்ளார்.

# தமயந்தியின் சிறுகதைகளில் இடம்பெறும் சிறுகதைகளின் பட்டியல்

1. தொடுவான உறவுகள்
2. நிலை
3. எதார்த்தம்
4. சிம்மாசன பட்டாபிஷேகம்
5. திரும்ப வருகிற நாட்கள்
6. தவிப்பு
7. உள் போதைகள்
8. முகங்கள்
9. பேரிளமை
10. நிறங்கள்
11. அவரும் அவர்களும்
12. தாமிரபரணியின் தாகங்கள்
13. தீர்வுகள்
14. வாழ்க்கை பயணிகள்
15. பாதிப்பு

# அக்கக்கா குருவிகளில் இடம்பெறும் சிறுகதைகளின் பட்டியல்

1. துரு
2. இலைகள் பேசும்
3. அனல்மின் மனங்கள்
4. முட்கள்
5. தொடர்வது
6. நீச்சல்
7. அக்கக்கா குருவிகள்
8. சமையலறையில் ஒரு கனவு
9. பைகளும் முகங்களும்
10. நீரூற்று
11. பிணைக் கைதி
12. அறுந்த நூற்கண்டின் நுனி, ஓடையாய்
13. மாமிசம்
14. மழைக்குப் பின் தீவுகள்
15. முத்துலெக்ஷ்மி டீச்சர்
16. கலவரம்
17. அடையாளம்
18. விலங்குகளும் ஒரு விலாங்கு மீனும்

# சாம்பல் கிண்ணத்தில் இடம்பெறும் சிறுகதைகளின் பட்டியல்


1. ஒரு பேனாவின் அல்லது பெண்ணின் கதை
2. இடைவெளி
3. ஒரு ஜன்னல்
4. பன்றிகளும் மனிதர்களும்
5. வயோதிகப் பாம்பின் இற்ற படம்
6. கதவு
7. மழையும் தொலைவும்
8. மரங்கொத்திப் பறவைகள்
9. காற்றின் உள்ளொலிகள்
10. சாம்பல் கிண்ணம்
11. குரல்களின் விசை
12. வெளிச்சக் கயிறு
13. ஆளில்லாச் சந்துகளில் மரணக் குரலின் நடமாட்டம்
14. புத்தகங்களை விற்கிறவன்
15. ரிப்வேணு விங்கிளும் தூங்கிக் கழிந்த காலமும்
16. திசை
17. ரயில்
18. மழை
19. பார்வை
20. மறுபிரதி

# வாக்குமூலத்தில் இடம்பெறும் சிறுகதைகளின் பட்டியல்


1. நிழல் வலை

2. உறைந்த நெடியின் கத்திமுனை

3. இலுப்பைப் பூ ரகசியம்

4. அப்பாவுக்கு எழுத நினைத்தது

5. நமக்கான இடைவெளிகளில் கூடு கட்டும் தூக்கணாங்குருவி

6. வாக்குமூலம்

7. காற்றின் போக்கில் அலைபாயும் இசை

8. முள்வீடு

9. தேனும் ஒரு கொயர் கோல நோட்டும்

10. யாருமற்றவர்களின் உலகம்

11. ஜன்னல்

12. மல்லியும் ஒரு பாட்டில் பீரும்

13. அலர்

14. நிலை

15. திரும்ப வருகிற நாட்கள்

16. பேரிளமை

17. 36, பெருமாள்புரம்

18. மழைக்கால மரணங்கள்